வரு.76 இல. 33 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2024 ஓகஸ்ட் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
August 25 Sunday, 2024
28பக்கங்கள் 100/-





04 இராஜினாமா செய்யக் காரணம் கட்சியின் மீதான விரக்தியே!


05 வேட்பாளர்கள் சிலர் சாத்தியமற்ற உறுதிமொழிகளை வழங்குகின்றனர்


14 இந்தியப் பிரதமரின் உக்ரைன் விஜயமும் இராஜதந்திர அரசியலும்


24 விதியை வென்றவர்களின் ஒலிம்பிக்

## அக்கரைப்பற்று, பொத்துவில், ஏறாவூரில் ஜனாதிபதியின் மக்கள் சந்திப்பு

# முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாப்பேன்

- வீடுகளுக்குள் முடங்கியிருந்த மக்களும் இளையோரும் எழுந்து நடமாட ஆரம்பித்தனர்
- இரண்டு வருடங்கள் கடந்துள்ளதால் மக்கள் துன்பங்களை மறந்திருக்க கூடும்
- முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமைக்கு இழப்பீடு வழங்கப்படும்



- ஜனாதிபதியாக பதவியேற்று மக்கள் பசி போக்கினேன்

**தேசிய காங்கிரஸின் தேசிய மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு**

அம்பாறை மாவட்டத்திலிருந்து
லோறன்ஸ் செல்வநாயகம்

பசியோடு இருந்த மக்களின் துன்பத்தை கண்டு நாட்டை பொறுப்பேற்று அந்த மக்களின் பசியை போக்கியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டை பொறுப்பேற்க எவரும் முன்வராத பட்சத்தில் தான் நாட்டை பொறுப்பேற்ற பின்னர் வீடுகளில் முடங்கியிருந்த மக்களும் இளைஞர்களும் வெளிவந்து நடக்க ஆரம்பித்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

06





## தன் பிள்ளைகளை போல மக்களை பாதுகாத்த ஜனாதிபதியே நாட்டின் தந்தை

**தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லா**

அக்கரைப்பற்றிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்



"நாட்டில் ஏற்படும் முரண்பாடுகளால் காலத்துக் காலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளதுடன், நாடு நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொண்ட போது ரணில் விக்கிரமசிங்கவே தனியொருவராக தனித்து நின்று நாட்டின் பிரதமராகி பின்னர் ஜனாதிபதியாக தெரிவானரென்பது சாதாரண விடயமல்ல. இது ஆண்டவனின் தீர்ப்பென்பதை நாம் மறந்துவிட முடியாது" என தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா

06

## தொழில் முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கும் யுகத்தை உருவாக்குவோம்

**ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித்**



எதிர்காலத்தில் தொழில் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்து மக்களின் வாழ்வை மேம்படுத்தும் யுகம் உருவாக்கப்படுமென ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தில் முதியோருக்கு 15 சதவீத சேமிப்பு வட்டி வழங்கப்படுமென்றும் அவர் கூறினார்.

06

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில்

## முஸ்லிம் தலைவர்கள் வாக்குறுதியை நம்பி முஸ்லிம்கள் வாக்களிக்க கூடாது

**பைஸர் முஸ்தபா**




முஸ்லிம் தலைவர்களின் வாக்குறுதிகளை நம்பி, ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் சமூகம் வாக்களிக்க கூடாது. ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் யார் பக்கம் இருந்தாலும், முஸ்லிம்

06

## ஐக்கிய தேசிய கட்சியின் விசேட மாநாடு இன்று

**'சிறிகொத்த' தலைமையகத்தில் ஏற்பாடு**



ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று ஞாயிற்றுக்கிழமை (25) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதற்கான யோசனைக்கும் இந்த விசேட மாநாட்டில் அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது. ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில்

06

ஜனாதிபதி தேர்தல் குறித்து

## கருத்து கணிப்புகளை எவரும் நம்ப வேண்டியதில்லை



ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பல்வேறு தரப்பினர் மேற்கொண்டுள்ள கருத்துக் கணிப்புகளை நம்பி ஏமாற வேண்டாமென்று தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

06

## 2025 முதல் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 55,000

**குறைந்தபட்ச அடிப்படை சம்பளம் ரூ. 30,000ஆக அதிகரிப்பு**

**வாழ்க்கை செலவு கொடுப்பனவு ரூபா 25,000 ஆக உயரும்**



2025 ஜனவரி முதல் அனைத்து அரச ஊழியர்களினதும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக, அரச சேவை சம்பள முரண்பாடுகள் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின்

06

## ஹக்கீமிடம் ரூ. 200 கோடி கோரி அநுரகுமார திஸாநாயக்க கடிதம்





முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக கூறி தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான

06

## எங்கள் கருத்து...

### இலவச மருத்துவத்துறையின் களங்கம் களையப்பட வேண்டும்!

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் இடம்பெறுகின்ற தவறுகள் தொடர்பாக நீண்ட காலமாக தகவல்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சில வைத்தியசாலைகள் பலவற்றில் மாத்திரமன்றி, நாட்டின் ஏனைய பிரதேச வைத்தியசாலைகள் சிலவற்றிலும் நோயாளர்களுக்கான சிகிச்சைகளில் தவறுகள், உதாசீனங்கள் இடம்பெறுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன.

அவ்வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற மருத்துவர் சிலரின் அக்கறையீனம் காரணமாக நோயாளர்கள் பலர் உயிரிழந்திருப்பதாக அவ்வப்போது ஊடகங்களில் செய்திகளைப் பார்த்துள்ளோம். இவ்வாறான உயிரிழப்புகள் தொடர்பாக உறவினர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான உண்மைத்தன்மையை பக்கச்சார்பற்ற விசாரணைகள்

06



06 சிறுவர்களிடையே பரவும் இன்புளுவன்சா காய்ச்சல்
நிமோனியா ஏற்படும் அபாயம்



06 ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 812 முறைப்பாடுகள்

## ரயில் பயணத்துக்கு இனி டிஜிட்டல் பயணச்சீட்டு

**pravesha.lk ஊடாக வாங்கலாம்**

ரயில் பயணச்சீட்டுகளை இணையத்தளமூடாக பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் pravesha என்ற இணையத்தளத்தை போக்குவரத்து அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கமைய ரயில் பயணிகள் இப்போது www.pravesha.lk என்ற இணையத்தளத்தின் மூலம் டிஜிட்டல் ரயில் பயணச் சீட்டுகளை Online ஊடாக பெற்றுக்கொள்ள முடியுமென போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

06

## சகல மக்களையும் பாதுகாக்கும் நாட்டை உருவாக்குவோம்

**SLPP ஜனாதிபதி வேட்பாளர் நாமல்**



அனைத்து மதங்களையும் மொழிகளையும் மக்களையும் பாதுகாக்கும் நாட்டை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறுகியகால சலுகைகள், சிறப்புரிமை

06

**அமைச்சர் பந்துலவின் கடன் அட்டை விவகாரம்**

## முன்னாள் ஊடக செயலாளருக்கு எதிரான வழக்கு செப். 27ஆம் திகதி



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கடன் அட்டையை அவருக்கு தெரியாமல் பயன்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான மேலதிக மஜிஸ்திரேட் விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் 27ஆம் திகதி நடத்த கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் மஞ்சுள ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கடந்த 9ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட

06




# உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடிக்கும் இலங்கையின் மிக நீளமான முத்திரை

**இலங்கை தபால் துறையானது, 209 வருட நீண்ட வரலாற்றைக் கொண்ட, நாட்டின் மிகவும் பழமையான திணைக்களங்களில் ஒன்றாகும். 1798 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இலங்கையில் தபால் சேவை ஆரம்பமானது. 1799 ஆம் ஆண்டு இலங்கையை ஆக்கிரமித்திருந்த ஒல்லாந்தர்கள், முதன்முதலில் தபால் ஒழுங்குமுறைகள் மற்றும் நிலையான தபால் கட்டணங்களை அறிவித்து, 05 கரையோர மாகாணங்களில் தபால் சேவையை ஆரம்பித்து நாட்டுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். நாட்டின் பெருமைமிக்க பாரம்பரியத்தையும் வரலாற்றையும் குறிக்கும் இலங்கை தபால் சேவை, அதன் வெற்றிப்பாதையில் அண்மையில் மற்றுமொரு பெருமையையும் சேர்த்துள்ளது.**

அதன்படி, உலகின் மிக நீளமான முத்திரையை இலங்கை தபால்துறை வெளியிட்டுள்ளது. கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் கண்டி மகா பெரஹரா திருவிழாவின் இறுதியில் நடைபெற்ற பாரம்பரிய வைபவத்தில், இந்த முத்திரை வெளியிடப்பட்டுள்ளது. ஸ்ரீ தலதா பெரஹரா என்ற கருப்பொருளை கொண்ட இந்த முத்திரை 205 மில்லிமீற்றர் நீளம் கொண்டதுடன் இதன் பெறுமதி 500 ரூபாவாகும்.

தியவடன நிலமே, அரச தலைவரான ஜனாதிபதி, சதர மஹா தேவாலயம் மற்றும் பிடிசர தேவாலயங்களின் பஸ்நாயக்க நிலமே, ஆளுநர் உட்பட அரச அதிகாரிகளுக்கு மத்தியில், இந்த முதல் முத்திரையும், முதல்நாள் அட்டையும் சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித கே. ரணசிங்கவினால், வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் அமைச்சர் அதனை, ஜனாதிபதி மற்றும் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேலவிடம் கையளித்தார்.



அமைச்சர் பந்துல குணவர்தன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நினைவு முத்திரையை வழங்கி வைத்தபோது.

உலகின் மிக நீளமான முத்திரையைப் பற்றி, இந்த வரலாற்று நிகழ்வின் தலைவராக பார்க்கப்படும், தபால் திணைக்களத்திற்கு பொறுப்பாளரான சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித கே. ரணசிங்கவிடம் வினவியபோது அவர் எம்மிடம் கூறியதாவது,

"நாம் உலகின் மிக நீளமான முத்திரையை வெளியிட்டுள்ளோம். 205 மில்லிமீற்றர் நீளம் கொண்ட இந்த முத்திரையை, கலைஞர்களான ருவான் உபசேன மற்றும் இசுரு சதுரங்க ஆகியோரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த முத்திரையில் 3 இலட்சம் பிரதிகளை அச்சிடவுள்ளோம். இது ஒரு நினைவு முத்திரை என்பதனால் இந்த முத்திரை மீண்டும் அச்சிடப்படமாட்டாது. நினைவு முத்திரைகள் என்பது மீண்டும் வெளியிடப்படாத முத்திரைகள் ஆகும். இந்த நீளமான முத்திரையின் பெறுமதி 500 ரூபாய் ஆகும். இம் முத்திரையின் அட்டை மிகவும் கவர்ச்சிகரமாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் விலை 800 ரூபாய் ஆகும்.

ஒரு சில முறைக்கமைய நாட்டின் முத்திரைகள் வெளியிடப்படுகின்றன. இது தொடர்பாகவும் பிரதி தபால் மா அதிபர் தெளிவுப்படுத்தினார்.

"நாட்டில் முத்திரை ஆலோசனைக் குழுவொன்று உள்ளது. அதன் மூலம் ஆண்டுக்கு 36 தபால் தலைகளை வெளியிடுகிறோம். அதற்காக பத்திரிகைகளில் வெளியிட்டு முன்மொழிவுகளும் பெறப்படுகின்றன. அதன்மூலம் எமக்கு கிடைப்பெற்ற முன்மொழிவுகளுக்கமைய, இந்த நீளமான முத்திரையை வெளியிடுவதற்கு எமது முத்திரை ஆலோசனைக்குழு முடிவெடுத்தது."

முத்திரை ஆலோசனைக் குழு என்பது தபால் திணைக்களத்தின் தலைமையிலான ஒரு வெளிப்புற பங்குதாரர் குழு ஆகும். வருடாந்திர முத்திரைத் திட்டம் இந்த குழுவினாலேயே தயாரிக்கப்படுகிறது. அந்த வருடாந்திர முத்திரைத் திட்டத்துக்கமையவே இந்த முத்திரையும் தயாரிக்கப்பட்டது.

"உலகின் மிக நீளமான முத்திரையை வெளியிடுவதற்கு ஏதேனும் சிறப்புக் காரணம் உள்ளதா?" என சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபரிடம் வினவியபோது அவர் இவ்வாறு விளக்கமளித்திருந்தார்.

"இதற்கு முன்னதாக நாம் வைஸ்ராய் புகையிரதத்தைக் குறிக்கும் நீளமான முத்திரையொன்றை வெளியிட்டோம். அந்த முத்திரையின் நீளம் 175 மி.மீ. ஆகும். தலதா மாளிகை பெரஹரா மிகவும் பழைமையான எமது காலாசார விழா என்பதனால், உலகின் மிக நீளமான முத்திரையை வெளியிடுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விழாவின் கலாசார அம்சங்கள் பன்முகப்படுத்தப்பட்டு பிரபலமடைந்தமையினால், முத்திரையை உருவாக்கும் திட்டத்தை நாம் கொண்டு வந்தோம். எனவே முத்திரையை உருவாக்க முடிவு செய்தோம். பெரஹராவின் படக்காட்சிகள் தலதா மாளிகையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. அதனை கொண்டு இந்த இரு ஓவியர்களும் முத்திரையை வடிவமைத்துள்ளனர்" என சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித கே. ரணசிங்க தெரிவித்தார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க முத்திரையை உருவாக்கிய சிறந்த கலைஞர்களான இசுரு சதுரங்க மற்றும் ருவான் உபசேன பற்றி ஆரம்பத்தில் கூறியிருந்தோம். அதன்படி இசுரு சதுரங்க முதலில் வரைய ஆரம்பித்துள்ளார். ஓவியத்தின் இறுதி நுணுக்கங்களை செய்து முடித்தவர் ருவான் உபசேன ஆவார்.



முத்திரையை வடிவமைத்த இசுறு மற்றும் ருவன்

இசுரு சதுரங்க, முத்திரை காரியாலயத்தில் சுமார் 14 ஆண்டுகளாக வடிவடைப்பாளராக கடமையாற்றி வருக்கின்றார். இந்த முத்திரை அவரது வாழ்க்கையின் 224 ஆவது படைப்பாகும். இந்நிலையில், இந்த வடிவமைப்பு எவ்வாறு செய்யப்பட்டது என்பது தொடர்பாக இசுரு சதுரங்க எம்மிடம் கூறினார்.

> **முத்திரையின் கருப்பொருள் ஸ்ரீ தலதா பெரஹரா. முத்திரையின் நீளம் 205 மில்லிமீற்றர். இதன் மதிப்பு 500 ரூபாய்.**

"முதலில் இந்த முத்திரையை எவ்வாறு வரையப்பட வேண்டும் என்பதை காட்சிப்படுத்தினோம். தலதா பெரஹரா பாரம்பரியத்தின் மிக முக்கியமான அம்சங்கள் தலதா மாளிகையிலிருந்து எடுக்கப்பட்டு ஒரு ஓவியமாக வரையப்பட்டது. அந்த படங்களின் அடிப்படையில் நீர் வர்ணங்களை (Watercolours) பயன்படுத்தினோம். பின்னர் டிஜிட்டல் முறையினூடாக இறுதி கட்டத்துக்கு கொண்டுவரப்பட்டது. இலங்கையின் பெயரை உலகிற்கு எடுத்துச் செல்லும் விதமாக, முத்திரைகளை சேகரிக்கும் விருப்பமுடைய ஒரு ஓவியத்தை வரையவே நான் எதிர்பார்த்திருந்தேன்" என இசுரு தெரிவித்தார்.

ருவான் உபசேன மற்றும் இசுரு சதுரங்க இருவரும் நாட்டின் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் எவ்வாறு செயற்பட்டுள்ளார்கள் என்பதை மட்டும் பார்ப்போம்.


தற்போது உலகின் மிக நீளமான முத்திரை எங்களுடையதே. இதற்கு முன்னர் உலகின் மிக நீளமான முத்திரையை வெளியிட்ட நாடு பிலிப்பைன்ஸ் ஆகும்.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் தபால் கூட்டுத்தாபனம் (PHLPost) முதல் பிலிப்பைன்ஸ் குடியரசின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 200மிமீ நீளமுடைய முத்திரையை வெளியிட்டது. இதன் மதிப்பு பிலிப்பைன்ஸ் பெறுமதியில் 125 பெசோக்கள் ஆகும். உலகின் மிக நீளமான முத்திரையை உருவாக்கி உலக சாதனை படைத்ததாக பிலிப்பைன்ஸ் இரண்டு மாதங்களுக்கு முன்பு கூறியது. 2 மாதங்கள் 08 நாட்களின் பின்னர் இலங்கை தபால் திணைக்களம் பிலிப்பைன்ஸின் உலக சாதனையை முறியடித்துள்ளது.

எமது தலதா பெரஹராவின் வீரத்தை உணர்த்தும் இந்த முத்திரை, நமது பெரஹரா விழாவை மேலும் ஆற்றலுடன் உலகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**காயத்ரி சுரேஷ்**

---



# தலதாவை பின்தொடர்ந்து வந்த எம்.பிக்கள் யார்?

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாட்களில் புதிய அரசியல் முடிச்சுகளை ஒன்றன் பின் ஒன்றாக அவிழ்ப்பதில் ஈடுபட்டுள்ளார். இதற்காக அதிக நேரத்தைச் செலவிடுவதால் ஜனாதிபதி ரணில் அதிக வேலைப்பளுவில் உள்ளார். அனுராதபுரம் சல்காது விளையாட்டு மைதானத்தில் தனது முதலாவது அரசியல் பிரசாரக் கூட்டத்தை ஜனாதிபதி நடத்தினார். அது கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதற்கு முன்னதாக அவர் ஸ்ரீ மஹா போதி மற்றும் ருவன்வெலி விகாரைகளுக்கு விஜயம் செய்து பல்லேகம ஹேமரத்தன மகா தேரரைத் தரிசித்து ஆசி பெற்றுக் கொண்டார்.**

அதனை முடித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் சல்காது மைதானத்திற்கு வந்த போது மழை பெய்து கொண்டிருந்த போதும் அவர் அதனைப் பொருட்படுத்தாமல் மக்களுக்கு மத்தியில் சென்று அவர்களை உற்சாகப்படுத்தினார். அங்கு வந்து கூடியிருந்த மக்களும் மழையையும் பொருட்படுத்தாமல் அங்கேயே காத்திருந்து ஜனாதிபதி ரணிலை வெற்றியடையச் செய்ததற்கு ஆசிர்வாதம் வழங்கினர்.

அனுராதபுர பிரசாரக் கூட்டத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய ஜனாதிபதி ரணில் தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தார். கட்சியின் சிறிகொத்தா தலைமையகத்திற்குச் சென்ற அவர் கட்சியின் செயற்குழுவைக் கூட்டி கட்சி மாநாடு குறித்து கலந்துரையாடினார். கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தாத பட்சத்தில், கட்சி ஆதரவளிக்கும் நபர் தொடர்பில் கட்சியின் செயற்குழு மற்றும் கட்சி மாநாட்டில் அனுமதி பெறப்பட வேண்டும்.

2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கிய போதும், அதன் பின்னர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவை வழங்கிய போதும் இதேபோன்றே கட்சியின் செயற்குழு மற்றும் கட்சி மாநாட்டில் அனுமதி பெறப்பட்டிருந்தது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கட்சி மாநாடு நடைபெறவுள்ளதுடன், இம்முறை கட்சித் தலைவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதால் அதற்கான அங்கீகாரம் இங்கு பெற்றுக்கொள்ளப்படவுள்ளதால், அதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவுக்கு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் திங்கட்கிழமை கொழும்பிலிருந்து கண்டி தலதா மாளிகையில் நடைபெறும் பெரஹராவைப் பார்வையிடுவதற்காக கண்டி சென்றார். அரச தலைவர் தலதா பெரஹரவைப் பார்வையிடுவது உத்தியோகபூர்வ செயற்பாடாகும். பெரஹர நிறைவுறும் பத்திரத்தை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதன் பின்னர் செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்பினார்.

பெரஹராவைப் பார்வையிடச் சென்ற ஜனாதிபதி ரணில், அங்கு இடம்பெற்ற பெரஹர நிறைவடைந்ததன் பின்னர் குவின்ஸ் ஹோட்டலின் மேல் மாடியிலிருந்து கீழே இறங்கி வரும்போது பாதுகாப்புத் தரப்பினர் அவர் தனது தங்குமிடத்திற்குச் செல்லப்போவதாக நினைத்தனர். எனினும் ஜனாதிபதி ரணில் செல்ல வேண்டிய பாதையை மாற்றிக் கொண்டு வீதியின் மறுபுறத்தில் நின்றிருந்த மக்களுக்கு மத்தியில் சென்ற போது அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது. ஜனாதிபதி ரணில் மக்கள் மத்தியில் சென்று அவர்களுடன் உரையாடிய போது, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரதானி ஜமால்தீன் உடனடியாக அங்கு பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

கூடியிருந்த மக்கள் கூட்டத்திலிருந்து ஜனாதிபதிக்கு மிகுந்த உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. பொருட்களின் விலைகளை இன்னும் குறிப்பிட்டளவுக்கு குறைக்குமாறும், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். இதற்கான அடித்தாளத்தை தான் இட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வருங்காலத்தில் அந்த நிவாரணங்கள் மக்களுக்கு கிடைக்கும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி ஒரு வேட்பாளராக செயற்பட்டாலும், உத்தியோகபூர்வ கடமைகளை முன்னெடுக்கும் பொறுப்பும் அவருக்குள்ளதால் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தேர்தல் செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கியிருப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அன்றைய தினத்தில் அமைச்சரவைக் கூட்டம் மற்றும் பாதுகாப்பு சபையினைக் கூட்டுமாறு ஜனாதிபதி செயலாளர் சமன் மற்றும் பணிக்குழு பிரதானி சாகல ரத்நாயக்கா ஆகியோருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இதனைச் செய்ய முடியாமல் போனது. காரணம் அன்றைய தினம் பௌர்ணமி விடுமுறை தினம் மற்றும் கண்டி தலதா பெரஹர நடைபெற்ற தினமாகவும் இருந்தது. ஜனாதிபதி ரணில் இந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தையும், பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தையும் கூட்டியது புதன்கிழமையாகும். மக்களுக்கு சில நிவாரணங்களை வழங்கும் தீர்மானங்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதோடு, தேர்தல் காலத்தில் வேட்பாளர்களின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு கவுன்சிலில் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் பல எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் நீண்ட காலமாக தொடர்புகளை மேற்கொண்டிருந்தது இரகசியமான விடயமல்ல. அந்தக் குழுவுடன் நெருக்கமாகச் செயற்படும் பொறுப்பை பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் தினுக் கொலம்பகே ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் வழங்கியிருந்தார்.

அவர்கள் கடந்த காலம் முழுவதும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் சந்தித்தனர். எனினும் இந்த விடயம் ஐக்கிய மக்கள் சக்தியினருக்குத் தெரிய வந்ததை அடுத்து அவர்கள் இத்தரப்பினரையும் மறைமுகமாகத் தாக்கத் தொடங்கினர். இதன் காரணமாக, பிரதித் தலைவர் ருவான் உள்ளிட்ட தரப்பினர் அந்த தரப்பினருடன் நெருங்கிச் செயற்படாதவர்களைப் போன்று காட்டிக் கொண்டார்கள். எனினும் ஐக்கிய மக்கள் சக்தியின் அந்த தரப்பிற்கு தலைமை தாங்கிய ஒருவர் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததால் பிரச்சினை ஏற்பட்டது.

எனினும் மீண்டும் இந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கு முன்வந்தது ஒரு பெண் உறுப்பினராகும். எனினும் இதன்போது அவருக்கிருந்த பிரச்சினை தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பற்றியாகும். இந்தச் செய்தி ஜனாதிபதி ரணிலின் காதுகளுக்கு சென்றது. அதற்கு ஜனாதிபதி அருமையான பதில் ஒன்றை வழங்கினார். “பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யுங்கள். அதுவே கௌரவமானதாகும்” இந்த பதில் அவருடைய மன உறுதியை உயர்த்தியது.

அதனடிப்படையில் கஹவத்தையில் அமைந்துள்ள தனது இல்லத்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தனியாகவே தனது இராஜினாமா உரையை எழுத ஆரம்பித்தார். தனது தொலைபேசியை ஸ்விட் ஓப் செய்த அவர், வீட்டிலிருந்தவாறு அந்த உரையினை எழுதினார். தனியாக எழுதிய உரையினை அவர் எவரிடத்திலும் காட்டாமல் தனக்கு நெருங்கிய ஒருவரைக் கொண்டு அதனை டைப் செய்து மீண்டும் அதிலிருந்த குறைகளைத் திருத்திக் கொண்டு அதனை தனது கோவையினுள் வைத்துக் கொண்டார்

தலதா அத்துகோரள அமைதியாகியிருப்பதை அவதானித்த ஐக்கிய மக்கள் சக்தியினர் அவரைத் தேடிய போதிலும் அவர் பாராளுமன்றத்திற்கு வரும் வரைக்கும் அவரைப் பற்றி எவருக்கும் எந்தத் தகவலும் தெரியாமல் போனது. பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள பாராளுமன்றத்திற்கு வந்து தனது உரையை ஆற்றிக் கொண்டிருக்கும் போது சபைக்குள் பிரவேசித்து அவருக்கு அருகில் வந்தமர்ந்து கொண்டார் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம்.

உரை நிறைவடைந்த உடனேயே அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மயன்ன திசாநாயக்கா மற்றும் அஜித் மான்னப்பெரும ஆகியோரோடு சபையைவிட்டு வெளியேறிச் சென்றார். உணர்ச்சிபூர்வமான உரையை நிகழ்த்திய தலதா அத்துகோரள சபையிலிருந்து வெளியேறிய போது அவரைச் சந்தித்தது பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனாகும்.

“ஏன் நீங்கள் இவ்வாறான ஒரு முடிவை எடுத்தீர்கள்? எங்களால் நினைத்தும் பார்க்க முடியவில்லை” எனக் கேட்டார் ரிசாத்.

“நான் எனது உரை முழுவதிலும் அதற்கான காரணத்தைக் கூறினேன். எனினும் நான் உங்களிடம் ஒரு சிறிய விடயத்தைக் கூற நினைக்கிறேன். அன்று நீங்களும், உங்களது மனைவியும் கஷ்டத்தில் இருந்தபோது யார் காப்பாற்றினார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு தலதா பாராளுமன்றத்தை விட்டு வெளியேறி வீட்டிற்கு வந்தார்.

வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் பிளவர் வீதியில் அமைந்துள்ள தனது அரசியல் அலுவலகத்திற்குச் சென்றார். அங்கு பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் வருகை தந்திருந்ததோடு, வரும் நாட்களில் இடம்பெறவுள்ள அரசியல் கூட்டங்கள் மற்றும் கீழ் மட்டத்தில் மக்களைத் தெளிவுபடுத்துவது தொடர்பில் இதன் போது அவர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினார்கள். இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஜனாதிபதிக்கும், அமைச்சர்களுக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரளவின் இராஜினாமா தொடர்பில் பேசப்பட்டது.

“ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது அங்கு இடமில்லை எனக் கூறிய விடயம் முற்றிலும் உண்மையாகும். மொட்டுக் கட்சியிலிருந்து சென்ற எமது தரப்பினர்கள்தான் இப்போது ஐக்கிய மக்கள் சக்தியை வழிநடத்துகின்றார்கள்” என்றார் அமைச்சர் லான்சா.

“விரக்தியடைந்து போயுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியுடன் இணைக்க வேண்டும் என எங்களோடு பேச்சை ஆரம்பித்தது பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிமாகும். அவர் ஜனாதிபதியுடன் பல தடவைகள் பேசியுள்ளார்” என பாராளுமன்ற உறுப்பினர் வஜிரவும் இரகசியம் ஒன்றை வெளிப்படுத்தினார்.

“எனினும் அவர் கடைசி நேரத்தில் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டு ஓடிவிட்டார். எனினும் அவருக்கு இல்லாத துணிச்சல் பெண்ணான தலதாவுக்கு இருந்தது” என உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார் பிரதித் தலைவர் ருவான்.

“கட்டுநாயக்கவில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் மக்கள் கூட்டம் இருக்கவில்லை. காவிந்த மற்றும் மன்னப்பெரும ஆகியோர் அக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுமில்லை என தெரிய வருகிறது” என மற்றொரு கதையையும் லான்சா ஜனாதிபதியிடம் கூறினார்.

“ஆமாம், அங்கு மக்கள் கூட்டம் இல்லை என ஏற்பாட்டாளர்களுக்கு லக்கீ வசைபாடியுள்ளார் எனக் கேள்விப்பட்டேன்” என அமைச்சர் ஷெஹானும் உரையாடலில் இணைந்து கொண்டார்.

முன்னர் கடானை கூட்டத்திற்கு மக்கள் கூட்டம் வருவது ஜாஎல மற்றும் கம்பஹாவிலிருந்தாகும். எமது பக்கத்திலிருந்து அங்கு சென்றுள்ள மருத்துவரிடம் கூட தற்போது ஆட்கள் இல்லை என்பது தெளிவாகிறது. தலைவர் பதவி கிடைக்காததால் அவரும் ஏமாற்றம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது” என்றவாறு பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்தையும் அவர்களோடு இணைந்து கொண்டார்.

“கம்பஹா மாவட்டத்தில் ஒரு பிரச்சினை உள்ளது. அலுவலகத்தை ஆரம்பிக்கப் போனபோதும் பிரச்சினைதான்” என தனக்கு கிடைத்த தகவலை அங்கு கூறினார் சாகல ரத்நாயக்கா.

ஐக்கிய மக்கள் சக்தியில் பெரும் சரிவு வரும் நாட்களில் ஏற்படவுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. அதேபோன்று சிலர் கட்சி சம்மேளனத்தில் இணைந்து கொள்வார்கள் என்ற பேச்சு அங்கு இடம்பெற்ற போது ஜனாதிபதி ரணில் மௌனமாக இருந்தார்.

"ஜனாதிபதி மெல்ல மெல்ல வேலைகளைச் செய்து கொண்டு செல்கிறார். நாம் செய்ய வேண்டியது கீழ் மட்டத்தில் இறங்கி வேலை செய்வது தான்" எனக் கூறியவாறு அங்கு கூடியிருந்த தரப்பினர் வெளியேறிச் சென்றனர். வார இறுதியில் ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தில் இருந்தார். அங்கு பணிகளை முடித்துக் கொண்ட ஜனாதிபதி கட்சி சம்மேளத்திற்காக தம்புள்ளவிலிருந்து கொழும்புக்கு வந்தார்.

**எம். எஸ். முஸப்பிர்**




# பெருமைக்குரிய அரச சேவையை உருவாக்கிட கைகோர்ப்போம்!

**"நான் உங்களுக்கு மேல் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவன் அல்ல இந்நாட்டின் முதலாவது மக்கள் சேவையாளனாவேன்"**

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில் நாட்டின் அரச மற்றும் அரச சேவைக்காக நீங்கள் ஆற்றும் அர்ப்பணிப்பான சேவை தொடர்பில் உயர் நன்மதிப்பையும், அது தொடர்பில் உயர்ந்த கௌரவத்தையும் நான் கொண்டுள்ளேன். அரச பணியில் 14 மில்லியன் பேர் வரையில் ஈடுபட்டுள்ள நிலையில், உங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், உங்கள் பெருமையை பேணுவது எனது எதிர்பார்ப்பாகும்.**

- வாழ்க்கை செலவுக்கு பொருத்தமான சம்பளத்தை பெற்றுக் கொடுப்பது.
- ஒட்டு மொத்த அரச சேவையாளர்களின் அடிப்படை சம்பளத்தை 2025 ஜனவரி மாதம் முதல் ஆகக்குறைந்தது 24% இனால் உயர்த்துவது.
- சகல அரச சேவையாளர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ரூ. 25,000 வரை அதிகரிப்பது.
- அரச சேவையாளர்களுக்கு கொடுப்பனவுகளுடன் ஆகக்குறைந்தது ரூ. 57,500 எனும் சம்பளத்தை வழங்குவதுடன் இதனை அடுத்த ஆண்டுக்கான சம்பள உயர்வுடன் பொருந்தச் செய்வது.
- சேவை வினைத்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்பு பணிக் கொடுப்பனவு வழங்குவது.
- தற்போது காணப்படும் வரி விலக்கு எல்லையை தொடர்ந்தும் பேணி, அரச சேவையாளர்கள் பெரும்பாலானோரின் தனியார் மாத வருமானத்தின் மீது அறவிடப்படும் 6% முதல் 36% வரையான வரியை, 1% இலிருந்து 24% ஆக குறைப்பது.
- பணிக்கு இணைத்துக் கொள்வது மற்றும் பதவி உயர்வுகளுக்கான தகைமையை திறமை, ஆற்றல்களை கவனத்தில் கொண்டு வெளிப்படையான முறையில் முன்னெடுப்பது.
- தமது நிரந்தர வதிவிடத்துக்கமைய சேவை நிலையத்தை பெற்றுக் கொள்ளும் திட்டமிடப்பட்ட செயற்பாடு.
- அரச சேவையாளர்களுக்காக காணப்பட்ட வீட்டு மற்றும் கடன் பிரேரணை திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது.
- அரச சேவையாளருக்கு எந்தவொரு அவசர தேவையின் போதும் கருமமாற்றும் ஐந்து நாட்களினுள் பெற்றுக்கொள்ளக்கூடிய, சம்பளத்தைப் போன்று பத்து மடங்கு வரை இடர் கடன் வழிமுறை.
- ஓய்வூதியம் பெற ஆரம்பிக்கும் முதல் மாதத்திலிருந்தே ஓய்வூதிய கொடுப்பனவை பெற்றுக்கொடுக்கும் துரித நடவடிக்கை.


கௌரவத்துக்குரிய நண்பர்களே, எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பக்கசார்பாக இராமல், சமூகத்தில் திருப்திகரமாக அமைந்திருக்கும் பெருமைக்குரிய அரச சேவையை நான் எப்போதும் நிலைநாட்டுவேன்.

நாட்டின் அபிவிருத்திக்காக எப்போதும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் அரச பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் அனைவருக்கும் எமது தேசத்தை வெற்றியடையச் செய்வதற்காக என்னுடன் இணைந்து கொள்ளுமாறு நான் மிகவும் கௌரவத்துடன் அழைக்கின்றேன். அனைவருக்கும் வெற்றியை வழங்கும் ஐக்கியமான நாட்டை கொண்டிருக்க நாம் ஒன்றிணைவோம்.

நான் உங்களின் நண்பன்,

சஜித் பிரேமதாச
ஜனாதிபதி வேட்பாளர்
ஐக்கிய மக்கள் கூட்டணி

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
**Sajith Premadasa**



# 35000 மாணவர்களுக்காக திறந்த ஜனாதிபதி மாளிகையின் கதவுகள்

2022 ஆம் ஆண்டு முதல் கடந்த இரண்டு வருடங்களினுள் சுமார் 35,000 பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி மாளிகை, பழைய பாராளுமன்ற கட்டிடத்தில் அமைந்துள்ள ஜனாதிபதிச் செயலகம், துறைமுக நகரம், மத்திய வங்கி, பாராளுமன்றம், தாமரைத் தடாகம் உள்ளிட்ட கொழும்பை சுற்றியுள்ள கல்வி பெறுமதிமிக்க இடங்களை இலவசமாகவே பார்வையிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் இந்தளவுக்கு அதிக எண்ணிக்கையான பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாறான வாய்ப்பு வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







ஜனாதிபதி செயலக வளாகத்தினைப் பார்வையிடுவதற்கு பாடசாலை மாணவர்கள் வருகை தரும் அனேக சந்தர்ப்பங்களில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பணிமிகுந்த சந்தர்ப்பங்கள் மற்றும் பொறுப்புக்கள் நிறைந்த நிலையிலும் மாணவர்களுடன் நட்புறவுடன் உரையாடுவது, அவர்களின் வாழ்வில் மறக்க முடியாத மற்றும் புத்துணர்ச்சியூட்டும் நாளாக அன்றைய தினம் அமைய வேண்டும் என்பதனாலாகும். இந்த சந்தர்ப்பங்களில், ஜனாதிபதி பழைய பாராளுமன்ற கட்டடத்தின் பௌதீக வரலாறு மற்றும் பாராளுமன்ற முறையின் பரிணாமம் தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவை வழங்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, அவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பிலும் அறிந்துகொள்வார், விசேடமாக சட்டமன்றம், நீதித்துறை மற்றும் நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் அவர்களின் கேள்விகளுக்கும் பதிலளிப்பதற்கும் அவர் மறப்பதில்லை. நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு மறக்க முடியாத மற்றும் ஊக்கமளிக்கும் நாளாக அன்றைய தினம் அமையும் வகையில், ஜனாதிபதி மற்றும் மாணவர்களின் குழுப் புகைப்படத்துடன் ஜனாதிபதி செயலகத்திற்கான விஜயங்கள் நிறைவடைகின்றன.





இதற்கு மேலதிகமாக, ஜனாதிபதி செயலகத்தில் பழைய பாராளுமன்றம் செயற்பட்ட பிரதான கேட்போர் கூடத்தில் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இதுவரைக்கும் பல பாடசாலைகளின் மாணவர் பாராளுமன்றம் மற்றும் இளைஞர் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெற்றுள்ளன. பாடசாலை மாணவர்கள் ஜனநாயகம் தொடர்பான நடைமுறை அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், நாடு மற்றும் சமூகத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் மாணவர்கள் வாதப்பிரதிவாதங்கள் செய்வதற்கு களம் அமைத்துக் கொடுத்து, பல்வேறு பாடசாலைகளின் ஆரம்ப மாணவர் பாராளுமன்ற அமர்வுகளை வரலாற்று முக்கியத்துவமிக்க பழைய பாராளுமன்ற சபை மண்டபத்தில் நடத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதோடு, எமது எதிர்கால சந்ததியினரில் தலைமைத்துவ குணங்கள், ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புக்களை வளர்த்துக் கொள்வதற்கும், பிரஜைகளுடன் இணைந்து குடிமக்கள் மற்றும் பாராளுமன்றத்தையும் ஒன்றுக் கொன்று நெருக்கமாக்கும் நோக்கிலும் மாணவர் பாராளுமன்றம் முன்னெடுக்கப்படுகின்றது.



இந்தக் எண்ணக்கருவின் தனித்துவமான மைல்கல்லாக, நாடு முழுவதிலுமுள்ள பாடசாலை மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே மிகத் திறமையானவர்களைக் கொண்ட தேசிய மாணவர்கள் பாராளுமன்றம் 2024ஆம் ஆண்டு மார்ச் 26ம் திகதி ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பிரகாரம், ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயகாவின் வழிகாட்டலில் ஜனாதிபதி செயலகத்தின், முப்படைகளின் ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் செயற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்திற்கு இலங்கை பாராளுமன்றம், கல்வி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் போன்றன ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தன.

கொழும்புக்கு வெளியே தூர பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்கள் உள்ளிட்ட நாடு முழுவதிலுமுள்ள சுமார் 160 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இதுவரை இந்தக் களப்பயணத்தில் பங்குபற்றியுள்ளனர். இந்த வேலைத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*எம். எஸ். முஸப்பிர்*

# இராஜினாமா செய்யக் காரணம் கட்சியின் மீதான விரக்தியே!

## ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல



**கடந்த காலங்களில் நீங்கள் ஒரு அமைதியான நபராக இருந்தீர்கள். 20 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில் ஏன் இவ்வாறான ஒரு உணர்வுபூர்வமான முடிவை எடுத்தீர்கள்?**

எமது கட்சியின் செயற்பாடுகள் தொடர்பில் நான் மிகுந்த விரக்தியில் இருந்தேன். எனது இந்த விரக்தி கடந்த 2021ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்டிருந்தது. எனினும் கட்சியிலிருந்து தெரிவாகிய ஒருவராக நான் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த கடமைகள் மற்றும் எனது தொகுதியின் அனைத்துச் செயற்பாடுகளையும் நான் இந்த மூன்று வருடங்களினுள் நிறைவேற்றினேன். கட்சி பிளவுபடுவதை அன்று நான் விரும்பவில்லை. கட்சியை ஒற்றுமைப் படுத்துவதற்காக நான் முயற்சித்தேன். ஆனால் அது எதனையும் அவர்கள் விரும்பவில்லை. சிறிய இலாபங்களுக்காக சிலர் செயற்பட்டார்கள். இன்று நாட்டின் நிலை அன்றைய நிலையைவிட மாற்றமானது. எனவே அடுத்து எவ்வாறான நிலை ஏற்படும் என நான் சிந்தித்தேன். நான் ஒரு படி பின்வாங்கி, ஏனையவர்கள் செயற்படுவதற்கு இடமளித்து நான் எனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தேன். அப்படி இருந்தும் கட்சி மாற வேண்டும் என்ற எந்த எதிர்பார்ப்பும் எனக்கு இருக்கவில்லை.

**ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவி உங்களுக்கு வழங்கப்படப் போவதாகக் கூறப்படுகின்றதே?**

உண்மையிலேயே இப்போது என்னை ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளராக ஆக்கி விட்டார்கள். சிலர் நான் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்காகத்தான் சென்றுள்ளேன் எனக் கூறுகின்றார்கள். நான் பொதுச் செயலாளர் விடயத்தில் எவருடனும் பேசவில்லை. இது நான் சுயாதீனமாக, நீண்ட சிந்தனைக்குப் பிறகு யோசித்து எடுத்த தீர்மானமாகும். அவ்வாறில்லாமல் யாரின் வற்புறுத்தலினாலோ, ஏதேனும் வேண்டுகோளின் பிரகாரமோ அல்லது எவரினதும் தேவைக்காகவோ எடுத்த தீர்மானமல்ல. எனக்கிருந்த ஒரே பிணைப்பு 2020ஆம் ஆண்டு எனக்கு வாக்களித்த எனது மக்களாகும். எனவே எனது மக்களிடம் கூறாமல்தான் நான் இந்த தீர்மானத்தை எடுத்தேன்.

**கட்சியிலிருந்து விலகும் தீர்மானத்தை நீங்கள் ஏற்கனவே எடுத்திருக்க வேண்டும். ஏன் தாமதமாகியது?**

நாம் ஐந்து வருடங்களுக்கே பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்படுகின்றோம். அப்போது நான் புதிய கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியைப் பொறுப்பேற்றிருந்தேன். எனக்குப் பின்னால் சிலர் இருக்கின்றார்கள். அவர்களுடனான பிணைப்பு எனக்கிருந்தது. நாட்டிற்கு நல்லதைச் செய்ய வேண்டிய சந்தர்ப்பத்திலேயே நான் இந்த முடிவை எடுக்க வேண்டும் என நினைத்தேன். எனது இந்த விலகலை முன்பு செய்திருந்தால் அதனால் பயனில்லை. கடந்த வருடத்தில் விலகியிருந்தாலும் எந்தப் பயனுமில்லை.

- இனித்தான் என்மீது நம்பிக்கை வைத்திருந்தவர்களைச் சந்திக்கப் போகிறேன்.
- இப்போதே என்னை ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளராக்கி விட்டார்கள்.
- நான் இராஜினாமாச் செய்ய வேண்டும், நேரம் ஒதுக்கித் தாருங்கள் என லக்ஷ்மன் கிரியெல்லவிடம் நான் கோரியபோது, இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தருவதாகக் கூறினார்.
- நான் அரசியலை வெறுக்குமளவுக்கு கட்சியின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.
- இந்த எனது முடிவை நான் அவசரப்படுத்துவதற்கு எனது கட்சி அமைப்பினுள் பல காரணங்கள் இருந்தன.

தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே நான் இந்த முடிவை எடுக்க இருந்தேன். இந்த எனது முடிவை நான் அவசரப்படுத்துவதற்கு எனது கட்சி அமைப்பினுள் பல காரணங்கள் இருந்தன.

**நீங்கள் இந்த முடிவைத் துரிதப்படுத்துவதற்கு தாக்கத்தைச் செலுத்திய விடயங்கள் என்ன?**

2019ஆம் ஆண்டு சஜித் பிரேமதாசவின் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இரத்தினபுரி மாவட்ட ஏற்பாட்டுப் பணிகளை நானே மேற்கொண்டேன். கட்சி அலுவலகத்தை அமைத்து இரவு பகல் பாராது செயற்பட்டேன். 25 வருட பாராளுமன்ற உறுப்பினராக, 13 தொகுதி அமைப்பாளர்கள் எமது கட்சியில் இருந்த ஒரு தொகுதியிலேயே நான் பொறுப்பாகச் செயற்பட்டேன். எனினும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வது கடினமான பணியாகும். நான் இருந்த தொகுதியிலிருந்து மாறிச் சென்றதால் நான் பெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டியிருந்தது. அவ்வனைத்தையும் செய்த பிறகு திடீரென கட்சியின் பொதுச் செயலாளரால் வெளியாள் ஒருவருக்கு இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்ல, தொகுதிகளுக்கும் பல்வேறு தரப்பினர் நியமிக்கப்பட்டனர். இவையே நான் அவசரமாக வெளியேறுவதற்கு காரணமாக அமைந்தன. இல்லாவிட்டால் இந்த தீர்மானம் இவ்வாறு நடக்காமல் இருந்திருக்கலாம். நான் இரண்டு செய்திகளைக் வழங்க வேண்டும். முதலாவது, பாராளுமன்றத்தின் ஊடாக இந்த நாட்டில் இந்த பிரச்சினைக்கு முகம் கொடுக்கக் கூடிய ஒருவருக்கு இதற்கான பொறுப்பு வழங்கப்பட வேண்டும். அதனை கட்சியினுள் இருந்து கொண்டு வழங்குவதற்கு எனக்கு இடமிருந்தது. அதனை வழங்குவதற்கு நான் பாராளுமன்றத்திலிருந்து விலகத் தேவையில்லை. எனினும் நான் பாராளுமன்றத்தை விட்டு வெளியேறுவதற்கு காரணம் எனக்கு கட்சி அரசியலில் வெறுப்பேற்பட்டமையே. இதனைத் தவிர வேறு எந்த காரணமும் இல்லை.

இந்த விரக்தி 2021இல் ஆரம்பித்தது. ஆனால் நான் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தேன். என்னை நியமித்தது கட்சியின் தலைவரோ, பொதுச் செயலாளரோ அல்ல, எனது மக்களாகும். எனவே நான் இதுவரையும் அந்த மக்களைப் பற்றிச் சிந்தித்தே பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

**நீங்கள் பாராளுமன்றத்தில் இறுதி உரையை நிகழ்த்துவதற்கும் கூட கட்சியினால் நேரம் ஒதுக்கித் தரப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றதே?**

நான் இராஜினாமாச் செய்ய வேண்டும். எனக்கு உரையாற்ற நேரம் ஒதுக்கித் தாருங்கள் என லக்ஷ்மன் கிரியெல்லவிடம் நான் கோரியபோது, இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தருவதாகக் கூறினார். அந்த நேரத்திற்குள் எவ்வாறு உரையொன்றை ஆற்றுவது? அவர்கள் இதனைப் பற்றி அறிந்திருந்தார்களா எனத் தெரியவில்லை. நான் விலகும் நிலைப்பாட்டிலேயே கடந்த வாரம் முழுவதும் இருந்தேன். நான் சபாநாயகரைச் சந்தித்து இதுபற்றிக் கூறினேன். நீங்கள் விசேட உரையை நிகழ்த்த இருப்பதால் அதற்கான நேரத்தை வழங்குகின்றேன் என அவர் கூறினார்.

**ஐக்கிய மக்கள் சக்தியினுள் ஒருவித தளம்பல் நிலை உள்ளது. ஏராளமானோர் வெளியேறியுள்ளனர். ஜனாதிபதி தேர்தலின் போது உங்களது விலகலும் ஒரு சவாலா?**

எனது விலகல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என நான் நினைக்கவில்லை. தாக்கம் இருந்திருக்குமானால் ஆரம்பத்திலிருந்தே இதைப் பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும். நாம் ஐக்கிய மக்கள் சக்தியில் தெரிவாகிய பின்னர் இடம்பெற்ற முதலாவது கூட்டத்தில், கட்சித் தலைவர் என்ற வகையில் சஜித் பிரேமதாசவுக்கு தலைமைத்துவம் வழங்கப்படுவது ஜனநாயக ரீதியாகவும் அனைவரின் கருத்தும் கேட்டதன் பின்னரே என தெரிவிக்கப்பட்டது. ஆனால் கடைசியில் அவரைச் சந்திக்கக் கூட என்னால் நேரத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

**தற்போதைய ஜனாதிபதியின் செயற்பாடுகளை எதிர்க்கட்சித் தலைவரால் தொடர முடியும் என்று நம்புகிறீர்களா?**

இது தொடர்பில் எனக்குச் சந்தேகம் இருக்கின்றது.

**எனினும் அவருடன் சிறந்த பலமிக்க குழு ஒன்றுள்ளதாகக் கூறுகின்றார்களே?**

அவர்களால் முடியுமாக இருக்கலாம். எனக்கென்றால் அதுபற்றி தெரியாது.

**சஜித் பிரேமதாச அரசாங்கத்தில் இணைவதற்கு இருந்த ராஜபக்ஷ என்ற தடை நீங்கிய நிலையிலும் கூட அவர் தனது பொறுப்பைப் புறக்கணித்தார் என நீங்கள் கூறினீர்களே?**

அவர்களின் எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் நான் பங்கேற்கவில்லை. கடைசியில் அவர்களிடம் கட்சி உறுப்பினர்களின் கருத்துகளை மதிக்கும் தன்மையைக் கூட நான் காணவில்லை.

**தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் ஊழல்வாதிகள் இணைவதைப் பார்க்க முடிவதாக நீங்கள் கூறுகின்றீர்களே?**

ஆம். நான் அவ்வாறுதான் நினைக்கிறேன். எனினும் நான் நினைப்பதையே மக்களும் நினைக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது.

**நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யாமல் இந்த தீர்மானத்தை எடுத்திருக்கலாம் என இன்று நினைக்கின்றிர்களா?**

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மக்கள் ஆணையைப் பெற்றுத்தானே நான் பாராளுமன்றத்திற்கு வந்தேன். அது கட்சிக்குரிய ஒன்றாகும். நான் கட்சி மாறப் போகிறேன் என்றே அனேகமானோர் நினைத்திருந்தார்கள். கடைசி சில நாட்களாக நான் யாரையும் சந்திக்காமல் ஒதுங்கியிருந்தேன்.

**அரகலய எனும் போராட்டத்தின் பின்னர், பிரதமர் பதவியை ஏற்குமாறு கோரப்பட்ட போது, தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அதை நிராகரித்தார். அப்போது கட்சியினுள் என்ன நடந்தது என்பது நினைவிருக்கிறதா?**

அந்த நேரத்தில் பிரதமர் பதவியை எடுப்பதற்கு நானும் எதிராகவே இருந்தேன். ராஜபக்ஷ ஒருவரின் கீழ் இருப்பதை நான் விரும்பவில்லை. அப்போதிருந்த நிலையினை நாம் கண்டோம். அவரின் கீழ் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்க விரும்பவில்லை. எனினும் நாம் கூறியதால்தான் அவர் பொறுப்பேற்காமல் இருந்தார் என்பதல்ல. சஜித் பிரேமதாசவுக்கு அதற்கு வேறு காரணங்கள் இருந்திருக்கலாம்.

**தற்போதைய ஜனாதிபதியின் கீழ் பொருளாதார அபிவிருத்தி எட்டப்பட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களா?**

நான் பெரியதொரு பொருளியல் நிபுணரல்ல. எனினும் ஒன்றைக் கூற முடியும். நானும் ஒரு சீமெந்து பைக்கற் 3250 ரூபாய் கொடுத்து வாங்கிய சந்தர்ப்பம் உள்ளது. பால் மா பைக்கற் ஒன்றை அதிக விலை கொடுத்து வாங்கியுள்ளேன். இன்று அவற்றில் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதால்தான் இன்று நாடு ஸ்திர நிலைக்கு வந்திருக்கின்றது. நாட்டில் பிரச்சினை இருந்தது. அது இப்போது நீங்கியுள்ளது எனக் கூற முடியும். என்றாலும் இன்னமும் நான் கடனைச் செலுத்த ஆரம்பிக்கவில்லை. யார் வென்றாலும் இதற்கான முறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். பிரச்சினைகள் இல்லை என்றில்லை. அதற்கான சிறந்த திசையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். இல்லையென்றால் நாடு மீண்டும் பழைய நிலையை நோக்கிச் செல்லும்.

**இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்குள்ள பொறுப்பு என்ன என்பதைப் பற்றி கூறுங்களேன்?**

மக்கள் தொடர்பான பொறுப்பிருப்பது ஒரு நாட்டின் தலைவர் மற்றும் அரசாங்கத்திலாகும். மக்கள் நன்றாக வாழ்கிறார்களா? உணவு, பானங்கள் இருக்கின்றனவா போன்ற விடயங்கள் இதன் ஊடாகத் தீர்மானிக்கப்படுகின்றன.

**நீங்கள் அரசியலிலிருந்து ஒதுங்கப் போகின்றீர்களா?**

இல்லை. இன்னமும் யோசித்துக் கொண்டிருக்கின்றேன். காரணம் எனக்குப் பின்னால் நிறையப்பேர் இருக்கின்றார்களே. நான் அவர்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். நான் செய்யவேண்டிய விடயம் தொடர்பில் தீர்மானம் ஒன்றைக் கண்டிப்பாக எடுப்பேன். எனினும் எதிர்காலத்தில் நான் செய்யப் போகும் விடயம் தொடர்பில் இப்போது எதனையும் கூற முடியாது.

**அடுத்த தேர்தலில் போட்டியிடும் எண்ணம் உங்களுக்கு உள்ளதா?**

அதனை இப்போதே கூற முடியாது. தேர்தல் வரும் போது கூறுகிறேன்.

*சுபாஷினி ஜயரத்ன*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# வேட்பாளர்கள் சிலர் சாத்தியமற்ற உறுதிமொழிகளை வழங்குகின்றனர்

## வெகுஜன ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார வழங்கிய பேட்டி

**நாடு இன்று எதிர்கொண்டுள்ள பொருளாதார சூழ்நிலையில் சாத்தியமற்ற உறுதிமொழிகளை பெரும்பாலான வேட்பாளர்கள் முன்வைக்கின்றனர். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டை சரியான பாதைக்குக் கொண்டுசெல்வதற்கான 'சிஸ்டம்' ஒன்றை உருவாக்கியிருப்பதாக வெகுஜன ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார். இராஜாங்க அமைச்சர் தனது விடயப்பரப்பின் கீழ் உள்ள அரசாங்கத் திணைக்களங்களின் தேர்தல்கால ஆயத்தப்படுத்தல்கள் மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் சுயாதீன தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்புக்கான திகதி அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அச்சிடும் பணிகள் மற்றும் விநியோகப் பணிகள் பற்றி விளக்குவீர்களா?**

பதில்: உண்மையில் தேசிய தேர்தல்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அடுத்து பொலிஸ் திணைக்களம், தபால் திணைக்களம் மற்றும் அரசாங்க அச்சுத் திணைக்களம் ஆகியன முக்கிய பங்காற்றுகின்றன. எனது விடயப்பரப்பின் கீழ் உள்ள அரசாங்க அச்சுத் திணைக்களம் எப்பொழுதும் இரண்டு தேர்தல்களுக்கு ஆயத்தமான நிலையில் இருக்கும். வாக்குச்சீட்டுக்கள் போன்றவற்றை அச்சிடுவதற்குத் தேவையான மூலப்பொருட்கள் எப்பொழுதும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். எனவே இது தொடர்பில் எமக்கு எவ்வித சிக்கலும் இல்லை. கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எமக்குக் காணப்பட்ட பிரச்சினை அப்போது நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையே ஆகும். இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் இத்திணைக்களத்திற்குக் கிடைக்காமையால் உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் போயிருந்தது. இவ்வாறான நிலையில் தேர்தல்கள் திணைக்களம் மற்றும் திறைசேரி இணைந்து அச்சுத் திணைக்களத்துக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்திருப்பதால், தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்துள்ளது.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் அச்சுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை நாம் நேரடியாகத் தொடர்பு கொள்வதோ அல்லது அமைச்சின் கூட்டங்களுக்கு அழைப்பதோ இல்லை. இரகசியத் தன்மையைப் பாதுகாக்கும் வகையிலான சூழலை வழங்குவது பாரம்பரியமாகும். இதனை நாம் கொள்கை ரீதியாகவும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

**கே: உங்களுக்கான விடயதானத்தில் உள்ள மற்றுமொரு திணைக்களம் அஞ்சல் திணைக்களமாகும். தேர்தல் காலத்தில் முக்கிய பங்காற்றும் இத்திணைக்களத்தின் தயார்ப்படுத்தல்கள் எவ்வாறு காணப்படுகின்றன?**

பதில்: அஞ்சல் திணைக்களத்தின் பணிகளை தேர்தல் காலத்தில் சிறப்பாக முன்னெடுப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திணைக்களத்தில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறையானது தேர்தல் தொடர்பான திணைக்களத்தின் பணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய முக்கியமான பணியாக இதனைக் கவனத்தில் கொண்டு திணைக்களத்தில் உள்ள அனைவரும் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கடந்த காலங்களில் நாம் முயற்சிகளை எடுத்திருந்தோம். இது பற்றி அரச சேவைகள் ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம்.

**கே: தமது தேவை உணரப்படும் சந்தர்ப்பங்களில் கோரிக்கைகளை வெற்றிகொள்ளும் நோக்கில் தொழிற்சங்கங்கள் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. அவ்வாறானதொரு நிலைமை அஞ்சல் திணைக்களத்தில் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா அதற்கு முகங்கொடுக்கத் தயாராக உள்ளீர்களா?**

பதில்: இந்தச் சூழலில் எமது திணைக்களத்தின் பணியாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத்திற்குச் செல்ல மாட்டார்கள் என்ற நூறுவீத நம்பிக்கை எனக்கு உள்ளது. அவர்களின் பிரச்சினைகள் பலவற்றை நாம் தீர்த்து வைத்துள்ளோம். நாம் அவர்களின் பிரச்சினைகளை அரசியல் ரீதியில் நோக்காமல் அவற்றைத் தீர்ப்பதற்கான முழுமையான அதிகாரத்தை தபால்மா அதிபருக்கு வழங்கியிருந்தோம். அரசாங்கம் கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானங்களுக்கு அமைய செயற்பட வேண்டிய கடப்பாடு இருக்கின்றபோதும், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

**கே: தேர்தல் காலத்தில் ஊடகங்களின் செயற்பாடு குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இவ்வாறான நிலையில் வெகுஜன ஊடகத்துறையின் இராஜாங்க அமைச்சராகவும் நீங்கள் இருப்பதால், தேர்தலுக்கான சமமான தளத்தை ஊடகங்கள் அனைவருக்கும் வழங்குவதாக நீங்கள் கருதுகின்றீர்களா?**

பதில்: ஊடகங்களை எடுத்துக் கொண்டால் அரசாங்க ஊடகங்கள், தனியார் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் என வகைப்படுத்தலாம். ஊடகங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கான கட்டமைப்புக்கள் போதுமானதாக இல்லையென்ற நிலைப்பாடு காணப்பட்டாலும், தேவைக்கு அதிகமாக ஊடகங்களைக் கட்டுப்படுத்த முடியாது. அவை சுயாதீனமாக இயங்குவதற்கான சூழலை உறுதிப்படுத்த வேண்டும். அண்மைக் காலத்தில் நிகழ்நிலைச் சட்டம் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்தல் குறித்த சட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற முடிந்தது.

இவற்றைக் கொண்டுவருவதன் ஊடாக ஊடகங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக விமர்சனங்கள் எம்மீது முன்வைக்கப்பட்டன. எனினும், நியாயமான முறையில் செயற்படுவதற்கான பொறுப்பு அரசாங்க ஊடகங்களுக்கு மாத்திரமன்றி தனியார் ஊடகங்களுக்கும் உள்ளது. இதற்கு அனைத்து நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்கும் என நான் நினைக்கின்றேன். ஊடகங்கள் மீது மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்துவது கஷ்டமான விடயம் என்பது மாத்திரமன்றி, மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைத் தொடர்ந்தும் பேணுவதற்கான பொறுப்பும் ஊடகங்களுக்கு உள்ளது என்பதை தனியார் ஊடகங்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். சில ஊடகங்கள் பக்கச்சார்பான முறையில் நடந்து கொள்வதைக் காணக் கூடியதாக உள்ளது. ஊடக கலாசாரத்தைப் பேணும் வகையில் பக்கச்சார்பற்ற முறையில் ஊடக நிறுவனங்கள் செயற்படுமாயின் அதுவே நாட்டின் முன்னேற்றத்துக்கு முக்கியமானதாக அமையும்.

**கே: தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் வேட்பாளர்கள் தமக்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் செல்கின்றனர். இவ்வாறான பின்னணியில் வாக்காளர்களின் செயற்பாடுகளை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: அரசியலில் உள்ள தேசியத் தலைவர்களின் அடிப்படையிலேயே வாக்காளர்களின் செயற்பாடுகளும் இருக்கின்றன என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். சில சந்தர்ப்பங்களில் வெற்றிபெற்ற வேட்பாளரது ஆதரவாளர்களின் நடவடிக்கைகளின் காரணமாக தேர்தலுக்குப் பின்னரான சூழல் மாறுபடுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. தேசிய மட்டத்தில் உள்ள தலைவர்கள் ஒருவருக்கு ஒருவர் நட்புடன் கைகுலுக்கி வெற்றி தோல்விகளைப் பகிர்ந்து கொள்வார்களாயின் அது அடிமட்டத்தில் உள்ள அவர்களின் ஆதரவாளர்களுக்கும் முன்னுதாரணமாக அமையும். அவ்வாறு நடந்து கொள்வதன் ஊடாக அடிமட்டத்தில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளைத் தவிர்க்க முடியும். ஆதரவாளர்கள் மத்தியில் வைராக்கியத்தை தேசிய தலைவர்கள் ஏற்படுத்தினால், அது நாட்டின் சூழலைப் பிழையான இடத்துக்கு எடுத்துச் சென்று விடும். எனவே, நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத கொள்கை ரீதியான அரசியலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

(07ஆம் பக்கம் பார்க்க)



**வேட்பாளர்கள் தாம் கூறும் விடயங்களை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றார்கள் என்பதை விரிவாக மக்களுக்கு முன்வைப்பது அவசியம்**

# இந்தியா எங்கும் உணர்வலைகளை ஏற்படுத்திய பெண் பயிற்சி மருத்துவர் படுகொலை சம்பவம்!




**இந்தியாவின் மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் உள்ள ஆர்ஜிகார் அரசு மருத்துவமனையில் முதுகலை இரண்டாம் ஆண்டு பயிலும் பெண் பயிற்சி மருத்துவர் ஒருவர் கடந்த 8 ஆம் திகதி பணியில் இருந்த போது பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிசார் நடத்திய விசாரணையின் அடிப்படையில் சஞ்சய் ராய் என்பவர் கைது செய்யப்பட்டார்.**

பயிற்சி மருத்துவர் கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அதேசமயம் மருத்துவ மாணவியின் கொலைச் சம்பவத்தைக் கண்டித்து நாடு முழுவதும் மருத்துவ மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்திருந்தது. இந்தச் சம்பவத்திற்கு நீதி கேட்டு மருத்துவர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தியுள்ளனர். மருத்துவர்களின் போராட்டம் காரணமாக அரசு மருத்துவமனைகளில் மருத்துவ சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இதனிடையே அரசைக் கடுமையாகச் சாடிய மேற்கு வங்க உயர்நீதிமன்றம், வழக்கை சி.பி.ஐ இற்கு மாற்றி உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, மாணவி கொலையில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனையான மரண தண்டனை வழங்க வேண்டும் என்று அம்மாநில முதல்வர் மம்தா கொல்கத்தாவில் பேரணி நடத்தினார். இருப்பினும் மம்தாவிற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டு அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்து வருகிறது.

இந்த சூழலில் உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து பெண் மருத்துவர் கொலை தொடர்பாக வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கு உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, "பாதிக்கப்பட்ட பெண்ணின் பெயர் மற்றும் புகைப்படங்கள் ஊடகங்கள் மற்றும் சமூகவலைத் தளங்களில் பரவியது எவ்வாறு? ஏன் பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை? சம்பவம் நடந்த உடனே நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலிஸ்துறை மெத்தனமாக நடந்திருக்கிறது. இது கொல்கத்தா மருத்துவமனை பிரச்சினை மட்டுமே அல்ல; ஒட்டுமொத்த மருத்துவர்களின் பிரச்சினை" என்று தலைமை நீதிபதி கடும் தொனியில் கூறினார்.

பயிற்சி மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தேசிய அளவில் குழு அமைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இந்த விவகாரத்தில் மம்தா அரசும் கொல்கத்தா பொலிசாரும் மிகப் பெரிய தவறுகள் செய்துள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன.

குற்றம் இடம்பெற்ற தினத்தில் அதை மூடி மறைக்க மேற்கு வங்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. உண்மையை மூடிமறைக்கவே மம்தா அரசு முயன்றதாக அங்குள்ள இடதுசாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அங்குள்ள கருத்தரங்கு மண்டபத்தில் மிக மோசமான நிலையில், மருத்துவரின் உடல் கண்டெடுக்கப்பட்டது. ஆனால், இதைத் தற்கொலை என்று சொல்லி மூடி மறைக்கவே அம்மாநில அரசு முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

உயிரிழந்த பெண் மருத்துவரின் உடலைப் பார்க்க அவரது பெற்றோரை சுமார் மூன்று மணி நேரம் காக்க வைத்துள்ளனர். மேலும், விசாரணை நடக்கும் போதே அவசர அவசரமாகப் பெண் மருத்துவரின் உடலைத் தகனம் செய்துள்ளனர்.

தங்கள் மகளின் மரணத்திற்கு நியாயம் வேண்டும் என்று உயிரிழந்த பெண் மருத்துவரின் பெற்றோர் கூறி வந்தனர். அந்த நேரத்தில் நிலைமையைச் சமாளிக்க மம்தா பானர்ஜி பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூபா 10 இலட்சம் இழப்பீடு வழங்கப்படும் என அறிவித்தார். இதுவும் அங்கே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

ஆர்ஜிகார் மருத்துவமனையில் உள்ள செமினார் மண்டபத்தில்தான் இந்தக் குற்றச் சம்பவம் நடந்துள்ளது. விசாரணை நடக்கும் போதே அந்த மண்டபம் மற்றும் அருகே இருந்த கழிப்பறைச் சுவர் அவசர அவசரமாகப் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆதாரங்களை அழிக்கவே இந்தப் பணிகள் உடனடியாக நடந்ததாகவும் விமர்சனங்கள் உள்ளன.



### கொலை விசாரணைகளை திசைதிருப்ப மம்தா பானர்ஜி அரசு தீவிரமாக முயற்சிப்பதாக கண்டனங்கள்! மருத்துவக் கல்லூரி முதல்வரைக் காப்பாற்றுவதற்கான முயற்சியா?

குற்றம் நடந்த போது ஆர்ஜிகார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வராக இருந்த சந்தீப் கோஷை பாதுகாக்க முயல்வதாக மம்தா அரசு மீது குற்றச்சாட்டு இருக்கிறது. இந்த சம்பவத்தைத் தற்கொலை என்று மூடி மறைக்க முயன்ற சந்தீப் கோஷ் மீது இதுவரை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அடுத்து இந்தச் சம்பவத்தைக் கண்டித்து போராட்டங்கள் நடந்த போது அதை மேற்கு வங்க அரசு மிக மோசமாகக் கையாண்டது. மருத்துவர்கள் வேலைநிறுத்தம் செய்த போது அவர்களை அழைத்துப் பேசாமல், அவர்கள் உடனடியாக பணிக்குத் திரும்ப வேண்டும் என்று மறைமுகமாக அம்மாநில அரசு அழுத்தம் கொடுத்தது.

மக்கள் போராட்டத்தை ஒடுக்குவதில் மம்தா அரசு அதிக கவனம் செலுத்துவதாகக் கூறப்படுகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கே கால்பந்து போட்டி ஒன்று நடக்க இருந்தது. ஆனால், போராட்டம் நடக்குமோ என்று அஞ்சி மேற்கு வங்க அரசு அந்த போட்டியை மொத்தமாக ரத்து செய்தது. இந்தச் விவகாரத்தில் சமூக வலைத்தளங்களில் கருத்துச் சொல்வோருக்கு எதிராக கொல்கத்தா பொலிஸ் நடவடிக்கை எடுத்தது. பலருக்கு இந்த விவகாரத்தில் நோட்டீஸ் கூட அனுப்பப்பட்டது. இந்த சம்பவத்தில் மம்தாவை குற்றஞ்சாட்டினால் விரலை உடைப்பேன் என்று திரிணாமுல் அமைச்சர் உதயன் குஹா சொன்னது சர்ச்சையான விடயமாகும்.

கடைசியாக இந்தச் சம்பவத்தில் மம்தா நடத்திய போராட்டம் மிகப்பெரிய விமர்சனத்தைக் கிளப்பியது. மேற்கு வங்க முதல்வராக இருக்கும் மம்தா உரிய நடவடிக்கை எடுக்காமல் போராட்டம் என்று இந்தச் சம்பவத்தைத் திசைதிருப்ப முயல்வதாக உயிரிழந்த பெண் மருத்துவரின் பெற்றோர் உட்பட பலரும் சாடினர்.

கொல்கத்தா மருத்துவக் கல்லூரி பயிற்சி பெண் மருத்துவர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்ட சம்பவத்தில், மேற்கு வங்க அரசின் செயல்பாட்டுக்கு அதிருப்தி தெரிவித்த உச்சநீதிமன்றம், சரமாரி கேள்விகளை எழுப்பியது.

மேற்கு வங்கத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையில் திரிணமுல் காங்கிரஸ் ஆட்சி அமைந்துள்ளது. தலைநகர் கொல்கத்தாவில் உள்ள ஆர்ஜிகார் மருத்துவக் கல்லூரியில் முதுநிலை இரண்டாம் ஆண்டு படித்து வந்த 31 வயதான பயிற்சி பெண் மருத்துவரே கொல்லப்பட்டவராவார்.

கொல்கத்தாவில் நடந்துள்ள சம்பவம், மருத்துவர்கள் பணி தொடர்பான பல கேள்விகளை எழுப்பியுள்ளது. முதலில் அவர்களுடைய பாதுகாப்பு தொடர்பானது. தற்போது பெண்கள் அதிகளவில் இந்தத் துறையில் ஈடுபடுவதால், அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இளம் மருத்துவர்கள் வாரத்தில் 36 மணி நேரம் பணி செய்ய வேண்டியுள்ளது. அவர்களுக்கு ஓய்வு அறைகள் இல்லை. ஆண்கள், பெண்களுக்கென தனித்தனி கழிப்பறைகள் இல்லை என்று கூறப்படுகின்றது.

பயிற்சி மருத்துவர் கொலைச் சம்பவம் தொடர்பாக கொல்கத்தா ஆர்ஜிகார் மருத்துவக் கல்லூரி முதல்வராக இருந்த சந்தீப் கோஷிடம் சி.பி.ஐ விசாரித்து வருகிறது. அவர் மீது பொலிசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.


கைதுசெய்யப்பட்ட சஞ்சய் ராய்

எஸ்.சாரங்கன்...

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 812 முறைப்பாடுகள்



ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 812 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி தேர்தல்கள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டு முகாமைத்துவ மையத்துக்கு 409 முறைப்பாடுகளும் மாவட்ட முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 403 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இதுவரை முன்வைக்கப்பட்டுள்ள மொத்த முறைப்பாடுகளில் தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பிலேயே 812 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# சிறுவர்களிடையே பரவும் இன்புளுவன்சா காய்ச்சல்

## நிமோனியா ஏற்படும் அபாயம்




நாட்டில் சிறுவர்களிடையே இன்புளுவன்சா காய்ச்சல் தற்போது அதிகளவில் பரவி வருவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனால் நிமோனியா ஏற்படும் அபாயம் இருப்பதால் பெற்றோர் மிக அவதானத்துடன் இருக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 35,118 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

# ருக்மன் சேனாநாயக்க நேற்று காலமானார்



இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் பேரனும், முன்னாள் அமைச்சரவை அமைச்சருமான ருக்மன் சேனாநாயக்க காலமானார்.

இவர் தனது 76ஆவது வயதில் நேற்று காலமானார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரான ருக்மன் சேனாநாயக்க, தனது அரசியல் வாழ்க்கையில் பல்வேறு அமைச்சர் பதவிகளில் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## தன் பிள்ளைகளை போல...

தெரிவித்தார். அனைவரது பிள்ளைகளையும் தனது பிள்ளைகளை போல அவர் பாதுகாத்திருக்கிறார். அந்த வகையில் அவரே இந்த நாட்டின் தந்தை என்றும் அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய காங்கிரஸின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இம்மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நாடு நெருக்கடியிலிருந்த போது நாட்டை அந்நிலையிலிருந்து மீட்டு தற்போது இயல்பு நிலைக்கு நாடு திரும்பும் வகையில் அவர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். சமையல் எரிவாயு நெருக்கடி ஏற்பட்ட போதும் ஒவ்வொரு சமையலறைக்கும் எரிவாயு சிலிண்டர் போய் சேரும் வகையில் வழிவகை செய்துள்ளார்.

ஆரம்பத்தில் டி.எஸ்.சேனாநாயக்கவின் காலத்தில் அதிகளவான முஸ்லிம்கள் ஐ.தே.க.வில் இணைந்திருந்தனர். பின்னர் அந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. கடந்த காலத்தில் தேசிய காங்கிரஸ் பல்வேறு அரசியல் தீர்மானங்களை எடுத்தது. சில சமயங்களில் தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராகவும் முடிவுகளை எடுத்துள்ளது. ஆனால் இப்போது அவருடன் நாட்டுக்காக இணைந்துள்ளது.

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி சாதாரணமான ஒருவரல்ல. யாரும் முன்வராத நிலையில் தாய் நாட்டை காப்பாற்ற வந்த தலைவர் அவர். இன்றிருக்கும் தலைவர்களில் நாட்டை பற்றி முழுமையாக தெரிந்தவர் நமது ஜனாதிபதி. நாட்டை சுபீட்சமாக எதிர்காலத்துக்கு கொண்டு செல்லக்கூடிய தலைவரே நாட்டுக்கு தேவை. டி.எஸ்.சேனாநாயக்கவுக்கு பின்னர் அனைத்து மக்களும் இவரையே நம்பியுள்ளனர்" எனத் தெரிவித்தார்.

## ஐக்கிய தேசிய கட்சியின்...

விக்கிரமசிங்க தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக கட்சியின் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

## கருத்து கணிப்புகளை...

கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் தமது கருத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லையென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த கணக்கெடுப்புகளின் அடிப்படையில் வாக்காளர் தங்கள் கருத்துகளை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படக் கூடாதென்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

## எங்கள் கருத்து...

# இலவச மருத்துவத்துறையின் களங்கம் களையப்பட வேண்டும்!

மூலமே நாம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். உரிய விசாரணைகளின் முடிவுகள் வெளிவரும் வரை இத்தவறுகள் குறித்து எழுந்தமான முறையில் எவரும் கருத்துகளை வெளியிடுவது முறையல்ல.

ஆனாலும் அரசாங்க வைத்தியசாலைகள் சிலவற்றில் பணியாற்றுவோரின் உதாசீனம் காரணமாக நோயாளர்கள் சிலர் உயிரிழந்துள்ளதாகவும், அவ்வாறான வைத்தியசாலைகளில் நோயாளர்கள் சரியானபடி மருத்துவப் பராமரிப்புக்கு உட்படுத்தப்படுவதில்லையெனவும் பொதுமக்கள் சார்பாக ஊடகங்களில் அடிக்கடி வெளிவருகின்ற தகவல்கள் தொடர்பாக பாராமுகமாக இருந்துவிடவும் முடியாது.

பொதுமக்கள் தரப்பிலிருந்து வெளிவருகின்ற இத்தகவல்கள் குறித்து உரிய ஆதாரங்களுடன் செய்திகளை வெளியிடுவது ஊடகங்களின் கடமையாகின்றது. அது மாத்திரமன்றி, அவ்வாறான புகார்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி தவறுகள் இருப்பின், அவற்றைக் களைய வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கு உள்ளதென்பதையும் மறுப்பதற்கில்லை.

கடமையில் நெறி தவறாத மருத்துவப் பணியாளர்களைப் பாராட்டுவதும், கடமை தவறும் மருத்துவப் பணியாளர்களின் தவறுகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதும் ஊடகங்களின் கடமையாகும். தவறிழைக்கும் அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டிய பொறுப்பு மேலதிகாரிகளுக்கே உள்ளது. அதேசமயம் மருத்துவப் பணியாளர்கள் ஒருசிலரின் உதாசீனம் காரணமாக ஒட்டுமொத்த மருத்துவத்துறைக்கும் களங்கம் நேர்ந்துவிட இடமளிக்கவும் கூடாது.

மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரை உலகின் ஏனைய நாடுகளிலுள்ள மக்களைப் பார்க்கிலும், இலங்கை மக்கள் அதிர்ஷ்டசாலிகளென்றே கூற வேண்டும். இலவச மருத்துவத்தை சிறப்பாக வழங்குகின்ற நாடு இலங்கை ஆகும். மருத்துவப் பணியாளர்களின் வேதனம், அவர்களுக்கான சலுகைகள், நோயாளர்களின் மருத்துவத்துக்கான அனைத்து வசதிகள் போன்ற பல்வேறு விடயங்களுக்காக இலங்கை அரசாங்கம் பெருந்தொகை நிதியைச் செலவிடுகின்றது. மேற்கு நாடுகளில் கூட இவ்வாறான துரித சிறப்பு இலவச மருத்துவ வசதிகள் கிடையாது.

இலவச மருத்துவத்துக்காக இத்தனை முழுமையான வசதிகள் இருக்கையில், அரசாங்க வைத்தியசாலைகள் சிலவற்றில் அசமந்தம் நிலவுவதாக மக்கள் கூறுகின்ற புகார்களை அலட்சியப்படுத்தல் ஆகாது. அப்புகார்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற முறையில் உரிய விசாரணை நடத்தி, தவறுகளைக் களைவதே இலவச மருத்துவத்தின் மதிப்பை மேலும் உயர்த்தும் என்பதே உண்மை.

## முஸ்லிம்களின் உரிமைகளை...

இரண்டு வருடங்கள் கடந்துள்ளதால் மக்கள் அந்த துன்பங்களை மறந்திருக்கக்கூடும். எனினும் அவ்வாறானதொரு நிலைக்கு மீண்டும் செல்லாதிருக்க சிந்தித்து வாக்களிக்குமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸ் மாநாடு நேற்று முன்தினம் (23) பிற்பகல் அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது. மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரகடனம் குறித்து கவனம் செலுத்துவேன். எனக்கு ஆதரவு தந்தமைக்கு நன்றி.

பசிக்கு இனமோ மதமோ கிடையாது. அதேபோல் கட்சியும் இல்லை. இப்படியான தருணத்தில் நாட்டை பற்றியே சிந்திக்க வேண்டும். நான் நாட்டை ஏற்ற போது, சமையல் எரிவாயு, அரிசி, உரம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் இருக்கவில்லை.

பெரும்போகத்துக்கும் சிறுபோகத்துக்கும் உரமின்றி விவசாயிகள் வீதியில் இறங்கினர்.

மக்களின் பசியை போக்க வேண்டியிருந்தது. நான் ஜனாதிபதியான பின்னரான எல்லா போகத்திலும் அறுவடை கிடைத்தது. 2025 ஆம் ஆண்டு சிறுபோகத்திலும் நல்ல அறுவடை கிடைக்குமென நம்புகிறோம்.

சமையல் எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்தோம். மக்கள் சுமுகமாக வாழ ஆரம்பித்தனர். மக்களால் சுதந்திரமாக நடமாட முடிந்தது. வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த மக்களும் இளையோரும் எழுந்து நடமாட ஆரம்பித்தனர்.

மக்கள் சில நேரம் 2 வருட துன்பங்களை மறந்திருப்பர். அன்று எவரும் நாட்டை ஏற்க முன்வரவில்லை. அப்போது நான் எதிர்கட்சி தலைவராகவும் இருக்கவில்லை. அப்போது எனது கட்சியிலும் நான் மட்டுமே எம்.பியாக இருந்தேன். மக்கள் பசி எனக்கு புரிந்தது. இளையோரின் எதிர்பார்ப்புகளும் புரிந்தது.

அதனால் நாட்டையும் நாட்டின் முன்பிருந்த சவால்களையும் துணிந்து ஏற்றுக்கொண்டேன். முன்னாள் பிரதமர் என்ற வகையில் அது எனது கடமை என்று கருதினேன்.

நான் ஏற்ற நாட்டை முன்னோக்கி கொண்டு சென்றேன். அப்போது நாட்டை ஏற்க வராதவர்கள் இப்போது என்னை துரோகி என்கின்றனர். அப்போது சஜித் எங்கிருந்தார். அன்று ஓட்டத்தை ஆரம்பித்தவர் பெரிஸ் ஒலிம்பிக் வரையில் ஓடி முடித்தார்.

எனவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை கட்டியெழுப்புவோம். அன்றைய நிலையை விட இன்று நல்ல நிலைமை உருவாகியுள்ளது. பொருட்களின் விலையை குறைக்க வேண்டியுள்ளது. ரூபாயை பலப்படுத்தினால் அது தானாகவே நடக்கும்.

2023ஆம் ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியை 84 டொலர்களாக அதிகரிக்க முடிந்தது. பணவீக்கம் 10 சதவீதமாக குறைந்தது. 300 ரூபா வரையில் டொலரின் பெறுமதி குறைந்தது. பொருட்களின் விலை குறைந்தது. உற்பத்தியை 89 பில்லியனாக அதிகரிக்க வேண்டும். 95 பில்லியனாக்குவதே இலக்காகும். அதனால் ரூபா வலுவடைந்து, நிவாரணமும் கிடைக்கும். அது தவிர்ந்த வேறு வழிகள் எமக்கு இல்லை.

இதன்போது சர்வதேச நாணய நிதியம் எமக்கு உதவியது. அவர்களின் வேலைத்திட்டத்தின் கீழ் இலக்கை நோக்கிய பயணம் இருந்தது. பணம் அச்சிடவோ, கடன் பெறவோ முடியாத நிலை இருந்தது. வரியை அதிகரித்து வருமானத்தை அதிகரித்தோம்.

அதனை விருப்பத்தோடு செய்யவில்லை. அதனால் பொருளாதாரம் வலுவடையும் என்பதை முன்பே அறிந்திருந்தேன். ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும் என்பதையும் அறிந்திருந்தேன். அது சாத்தியமானது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இந்த ஒப்பந்தங்களை சஜித் மீறினால் என்னவாகும்? திருத்தம் செய்ய வேண்டும் என்கிறார்கள். அதனால் எமக்கான உதவிகள் கிடைக்காமல் போகும். டொலரின் பெறுமதி 400 வரையில் அதிகரிக்கும். சிலவேளை 450 ஆகவும் அதிகரிக்கலாம். பணமின்றி, எரிபொருளுமின்றி, தேங்காய் எண்ணெய் மூலம் வாகனம் செலுத்த வேண்டியிருக்கும். அப்படியொரு நிலை வேண்டுமா?

இங்கிருந்து முன்னோக்கி செல்வதா? பின்னோக்கி செல்வதா? நாட்டை கட்டியெழுப்ப இன்னும் மூன்று வருடங்கள் தேவைப்படும். இது உங்களது எதிர்காலம். அதை பற்றி சிந்தித்து வாக்களியுங்கள். பழைய அரசியலை விட்டுவிடுங்கள். ஒன்றுபட்டு இந்த பிரதேசத்தை முன்னேற்றுவோம். விவசாயம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளை முன்னேற்றுவோம்.

அனைத்து இன மக்களையும் ஒரே வகையில் பார்க்கிறேன். முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டதால் அவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டனர். அந்த தவறை எனது அரசாங்கம் செய்யவில்லை. இருப்பினும் இலங்கை அரசாங்கம் ஒன்றே அந்த தவறை செய்தது என்ற வகையில் எனது அமைச்சரவையும் நானும் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோரினோம்.

அவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் தீர்மானித்தோம். விருப்பமானவர்கள் தகனம் செய்யவும், நல்லடக்கம் செய்யவும், மருத்துவ கல்லூரிகளுக்கு உடல்களை வழங்கவும் தீர்மானிக்கும் சுதந்திரத்தை வழங்குவதற்கான சட்டமொன்றை தயாரிக்குமாறு அமைச்சர் அலி சப்ரியிடம் அறிவுறுத்தியுள்ளேன்.

அதனால் எதிர்காலத்தில் பிரச்சினைகள் வராது. ஹக்கீம், ரிஷாட் போன்றவர்கள் ஏன் அதனை செய்யவில்லை. அனைவரையும் ஒன்றுபடுத்தி அரசாங்கமாக இந்த முடிவை எடுத்தோம். முஸ்லிம் மக்களின் உரிமைகளை பாதுகாப்பேன்.

தேசிய காங்கிரஸும் அதனை செய்யும். அச்சம் கொள்ள வேண்டாம். எதிர்காலத்தை பற்றி சிந்தித்து சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் கூட இல்லாத வாழ்க்கைக்கு தயாராகுங்கள்” என்று தெரிவித்தார்

## முஸ்லிம் தலைவர்கள்...

சமூகம் சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டுமென, முன்னாள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவிலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய அரசியலில் ஈடுபடும் கட்சித் தலைமைகள், குறுகியகால இலாபங்களுக்காக சமூகத்தை அடமானம் வைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அதேபோன்று முஸ்லிம் சமூகத்தை பலி கொடுத்து, முஸ்லிம் தலைவர்கள் எந்த வேட்பாளருக்கும் ஆதரவு வழங்க முற்படக் கூடாது.

ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்திருக்கிறது. கட்சியின் தீர்மானத்துடனேயே நானும் இருக்கிறேன். என்றாலும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் சஜித் பிரேமதாசவுடன் இருந்தாலும், அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கின்றனர். இது முஸ்லிம் அரசியல் கட்சி தலைவர்களின் 'இரட்டை வேடம்' நிலைப்பாட்டை கொண்ட கொள்கையாகும்.

அதனால் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், ஜனாதிபதி தேர்தலில் 'ரணில் சஜித்' என்று யாருக்கு ஆதரவளிக்க தீர்மானித்தாலும், முஸ்லிம் சமூகம் முஸ்லிம் அரசியல் தலைவர்களை பார்த்து தீர்மானிக்காமல், சுயமாக சிந்தித்து, 'முஸ்லிம் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பொருத்தமானவர் யார்' என்பதை தீர்மானித்து வாக்களிக்க வேண்டும்.

அதேபோன்று முஸ்லிம் அரசியல்வாதிகளும் முஸ்லிம் சமூகத்தை பலி கொடுத்து, ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருக்கும் ஆதரவளிக்க முற்படக்கூடாது.

அவர்கள் தங்களுக்கு தேவையான அமைச்சுப் பதவிகளை பேரம் பேசிக்கொள்வதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் சமூகத்தை காட்டி யாருக்கும் ஆதரவளிக்க முற்படக்கூடாது.

கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், இனவாதத்தை பரப்பியே தேர்தலில் வெற்றி பெற்றது. கோவிட் காலத்தில் கோவிட் தொற்றுக்குள்ளான முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் உரிமையை இல்லாமலாக்கியது. அதனால் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்தவர்கள் எந்தப் பக்கத்தில் இருந்தாலும், அந்த தரப்புக்கு நான் ஆதரவளிக்கப் போவதில்லை.

ராஜபக்ஷவினருடன் இருந்தவர்கள், தற்போது ரணில் விக்கிரமசிங்க பக்கமும் இருக்கிறார்கள். அதேபோன்று, சஜித் பிரேமதாச பக்கமும் இருக்கிறார்கள். அதனால் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் அரசியல் தலைவர்களை நம்பாமல், 'யாருக்கு வாக்களிப்பது' என்பதை சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டும்" என்றார்.

## ரயில் பயணத்துக்கு...

ஏதேனும் இரண்டு ரயில் நிலையங்களுக்கிடையே பயணிக்க 2ஆம் மற்றும் 3ஆம் வகுப்பு பயணச்சீட்டுகளை டெபிட் அல்லது கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளலாம். பயணச்சீட்டின் QR குறியீடு கையடக்க தொலைபேசிக்கு குறுந்தகவல் (SMS) அல்லது மின்னஞ்சல் (email) மூலம் அனுப்பப்படுமெனவும் அவ்வமைச்சு குறிப்பிட்டது.

QR குறியீட்டின் மூலம் பயணிகள் சம்பந்தப்பட்ட திகதியில் மட்டுமே பயணிக்க முடியும்.

இந்த இணையத்தளத்தில் இருக்கை முன்பதிவு வசதிகள் இன்னும் வழங்கப்படவில்லை. ஆனால் இந்த இணையத்தளத்தின் மூலம் டிஜிட்டல் பயணச்சீட்டுகளை, பயணிக்க எதிர்பார்க்கும் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன்பே பெற்றுக்கொள்ள முடியுமெனவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

## சகல மக்களையும் பாதுகாக்கும்...

களுக்காக, பதவிகளுக்காக நாட்டையோ, கட்சியையோ ஒருபோதும் காட்டிக் கொடுக்கப் போவதில்லையென்றும் நாமல் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட மாட்டாதென்றும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்க மாட்டேனென சுட்டிக்காட்டிய நாமல் ராஜபக்ஷ, செய்யக்கூடியதை செய்ய முடியுமென்றும், செய்ய முடியாததை செய்ய முடியாதென நேரடியாக கூறுவதாகவும் வேட்பாளர் தெரிவித்துள்ளார்.

## 2025 முதல் அரச ஊழியர்களின்...

தலைவர் உதய செனவிரத்ன தெரிவித்தார். அதற்கமைய தற்போது அரச ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை சம்பளமான 24,000 ரூபாவை 30,000 ரூபாவாக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதற்கமைய குறைந்த தரங்களுக்கு 24% அடிப்படை சம்பள அதிகரிப்பு உயர் பதவிகளுக்கு 24% முதல் 50% வரையிலான அதிகரிப்பு மேற்கொள்ளவுள்ளதாக அவர் இங்கு குறிப்பிட்டார்.

குறித்த அதிகரிப்புக்கு திறைசேரியின் இணக்கத்துடன் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவித்த அவர், தகுதிகள், அனுபவம் மற்றும் தற்போது வகிக்கும் பதவியின் அடிப்படையில் இந்த சம்பள அதிகரிப்பு அமையும் எனவும் இங்கு சுட்டிக்காட்டினார்.

அது மாத்திரமன்றி வாழ்க்கை செலவு கொடுப்பனவை 25,000 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக உதய செனவிரத்ன இங்கு குறிப்பிட்டார்.

தற்போதைய பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு ஜனவரி 2025 முதல் அனைத்து அரச ஊழியர்களுக்கும் ரூ. 25,000 வாழ்க்கை செலவு கொடுப்பனவு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் இங்கு குறிப்பிட்டார். அந்த வகையில் வாழ்க்கை செலவு கொடுப்பனவு அதிகரிப்புடன் அரச ஊழியர் ஒருவர் ரூ. 55,000 சம்பளத்தை பெறுவார் என அவர் இங்கு குறிப்பிட்டார்.

ஜனவரி 2025 முதல் 03 வருடங்களுக்கு இந்த ரூ. 25,000 வாழ்க்கை செலவு கொடுப்பனவு மாற்றமின்றி பேணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஓய்வூதியர்களுக்கு 2025 ஜனவரி முதல் வாழ்க்கை செலவு கொடுப்பனவாக தலா ரூ.12,500 வழங்கப்படவுள்ளது. அத்துடன் 2020ஆம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்கு இதுவரை செலுத்தப்படாத சம்பள உயர்வை வழங்கி, அவர்களது ஓய்வூதியத்தில் திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நிதி சாத்தியத்தின் அடிப்படையில் 2025 வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் படிப்படியாக பலன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தேர்தலை அடிப்படையாகக் கொண்டதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

"எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளதாகவும், கடந்த காலங்களில் அரச ஊழியர்கள் வீதிகளில் இறங்கி முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு சம்பள முரண்பாடுகளை களையவே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

## ஹக்கீமிடம் ரூ. 200 கோடி ...

பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க 200 கோடி ரூபாவை மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளார்.

காத்தான்குடியில் கடந்த ஒகஸ்ட் மாதம் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தமிழில் உரையாற்றிய போது, பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் கருத்துக் கூறியதாக தெரிவித்தே இந்த கோரிக்கை கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

2019ஆம் ஆண்டு மே மாதம் அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை வேண்டுமென்றே பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் திரிவுபடுத்தி இவ்வாறு தெரிவித்துள்ளதாகவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவரது இந்த உரையின் மூலம் மக்கள் மனதில் தனக்குள்ள மதிப்பை குறைப்பதற்கும், அரசியல் தலைவர் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் என்ற தனது பொது நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். அநுரகுமார திஸாநாயக்கவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டமைக்காக தேசிய மக்கள் சக்தியின் வழக்கறிஞர் ஊடாக 2 பில்லியன் ரூபா கோரி இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் ஊடக செயலாளருக்கு...

அமைச்சரின் முன்னாள் ஊடக செயலாளரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இலக்கம் 582 வெரஹெர வீதி, பொரலஸ்கமுவ பகுதியை சேர்ந்த மகேஷ் விக்கிரம பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஐந்து இலட்சம் ரூபா கடன் வரம்பு கொண்ட அட்டைக்கான தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் இலக்கத்தை இந்த சந்தேக நபர் வழங்கியுள்ளதாகவும் அந்த அட்டை தனது தனிப்பட்ட கொடுக்கல், வாங்கல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட புலனாய்வு பிரிவினர் மேலதிக அறிக்கையின் மூலம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

சந்தேக நபர் இக்கடன் அட்டை மூலம் தனியார் போக்குவரத்து நிறுவனமொன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபாவை செலுத்தியுள்ளதாகவும் அவர் காப்புறுதி முகவரெனவும் கடன் அட்டை மூலம் வைத்தியர் ஒருவருக்கும் பணம் செலுத்தியுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில் முயற்சிகளுக்கு முன்னுரிமை...

நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தற்போது வாழ்வாதார போராட்டத்தை எதிர்நோக்கி வருவதாகவும், ஜனாதிபதியாகிய பின்னர் அனைத்து மக்களும் வாழக்கூடிய சுபீட்சமாக நாட்டை கட்டியெழுப்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இங்கு மேலும் அவர் தெரிவித்த போது,

"அரசியலில் காய் நகர்த்தல்கள், கட்சித் தாவல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சிறப்புரிமைகள், சலுகைகளுக்காக தங்களது மனசாட்சியை கூட அடமானம் வைக்கும் கீழ்த்தரமான அரசியல் கலாசாரம் இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில், நாங்கள் எடுத்த முடிவை ஒரு அணியாக நின்று செயல்படுவதில் பெருமை அடைகிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் தெரியும் சிஸ்டம் சேஞ்ச்

## பின்புலம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்து வெளிப்பாடுகள் தொடர்பான விபரங்கள் இந்நாட்களில் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ள முறைகளை எம்மால் கண்டு கொள்ள முடியும். இதேவேளை, பல்வேறு வேட்பாளர்கள் தாம் ஜனாதிபதியானால் நிறைவேற்ற எதிர்பார்க்கும் வாக்குறுதிகள் பற்றிய தகவல்களையும் ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. இந்த இரண்டு விடயங்களினுள்ளேயே நாட்டின் அரசியல் கட்சிகளும், அவற்றின் வேட்பாளர்களும் இந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், முறை மாற்றத்திற்கும் அதாவது அரகலய எனும் போராட்டத்தின் போது பலராலும் பேசப்பட்ட சிஸ்டம் சேஞ்ச் தொடர்பில் அவர்கள் உண்மையில் கொண்டுள்ள மனோபாவத்தை அடையாளம் காண்பதற்கான வாய்ப்பும் உருவாக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்து வெளிப்படுத்தல்களை வாசித்து அறிந்து கொள்ளத் தேவையானவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இணையத்தளம் தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக் குழுவினால் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஊடகவியலாளர்கள் மற்றும் அனேகமானோர்கள் அந்த இணையத்தளத்திற்குள் பிரவேசித்து அந்த விபரங்களை வாசித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. சில பத்திரிகைகளால் ஜனாதிபதி வேட்பாளர்களின் மாதாந்த வருமானம், அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள கடன்கள், கையிருப்பில் உள்ள தொகை, கடனுக்கு வழங்கியுள்ள தொகை போன்ற தகவல்களைப் பெற்று அவற்றை பிரசுரித்துள்ளன. வேட்பாளர்களின் மனைவிகளினது சொத்துகள் மற்றும் தங்க ஆபரணங்கள் தொடர்பான விபரங்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மைக்கால ஜனாதிபதித் தேர்தல் மற்றும் தேர்தல்கள் தொடர்பான தகவவல்கள் வாசகர்களுக்கு நினைவிருக்கும் என நினைக்கிறேன். பாராளுமன்றத் தேர்தல்களின் போது தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்தாத அனேகமான வேட்பாளர்கள் தொடர்பான தகவல்களும் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்தன. அவ்வாறாயின் இன்று அனைத்து வேட்பாளர்களும் தமது சொத்து விபரங்களை வெளியிட்டிருப்பதோடு, அவற்றை பகிரங்கப்படுத்தும் நிலையும் ஏற்பட்டிருப்பது என்ன காரணத்திற்காக?

அரகலய எனும் போராட்டக்காரர்களால் சிஸ்டம் சேஞ்ச் ஒன்று கேட்கப்பட்டிருந்த போது அவ்வாறானதொரு மாற்றத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பில் பல்வேறு பேச்சுவார்த்தைகள் ஏற்பட்டன. முறை மாற்றம் என்பதால் உண்மையிலேயே கருதப்படுவது என்ன என்பது தொடர்பிலும் பல்வேறு வகையிலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அனேக கொள்ளை விளக்கங்களில் முறை மாற்றத்தை ஏற்படுத்தும் விதங்கள் தொடர்பான யோசனைகள் உள்ளடக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

அவ்வாறிருந்த போதிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் சில துறைகளில் முறை மாற்றம் ஏற்பட்டிருக்கும் விதங்கள் தொடர்பில் இந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தகவல்கள் வெளிவரும் என நினைக்கிறேன். இதுவரையில் ஜனாதிபதித் தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது தொடர்பில் பல்வேறு விதிமுறைகள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவை முறையாக அமுல்படுத்தப்படவில்லை. அதற்குக் காரணம், அது தொடர்பான சட்டதிட்டங்களில் காணப்பட்ட ஓட்டைகளினூடாக உள்நுழைந்து வெளியேறுவதற்கு வேட்பாளர்களுக்கு இடம் ஏற்படுத்தப்பட்டிருந்தமையாகும். என்றாலும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் முழுமையான மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது, அனைத்து வேட்பாளர்களும் தங்கள் வேட்புமனுவுடனேயே தத்தமது சொத்து விபரங்களைச் சமர்ப்பித்திருந்தனர். முன்னர் அவை உறைகளில் இடப்பட்டு சீல் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன. அவற்றைப் பார்க்க பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. என்றாலும், இப்போது வேட்பாளர்களது அந்த சொத்து விபரங்கள் அனைத்தையும் பார்த்து தெரிந்து கொள்வதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அப்படித்தான் முறை மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டும். சமூகத்தினுள் பெரிதும் பேசப்பட்ட ஒரு விடயம் தொடர்பில் இன்று மாறுபட்ட நிலையை காணக் கூடியதாக உள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தினாலேயே இவ்வாறானதொரு மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்த அரசாங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, சொத்துக்கள் தொடர்பான சட்டதிட்டங்களில் திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு முன்னர் அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் பதவிகளை வகிப்பவர்கள் தங்களது சொத்துக்கள் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிப்பது கண்டிப்பாக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான தண்டப்பணமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது ஐயாயிரம் ரூபாய் என்ற மிகக் குறைந்த தொகையாகும். சிலர் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்துவதை விட இந்த தண்டப்பணத்தைச் செலுத்துவதற்கு ஆயத்தமானதையும் காணக்கூடியதாக இருந்தது. அரசாங்கம் ஊழலுக்கு எதிரான கொள்கையை அமுல்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரலையும் தயாரித்து, அதற்கு அமைச்சரவையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. இந்த வகையில், ஊழலுக்கு எதிரான கொள்கையை கடுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக, அரசாங்கம் ஊழலுக்கு இடமளிக்காத புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. சிஸ்டம் சேஞ்ச் என்பது இதுவேயாகும். ரணில் விக்கிரமசிங்க தன்னுடன் சேர்த்து மற்றைய வேட்பாளர்களும் தமது சொத்து விபர அறிக்கையை முன்வைப்பதை கட்டாயமாக்கும் முறைமை அறிமுகப்படுத்தியுள்ளார். அந்த சொத்து அறிக்கைகளை பகிரங்கப்படுத்தும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாற்றம் முன்னெப்போதும் இல்லாத ஒன்றாகும்.

அப்படியிருந்தும், இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் வெளிப்படுத்தப்படும் விடயங்களை அவதானிக்கும்போது, நாட்டின் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் முறை மாற்றத்திற்குத் தயாராக இருக்கிறார்களா என்ற முடிவுக்கு உங்களால் வர முடியும். பொது மக்களுக்கு பல்வேறு வகையிலான வாக்குறுதிகளை வழங்குதல், ஏனைய வேட்பாளர்கள் மீது தவறான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது அல்லது அவர்கள் மீது சேறு பூசுவது, சட்ட விரோத செயல்கள் அல்லது இலஞ்சம் போன்றவற்றின் மூலம் தேர்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. முறை மாற்றத்திற்கு அடித்தளமிட்ட கட்சிகளால் கூட பழைய மற்றும் பாரம்பரிய தேர்தல் முறையில் இருந்து மாறவோ அல்லது முறை மாற்றத்துக்குள் நுழைவதற்கோ வாய்ப்பு கிடைத்துள்ளதாகத் தெரியவில்லை. உதாரணமாக, முறை மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று நாட்டின் இளைஞர்களைக் கவர்ந்த ஒரு தரப்பினர் பிரசார மேடைகளில் வழங்கும் வாக்குறுதிகளைக் குறிப்பிடலாம். வறிய மக்களுக்கு பதினையாயிரம் ரூபாய் வழங்குவதாகவும், உணவு மற்றும் பானங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரியைக் குறைப்பதாகவும், எரிபொருள் மற்றும் மின்சார கட்டணத்தை குறைப்பதாகவும் அக்கட்சி உறுதியளித்துள்ளது.

சில தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் அரசாங்கம் இரண்டு புதிய இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ளமை மற்றும் நிபுணர் குழுவின் பரிந்துரையின் பேரில் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க எடுக்கப்பட்ட தீர்மானம் என்பவை சட்டவிரோதமான செயற்பாடுகள் என்பதை அறிமுகப்படுத்தியுள்ளன. செப்டெம்பர் மாதம் முதல் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவிருந்த அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை நிறுத்தி அதனை ஒக்டோபர் மாதத்திலிருந்து வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் தேர்தல் தவறுகளாகக் கருதப்படுமானால் அனைவருக்கும் பதினையாயிரம் ரூபாய் வழங்குவதும், வற் வரியைக் குறைப்பதும் சட்ட விரோதச் செயல்களாகவே கருதப்பட வேண்டும். முறை மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறும் தரப்பினர் சம்பிரதாய முறைகளின் மீது தொங்கிக் கொண்டிருப்பதையும், எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்கு அவர்களுக்குள்ள இயலாமையையும் இதன் மூலம் வெளிக்காட்டியுள்ளார்கள்.

இது அந்த அறிக்கையை வெளியிட்ட கட்சிக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. அப்படியிருந்தும், அந்த கட்சியின் கொள்கைகளை நான் குறிப்பிட்டது குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இளைஞர்கள் அந்தக் கட்சியினாலேயே முறை மாற்றம் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்ப்பதனாலாகும். எனினும், இந்நிலையிலிருந்து விடுபட ஏனைய பிரதான அரசியல் கட்சிகள் தயாராக இல்லை என்றே தோன்றுகிறது.

இன்னுமொரு அரசியல் கட்சி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஏராளமான வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் வழங்கி ஆயத்தமாவதைக் காண முடிகின்றது. வேலைவாய்ப்பு, சம்பள உயர்வு, காணி போன்றவற்றை வழங்குவதாக அக்கட்சி பிரகடனப்படுத்தும் அதேவேளையில் அவற்றையும் தாண்டிச் சென்று அந்தந்த மாகாணங்களுக்குச் சென்று அந்தப் பிரதேசங்களுக்குரியவாறு வாக்குறுதிகளை வழங்குவதாகவே தெரிகிறது. என்றாலும், மேற்கூறப்பட்ட எந்தக் கட்சியாக இருந்தாலும், அக்கட்சிகளிடம் நாட்டின் முறை மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான எந்த ஆயத்தங்களும் இல்லை என்றே தோன்றுகிறது.

இதனிடையே முறை மாற்றத்திற்காக எமது சமூகத்தில் சில தரப்பினர் போராட்டத்தை நடத்திய போதிலும், முறை மாற்றம் தொடர்பான உண்மையான நிலைப்பாடு அவர்களிடத்தில் உள்ளதா என்பது தொடர்பிலும் பிரச்சினையுள்ளது. ரணில் விக்கிரமசிங்க விவசாயத்தை நவீனமயமாக்குவது தொடர்பில் நீண்ட காலமாகவே கருத்து தெரிவித்து வருபவராகும். விவசாயத்தை நவீனமயமாக்காமல் அந்த துறைகளை முன்னேற்ற முடியாது என்பது அவரது நம்பிக்கையாகும். நவீனமயமாக்கலின் ஊடாக விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும் முறையினை தெளிவு படுத்துவதற்காக அவர் சுவின்கம் மற்றும் பிரேஸ்லெட் தொடர்பான கருத்துக்களை கூறியிருந்தார். பெரும்பாலானோருக்கு அது புரியவில்லை. சமூகம் அவரது விவசாய நவீனமயமாக்கல் தொட கருத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர் கூறிய சுவின்கம் மற்றும் பிரேஸ்லெட் கதையினை அவரை பரிகாசப்படுத்துவதற்காகப் பயன்படுத்தினர். அவர் தகவல் தொடர்பை மிகவும் கஷ்டப் பிரதேசங்களுக்கும் கொண்டு செல்வதற்கான சேவையை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய போதும் சிலர் அதனையும் அவரைக் கேலி செய்வதற்காகப் பயன்படுத்தினர்.

அவர் நவீனமயமாக்கலை தனது இலக்காகக் கொண்டுள்ளார். என்றாலும் நவீனமயமாகாதவர்களால் இதனைப் புரிந்து கொள்ள முடியாது. நவீனமயமாக்கப்படாத கட்சிகளுக்கு பழங்குடிவாதத்திலிருந்து விலகிச் செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. பல்கலைக்கழக பகிடிவதை மூலம் அரசியல் செய்யும் ஒரு தரப்பு, பல்கலைக்கழகங்களில் மற்றைய கட்சி அரசியலை முற்றாகத் தடை செய்துள்ளது. சிஸ்டம் சேஞ்சினை அவ்வாறு அறிமுகப்படுத்தும் நோக்கில் இவ்வாறான பழங்குடியின கட்சிகளை அதிகாரத்தில் அமர்த்துவதற்காக சில தரப்பினர் ஆயத்தமாவதாகத் தெரிகிறது. அவர்கள் நவீனமயமாக்கல் மற்றும் பழங்குடியினத்திற்கிடையிலான அந்த மாற்றத்தையும் கூட கண்டு கொள்ளவில்லை.

**மக்கள் நேசன்**

## வேட்பாளர்கள் சிலர் சாத்தியமற்ற... (05ஆம் பக்கத் தொடர்)

**கே: தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் மேடைகளிலும் மக்களைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களிலும் பல்வேறு விடயங்களை வழங்குவதாக உறுதிமொழிகளை அளிக்கின்றனர். அவ்வாறு அவர்கள் வழங்கும் உறுதிமொழிகள் நடைமுறையில் சாத்தியமாகுமா?**

*பதில்: நீங்கள் கூறுவதைப் போன்று பல்வேறு உறுதிமொழிகளை அள்ளி வழங்குகின்றனர். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சூழ்நிலையில் இவை நடைமுறைச் சாத்தியமானதா என்பது பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மேற்கொள்ளக் கூடிய விடயங்களை நாம் ஒழுங்குமுறைப்படுத்தியுள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படவிருந்த நிலையில் ஒகஸ்ட் மாதம் பெற்றோல் விலை குறையும் என மக்கள் எதிர்பார்த்திருந்தனர். எனினும், அரசாங்கம் தேர்தலுக்காக அதனைச் செய்யவில்லை. அனைத்து விடயங்களையும் முன்னெடுப்பதற்கான 'சிஸ்டம்' ஒன்றைத் தயாரித்துள்ளது. இந்த முறைமையின் அடிப்படையிலேயே நாம் செயற்பட்டு வருகின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறானதொரு 'சிஸ்டம்' ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளார். இவ்வாறான நிலையில் வேட்பாளர்கள் தாம் கூறும் விடயங்களை எவ்வாறு நிறைவேற்றப் போகின்றார்கள் என்பதை விரிவாக மக்களுக்கு முன்வைக்க வேண்டும். அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டன. 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரினார்கள். எனினும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சூழ்நிலையில் 10,000 ரூபா சம்பள உயர்வை வழங்கினோம். இது போதாது, மேலும் அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் முன்வைக்கப்பட்டது. இதற்கு அமையவே அரசாங்க ஊழியர் ஒருவரின் சம்பளம் 55,000 ரூபாவாக இருக்கும் வகையில் 25,000 ரூபா சம்பள உயர்வை அடுத்த வரவுசெலவுத்திட்டத்தில் வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுடனேயே இதனை எம்மால் செய்ய முடிந்துள்ளது. எனினும், சில வேட்பாளர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை விமர்சிப்பதுடன், தாம் ஆட்சிக்கு வந்ததும் முழுமையாக ஒப்பந்தத்தை மாற்றியமைப்போம் என்று கூறுகின்றனர். இது நடைமுறைக்குச் சாத்தியமற்றது.*

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

வீட்டுப் பராமரிப்பு உதவியாளர் பதவிக்காக
வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் பெண்களை
பயிற்றுவிப்பதற்காக தகுதியுடைய
பயிற்சி வழங்கும் நிறுவனங்களைப் பதிவுசெய்தல்

1985ம் ஆண்டு 21ம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நிறுவப்பட்டுள்ளதுடன், திறமையுடைய இலங்கைப் பணியாளர்களை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு முன் வைப்பது இதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும்.

வீட்டுப் பராமரிப்பு உதவியாளர்களாக வெளிநாடு செல்ல விரும்பும் பெண்களுக்கு பணியகம் முறையான பயிற்சிகளை வழங்கி வருவதுடன், அதே பயிற்சியை அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, வீட்டுப் பராமரிப்பு உதவியாளர் பதவிக்காக (மத்திய கிழக்கு மற்றும் மத்திய கிழக்கல்லாத நாடுகளுக்கு) பயிற்சியை வழங்கக் கூடிய மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பயிற்சியை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன், இது தொடர்பான மேலதிக தகவல்களை www.slbfe.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

உங்களது விண்ணப்பப்படிவத்தினை 2024.09.10 திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கீழுள்ள முகவரிக்கோ மின்னஞ்சல் முகவரிக்கோ சமர்ப்பிக்குமாறு அறியத் தருகின்றேன்.

முகாமையாளர் (பயிற்சி - வீட்டுப்பணி சார்ந்த)
28ம் மாடி, மெஹெவர பியச, நாராஹேன்பிட.
தொ.இல : 011 2366736
மின்னஞ்சல் : mgr_trdomestic@slbfe.lk

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு
இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லை.
உடனாடு அமைப்பு 1989
www.slbfe.lk

தொழிற் பயிற்சியினூடாக உலகை வெல்வதற்கு
வலது குறைந்த இளமையான
உங்களுக்கும் வாய்ப்பு.....

சமூக சேவைகள் திணைக்களம்
Department of Social Services

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் செயற்படும்
தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு

கேட்கும் / பேசும் / பார்க்கும் / உடல் / அறிவுசார் / தலசீமியா / வலிப்பு / மனநலக் குறைவு / குள்ளம் மற்றும் பல்வேறு ஊனம் சகிதம் தமது தேவைகளை தனித்து செய்து கொள்வதற்கான இயலுமை உள்ள 16 - 35 வயதுள்ள திருமணமாகாத இளைஞர் யுவதிகள்

வாகன பொறிமுறை, உணவு தொழில்நுட்பம்,
பத்திக், தையல், கணனி, கைப்பணி
உட்பட 26 கற்கை நெறிகளுக்கு
சேர்த்துக்கொள்ளப்படுவர்.







எம்மிடம் உங்களுக்கு

- இலவச பயிற்சி வாய்ப்பு
- பயிற்சியின் இறுதியில் தொழிற்பயிற்சி வாய்ப்பு
- ஒரு நாளைக்கு 150.00 ரூபா வீதம் நாளாந்த கொடுப்பனவு
- இலவச உணவு, பானம், தங்குமிட வசதிகள்
- சுய தொழிலொன்றைச் செய்வதற்குத் தேவையான பயிற்சி அல்லது பயிற்சிக்கு இயைபான தொழில் வாய்ப்பு

- பயிற்சியின் பின் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சகிதம் தொழில் வாய்ப்பு
- விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 2024 செப்டெம்பர் 30
- விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு உங்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்தின் சமூக சேவைகள் அதிகாரி / அபிவிருத்தி அதிகாரியை (சமூக சேவைகள்) இன்றே சந்திக்கவும்.

விசாரணை:
011-2187042
(சேவைப் பிரிவு - சமூக சேவைகள் திணைக்களம்)
www.socialservices.gov.lk
assdirservice.dss@gmail.com
விண்ணப்பங்களை மேற்கூறிய எமது இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

சமூக சேவைகள் திணைக்களம்
இரண்டாம் தளம், இரண்டாம் கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.



# மாகாணசபை அதிகாரங்களை வழங்குவதில் உறுதியான நிலைப்பாட்டில் ஜனாதிபதி

**தேர்தல் காலங்களில் அரசியல் மேடைகளில் பேசப்படும் விடயங்களில் 'அரசியல் தீர்வு' மற்றும் 'அதிகாரப் பகிர்வு' போன்றவை அதிக இடத்தைப் பிடிப்பவையாகவும், பிரசார மேடைகளை சூடுபிடிக்கச் செய்பவையாகவும் காணப்படுகின்றன.**

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனங்களை இன்னமும் எவரும் வெளியிடாத போதும் வடக்கு, கிழக்கு குறித்த பேச்சுக்கள் ஏற்கனவே எடுபடத் தொடங்கியுள்ளன. பிரதான வேட்பாளர்களைச் சந்தித்த தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இவ்விடயத்தை ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளனர்.

தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே தம்மைச் சந்தித்த பிரதான வேட்பாளர்களிடம் இந்த விடயத்தைத் தமிழரசுக் கட்சி எடுத்துக் கூறியிருந்தது. இவ்வாறான நிலையில் தமிழ் பொது வேட்பாளரைக் களமிறக்கியுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அண்மையில் பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரைச் சந்தித்தபோதும் இந்த விடயங்களைப் பிரஸ்தாபித்திருந்தனர்.

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி அதிகாரப் பகிர்வு தேவை என்ற கருத்து தமிழ்ப் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதை தற்போது செய்ய முடியாது என்றும் ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதில் தெரிவாகும் அரசாங்கத்துடன் அனைவரும் பேசி அது தொடர்பில் முடிவுக்கு வரமுடியும் எனவும் கூறியுள்ளார்.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஏற்கனவே மாகாண சபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவதாகவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாண சபை கொண்டிருக்கும் என்றும் ஜனாதிபதி குறித்த கட்சிகளின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேபோல, எதிர்க்கட்சித் தலைவருடனான சந்திப்பில், முதல் கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும், இவ்விடயத்தில் தான் உறுதியாக இருப்பதாகவும், ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாக மாகாண சபை அதிகாரப் பகிர்வு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.



இருந்தபோதும் மற்றுமொரு பிரதான வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்க வடக்கு, கிழக்குப் பிரச்சினைகள் குறித்து இதுவரை தீர்க்கமான எந்தவித பதிலையும் வழங்கவில்லை. இருந்தபோதும் ஒட்டுமொத்த இலங்கையர் என்ற அணுகுமுறையை அவர்கள் கொண்டிருப்பதாக ஒரு சில கருத்துக்களின் மூலம் அறிக்கூடியதாகவிருக்கின்றது.

## ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் தற்போது இடம்பிடித்துள்ள அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு விவகாரங்கள்!

### ராஜபக்ஷவும் 13 பிளஸும்:

இவ்வாறான பின்னணியில், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவும் வடக்கு, கிழக்குக் குறித்த தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கினை இணைப்பதற்கு ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது என்றும், ஏனைய அரசியல் கட்சிகளைப் போன்று, தேர்தல் நேரத்தில் ஆதாயம் பெறுவதற்காகத் தமது கொள்கைகளை மாற்றுவதில்லையென்றும் கூறியுள்ளார்.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க முடியாது. வடக்கு கிழக்கையும் இணைக்க முடியாது. அவ்வாறு செய்தால் நாடு பிளவடையும். எனவே இந்த நாட்டை பிரிக்க நான் அனுமதிக்க மாட்டேன். 2015ஆம் ஆண்டு தடைப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விட்ட இடத்திலிருந்து தான் முன்னெடுத்துச் செல்வேன் என்றும் அவர் தனது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இதில் நோக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், நாமல் ராஜபக்ஷவின் தந்தையாரான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் மாகாண சபைகளின் அதிகாரப் பகிர்வு குறித்து அவ்வப்போது அவர் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

அவரும் தேர்தல் காலங்களில் அதிகாரப் பகிர்வுக்குத் தயார் என்ற ரீதியில் கருத்துக்களை முன்வைத்தவர் என்பதையும் மறந்துவிட முடியாது. இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காக 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று (13 பிளஸ்) தீர்வைத் தருவதாக புதுடில்லிக்கு உத்தரவாதம் அளித்திருந்தார்.

ஆனாலும் அது வெறும் அரசியல் உறுதிமொழியாகவே இருந்துள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தியாவுடனான சந்திப்புக்களில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற விடயத்தை அவர் பிரஸ்தாபித்திருந்தபோதும், நடைமுறையில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

அது மாத்திரமன்றி, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. 2007ஆம் ஆண்டு இரு மாகாணங்களையும் பிரிப்பதற்கான உத்தரவை உச்சநீதிமன்றம் வழங்கியிருந்தது. அதன் பின்னர் ஜனாதிபதிக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தி மாகாணங்களுக்கான முழுமையான அதிகாரங்களை அதாவது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களையும் அவர் வழங்கியிருக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் அவருடைய புதல்வர் வடக்கு, கிழக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்பதைக் கூறியுள்ளார். தென்னிலங்கை வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர் அவ்வாறு கூறியிருந்தாலும், இதன் பின்னர் வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகின்றார் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கும் விடயத்தில் முன்னர் இருந்த ஜனாதிபதிகள் பலரும் தட்டிக்கழித்து வந்தபோதும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான முயற்சிகளை எடுத்திருந்தார். ஜனாதிபதி என்ற ரீதியில் அரசியலமைப்பின் ஊடாகத் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் கூறியிருந்தார்.

அது மாத்திரமன்றி இது விடயம் குறித்துக் கலந்துரையாடுவதற்காக சர்வகட்சிக் கூட்டத்தை நடத்தியிருந்ததுடன், தமிழ் அரசியல் கட்சிகளுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்களையும் நடத்தியிருந்தார். இருந்தபோதும் பல்வேறு காரணங்களினால் இந்தக் கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவில்லை.

ஒப்பீட்டளவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வு விடயத்தில் துணிந்து சில முயற்சிகளை எடுத்திருந்தார். கடந்தகால ஜனாதிபதிகள் எவரும் மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்திருக்காத நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிந்து இறங்கியமை சாதகமாகப் பார்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

பி.ஹர்ஷன்...

# காஸாவில் யுத்தநிறுத்தம் ஏற்படுமா? உச்சக்கட்ட பரபரப்பில் மத்திய கிழக்கு!



**இஸ்ரேலுக்கான விமான சேவையை 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை இடைநிறுத்துவதாக அமெரிக்கன் விமான சேவை நிறுவனம் கடந்த ஞாயிறன்று அறிவித்தது. அதேநேரம் கதே பசுபிக், ஈசிஜெட் ஆகிய விமான நிறுவனங்களும் அடுத்தாண்டு மார்ச் வரை டெல்அவிவுக்கான விமான சேவையை நிறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளன. இந்நிறுவனங்களின் இந்த தீர்மா–ணங்கள் உலகளவில் அதிக கவனத்தைப் பெற்றனவாக உள்ளன.**

காஸா மீது இஸ்ரேல் கடந்த 10 மாதங்களாக முன்னெடுக்கும் யுத்தத்தை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் கடந்த காலங்களில் இல்லாத முன்னேற்றங்கள் கடந்த 15 ஆம், 16 ஆம் திகதிகளில் டோஹாவில் நடந்த பேச்சுக்களில் ஏற்பட்டதாக அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் கூட்டாக அறிக்கை வெளியிட்டன. ஆனால் அப்பேச்சுவார்த்தையில் ஹமாஸ் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டோஹா பேச்சுவார்த்தையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையின் பின்புலத்தில் காஸாவில் யுத்தநிறுத்தம் விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை பரவலாக ஏற்பட்டது. இவ்வாரப் பேச்சுவார்த்தையோடு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான வாய்ப்பு கிடைக்கப்பெறும் என்று அமெரிக்கா தெரிவித்தது.

இவ்வாரப் பேச்சுவார்த்தையை எகிப்தின் தலைநகரில் நடத்துவதற்கும் கடந்த வாரமே முடிவு செய்யப்பட்டதோடு இஸ்ரேல் தரப்பில் மொசாட் தலைவர் டேவிட் பார்னியா, உள்நாட்டு பாதுகாப்பு சேவையின் தலைவர் ரோனென் பார், இராணுவத்தின் பணயக்கைதிகள் கோப்புத் தலைவர் நிட்சன் அலோன் ஆகியோர் இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவர் என இஸ்ரேலும் அறிவித்தது.

இப்பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களின் பின்னணியில் ஈரான், ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியேயின் படுகொலைக்கு பழிவாங்கப்படும் என்று கூறிவருகின்ற போதிலும், தாக்குதல்களை தாமதப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை யெமனின் ஹூதிக்கள், காஸா ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கும், முற்றுகையை அகற்றுவதற்கும், இஸ்ரேலிய சிறைகளில் இருந்து பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்கும் முன்னெடுக்கப்படும் எந்தவொரு உடன்பாடும் வரவேற்கத்தக்கது என்றுள்ளனர்.

இப்பின்புலத்தில் கடந்த ஞாயிறன்று மத்திய கிழக்குக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன், திங்களன்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு, ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். இதில் பிரதமருடன் மாத்திரம் 3 மணித்தியாலயங்கள் மூடிய அறையில் பேச்சு நடாத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'இம்முறை காஸாவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தியே தீருவோம்' என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டார். இஸ்ரேலிய பிரதமருடனான பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த இராஜாங்கச் செயலாளர் பிளிங்கன், 'இதுவே இறுதிச் சந்தர்ப்பம். காஸா யுத்தநிறுத்தம் தொடர்பில் தீர்க்கமான கட்டத்தில் உள்ளோம். ஜனாதிபதி பைடனின் அறிவுறுத்தல்களின் பேரில் தீவிர இராஜதந்திர முயற்சியின் ஒரு பகுதியாக நான் இங்கு வந்துள்ளேன். எல்லோரும் ஆம் என்று சொல்ல வேண்டிய நேரம் இது. இல்லை என்று சொல்வதற்கு எந்த சாக்குகளையும் தேட வேண்டாம். இம்முயற்சி தடம்புரளும் எந்த நடவடிக்கையையும் யாரும் எடுக்க வேண்டாம்' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து காஸா யுத்தநிறுத்த பேச்சுவார்த்தைகளுக்கான மத்தியஸ்தர்களாக செயற்படும் எகிப்துக்கும் டோஹாவுக்கும் அவர் பயணமானார். ஆனால் இராஜாங்கச் செயலாளர் பிளிங்கன் இஸ்ரேலில் இருந்து வெளியேறிய சில மணித்தியாலயங்களில் பிரதமர் நெதன்யாகு, தமது படைகள் எகிப்துக்கும் காஸாவுக்கும் இடைப்பட்ட பிலடெல்பி நுழைவாயில், வடக்கு காஸாவையும் தெற்கு காஸவையும் பிரிக்கும் நெட்சாம் பகுதி என்பவற்றில் இருந்து வெளியேறாது' என்றுள்ளார்.

அதேநேரம் டோஹாவில் இறுதியாக நடந்த பேச்சுவார்த்தைகளில் ஹமாஸ் பங்குபற்றாத போதிலும், அப்பேச்சுவார்த்தை தொடர்பில் மத்தியஸ்தர்கள் ஊடாக ஹமாஸுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதியின் யோசனை மற்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட பிரரேரணைக்கு அப்பால் இஸ்ரேலிய பிரதமர் புதிய நிபந்தனைகளை உள்ளடக்கியுள்ளதாக அறிய முடிகிறது. ரஃபா கடவை, 14 கிலோ மீற்றர் நீளமான பிலடெல்பி நுழைவாயில், வடக்கு காஸாவையும் தெற்கு காஸாவையும் இணைக்கும் 07 கிலோ மீற்றர் நீளமான நெட்சரிம் பாதை ஆகியவற்றில் இருந்து படைகளைத் திரும்ப பெறுவதில்லை. தெற்கில் இருந்து வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து திரும்பும் மக்களை பரிசோதித்தல், ஒப்புக்கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தில் மாற்றங்கள் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. இவை ஏற்றுக்கொள்ளத்தக்க நிபந்தனைகள் அல்ல என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் காஸாவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவற்கு இஸ்ரேலினதும் ஹமாஸினதும் நிலைப்பாடுகள் சாதகமாக அமையுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த உச்சபட்ச முயற்சிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் காஸா, மேற்குகரை, லெபனான் என்பவற்றின் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் சிறிதளவேனும் குறைத்ததாக இல்லை. அத்தோடு போராளிக்குழுக்களும் தாக்குதல்களை முன்னெடுக்கவே செய்கின்றன. யுத்தநிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் சூழலிலும் காஸாவின் டயர் அல் பலாஹ் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களை வெளியேறுமாறு அறிவித்துள்ள இஸ்ரேல், காஸாவில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள பாடசாலைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. அத்தோடு தெற்கு லெபனானிலும் தாக்குதல் இடம்பெற்ற வண்ணமுள்ளன. இத்தாக்குதல்களினால் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.





## இஸ்ரேலுக்கான அமெரிக்கன் விமான சேவை 2025 ஏப்ரல் வரை நிறுத்தம்!

கைதிகள் பரிமாற்றத்திற்கான யுத்தநிறுத்தத்திற்கு இணக்கம் தெரிவிக்கின்ற இஸ்ரேல், 'எந்தவொரு ஒப்பந்தமும் போர் தொடர்வதை கட்டுப்படுத்தக் கூடாது' என்று கூறிவருகிறது. மேலும் 15 ஆயிரம் ரிசர்வ் படையினருக்கு மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறது இஸ்ரேல்.

அவரச தேவைகளின் நிமித்தம் ஹைபாவிலுள்ள நிலக்கீழ் வாகனத் தரிப்பிடத்தை வைத்தியசாலையாக மாற்றியுள்ளது. இடம்பெயரும் மக்களை தங்க வைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளும் அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன.

இவ்வாறான சூழலில் 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களை இஸ்ரேலுக்கு விற்பனை செய்ய அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் அனுமதி வழங்கியுள்ளார். இதற்கேற்ப எப் 15 யுத்த விமானங்கள், அதற்குத் தேவையான உபகரணங்கள், மேம்படுத்தப்பட்ட ஏவுகணைகள் உள்ளிட்ட அதிநவீன ஆயுதங்கள் பலவும் இஸ்ரேலுக்கு வழங்கப்பட உள்ளன.

ஆனால் காஸா மீதான யுத்தம் ஆரம்பமானது முதல் பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை அமெரிக்க ஏற்கனவே இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது. இந்த ஆயுத விற்பனை தொடர்பில் குறிப்பிட்டுள்ள அமெரிக்கா, இஸ்ரேல் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களைச் சமாளித்து அதன் பாதுகாப்பை வலுப்படுத்தவும் அதன் திறன்களை மேம்படுத்தவும் பிராந்திய அச்சுறுத்தல்களைத் தடுக்கவும் இவை வழங்கப் படுகின்றன' என்றுள்ளது.

இதேவேளை இஸ்ரேலை ஈரான் தாக்கும் என்ற அச்சுறுத்தல் நீடித்து வருகின்ற பின்னணியில், யுத்தக் கப்பல்கள், விமானந்தாங்கிக் கப்பல்கள், அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்கள், யுத்த விமானங்கள் என்பவற்றை வளைகுடா, மத்திய தரைக்கடல், செங்கடல், அரபுக்கடல் உள்ளிட்ட மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு அமெரிக்கா நகர்த்தியுள்ளது. உளவுப் பணியில் ஈடுபடும் விமானங்களும் ட்ரோன்களும் காஸா, லெபனான் உள்ளிட்ட வான்பரப்பில் பறந்த வண்ணமுள்ளன.

இவ்வாறான கொதிநிலைக்கு மத்தியில் அமெரிக்கன் விமான சேவை உள்ளிட்ட சில விமான சேவைகள் அடுத்தாண்டு மார்ச், ஏப்ரல் வரை இஸ்ரேலுக்கான விமான சேவையை நிறுத்த எடுத்துள்ள தீர்மானத்திற்கான காரணத்தை அந்நிறுவனங்கள் குறிப்பிடவில்லை என்று இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அப்படியென்றால் நீண்டதொரு யுத்தத்திற்கு இஸ்ரேல் தயாராகிறதா என்ற கேள்வியும் எழவே செய்கிறது. ஏற்கனவே பத்து மாதங்களாக இடம்பெறும் யுத்தம் காரணமாக பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. உயிரிழப்புக்கள் மாத்திரமல்லாமல் பொருளாதார ரீதியிலான இழப்புக்களும் ஈடுசெய்ய முடியாதவை. குறிப்பாக காஸா, மேற்கரையிலும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த யுத்தம் ஆயிரக்கணக்கான குழந்தைகள், பெற்றோரையும் உறவினர்களையும் இழக்க வழிவகை செய்துள்ளது. பெரும்பாலான குடும்பங்கள் சிதைவடைந்துள்ளன.

இந்த யுத்தம் ஏற்படுத்தியுள்ள அழிவுகளும் சேதங்களும் பாதிப்புக்களும் இலகுவில் சீர் செய்து விடக்கூடியவை அல்ல. அதனால் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு அனைத்து தரப்பினரும் மனித நேயத்துடன் செயற்பட வேண்டும். அதுவே அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.



மர்லின் மரிக்கார்...

## இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த தீவிர முயற்சி!



# தேர்தலில் பிரம்மாண்ட ஜனத்திரள் எவ்வாறு சாத்தியமாகின்றது?

ஒருகாலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலிச் செய்தியில் ஒலிபரப்பப்படும் இசை மறக்க முடியாத ஒன்றாகும். " எம்மால் முடியுமா அரசாங்கத்தைக் கவிழ்க்க" என்ற அர்த்தமே அந்த இசையில் இருப்பதாக சிலர் கூறினர். அந்தக் கதையை மாற்றி இன்று கூற இருப்பது "மக்கள் கூட்டத்தால் முடியுமா அரசாங்கத்தைக் கவிழ்க்க" என்றேயாகும். இப்போதெல்லாம் அனைத்துக் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு பெரிய மக்கள் கொண்ட கூட்டங்களை நடாத்துகின்றன. மக்களைக் காட்டி, மாபெரும் பொதுக்கூட்டத்தை நடத்தி ஆட்சி அதிகாரத்தை பெற்றுவிடலாம் என பெரும்பாலானோர் நம்புகின்றனர். எனினும் உண்மை அதுவல்ல.

பிரமாண்டமானது எனக் காட்டும் அனேக கூட்டங்களில் உண்மையிலேயே பெருமளவிலான மக்கள் கூட்டம் இல்லை. சிறியளவிலான ஒரு மைதானத்தைத் தெரிவு செய்து அதனை நிரப்புமளவு மக்களைக் கொண்டு வந்து நடாத்தப்படும் மக்கள் கூட்டங்களின் புகைப்படங்களை வெளியிடுவது புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியாகும். மக்கள் விடுதலை முன்னணி தங்காலையில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள் எனக் கூறப்பட்டாலும், உண்மையிலேயே அவ்விடத்தில் இருபதாயிரம் பேரைக் கூட நிறுத்த முடியாது. ஐயாயிரம் மக்களைக் கொண்ட கூட்டத்தை ஒரு இலட்சமாகக் காட்டுவதற்கு அந்தக் கூட்டத்தை நடத்தும் விளையாட்டு மைதானத்தையோ அல்லது இடத்தையோ மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதன் பின்னர் செய்ய வேண்டியது ட்ரோன் கெமராவைப் பயன்படுத்தி பிரமாண்டமாக மக்கள் கூட்டம் எனக் காட்டுவதேயாகும். மறுநாள் ஐக்கிய மக்கள் சக்தி தனது முதலாவது கூட்டத்தை குருநாகலில் நடாத்தியது. அந்த மைதானம் நிரம்புமளவுக்கு சுமார் பத்தாயிரத்திற்கும் குறைவானவர்களையே நிறுத்த முடியும்.

எனினும் அவர்கள் எடுத்துக் காட்டியது இலட்சக்கணக்கான மக்கள் அலை திரண்டிருந்தது என்றாகும். இந்த நகைச்சுவையான படங்களின் உண்மைத் தன்மை தெரியவருவது தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதன் பின்னராகும்.

77 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தும் வரைக்கும், அப்போதிருந்த ஸ்ரீமாவோ அம்மையாரின் அரசாங்கம் நாடு முழுவதும் பெரும் மக்கள் பங்கேற்புடன் கூட்டங்களை நடத்தியது. அதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். 70களில் பஸ்கள் மூலம் கூட்டத்தை சேர்க்க ஆரம்பித்தது 70ஆம் ஆண்டு அரசாங்கம்தான் என்பதோடு, இலத்திரனியல் ஊடகங்கள் இல்லாத அந்தக் காலத்தில் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்ப மக்களைக் காட்டி கூட்டம் தங்களுடன் இருப்பதாக காட்ட அரசு முயன்றது. எனினும் அதற்குப் பதிலாக அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சி கடைபிடித்தது தனியான நடைமுறையையாகும்.

ஜே.ஆர் என்பவர் ஒரு புதுமையான மனிதராகும். எதிர்ப்பைக் காட்டுவதற்கான பாதயாத்திரையைப் பயன்படுத்துவதை ஆரம்பித்தது அவராகும். பண்டாரநாயக்க ஆட்சி செய்த காலத்தில் கண்டிக்கு பாதயாத்திரை சென்ற ஜே. ஆர். 70 – 77 காலத்தில் நாடு முழுவதிலும் சத்தியக்கிரகங்களை நடத்தினார்.

எனினும் அப்போதைய அரசாங்கம் அவற்றுக்கு சிறிதும் கணக்கெடுக்கவில்லை.

பொதுக்கூட்டங்களில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டமையால் தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அப்போது நினைத்தது. அதுமட்டுமின்றி, அப்போது இடதுசாரிகள் சிவப்புத் தொப்பிகளை அணிந்து கிராமங்களில் சுற்றித் திரிந்து வாக்கு சேகரித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் நடாத்தும் பொதுக் கூட்டங்களிலும் பெருமளவினோர் கலந்து கொண்டதோடு, இடதுசாரிக் கட்சிகள் 77ல் பெரிய அதிகாரங்களைப் பெறும் என்று முன்முடிவுகள் வெளியிடப்பட்டன. ஆனால் தேர்தல் முடிவுகள் அந்த முன்முடிவுகள் அனைத்தையும் தவிடு பொடியாக்கியது.

(18 ஆம் பக்கம் பார்க்க)



"அந்த கல்முனைக்குடி நாட்கள்" எனும் கவிதை நூலின் பிரதியை, உலக தமிழ்ச் சங்கங்களின் சங்கமம், மற்றும் சென்னை தமிழ்ச் சங்கம் என்பவற்றின் தலைவரான டாக்டர் இளங்கோவனிடம் நூலாசிரியரும் கவிஞரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் அண்மையில் சென்னையில் வைத்துக் கையளித்தார். சென்னையிலுள்ள நூலகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கெனவும் இவரிடம் இந்நூலின் 75 பிரதிகள் கையளிக்கப்பட்டன. எதிர்வரும் நாட்களில், இந்நூலின் அறிமுக விழாவையும், கருத்தாடல்களையும், சென்னையில் நடத்துவதற்கும் டாக்டர் இளங்கோவன் நூலாசிரியர் நிஸாம் காரியப்பருக்கு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண கல்லூரி மாணவி வடமாகாணத்தில் சாதனை






வடமாகணத்தில் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டி கடந்த ஒரு வார காலமாக துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. வெள்ளியம்பலம் மகிந்தன் மாதுரி 200மீற்றர் ஓட்டப் போட்டியில் மாகாண ரீதியில் முதலாவது இடத்தையும், 400மீற்றர் ஓட்டப் போட்டியில் மாகாண சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்து முதலாவது இடத்தையும் பெற்றுள்ளதுடன், 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் முதலாவது இடத்தை பெற்று யாழ்ப்பாண கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரின் பயிற்றுவிப்பாளராக ஜெகநாதலிங்கம் லக்ஷ்மன் செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




POSTGRADUATE INSTITUTE OF HUMANITIES & SOCIAL SCIENCES (PGIHS)
University of Peradeniya

Join the Nation's Leader in Postgraduate Education and Research in Humanities and Social Sciences

The PGIHS calls applications for the following Postgraduate Diploma and Degree programmes for the Academic Year 2025

| | |
|---|---|
| Postgraduate Diploma (SLQF Level 8) 1 Year | தொல்பொருளியல், அரசியல், புவியியல், சமூகவியல், சிங்களம், ஆங்கிலம், தமிழ், பொருளியல், உடற்கல்வி, தத்துவவியல், உளவியல், பௌத்தகல்வி, வரலாறு, சமஸ்கிருதம், பாளி, அழகியற்கலை, கிரேக்கம் மற்றும் ரோமன் கல்வி, இஸ்லாமியக் கல்வி, சமூக அபிவிருத்தி மற்றும் திட்டமிடல். |
| Master [Recommended Course work and Project] (SLQF Level 9) 1 Year | தொல்பொருளியல், அரசியல், வரலாறு, புவியியல், சமூகவியல், சிங்களம், ஆங்கிலம், தமிழ், பொருளியல், தத்துவவியல், பௌத்தகல்வி, சமஸ்கிருதம், பாளி, அழகியற்கலை, கிரேக்கம் மற்றும் ரோமன் கல்வி, இஸ்லாமியக் கல்வி |
| Master of Arts [Recommended Course work and Research] (SLQF Level 10) 2 Years | தொல்பொருளியல், அரசியல், வரலாறு, புவியியல், சமூகவியல், சிங்களம், ஆங்கிலம், தமிழ், பொருளியல், தத்துவவியல், பௌத்தகல்வி, சமஸ்கிருதம், பாளி, அழகியற்கலை, கிரேக்கம் மற்றும் ரோமன் கல்வி, இஸ்லாமியக் கல்வி |
| Master of Arts in Applied Economics (SLQF Level 9) - 1 Year | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of International Relations (SLQF Level 9) -18 Months | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Human Rights and Multiculturalism (SLQF Level 9) -15 Months | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Environmental Management (SLQF Level 9) - 15 Months | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Development Practice (SLQF Level 9) - 2 Years | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் தொழில்முறை கற்றல்/இன்டர்ன்ஷிப் |
| Master of Social Work (SLQF Level 9) - 2 Years | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Sustainable Tourism (SLQF Level 9) -18 Months | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Science in Banking (SLQF Level 10) - 2 Years | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் செயற்றிட்டம்) |
| Master of Science in Sustainable Tourism (SLQF Level 10) - 2 Years | (பரிந்துரைக்கப்படும் கற்கைநெறி மற்றும் ஆய்வறிக்கை) |
| Master of Philosophy [Research only*] (SLQF Level 11) Minimum 2 years of full time research | மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகியதுறைகளில் தொடர்புடைய எந்தவொரு பாடம் |
| Doctor of Philosophy [Research only*] (SLQF Level 12) Minimum 3 years of full time research | மானிடவியல், சமூக விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறையோடு தொடர்புடைய ஏதாவதொரு பாடம் |

முடிவுத்திகதி
2024 செப்டம்பர் 30

* தேவைப்படும் போது கற்கைநெறிகள் பரிந்துரைக்கப்படும்

Application fee :Local Rs.2000 / Foreign: US $25.00

குறிப்பு: விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதபட்சத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தாது விடுவதற்கான உரிமையை PGIHS கொண்டிருக்கும். சில நிகழ்ச்சித்திட்டங்கள் தகைமைப் பரீட்சை மற்றும் / நேர்முகத் தேர்வைக் கொண்டிருக்கலாம். கற்பித்தல் முறைமை: நேரடியான வகுப்புக்கள் + தேவையானால் மெய்நிகர் (online)

பட்டப்பின் படிப்பு நிகழ்வுகளுக்கான உள்நுழைவு தகைமை கற்கைநெறி கட்டமைப்பு, கற்கைநெறி கட்டணங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தகவல்களுக்கு தயவுசெய்து www.pgihs.ac.lk என்ற இணையதளத்திற்குள் பிரவேசியுங்கள்.

விண்ணப்பிக்கும் முறைமை: விண்ணப்பப்படிவங்கள் மெய்நிகர் (online) முறையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தயவுசெய்து விண்ணப்பப்படிவ இணைப்பை தேடுவதற்காக www.pgihs.ac.lk/applications என்பதற்குள் பிரவேசிக்கவும். விண்ணப்பப்படிவம் மற்றும் துணை ஆவணங்களின் அச்சுப் பிரதிகளைப்பதிவுத் தபாலில் PGIHS, பேராதனை பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

இணையத்தளம் : www.pgihs.ac.lk  விசாரணைகள் : info@pgihs.ac.lk  தொலைபேசி இல: +94 812 388 957 / +94 812 068363

# 1500 கி.மீற்றர் தூரத்தை கால்நடையாக பயணித்த சாதனை வீரன் சஹ்மி சஹீத்



## பேருவளையில் நாளை மகத்தான வரவேற்பு

(அஜ்வாத் பாஸி)

பேருவளை பகுதியிலுள்ள எலந்த கொடை என்ற முஸ்லிம் கிராமத்தில் வறிய குடும்பமொன்றில் பிறந்து, தற்போது 25 வயதை எட்டியுள்ள இளைஞன்தான் இன்று இலங்கையில் மாத்திரமன்றி கடல் கடந்த நாடுகளில்கூட பேசுபொருளாக மாறியுள்ள இளம் சாதனை வீரன் இளைஞன் சஹ்மி சஹீத்.

இலங்கை வரலாற்றில் ஏதாவதொரு திறமையை வெளிப்படுத்தி வரலாற்று சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கில் நீண்ட எதிர்பார்ப்போடு இருந்த சஹ்மி சஹீதுக்கு, கடந்த ஜுலை 13 ஆம் திகதி அதிர்ஷ்டம் அடித்தது.



பேருவளை மஹகொடை ஐ.எல்.எம். சம்சுதீன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், மர்ஹூம் மொஹமட் சஹீத், பாத்திமா நூர்ஜஹான் தம்பதிகளின் புதல்வராவார். பல திறமைகளை தன்னகத்தே கொண்டவர். சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்ட இளைஞன். எட்டுப்பேர் கொண்ட குடும்பத்தில் நான்காமவர். சஹ்மி தனது 11ஆவது வயதில் தகப்பனை இழந்தார்.

கால்நடையாக இலங்கையை சுற்றி வர தனக்கு ஆசையிருப்பதாக இவர் அறிவித்தபோது, இது நடக்கக்கூடிய காரியமா? இந்த இளைஞனால் இது சாத்தியமாகுமா என சிலர் விமர்சித்தனர்.

இவ் இளைஞனின் வேண்டுகோளை யேற்று உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கில் பூரண அனுசரணை வழங்க முன்வந்தவர் ஸிமி ஹோல்டிங்ஸ் மற்றும் பிக் ஸிடி குறூப் முகாமைத்துவ பணிப்பாளர் தொழிலதிபர் இஜ்லான் யூசுப். கடந்த மாதம் ஜுலை 13ஆம் திகதி பேருவளை, காலி வீதியிலுள்ள ஸிமி ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முன்பாக பொதுமக்கள் புடைசூழ தொழிலதிபர் இஜ்லான் யூசுப் எமது நாட்டின் தேசிய கொடியை வழங்கி இளைஞன் சஹ்மியின் பயணத்தை ஆரம்பித்து வைத்தார்.

பேருவளையிலிருந்து ஆரம்பமான சஹ்மியின் கால்நடை பயணம் அளுத்கம வழியாக பெந்தோட்டை, பலபிட்டிய, வழியாக காலி, வெலிகம, மாத்தறை, அம்பாந்தோட்டை, திஸ்ஸமகாராம, அதன்பிறகு கிழக்கு மாகாணம் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு



அதன் பிறகு வட மாகாணத்தை நோக்கி தொடர்ந்தது.

இவ்வாறாக கால்நடையாக பயணித்த சஹ்மி சஹீதுக்கு நாட்டின் பல பகுதிகளிலும் அமோக வரவேற்பு கிடைத்தது.

மூவின மக்களும் தாம் இலங்கையர்கள் என்ற வகையில் எவ்வித பேதமுமின்றி அந்தந்த நகரங்களில், மாவட்டங்களில், ஊர்களில் சஹ்மிக்கு மகத்தான வரவேற்பை வழங்கியதோடு பரிசுகளையும் வழங்கி உற்சாகமளித்தனர்.

இவ்வாறு கால்நடையாக கரையோர பிரதேசங்களை சுற்றிவருகின்ற இளைஞன் சஹ்மி யாழ்ப்பாணம் வரை சென்று தற்போது கொழும்பை நோக்கி கால்நடையாக திரும்பி கொண்டிருக்கிறார். இன்றைய தினம் (25) மாலை இவர் கொழும்பை வந்தடைவாரென எதிர்பார்க்கப்படுகிறது. இவருக்கு கொழும்பில் மகத்தான வரவேற்பும் வழங்கப்படவுள்ளது.

அதேவேளை, இலங்கையின் கரையோர பிரதேசங்களை உள்ளடக்கிய 1500 கிலோ மீற்றர் தூரத்தையும் 50 நாட்களில் கடக்க முடியும் என்றபோதிலும் இவர் 43ஆவது நாளில் இன்று கொழும்பை வந்தடையவுள்ளார்.

நாளைய தினம் (26) பயணத்தை ஆரம்பித்த, தனது சொந்த ஊரான பேருவளையை வந்தடையவுள்ள சஹ்மி சஹீதுக்கு பேருவளை நகரில் மகத்தான வரவேற்பளிக்கப்படவுள்ளது.

பேருவளை, சீனன்கோட்டை, மருதானை, மஹகொடை, மொல்லியமலை, எலந்தகொடை, மக்கொன, தர்கா நகர் போன்ற பகுதிகளில் சாதனை வீரர் சஹ்மி சஹீதுக்கு வாழ்த்து தெரிவித்து பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

சாதனை வீரன் சஹ்மி சஹீதுக்கு நாளை (26) மாலை பேருவளை பீச் திடலில் தொழிலதிபர் இஜ்லான் யூசுப் தலைமையில் மகத்தான வரவேற்பளிக்கப்படவுள்ளதாக நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் நப்ஹான் சஹாப்தீன் வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.

---

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதி நவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொAழில்நுட்பத்துடன் கூடிய நீர்புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக்கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாராச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு - 0112 201 700 057691

## வேலைவாய்ப்பு

### 302 வீட்டு வேலையாள்/ சேவைகள் பொதுவான சேவைகள்

வேலை வாய்ப்பை எதிர்பார்க்கும் உங்களுக்கு வீட்டு வேலை ஆண்/ பெண் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர் கூடு தல் சம்பளம் உண வு கிளீனிங் சேர்விஸ் மொரகஹயட்ட இரத்தினபுரி070 - 1672233, 076 - 9713377 057622

### 306 வெற்றிடங்கள் மருத்துவம்

ஆயுர்வேத வைத்தியர் ஒருவருக்கு மருந்துகள் வேலைக்கும், உதவியாளர்களாக பணி செய்வதற்கும் வேலையாட்கள் தேவை. கணவன், மனைவி அல்ல து சகோதரன், சகோதரி, வாப்பா மகள் இப்ப டி ஜோடியாக வேண்டும். முஸ்லிம்கள் மட்டும் தங்குமிடம் உணவு. வழங்கப்படும். மாத்தறை மாவட்டம் மேலதிக தொடர்புகளுக்கு. 075 5000343. 057416

### 310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்

கொழும்பு 08 இற்குள் 40 வயதிற்கு குறைந்த அனுபவம் மற்றும் ஆங்கிலத்தில் சிறந்த தொடர்பாடல் தேர்ச்சியுடைய பெண் அலுவலக உதவியாளர் தேவை. வேலை நேரங்கள் மு.ப. 7.30 - பி.ப. 5.30 தொடர்பு - 077 9556380. 057332

### 315 வெற்றிடங்கள் கல்வி

English Teacher for a private school / institute in Bentota prefer a qualified experienced Teacher. However Trainees with a good command of the Language can also apply. This is a full time position. Please email your CV's to rainbow.management.lk@gmail.com or call 0706279095 for an interview. Shadow Teacher to work in the welfare unit of a Private School / Institute. Must have qualifications in special needs / shadow teaching. Please send your CV to (full time). 057411

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

தேவை - AD லைசன் உடன் கனரக வாகன சாரதிகள், லொறி உதவியாளர்க ள், தீந்தை தொழிற்சாலைக்கு உதவியாளர்கள் கலம்பு பெயின்ட் சென்டர் போருதுடுவ வீதி நீர்வேலி, யாழ்ப்பாணம்0777 - 890398, 021- 2230235 057557

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழும்பு 08 இற்குள் அனுபவமுள்ள 35 வயதிற்கு குறைந்த தங்கியிருக்கக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.தொடர்பு - 0769780984 057343

கொழும்பு 08 இற்குள் ஆங்கிலத்தில் கவனிக்கத்தக்க தொடர்பாடல் தேர்ச்சியுடைய 35 வயதிற்குட்பட்ட தகைமையும் அனுபவமும் உள்ள பெண் கண்காணிப்பாளர் தேவை. கவர்ச்சியான சம்பளப் பொதி வழங்கப்படும். இலவச தங்குமிடம், உணவு உள்ளடக்கப்படும். மின் அஞ்சல் : chathukect@gmail.com தொடர்பு : 07 05 36 30 99 057336

வீட்டி ல் தங்கி உணவு சமைப்பதற்கு, வீடு முற்றத்தை சுத்திகரிப்பதற்கு வீட்டுப் பணிப்பெண் தே வை. சம்பளம் பேசித்தீர்க்கலாம். 077 0632669. 057450

வீட்டு வேலையாட்கள், பெண் வீட்டுப் ப ராமரிப்பாளர்கள், நன்னிமார் வீடு அலுவலக சுத்திக ரிப்பாளர்கள் வீட்டுத்தோட்ட அலங்காரம், பிள்ளைகளை கவனித்தல் உட்பட சகல தேவைகளுக்கும் நம்பிக்கையான சேவைகளுக்கு - திஹேன் கிளீனிக் சேர்விஸ், மொரகஹயட்ட, இரத்தினபுரி070 - 1672233 - 076 - 9713377 057621




### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

பொரளையில் - ஓர் கம்பனிகள் குழுமத்தின் தலைவருக்கு 40 வயதிற்கு குறைந்த தங்கியிருந்து சமைக்கக் கூடிய பெண் தேவை. ஆங்கிலத்தில் கதைக்கக் கூடிய மற்றும் புரிந்து கொள்ளக் கூடியவர்களுக்கு மற்றும் வட இந்திய உணவு வகைகளை தயாரிக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். கவர்சிகரமான சம்பளம் வழங்கப்படும். தொடர்பு - 071-7969373. 057328

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தோட்டத்தில் தங்கி வேலை செய்யக் கூடிய 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் ID மற்றும் கிராமசேவகர் சான்றிதழ் தேவை. 0711 628964. 055864

### 325 தொழில்துறை பொது

சவுன்ட், லைட்டிங் LED திரை வ ழங்கும் நிறுவனத்தில் வேவைக்கு, ப யிற் சி ய ளி க் க க் கூடிய இளைஞ ர்கள் தேவை.0707322815 057315

தெஹிவளை Hill street இல் அமைந்துள்ள Communication ற்கு ஆள் தேவை. வயது 18 - 45 (சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்) தொடர்புகளுக்கு 075 0884984. 076 6269580 (Whats app). 057743

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு (Garment Factory) க.பொ.த சாதாரண தர (O/ L) க.பொ.த உயர்தர (A/L) வணிக பாடத்தில் தேர்ச்சி பெற்ற கணினி அறிவுள்ளவர்கள் தேவை.* Clerical Accounts Clerk* Marketing Cler k - Marketing Clerk* Gene r a l Clerkஇலவச த ங்கு மி ட வசதிகள் மற்றும் குறைந்த வி லைக்கு உணவு வழ ங்கப்படும். வார நா ட்களில் மு.ப. 9.00 மு த ல் பி.ப.5.00 வரை நேர்முக தேர்வுக்கு நே ரில் வரவும்.Cliftex Industries (Pvt) Ltd,இல.18, வெலியமுன வீதி, ஹே கித்த வத்தளை P. No: 076 - 6200300Email : hr @cliftextiles.com 057589

## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

மதுரங்குளி 40 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு 1 ஏக்கர் 65 இலட்சம், நீர், மின்சாரம் - 2 சிறி ய வீடுகள் பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் 2 உட்செல்ல ல் வழிகள் (20 ஏக்கரில் 2 துண்டு க ள் வழங்கப்பட லாம்) தொலைபேசி 0776852342 052297

### 6.. வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

அத்திடிய 52.7 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளே ஸ், கொழும்பு -02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 145 மில்லியன். 077-2361243. 057476

எரவ்வல 12 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வ ங்கியினால் சுவீகரிக்கப்பட்ட மூன்று மாடி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன் விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு 242, யூனியன் பிளேஸ், கொழும்பு -02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 25 மில்லியன். 077-2361243. 057489

கல்கிசை, பார்ன்ஸ் அவெனியூ வில் முழுமையான தளபாடங்களுடன் AC ஆடம்பர 3 படுக்கையறை 1570 சதுர அடி கடல் காட்சியுடன் அபாட்மென்ட் உடனடியாக விற்பனைக்கு COC மற்றும் உறுதிகள் தயார் நிலையில் விலை 55 மில்லியன் மற்றும் விலைமனுக்கள் மேலதிக விபரங்களுக்கு முகவருடன் தொடர்பு கொள்ளுங்கள். (0776700667) 051157

தெஹிவளை புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு. 9.5 பேர்ச் 7 படுக்கையறை, 7 குளியலறை, 2 வாகன நிறுத்துமிடங்கள், கராஜ், 2 மாடி வீடி பிரத்தியேக பிரவேச வழியுடன்/ நீர்/ மின்சாரம் 89.5 மில்லியன் அழையு ங்க ள் . 071-36 9399 9 உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும். தரகர்கள் வேண்டாம். 056026

நுகே கொடையில் இரண்டு மாடி வீடு விற்பனையுடன் 7.8 பேர்ச்சஸ். பேர்டிங் பிசினஸ் அல்லது முதலீட்டுக்கு நல்லது. 3 கோடி. நிலத்தின் மதிப்பு மட்டுமே. பேச்சுவார்த்தைக்குட்பட்டது. 0775103332.056810

ஹொரண 71.96 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை வி சா ர ணை க ள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ் , கொ ழும்பு -02 எ ன்ற முகவரிக்கு ஒரு துண்டு ரூபா 13 மில்லியன். 077-2361243. 057483

### 6.. வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கலகெடிஹேன 218 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளே ஸ், கொழும்பு -02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 169 மில்லியன். 077 2361243. 057481

கிரிபத்கொட பமுனுவில வீதி, 20 பேர்ச் நேஷன் டிர ஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ் , கொ ழும்பு -02 எ ன்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோ ரிக்கை 11 மில்லியன். 077 2361243. 057477

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

வென்னப்புவ 71.5 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு -02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோ ரிக்கை 31.8 மில்லியன். 077 2361243. 057486

### 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

கேகாலை 26.69 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட இரு மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு -02 என்றி முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 11.35 மில்லியன். 077 2361243. 057480

### 630 வீடு சொத்து காலி மாவட்டம் விற்பனைக்கு

தெனியாய மொரவக்க 153.35 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு -02 என்ற மு கவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 13.3 மில்லியன். 077 2361243. 057479

### 631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தறை தங்கல்ல வீதி 12 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி 03 துண்டுகள் விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.09.08 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ் , கொ ழும்பு -02 எ ன்ற முகவரிக்கு ஒரு துண்டு ரூபா 4.2 மில்லியன். 077 2361243. 057484

# அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு புதிய வேலைத்திட்டங்களை முன்வைப்போம்



## ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க

**புதிய பயணத்திற்குத் தயாராகிய நீங்கள், முன்னைய கட்சிக்கே மீண்டும் திரும்பியுள்ளீர்கள். ஏன் இப்படி கட்சி மாறுகிறீர்கள்?**

நான் ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்தவராக இருந்திருக்கவில்லை. முன்னர் உடன்படிக்கை ஒன்றின் பிரகாரமே இணைந்திருந்தேன். யார் எம்மீது சேறு பூசினாலும் நாம் இருக்கும் இடத்தில்தான் இருக்கின்றோம்.

அரசியலில் உள்ளவர்கள் வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுகிறார்கள். நாம் பாராளுமன்றத்தில் சுதந்திரமாக செயற்பட்டோம். வாக்களிப்பின் போதும் நாங்கள் சுதந்திரமாகவே செயற்பட்டோம். அதேபோன்று நாங்கள் வெளிப்படையாக பல கொள்கைகளை முன்வைத்து கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினோம். அதில் ஐக்கிய மக்கள் சக்திதான் நாம் திருப்தியடையும் வகையிலான பதிலை எமக்கு வழங்கியது.

**உங்கள் ஐக்கிய குடியரசு முன்னணியின் செயற்பாடுகள் எவ்வாறுள்ளன?**

அந்தக் கட்சியின் அடையாளத்தை வைத்துக் கொண்டு முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றோம். கூட்டணி அமைத்தது மாத்திரம்தான் இடம்பெற்றுள்ளது. கட்சியை கலைக்கவில்லை.

**ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்த போது இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகள் என்ன?**

எந்த நிபந்தனைகளும் இல்லை. நாம் பல கொள்கைகளை முன்வைத்தோம். அவை தொடர்பில் ஆரம்ப இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. ஐக்கிய மக்கள் கூட்டணியில் இதில் உள்ள முக்கியமான விடயங்களை இணைத்துக் கொள்வதற்கான ஆயத்தங்கள் காணப்படுகின்றன.

**இந்த ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக ஐக்கிய மக்கள் கூட்டணியால் சிறந்த பயணத்தை முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கை உங்களிடம் உள்ளதா?**

நிச்சயமாக உள்ளது. வரலாற்றில் முதற்தடவையாக ஒரு வங்குரோத்தடைந்த நாட்டில் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் போட்டி இருப்பது இரண்டு எதிர்க்கட்சிகளுக்கு இடையிலேயே. அல்லாமல், அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் அல்ல. அதாவது தேசிய மக்கள் சக்திக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணிக்கும் இடையிலேயே இந்தப் போட்டி உள்ளது. மார்க்சிஸ்ட்வாத தேசிய மக்கள் சக்திக்குப் பதிலாக சமூக ஜனநாயக ஐக்கிய மக்கள் கூட்டணி வெற்றி பெறும்.

**எனினும் தற்போது ஐக்கிய மக்கள் கூட்டணியிலிருந்து சில சில தரப்பினர் வெளியேறும் நிலை தெளிவாகத் தெரிகிறதே?**

அவை தனிப்பட்ட காரணங்கள். அதேபோன்று வரும் நாட்களில் இன்னும் சிலர் எம்மோடு இணைந்து கொள்வார்கள். அதற்குத்தான் அரசியல் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

**தற்போது சிலர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அரசாங்கமும் வலுவான நிலையில் உள்ளது என்பது தெளிவாகின்றது தானே?**

தனி நபர்களாக நல்லவர்கள் அரசாங்கத்தில் இருக்கிறார்கள். அதேபோன்று தீயவர்களும் இருக்கிறார்கள். இந்த நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களும் இருக்கிறார்கள். எனினும் எமக்கு முக்கியமானது தனிநபர்களின் நல்லது கெட்டது அல்ல. ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையானது அரசியல் ரீதியாக ஜனநாயகமற்றது. மற்றும் பொருளாதார ரீதியாக நவதாராளவாத கொள்கையாகும். அது இந்த நாட்டுக்கு ஒத்து வராது. அதனால்தான் நாம் சமூக ஜனநாயகக் கொள்கையைத் தேர்ந்தெடுத்தோம்.

**தற்போதைய ஜனாதிபதியுடன் பலமுறை கலந்துரையாடியுள்ளீர்கள். முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை நிறைவேற்றத் தவறியதால் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிப்பதாகக் கூறுகின்றீர்கள். அவ்வாறு நீங்கள் என்ன யோசனைகளை முன்வைத்தீர்கள்?**

கண்டிப்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டோம். நாம் சிறிகொத்தா தலைமையகத்திற்குச் சென்றே இப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டோம். எனினும் அந்த விஷயங்களில் எங்களால் உடன்பட முடியவில்லை. உதாரணமாக, சக்தித் துறை. இந்த விடயத்தில் ஜனாதிபதி பின்பற்றும் வேலைத்திட்டத்திற்கு நாங்கள் முற்றாக எதிரானவர்கள். அரசு நிறுவனங்கள் தொடர்பிலும் அவ்வாறுதான். அரச நிதி ஸ்திரத்தன்மை தொடர்பில் அவர் முன்னெடுத்த சில விடயங்களில் சில கருத்துகள் உள்ளன. மது உற்பத்தியாளர்கள் வரி செலுத்தாதிருப்பதை அரசாங்கத்தினால் தடுக்க முடியவில்லை.

**சஜித் பிரேமதாச ஜனாதிபதியானால் இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா?**

இது ஒரு குழு முயற்சி. நாங்கள் கொள்கை விடயங்களில் இருக்கிறோம். நாம் பார்ப்பது மறுபக்கத்தில் உள்ள ஆபத்துக்களையே. இந்த நாட்டை வெனிசுலாவாகவோ அல்லது கியூபாவாகவோ மாற்றும் ஜனரஞ்சக மார்க்சியத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அரசின் திட்டத்தால் இதனை நிறுத்த முடியாது. விரட்டப்பட்ட அரசாங்கமே இப்போதுள்ளது. அவர்களுக்கு எதிராக வாக்களிக்க பொதுமக்கள் காத்திருக்கின்றனர். தற்போது ஜனாதிபதி நீதிமன்ற உத்தரவை மீறி செயற்படுகின்றார். இது மிகவும் மோசமானது.

**அரசாங்கத்தைச் சுற்றி ராஜபக்ஷக்கள் சூழ்ந்திருப்பதே உங்கள் நிராகரிப்புக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இப்போது ராஜபக்ஷக்கள் வெளியேறிவிட்டார்களே?**

சிலர் சில மோசமான செய்திகளைப் பரப்புகிறார்கள். அரசாங்கத்தின் ஜனாதிபதியை ஆதரிக்கும் குழுக்களுடன் நாங்கள் மிகவும் நட்புடன் இருக்கிறோம். சிலரின் கொள்கைகளுடன் உடன்பாடு உள்ளது. பிரச்சினை இருப்பது எவருடைய கொள்கையையும் கருத்தில் கொள்ளாமல் அவர்கள் தங்கள் சொந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலாகும். அதேபோன்று ராஜபக்ஷக்கள் இணைந்திருக்கும் எந்த கூட்டணியிலும் நாங்கள் இணைய மாட்டோம். இந்த அநியாயத்திற்கு ஜே.வி.பியை விட அவர்களே பொறுப்புக் கூற வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் மக்கள் கேட்பது வங்குரோத்து நிலையை ஏற்படுத்திய ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பைக் காட்டி மொட்டுக் கட்சியைப் படுதோல்வியடையச் செய்ய வேண்டும் என்றேயாகும். அடுத்தது இங்குள்ள பிரச்சினை ராஜபக்ஷக்களின் வெளியேற்றம் அல்ல. ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துடனும் எம்மால் உடன்பட முடியாது.

**சஜித் மற்றும் ரணிலின் தேர்தல் நடவடிக்கைகள் வருபவர்களை ஒன்று சேர்த்துக் கொள்வதாகவே அமைந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சுமத்துகிறதே?**

தேசிய மக்கள் சக்தி என்பது மக்கள் விடுதலை முன்னணியாகும். மக்கள் விடுதலை முன்னணி தனது வரலாற்றில் அதாவது 1994ஆம் ஆண்டிலிருந்து எவ்வாறு மீண்டு வந்தது? 1994ம் ஆண்டு போட்டியிட்டது ஆரிய புலேகொடவின் பூச்சாடி சின்னத்திலாகும். அது விஜேதுங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தடையை நீக்கியிருந்த நிலையிலாகும். பின்னர் மணி சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டது. அதன் தலைவர் நந்தன குணதிலக இன்று ஐக்கிய தேசிய கட்சியிலுள்ளார். பின்னர் அவர்கள் 2005ஆம் ஆண்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியில் இருந்தார்கள். அதன் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தார். வடக்கு, கிழக்கில் யுத்தத்தை எதிர்கொண்ட போது அதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர். பின்னர் அவர்கள் சரத் பொன்சேகா, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியுடன் இணைந்து கொண்டனர். 2015இல் எங்களுடன் இணைந்து சிறிசேனவுக்கு ஆதரவளித்தனர். பின்னர் திசைகாட்டியை அமைத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டார்கள். அவர்களைப் பற்றி என்ன கதைக்க இருக்கிறது? இதுவே அரசியலில் மிகப்பெரிய நகைச்சுவையாகும். இந்தக் கட்சியில் புதிதாகச் சேர்ந்த பலர் கடந்த காலங்களில் கோட்டாபயவுடன் இருந்தவர்களாகும்.

**மக்கள் பிரதிநிதிகள் மாறிவிட்டார்கள் என்பதற்காக மக்களும் மாறி வாக்களிப்பார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

சில தரப்பினர் அவ்வாறு செய்ய மாட்டார்கள். எந்தக் குழு எனப் பார்த்தே மக்கள் வாக்கை பிரயோகிப்பார்கள். வங்குரோத்து நிலையினால் வாக்குகளைப் பெறுவதில் பாரம்பரிய கட்சிகளுக்கு பெரும் சவால் உள்ளது. இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் இல்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் அதன் இறுதித்தறுவாயில் உள்ளது.

**நீங்களும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருந்திருக்கலாமே?**

நாட்டில் இரண்டு சவால்கள் உள்ளன. பொருளாதார சவாலிலிருந்து மீண்டெழுவதற்கு ஒரு குழு தேவையாகும். இரண்டாவது இந்நாடு ஜனரஞ்சகத்துக்கு கட்டுப்பட்டு வெனிசுலாவாக மாறுவதைத் தடுக்க வேண்டியுள்ளது. அதை தனியாகச் செய்ய முடியாது.

**கடந்த காலங்களில் ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டத்தை நீங்கள் பாராட்டினீர்களே...?**

அரச நிதியை ஸ்திரப்படுத்துவது தொடர்பில் ராஜபக்ஷக்களுடன் ஒப்பிடும் போது ரணில் விக்கிரமசிங்க எடுத்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. எனினும் இது புதிய விடயமல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளைப் பின்பற்றி, அர்ஜென்டினா அரசாங்கம் மீண்டு வந்தது. பாகிஸ்தானும் நிதி நிலைத்தன்மையை அடைந்துள்ளது. குறிப்பாக, இது ரணில் விக்கிரமசிங்கவின் தகுதி என்பதை விட நிதியத்தின் கொள்கைகளால் ஏற்பட்ட ஒன்றாகும். அவற்றை செய்வதற்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் தயங்கினர். மறுபுறம், இந்த நெருக்கடியின் சுமையை சாதாரண மக்கள் மீது சுமத்தியது அவரது தவறாகும்.

**செப்டெம்பர் 21ஆம் திகதிக்குப் பின்னர், இந்நாட்டில் பொன்னான யுகம் ஒன்று மலரும் என நீங்கள் கூறுகின்றீர்கள். சஜித் பிரேமதாசவின் அரசாங்கத்தினால் நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டிற்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக் கூடியதாக இருக்குமா?**

நாம் ஒரு குழுவாகச் செயற்பட்டு, நிச்சமாக இந்நாட்டில் புதிய கொள்கைகளை முன்வைப்போம். இந்நாட்டின் பொருளாதாரம், அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு புதிய வேலைத்திட்டங்களை முன்வைப்போம். கடினமான சவால்களை நாம் வெற்றி கொண்டிருக்கின்றோம். தனிப்பட்ட காரணியை விட கூட்டு முயற்சியின் மூலம் இதைச் சாதிக்கப் பார்க்கிறோம். சஜித் பிரேமதாச பின்பற்றும் தளர்வான ஜனநாயக செயல்முறை அதை எளிதாக்கும்.

எம். எஸ். முஸப்பிர்

தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

TWO APARTMENTS IN VERY GOOD CONDITION FOR SALE
IN NUGEGODA
AT JAMBUGASMULLA MAWATHA, MELDER PLACE
Price 42 million
each contain 03 Bedrooms with A/C 02 Bathrooms, Maids room with bathroom. Spacious Living & Dining area with fitted pantry
Total floor area 1250 sq.ft. with fully tiled 01 parking slot, Swimming Pool, Gym, Lift and back up generator and 24 hours security is available
Contact No. 0714 060 505

AUTO A/C
Specialized in Auto Air Conditioning Repairing & Installation
RANCO AIR CONDITION
Wasala Road, Dehiwala.
0777 48 77 88

காணியொன்று விற்பனைக்கு
அளுத்கம சுற்றுலா வள்ளங்கள் பயணிக்கும் கங்கைக்கு எல்லையாக ஒரு ஏக்கர் வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
0777 417 173

இரத்தினக்கல் பதித்தல்
வேலை வாய்ப்புக்கள்
கொழும்பு 5 இலுள்ள தங்க ஆபரணங்கள் உற்பத்தி செய்யும் கம்பனியில் அனுபவமுள்ள இரத்தினக்கல் பதிப்பவர்களுக்கான வெற்றிடங்கள் உண்டு.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
0779 955 515

Sun Lanka 077 343 6677
SEAT COVERS
Alto, Wagon R, Maruti 800, Stingray
Aqua, Rush, Axio, Axia, Premio, Vitz
Vezel, Fit, Insight, Grace
SUZUKI TOYOTA HONDA

WINDY COTTAGE - NUWARAELIYA
077 251 70 21
Enjoy Your Holiday
04 Bedrooms with attached Bathrooms - Hot Water/ Parking/ Dialogue TV/ Free Wifi/ Caretaker & Cook - 500 Metres to Gregorye Lake - within city limits
windy cottage nuwaraeliya windycottagenuwaraeliya@gmail.com
www.windycottagenuwaraeliya.com

LUXURY HOUSE FOR SALE
IN KANDY
28.5 Perches, 02 Unit house for sale in Heerassagala, Kandy. 6 bedrooms, 4 bathrooms, Living, Pantry, Maids room, ample Parking with a beautiful Garden
Beautiful Scenic Neighbourhood
QUICK SALE 54.5 Million
Contact: 0772 257 225 / 0777 784 020

5.5 ACRE AGRI - LAND AND BUNGALOW
ON DICKWELLA - BELIATTE ROAD
5.5 Acre fertile agricultural land with coconut and pepper and a 5BR bungalow and other building suitable for development as Agro Tourism project, 3 miles from Dickwella.
POTENTIAL BUYERS ONLY
PLEASE CALL FOR DETAILS :
0777 717 188

FOR RELIEVING
JOINT PAINS & DIFFICULTIES IN CLIMBING STAIRCASES UP & DOWN, WALKING AND STANDING UP.
100% Natural
MIRACLE REMEDY FOR CURING JOINT DISORDERS INTERNALLY.
DEEGAYU JOINTHEALER PLUS
COMPLETE CURE AFTER 4 WEEKS USE.
ONLY RS.2490.00 TO BE DELIVERED TO YOUR DOORSTEP.
DEEGAYU HELA OSU COMPANY
KANDY ROAD, KALAGEDIHENA
(IN FRONT OF FILLING STATION.)
0117 673 402
0710 397 399 / 0710 397 644
JOIN AILMENT CLINIC - ON EVERY SUNDAY FROM 9.30 A.M. TO 5.00 P.M.

A SOLIDLY BUILT AIR CONDITIONED 22 FT BY 12 FT BUSINESS PERMISES
AT JATHIKA POLA MARKET COMPLEX
NARAHENPITA, COLOMBO 05.
AVAILABLE FOR SALE
Suitable for Mini Super Market or any other business
CONTACT THE OWNER FOR FURTHER DETAILS
0777 765 873

හර්නියා
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මඟින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721

LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD
(WIJERAMA - CAMPUS ROAD)
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.
2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

AGRO TOURISM LANDS FOR SALE
For sale : 600 perch River front land in Rambukkana, Kegalle District. 3-phase electricity, 15 ft road access. Abundant jack, Mahogany, Mango, Ebony, Kalumadiriya & Kumbuk trees. Perfect for Cinnamon Coffee, Agarwood, Vanilla plantations. Ideal for agriculture, Agro- tourism or Villa project. 10 min drive to Pinnawala Elephant orphanage & Pinnawala Zoo. 5 minute from Rambukkana exit of central expressway. Price Negotiable
River frontage bordering land
River facing land with abundant trees
For Sale : 5-acre Paddy Field and 33 perch housing block near Mawathagama, Kandy District. 33 perch adjoining Villa land with scenic views of the paddy field and Alagalla mountain range. Ideal for agriculture, Agro-tourism Villa project or Green House project. 12 ft access road, 3-phase electricity. 20 minutes from Kurunegala exit of northern highway, 10 mnutes Galagedera exit of Central expressway. Price Negotiable
View from villa land Facing scenic views & Alagalla Mountain range
CONTACT OWNER : 0777 765 873/ 0773 067 790

வார இறுதி
# அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

# பலமடைகிறது ஜனாதிபதி அணி!

**இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு இன்னமும் இருபத்தாறு நாட்களே எஞ்சியிருக்கும் நிலையில், இத்தேர்தலில் போட்டியிடும் முப்பத்தொன்பது வேட்பாளர்களில் பெரும்பாலானவர்கள் தீவிர பிரசாரங்களை முடுக்கி விட்டுள்ளனர்.**



## ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து படிப்படியாக நீங்கும் பிரபலங்கள்!

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடுகள் தீவிரமடைவது ஏன்? அங்கிருந்து மேலும் பலர் ஜனாதிபதியின் தரப்புக்கு வருவதற்கான அறிகுறிகள்!

பிரதான வேட்பாளர்களின் பிரசாரக் கூட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தேர்தலை அடிப்படையாகக் கொண்ட கட்சித் தாவல்களும் குறைவின்றி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் பல கட்சித் தாவல்கள் இடம்பெற்றிருப்பதுடன், இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கட்சியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காணப்படுகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 145 பேரில் 130 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சார்பாகவும், சஜித் பிரேமதாசவுக்கு சார்பாகவும் கைகோர்த்து செயற்பட்டு வருகின்றனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் வெற்றி பெற்றோரில் கூடுதலானோரின் ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் அணிசேர்ந்திருப்பதுடன், இதற்காக அவர்கள் தனியான கூட்டணியொன்றையும் உருவாக்கியுள்ளனர். ஜனாதிபதிக்கு ஆதரவான பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட புதிய கூட்டணிக்குத் தலைவராக பிரதமர் தினேஷ் குணவர்தனவை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



தேர்தலின் பின்னர் பொதுஜன பெரமுனவின் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என அதன் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டிருந்த பின்னணியில், புதிய கூட்டணியின் தலைவராக பிரதமர் நியமிக்கப்படவுள்ளார். எந்தவொரு கட்சியின் பிரதிநிதியாகவும் இன்றி சுயேச்சை வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்கியிருப்பதால், அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு தனது பிரசாரங்களை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார்.

### ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு:

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் தரப்புக்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மற்றும் அதன் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்களும் உள்ளடங்கியிருக்கின்றனர். தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் வலுத்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்த சஜித் பிரேமதாச அக்கட்சியிலிருந்து பிரிந்து வந்து புதிய கட்சியை உருவாக்கியபோது, அவருக்குப் பக்கபலமாக இருந்த பலர் தற்பொழுது அவரை விட்டு விலகிச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன போன்றவர்களைக் குறிப்பிட முடியும். இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவருடன் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்களான சிலர் மீண்டும் தமது தாய்க்கட்சிக்குச் சென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தும் தீர்மானங்களை எடுத்து வருகின்றனர். இது ஐக்கிய மக்கள் சக்திக்குள் காணப்படும் முரண்பாடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருப்பதுடன், அதனை பலவீனப்படுத்தும் நிலைக்கும் கொண்டு வந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மீது அதிருப்தி கொண்ட மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினரின் செயற்பாடு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது விசேட உரையாற்றியிருந்த முன்னாள் அமைச்சரும், இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரள தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்தார். அவருடைய இந்தத் திடீர் தீர்மானம் ஐக்கிய மக்கள் சக்தியை கலங்கச் செய்துள்ளது என்றே கூற வேண்டும்.



பாராளுமன்றத்தில் உரையாற்றிய தலதா அத்துகோரள குறிப்பிடுகையில், "இது எனக்கு மிகவும் உணர்ச்சிகரமான தருணம். ஒரு பக்கம் எமது தாய்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளது. அக்கட்சியின் தலைவர் மற்றும் முன்னாள் பிரதித் தலைவர் இருவரும் அரசியல் எதிரிகளாகி விட்டனர். இருவரும் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுகின்றனர். அனைவரும் ஒன்றிணைய முயற்சிக்கும் இவ்வேளையில், எமது முகாம் பிரிந்து தனித்தனியாகப் போட்டியிடும் முடிவை என்னால் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ள முடியாது.

இரு தலைவர்களும் பிரிந்து போட்டியிடும் முடிவு நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல் எடுக்கப்பட்ட சுயநல அரசியல் முடிவு என்று நான் நம்புகிறேன். எதிர்காலத்தில் வரலாறு அதை நிரூபிக்கும். இதைப் பற்றி நான் தொடர்ந்து மௌனம் சாதித்தால், அந்தப் பாவத்திற்கு மறைமுகமாகப் பங்களிப்பவராகவும் ஆகிவிடுவேன். எனவே, இந்த மிக முக்கியமான விடயத்தில் நான் உடனடியாக ஒரு முடிவை எடுத்தேன். இது இரத்தினபுரி மக்களுக்கும் அவர்களின் எதிர்காலத்திற்கும் எதிரான முடிவு அல்ல என நான் நம்புகிறேன். எனது அரசியல் பயணத்தை நான் ஒருபோதும் நிறுத்த மாட்டேன். இந்த நேரத்தில் நான் அதைப் பெருமையுடனும் தைரியத்துடனும் கூறினேன். எம்.பி. பதவியை விட்டு விலகுவதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. இன்று, நான் அந்த முக்கியமான தருணத்தை எதிர்கொள்கிறேன்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்றால் தனித்துப் போட்டியிடுவது நடைமுறையில் இல்லை. இன்று நாம் ஒரு புதிய சூழலை எதிர்கொண்டுள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எங்களை இணைத்துக் கொள்வதற்கு தொடர்ந்து அழைப்பு விடுத்த போது, சஜித் ஏன் எதிர்த்தார் என்று தெரியவில்லை.



**எதிர்க்கட்சித் தலைவருக்கு பக்கபலமாகவிருந்த முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவராக வெளியேறி தாய்க்கட்சியுடன் சேரும் படலம் தொடருகிறது!**

கோட்டாபய ராஜபக்ஷவிடம் இருந்து இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் பாடம் கற்க வேண்டும். அதிகாரத்தைப் பெற நினைத்தாலும் அதை எப்படிப் பாதுகாப்பது என்று யோசிக்க வேண்டும். ஒரே முகாமில் இருந்து இரண்டு பேர் ஒரே தேர்தலில் போட்டியிடுவது முட்டாள்தனமான வேலை. எங்கள் வெற்றி உறுதியாக ஒன்றாக இருந்தால், அதை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது?

ரணில் விக்கிரமசிங்க திருடர்களுடன் வாழ்கிறார் என்பது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு. இப்போது ஐக்கிய மக்கள் சக்தியும் இன்று அதே நிலையை எதிர்கொண்டுள்ளது. இப்போது திருட்டுக் கும்பலில் இருந்து குதித்தவர்கள் தயக்கமின்றி ஐக்கிய மக்கள் சக்தியில் சேர்ந்துள்ளனர். இதனால் உண்மையான உறுப்பினர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்" எனத் தெரிவித்தார்.

தலதா அத்துகோறளவின் இந்த அறிவிப்பும், இராஜினாமாவும் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள மேலும் சிலர் இவ்வாறான தீர்மானத்துக்கு வந்துள்ளார்கள் என்பதற்கான சமிக்ஞையாக அமைந்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள முன்னாள் ஐ.தே.க உறுப்பினர்களை மீண்டும் தாய்க்கட்சிக்குத் திரும்புமாறு ஏற்கனவே பல தடவை அழைப்புக்கள் விடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் தம்முடன் இணைந்து கொள்ளவிருப்பதாகவும் ஐ.தே.க கூறி வந்தது.

இது சாத்தியமாவதற்கான காலம் நெருங்கியிருப்பதாகவே தெரிகின்றது. ஜனாதிபதியுடன் இணைந்து கொண்ட ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் பாராளுமன்ற உறுப்புரிமையை ஐ.ம.ச இரத்துச் செய்திருந்த நிலையில், தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையே இராஜினாமாச் செய்துவிட்டு ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவுக்கும் நிலைக்கு தலதா அத்துகோரளவை தள்ளியுள்ளது. இவ்வாறு செய்யும் மனோநிலைக்குத் தள்ளப்பட கட்சியின் உள்ளக முரண்பாடு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

### யாரையும் சேர்க்க மாட்டோம்:

ஐக்கிய மக்கள் சக்தியும் உள்ளக முரண்பாடுகளை மேற்கொண்டிருக்கும் நிலையில், அக்கட்சியின் மீது மற்றுமொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

அதாவது, அரசியல் ரீதியில் அனாதரவாக்கப்பட்டுள்ள அனைத்து மோசடிக்காரர்களும் தஞ்சம் அடையும் கூடாரம் ஐ.ம.ச என்ற குற்றச்சாட்டை தேசிய மக்கள் சக்தி முன்வைக்கின்றது.

கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டபலர்தம்முடன்இணைந்து கொள்வதற்காகத் தமது கதவுகளைத் தட்டியபோதும், தாம் கதவைத் திறக்கவில்லையென தேசிய மக்கள் சக்தி தெரிவித்து வருகின்றது. மோசடிக்காரர்கள் யாரையும் தாங்கள் சேர்க்க மாட்டோம் என்பதில் உறுதியாக இருப்பதாகவும், இவ்வாறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ள நபர்கள் இலகுவில் இணைந்து கொள்ளக் கூடிய கூடாரம் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திசாநாயக்கவும் முக்கியமானவர். இதுவரையில இந்தக் கட்சி எந்தவொரு அரசியல் கட்சியுடனும் கூட்டணி அமைக்காது தனித்துச் செயற்பட்டு வருகின்றது. அவர்களின் அரசியல் கூட்டங்களில் சனக்கூட்டம் அதிகமாகக் காண்பிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் அவர்களின் கூட்டங்களுக்கு அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்தபோதும், தேர்தல் முடிவுகளில் பாரிய பிரதிபலிப்புக்கள் எதனையும் காணமுடிந்திருக்கவில்லை. இம்முறையும் அவ்வாறானதொரு நிலைமை அவர்களுக்கு ஏற்படலாம் என்றும் அரசியல் அவதானிகள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து பாரிய பின்னடைவைச் சந்தித்த கட்சியான பொதுஜன பெரமுனவின் முதலாவது பிரசாரக் கூட்டம் கடந்த புதன்கிழமை அநுராதபுரத்தில் நடைபெற்றது. அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் எனக் குறிப்பிடக்கூடிய எவரையும் காணக்கூடியதாக இருக்கவில்லை.

இங்கு உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகையில், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக கட்சியையும் நாட்டையும் தான் காட்டிக்கொடுக்க விரும்பவில்லையென்றும், எந்தச் சவாலையும் எதிர்கொள்ளத் தான் தயாராக இருப்பதாகவும் கூறினார். நிச்சயமாக இது அவருக்குப் பாரியதொரு சவாலாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# ஐ.நாவின் காலநிலை மாற்ற மாநாடு ஹனீக்கா ராகில் பங்கேற்றார்!

துபாயில் நடைபெற்ற காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் 28 ஆவது மாநாட்டில் ரோட்டரி பி.எச். எப் ஹனீக்கா ராகில் கலந்துகொண்டார். வழக்கறிஞர் ஹனீக்கா ராகில் ரோட்டரி இன்டர்நேஷனலைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.



இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக அனுப்பப்பட்ட 67 விண்ணப்பங்களில் உலகம் முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 12 பிரதிநிதிகளில் இவரும் ஒருவர். ஹனீக்கா கொழும்பு வடக்கு ரோட்டரி கழகத்தின் தற்போதைய தலைவராகவும் உள்ளார்.

ஹனீக்கா ராகில் கார்டிஃப் மெட்ரோபொலிட்டன் பல்கலைக் கழகத்தில் (யுகே) சட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர் (எல்.எல்.எம்) மேலும் சட்ட இளங்கலை (எல்.எல்.பி) பட்டங்கள் பெற்றவர் ஆவார். ஸ்டாஃபோர்ட்ஷையர் பல்கலைக்கழகத்தில் (யுகே) பட்டதாரி. அவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை மாலைதீவில் பெற்றார். சீஷெல்ஸ் குடியரசில் தனது இரண்டாம் நிலைக் கல்வியை முடித்தார்.




அவர் கடந்த 8 ஆண்டுகளாக தேசிய மற்றும் சர்வதேச அளவில் அமைதி மற்றும் மோதல் தீர்வு, கல்வி, காலநிலை, நீதி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக வாதிட்டும் வருகிறார்.

மேலும் அவர் பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனத்தின் (IEP) உலகளாவிய அமைதி தூதராக நியமிக்கப்பட்டார்.

# "மாநபி பேசாத மௌன மொழி தமிழ்" நூல் வெளியீட்டு விழா நாளை






தமிழ் எழுத்துத்துறையில் ஆறு தசாப்தங்களை நிறைவு செய்த கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி ஆய்வு செய்த மாநபி பற்றிய "மாநபி பேசாத மௌன மொழி தமிழ்" எனும் நூலின் வெளியீட்டு விழா, நாளை 26ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30க்கு கொழும்பு 7, தர்மபால மாவத்தை, ஜே. ஆர். ஜயவர்தன நிலைய மண்டபத்தில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் சிறப்புரையாற்றுவார். வகவத் தலைவர் நஜ்முல் ஹுசைன் வாழ்த்துரை நிகழ்த்த, கிண்ணியா அமீர் அலி, கவிஞர் வாழைத்தோட்டம் எம். வஸீர் ஆகியோர் வாழ்த்துக்கவி பாடுவர். டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரி ஆசிரியர் இர்ஷாத் ஹுசைன் வரவேற்புரை வழங்குவார். நூலாசிரியர் ஏற்புரையாற்ற, நன்றியுரையை டாக்டர். ருஸைகா கனி நிகழ்த்துவார். நிகழ்ச்சிகளை வகவச் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் தொகுத்து வழங்குவார்.

தமிழ் இலக்கிய சிந்தனைகளையும்,செம்மல் நபியையும் இணைத்து செய்யப்பட்ட ஆய்வு நூல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# காலநிலை மாற்றம்; ஜனாதிபதி செயலகத்தில் சந்திப்பு

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் ருவன் விஜயவர்தன, அமெரிக்க தூதுவர் ஜூலி சங், கடல் மற்றும் சர்வதேச சுற்றாடல், அறிவியல் அலுவல்கள் பணியகத்தின் பதில் உதவி செயலாளர் ஜெனிபர் லிட்ல்ஜோன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.



அரசியல் சவால்கள் மற்றும் இலங்கையின் சுற்றாடல் கொள்கைகளின் முக்கியத்துவம் என்பன இந்தக் கலந்துரையாடலின் போது எடுத்துக் கொள்ளப்பட்ட முக்கிய விடயங்களாக இருந்தன. காலநிலை மாற்றச் சட்டம் மற்றும் சுற்றாடல் சட்டம் போன்ற சட்டமூலங்களை அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட காலநிலை மாற்றத்திற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்பு குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், அமெரிக்க ஆசியா கூட்டாண்மை தொடர்பான விடயங்களும் இதன்போது முன்வைக்கப்பட்டதோடு, எதிர்காலத்தில் அதற்கு தேவையான ஒத்துழைப்பும் கோரப்பட்டது.

தற்போதைய அரசியல் சூழ்நிலை, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் காலநிலை பிரச்சினைகளின் முக்கியமான தன்மைகளை அமெரிக்கத் தூதுவர் மேலும் வலியுறுத்தினார். சாதகமான முடிவை எதிர்பார்த்து காலநிலை மாற்றத்தில் கவனம் செலுத்தும் இளைஞர்களின் பங்கேற்பின் முக்கியத்துவத்தையும் அவர் விளக்கினார்.



ஜெனிஃபர் லிட்ல்ஜோன், நடத்தை முறைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு காலநிலை மாற்றம் பற்றிய பயனுள்ள செய்திகளை அனுப்புவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இலங்கை காலநிலை தொடர்பான நிகழ்வுகளுக்கு முன்னுரிமை வழங்குதல், காற்றின் தரம், பல்லுயிர் மற்றும் பிளாஸ்டிக் மாசுபாடு தொடர்பான கொள்கைகளில் கவனம் செலுத்துவதன் தேவை தொடர்பிலும் அவர் இதன்போது கலந்துரையாடினார். மின்சார வாகனங்களை (EVs) ஊக்குவிக்கும் உயிர் வெளிப்படைத்தன்மை அறிக்கைகள் மூலம் பாரிஸ் உடன்படிக்கைக்கு இணங்குவது தொடர்பிலும் அவர் விடயங்களை தெளிவுபடுத்தினார்.

இக்கலந்துரையாடலில் சுற்றாடல் காலநிலை மாற்றம் மற்றும் பசுமை நிதி தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி ஆனந்த மல்லவதந்திரியும் கலந்து கொண்டார்.

எம். எஸ். முஸப்பிர்

# பரதநாட்டிய அரங்கேற்றம்





மில்ரோய் கிறிஸ்டோபர், அல்ஜின் தம்பதிகளின் புதல்வியும், அமிர்தாலயா நுண்கலைப்பள்ளி இயக்குனர் திருமதி சர்மிளா தேவி சுந்தரின் மாணவியுமான அகஸ்டினா அஃபிகா டியானாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் செப்டெம்பர் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணிக்கு. கொழும்பு 07, நெலும் பொகுண மஹிந்த ராஜபக்ஷ திரையரங்கில் நடைபெறும். பிரதம விருந்தினராக கொழும்பு, இந்திய உயர்ஸ்தானிகராலய சுவாமி விவேகானந்தா கலாசார மைய இயக்குனர், பேராசிரியர். (டாக்டர்) அங்குரன் தத்தா கலந்து கொள்ள திருச்சிராப்பள்ளி கலை காவிரி நுண்கலைக் கல்லூரி இணைப் பேராசிரியர் டாக்டர். S. சாரல், புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலாசார மேம்பாட்டு இயக்குனர் டாக்டர். பிரசாத் ரணசிங்க, அருட்தந்தை. பிலிப் ஆன்டனி நேசன் குலாஸ், கொழும்பு புனித பிரிட்ஜெட்ஸ் கன்னியர் மடத்தின் அதிபர் அருட் சகோதரி சுஜானி பெர்னாண்டோ இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் யதுகுலசிங்க அனிருத்தனன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

# பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே நாட்டை மீளுருவாக்கம் செய்தவர் ரணில்!

**'L போட்' ஒருவரை நாட்டின் ஜனாதிபதியாக்க முடியாது**

**அவர்களை நம்பி நாட்டை வழங்கினால் நாங்கள் எங்களுடைய உரிமைகளையும் இழக்க நேரிடும்.**

**மலையக கல்வியில் புரட்சி ஏற்படும்**

**தொழில் இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் என்னுடைய முதல் வேலை தமிழ்மொழி அமுலாக்கமே.**

**எதிர்காலத்தில் எவரேனும் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இப்பதவிக்கு வரலாம் என்ற ஒரு வரலாறு நிலைநிறுத்தப்பட்டுள்ளது**



**இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 'எல்' போட்டில் இருக்கும் பலர் போட்டியிடவுள்ளனர். மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதைப்போல அவர்களை நம்பி எவ்வாறு நாட்டை ஒப்படைப்பது எனக் கேள்வி எழுப்புகின்றார் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், தொழில் இராஜாங்க அமைச்சருமான வடிவேல் சுரேஷ். அனுபவமற்றவர்களிடம் நாட்டை ஒப்படைத்தால், இருக்கும் உரிமைகளையும் இழக்க நேரிடும் என்கிறார் அவர் தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய செவ்வி வருமாறு...**

## தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ்

**ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியவர்களில் நீங்களும் ஒருவர் என்றும் அதிலிருந்து ஒருபோதும் விலகப்பவதில்லை என்றும் கூறிவந்த நீங்கள் தற்போது ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டில் இருக்கின்றீர்களே?**

அக்காலகட்டத்தில் மாற்றம் ஒன்றுக்காக ஐக்கிய மக்கள் சக்தியை பதுளை மாவட்டத்தில் உருவாக்கியவன் நான்தான். ஆனால் அதிலிருந்து ஒருபோதும் நான் விலகப் போவதில்லை என்று எங்கேயும் குறிப்பிடவில்லை.

**மலையக மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு தொடர்ந்தும் முகம்கொடுத்துவரும் சூழலில் நீங்கள் ஜனாதிபதி ரணிலுக்கு வழங்கும் ஆதரவு, மலையக மக்களின் பிரச்சினைகளை எந்தளவில் மாற்றும் அல்லது அவர்களது வாழ்வில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?**

நாடு வங்குரோத்து அடைந்திருந்த சூழ்நிலையில் நாட்டை பொறுப்பேற்க யாரும் இல்லாதபோது, ரணில் விக்கிரமசிங்கவே நாட்டை பொறுப்பேற்று குறுகிய காலத்தில் அதனை மீளுருவாக்கம் செய்தார். நாடு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தபோது எங்களுடைய மலையக மக்களை பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர். அதனைக் கருத்தில்கொண்டு காலப்போக்கில் மலையக மக்களின் அபிவிருத்தி வேலை திட்டங்களுக்கு பாரியளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலும் குறிப்பாக பதுளை மாவட்டத்திற்கு மட்டும் 90 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆலயங்கள், பள்ளிவாசல்கள், விகாரைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பாடசாலை புனரமைப்பு மற்றும் மிகவும் மோசமாக காணப்பட்ட பல வீதிகளின் புனரமைப்பு பணிகள் அதன்மூலம் மேற்கொள்ளப்பட்டதோடு மட்டுமல்லாமல் மக்களுக்கு நீர்வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு அனைத்துப் பாடசாலைகளுக்கும் உட்கட்டமைப்புக்கான நிதி, கலாசார மண்டபங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

90 கோடி ரூபாய் பெறுமதியான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை பதுளை மாவட்டத்தில் உள்ள 68 தோட்டங்களிலும் மேற்கொண்டு வருவது நான் மாத்திரமே!

இத்தகைய அபிவிருத்திப் பணிகளை செய்வதற்கு நிதி ஒதுக்கீடு சாத்தியப் பட்டமைக்கு காரணம் ஜனாதிபதி ரணிலை சர்வதேசம் அங்கீகரித்துள்ளமையே. அவரை நம்பி கடன் கொடுப்பதற்கு சர்தேச நாடுகளும் தயாராக உள்ளன. அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நடைபெற்ற உலக வங்கியுடனான பேச்சுவார்த்தையில் நான் நேரடியாக அவரோடு இருந்தவன் என்ற ரீதியில் எனக்கு இதனை உறுதியாக தெரிவிக்க முடியும். 40 வருட அரசியல் அனுபவமும், ஐந்து வருட பிரதமர் அனுபவமும் அவருக்கு இருக்கிறது. மலையகத்தைப் பற்றி நாங்கள் அவருக்குச் சொல்லிக் கொடுக்க புதிதாய் எதுவும் இல்லை

மலையக காணியுரிமை மற்றும் புதிய கிராமங்கள் உருவாக்குதல் தொடர்பிலும் நாங்கள் அவருக்கு எடுத்துரைத்துள்ளோம். ' L போட்' ஒருவரை நாட்டின் ஜனாதிபதியாக்க முடியாது. இன்று எல் போட்டில் இருக்கும் பலர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். அவர்களை நம்பி நாட்டை வழங்கினால் நாங்கள் எங்களுடைய உரிமைகளையும் இழக்க நேரிடும்.

தற்சமயம் பிரச்சினைகள் நூறு வீதம் தீர்ந்து போனதாக நான் கூறவில்லை இருந்தபோதிலும் ஓரளவேனும் உழைத்து வாழக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நிச்சயமாக மலையகத்தில் பல்வேறு மாற்றங்கள் காலப்போக்கில் நிகழும். மலையக கல்வியில் புரட்சி ஏற்படும். இது தொடர்பில் ஜனாதிபதியிடம் ஏற்கனவே கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளோம்.

**சஜித் பிரேமதாச அரசாங்கத்துடன் இணைந்து நாட்டை மீட்க வேண்டும் என்ற உங்களைப் போன்ற பலரது எண்ணம் நிறைவேறாமல் போனமைக்கு என்ன காரணம் என நினைக்கின்றீர்கள்?**

வரட்டு கௌரவம்தான். நான் இப்போதும் கூறுகின்றேன், நாட்டை பற்றி சிந்தித்து, மக்களைப் பற்றி சிந்தித்து, சஜித் பிரேமதாச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஓர் அணியில் பயணித்தார் என்றால் இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாம் அனைவரும் மீண்டு வரக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும்.

**சில காலமாக நீங்கள் ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து பயணித்துக்கொண்டிருக்கின்றீர்கள். அந்தவகையில் மலையக மக்களின் காணி, வீட்டுப் பிரச்சினைகள் மற்றும் சம்பள பிரச்சினைகளில் உங்கள் ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டதாக நீங்கள் நினைக்கின்றீர்களா?**

பல தருணங்களில் என்னுடைய ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

**அப்படியானால் எந்தெந்த விதங்களில் என்று குறிப்பிடுங்கள்?**

என்னைப் போல ஜனாதிபதியுடன் பாராளுமன்றத்தில் வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்கள் வேறு எவரும் கிடையாது. மிக மோசமாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளேன். அதனை அனைவரும் அறிவார்கள். எங்கள் பிரச்சினையை முன்மொழிந்து ஒரு பேரம் பேசும் சக்தியாகவே ஜனாதிபதியிடம் நாம் முன்வைத்துள்ளோம். அழுத பிள்ளை தான் பால் குடிக்கும் என்ற ரீதியில் பேச வேண்டிய இடத்தில், கேட்க வேண்டிய இடத்தில் நம்முடைய குறைகளை கேட்க வேண்டும். அனைத்து இடங்களிலும் பொய்யாக பேசி அறிக்கைகளை விடுவதை விட, நடைமுறையில் சாத்தியப்படுத்த வேண்டும், பேச வேண்டிய இடத்தில் தெளிவாக கலந்துரையாடக் கூடிய மொழியில் என் மலையக தொப்புள்கொடி உறவுகளின் பிரச்சினைகளை நான் முன்வைத்துள்ளேன். அஸ்வெசும, காணிப் பிரச்சினை, தோட்ட நிர்வாகத்தின் பிரச்சினை என பல்வேறு தருணங்களில் என்னால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் ஜனாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**தோட்டத்தொழிலாளர்களின் 1700 ரூபாய் உண்மையாக அவர்களுக்குக் கிடைக்குமா? அப்படியானால் எப்போதுமுதல் அவர்களுக்குக் கிடைக்கும்?**

இப் பிரச்சினை தொடர்பாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டு அதற்கு பின்னர் நீதிமன்றத்திற்கு சென்று இன்று சமரசப் பேச்சுவார்த்தைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

1350 அடிப்படை சம்பளம். 350 ரூபாய் ஊக்குவிப்புத் தொகை என மொத்தமாக 1700 ரூபாய் என சம்பள நிர்ணய சபையின் ஊடாக அதிகரித்து முதல் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. 14 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்படவிருக்கின்றது. அப்பேச்சுவார்த்தை எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெறும். மூன்றாம் திகதி பேச்சுவார்த்தை நடைபெறும்போது தொழில் அமைச்சராக நான் தான் இருப்பேன்.

ஆகவே மூன்றாம் திகதி பேச்சுவார்த்தை நடைபெற்றால் செப்டெம்பர் அல்லது அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி சம்பளம் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது.

அதற்கு முன்னர் மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பில் சமரசப் பேச்சுவார்த்தை ஒன்றினை உடனடியாக நடத்துவதற்கு நாளை திங்கட்கிழமை பெருந்தோட்ட நிறுவனங்களை தொழில் அமைச்சுக்கு அழைத்துள்ளேன். பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை இழுபறி நிலைக்கு இட்டுச் செல்லாமல் உடனடியாக அதனை அதிகரிக்க கூடிய நடவடிக்கையையும் மேற்கொள்வதற்காகவே இப்பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

**இதிலும் 1350 / தான் அவர்களது அடிப்படைச் சம்பளம். மற்றையது அவர்கள் பறிக்கும் கொழுந்தின் அளவிற்கேற்பவே எனும்போது 1700 என்பது எல்லாத்தொழிலாளர்களுக்கும் சாத்தியமானதா?**

இவ்விடயம் தொடர்பான ஒரு பொறிமுறையும் என்னால் முன்மொழியப்படவுள்ளது. அது தொடர்பிலும் நாளை திங்கட்கிழமை தோட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடிய பின்னர் அதுபற்றி தெரிவிக்கின்றேன்.

**தற்போது நீங்கள் தொழில் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்றீர்கள். உங்கள் சமூக மக்களுக்காக உங்கள் பணிகளைச் செய்வதில் இந்நியமனம் உங்களுக்கு எவ்வாறு உதவியாக இருக்கும்?**

தொழில் அமைச்சர் என்ற ரீதியில் என்னுடைய முதல் வேலை தமிழ்மொழி அமுலாக்கமே. 100 வருடங்கள் கடந்த போதும் தமிழ்மொழி சார்ந்த எவரும் முக்கிய பதவிகளை வகிக்கவும் இல்லை, பொறுப்பேற்கவும் இல்லை. சரித்திரத்தில் முதல் தடவையாக இந்திய வம்சாவளி தமிழன் ஒருவருக்கு இப்பதவி இப்போது கிடைக்கப்பெற்றுள்ளது.

இது பாரிய அங்கீகாரம் ஆகும். வடிவேல் சுரேஷ் மாத்திரமல்ல எதிர்காலத்தில் எவரேனும் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இப்பதவிக்கு வரலாம் என்ற ஒரு வரலாறு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. என்னுடைய வயது தான் இந்த அமைச்சின் அனுபவம். என்னுடைய வேலைத்திட்டங்களை மிக விரைவாக செய்வதற்குரிய வாய்ப்பு எனக்கு கிட்டியுள்ளது.


இதற்கு கால அவகாசம் தேவையில்லை இரண்டு மூன்று நாட்களே போதும் என் வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு.

வாசுகி சிவகுமார் ...
















# பெரும்பாலான கட்சிகளின் ஆதரவு ஜனாதிபதி ரணிலுக்கே!



ஜனாதிபதி தேர்தலுக்குச் இன்னமும் இருப்பது 27 நாட்களாகும். 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புக்கு அமைவாக 1982ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தல் தொடக்கம் இன்று வரை இடம்பெற்றுள்ள ஜனாதிபதித் தேர்தல்களில் இரண்டு முக்கியமான ஜனாதிபதித் தேர்தல்களை எம்மால் நினைவு கூர முடியும். அந்த ஜனாதிபதித் தேர்தல்களில் ஒன்று 1988இல் இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு மத்தியில் இடம்பெற்ற இந்நாட்டின் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலாகும். 'வாக்களிப்பு நிலையத்தில் முதலில் வாக்களிப்பவருக்கு மரணம்' என நாடளாவிய ரீதியில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளால் நாடே எரிந்து கொண்டிருந்தது. எனினும் அந்தத் துப்பாக்கித் தோட்டாக்களுக்குக் கூட அஞ்சாமல் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களித்தனர். அந்த ஜனநாயக உரிமையை பறிக்கும் வகையில் அன்று அவ்வாறு செயற்பட்ட போதும் ரணசிங்க பிரேமதாச அந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மேல்மாகாண முதலமைச்சராக பதவி வகித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பமாகும். அதாவது 1994 ஆம் ஆண்டாகும். அந்த நேரத்தில் அவர் நிச்சயமாக வெற்றி பெறுவார் என்பதற்கு தெளிவான சான்றுகள் இருந்தன.

ரணசிங்க பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் வெற்றிடமான ஜனாதிபதி பதவிக்குத் தெரிவான ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க ஒரு வருடத்திற்கும் மேலாக ஜனாதிபதியாக பதவி வகித்துவந்ததோடு, அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி காமினி திஸாநாயக்கவை ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியமித்திருந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியிருந்த நேரம் தொட்டலங்க குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார். அதன் பின்னர் அந்த வெற்றிடத்துக்கு காமினி திசாநாயக்காவின் மனைவியான ஸ்ரீமா திசாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக்கியமை அதன்போது இடம்பெற்ற சுட்டிக்காட்டத்தக்க மாற்றமாகியது. நிறைந்த அனுபவங்களைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க போன்றோர் கட்சியினுள் இருக்கும் போது அன்று எவ்வித அரசியல் அறிவோ அனுபவமோ இல்லாத வேட்பாளர் ஒருவரை நிறுத்தியதால் அங்கு போட்டி இருக்கவில்லை. கடைசியில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, அளிக்கப்பட்ட வாக்குகளில் 62.28% வாக்குகளைப் பெற்று சாதனை படைத்தார். ஸ்ரீமா திஸாநாயக்கவினால் 35.91% வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. ஜனாதிபதி ஒருவர் அதுவரை பெற்ற வாக்குகளில் அதிகூடிய சதவீத வாக்குகள் அந்த ஜனாதிபதித் தேர்தலில் பதிவாகியிருந்தன.

இவை ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முக்கியமான இரண்டு சந்தர்ப்பங்களாகும்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தற்போது எம்மை எதிர்கொண்டுள்ளது. இந்த ஜனாதிபதி தேர்தலும் தனித்துவமானதாகும். இம்முறை ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுவதும் (ஒரு வேட்பாளர் கடந்த வெள்ளிக்கிழமை மரணமடைந்தார்), வரலாற்றில் முதல் தடவையாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதுமாகும். இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் நான்கு வேட்பாளர்கள் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளனர். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய நால்வரே அவர்களாகும். இவர்களிடையே யாருக்கு பெரும்பான்மை ஆதரவு உள்ளது என்பது குறித்து கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டும்.

சபாநாயகரைத் தவிர, நாடாளுமன்றம் 224 ஆசனங்களைக் கொண்டுள்ளது. அதில் தேசிய மக்கள் சக்திக்கு 3 ஆசனங்கள் உள்ளன. அதுதான் கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் அவர்களுக்கு வழங்கிய ஆணை. நாட்டு மக்களில் 3 சதவீதமானோரின் ஆதரவே அவர்களுக்கு கிடைத்துள்ளது என அன்று முதலே சமூகத்தில் பேசப்படுவதும், இன்றும் 3% கட்சி என்று அவர்கள் அழைக்கப்படுவதும் அதனாலாகும். அதன் வேட்பாளர் அனுர குமார திஸாநாயக்கவுக்கு பாராளுமன்றத்தில் வேறு எந்தக் கட்சியினதும் ஆதரவு கிடைக்கவில்லை.

அதன்பிரகாரம் அவர் 3 பாராளுமன்ற ஆசனங்களுடன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவாகும். அவர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் என்ற போதிலும், பொதுஜன பெரமுனவின் 145 பாராளுமன்ற உறுப்பினர்களில் 23 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மாத்திரமே தற்போது அவருக்குள்ளது.

அவர்களுள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோரைத் தவிர, மக்கள் அதிகம் கவனம் செலுத்தாத ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமா எனபதும் சந்தேகமே.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாசவின் கட்சியில் 54 எம்.பி.க்கள் இருந்த நிலையில் தற்போது 14 எம்.பி.க்கள் கட்சியை விட்டு வெளியேறியுள்ளனர்.

கட்சியின் தலைவராக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி தேர்தலில் தனித்து போட்டியிடுவதோடு, கட்சியின் பலமான ஆளுமையாக இருந்த தலதா அத்துகோரளவும் அண்மையில் பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்து கட்சியை விட்டு விலகியுள்ளார். அத்துடன் அந்தக் கட்சியில் இருந்த சுமார் 10 எம்.பி.க்கள் ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தச் சென்றுள்ளனர்.

14 ஆம் பக்கம் பார்க்க

எம். எஸ். முஸப்பிர்

# இந்தியப் பிரதமரின் உக்ரைன் விஜயமும் இராஜதந்திர அரசியலும்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போர் இரண்டு ஆண்டுகளைக் கடந்து நகர்ந்துகொண்டிருக்கிறது. தற்போது ரஷ்யாவுக்குள் ஊடுருவி தாக்குதலை மேற்கொள்ளும் உக்ரைன் அதிக ஆதரவையும் வெற்றிகளையும் தனதாக்கியுள்ளதாக வெளிப்படுத்த முயற்சிக்கிறது. இதனை மேற்கு ஊடகங்களும் முதன்மைப்படுத்தி வருகின்றன. ஆனால் போரில் எப்போதும் திறன்களையும், ஆயுத பலத்தையும் கடந்து தந்திரங்களும், நுட்பங்களும் போரின் முடிவுகளைத் தரக்கூடியன. இது ஓர் அரசியல் நோக்கத்தை அல்லது அரசியல் இராணுவப் பரிமாணத்தை தேடிகொடுக்கக் கூடியதாக அமைந்துவிடுவதுண்டு. ரஷ்யாவுக்கு அத்தகைய வரலாற்று ரீதியான அனுபவங்கள் உண்டு. ஆனால் தற்போது ரஷ்யா எதிர்கொள்ளுகின்ற பிரதான எதிரியான உக்ரைன், ரஷ்யாவின் அயல் நாடு என்பதும் சகோதரத்துவ தேசம் என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியது. இந்தச் சூழலுக்குள் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, 23.08.2024 அன்று போலந்திலிருந்து ரயில் பயணம் மூலம் உக்ரையின் தலைநகரான கீவ்வை சென்றடைந்துள்ளார். இரு தலைவர்களும் சந்தித்ததன் அரசியல் விளைவுகளைத் தேடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகவுள்ளது.

இவ் விஜயமானது, சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு உக்ரைனுக்கு இந்தியத் தலைவர் சென்றிருக்கும் முதல் விஜயமாக பார்க்கப்படுகிறது. ரஷ்ய – உக்ரைன் யுத்தத்திற்கு முடிவை எட்டும் பயணமாக இது அமையக்கூடும் என்ற அரசியல் விமர்சனங்களும் இது சார்ந்து காணப்படுகின்றன. உக்ரைன் சுதந்திரதினத்தை முன்னிட்டு சந்திப்பை நடத்தும் நரேந்திரமோடி அணியானது போர்நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் தன்மயாலால் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது உக்ரைனுக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பிரதமர் கடந்த மாதம் ரஷ்யாவுக்கும் விஜயம் செய்திருந்தார். அப்போது எழுந்த விமர்சனங்களும், உரையாடப்பட்ட அம்சங்களும் அதே பாணியில் உக்ரைன் ஜனாதிபதியோடும் நரேந்திரமோடியால் பகிரப்பட்டுள்ளது. போரினால் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்றும் சமாதானத்தின் ஊடாகவோ அல்லது பேச்சுவார்த்தையின் மூலமாகவோ மட்டுமே இப்பிரச்சனைக்குத் தீர்வுகாணமுடியும் என்றும் கடந்தமாதம் தெரிவித்த அதேவிடயங்களை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கும் தெரிவித்துள்ளார். அதனால் அவரது விஜயம் இரு நாடுகளுக்கு மிடையில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உத்திகளைக் கொண்டிருக்கின்றது என சர்வதேச விமர்சனங்கள் மேலெழுந்திருக்கின்றன. இதேசமயம் உக்ரைன் மீது ஐக்கிய நாடுகள் சபை குற்றச்சாட்டுகளை போர் நிமிர்த்தமும், போர்க்கைதிகள் பராமரிக்கப்படுவது நிமிர்த்தமும் முன்வைத்துள்ளது. எனவே இத்தகைய சூழல் உக்ரைன் ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்குமிடையே முக்கியமான சந்திப்பாக அமையக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளமையை ஆழமாகத் தேடுதல் அவசியமானது.



முதலாவது, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் விஜயம் போலந்துக்கு பின்னர் உக்ரையினை நோக்கி நகர்ந்திருப்பது முக்கியத்துவம் கொண்டது. உக்ரைன் ஜனாதிபதியை சந்தித்தபோது இந்தியப் பிரதமருடைய வெளிப்பாடும் அதிக பேசுபொருளாக மாறியுள்ளது. காரணம் ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்தபோது அவர் வெளிப்படுத்திய அதேமாதிரியான உணர்வுகள் சார்ந்த, நேசிப்புச் சார்ந்த வெளிப்பாடொன்றை உக்ரைன் ஜனாதிபதியோடு வைத்துக்கொள்ளவில்லை என்பது கவனத்திற்குரிய விடயமாகும். இது இந்தியாவுக்கு ரஷ்யாவுடனான நட்பையும், அதன் முக்கியத்துவத்தையும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் கருத்தில் கொண்டதாகவே தெரிகின்றது. இதனை சர்வதேச ஊடகங்களும் கோடிட்டுக் காட்டியுள்ளன.

இரண்டாவது, இந்தியப் பிரதமர் உக்ரேனுக்கான தனது பயணத்தை முதன்மைப்படுத்துகின்போது குறிப்பாக ரஷ்யாவுக்கும் உக்ரையினுக்குமான போரை சமாதான பூர்வமான அணுகுமுறையூடாக நிறைவுசெய்யவேண்டும் என்பதில் கவனம் கொண்டிருந்தார். அதற்கான வெளிப்பாடுகளை போலந்தில் வைத்தே தெரிவித்திருந்தார். அவரது விஜயத்தின் பிரதான நோக்கம் பிராந்திய அடிப்படையில் இரு நாடுகளுக்குமிடையில் நிகழ்கின்ற போரை முடிவுக்கு கொண்டுவருகின்ற முயற்சியின் வெளிப்பாடாக அமைந்திருப்பதைக் இதனூடாக கண்டுகொள்ளமுடியும். இந்தியப் பிரதமர் தெளிவாக சமாதானத்துக்கான வாய்ப்புகளை உக்ரைன் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி புடினோடு உரையாடியபோது தெரிவித்த அதே கருத்துக்களை மீளவும் உக்ரைன் ஜனாதிபதியின் முன்னிலையில் வெளிப்படுத்தியிருப்பது இரு தலைவர்களுக்குமிடையிலான முரண்பாட்டைத் தீர்த்துக்கொள்கின்ற விதத்தில் நகர்வதாகவே தெரிகிறது.

மூன்றாவது, இந்தியாவைப் பொறுத்தவரை இந்திய ரஷ்ய உறவு வலுவான ஒன்று என்பதை போர் தொடங்கிய காலத்திலிருந்து வெளிப்படுத்தியுள்ளது. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி மூன்றாவது தடவையாக ஆட்சிக்கு வந்த சந்தர்ப்பத்தில் அத்தகைய உறவை மேலும் பலப்படுத்துகின்ற உத்திகளில் அதிகம் ஈடுபாடு காட்டியிருந்தார். தற்போதுகூட ரஷ்ய விஜயத்துக்குப் பின்னரே உக்ரைனுக்கு அவரது விஜயம் அமைந்திருந்தது. ஏறக்குறைய ரஷ்ய ஜனாதிபதி புடினது கருத்துக்களை அல்லது எண்ணங்களை பிரதிபலிக்கும் விதத்தில் உக்ரைனுக்கான விஜயத்தை நரேந்திரமோடி திட்டமிட்டிருக்கிறார் என்பதை புரிந்துகொள்ளுதல் வேண்டும். இதன் உள்ளார்ந்த அர்த்தமாக இராஜதந்திர செய்முறையென்பது அதன் நடத்தையிலும், வெளிப்படுத்துகின்ற தகவல்களிலும் அதற்காக கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் அளவீடு செய்யப்படவேண்டும். அத்தகைய அளவீட்டுக்குள் இந்தியா ரஷ்யாவுக்கிடையிலான நெருக்கமான உறவை மேலுமொரு தடவை உலகத்துக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மேற்கு நாடுகள் உத்திகளை வகுத்து இந்தியாவை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் ரஷ்யாவோடு இந்தியா தனது நெருக்கத்தைக் காட்டுவதென்பது தவிர்க்கமுடியாத புவிசார் அரசியல் நியதியைக் கொண்டது என்பதை இந்தியப் பிரதமரது உக்ரைன் விஜயம் உணர்த்துகின்றது.

நான்காவது, இந்தியப் பிரதமரது உக்ரைன் விஜயம், உக்ரேனுக்கான அல்லது மேற்குலகத்திற்கான அணுகுமுறையாக அல்லது அதன் பிரதிபலிப்பாக எழுந்த ஒன்று எனக் குறிப்பிடுவதைவிட ரஷ்யாவின் இலக்குகளை, நோக்கங்களை வெளிப்படுத்துகின்ற நோக்கோடு நரேந்திரமோடியின் விஜயம் அமைந்துள்ளது என்பதே சிறந்தது. இதனை புரிந்துகொள்வதற்கு அதனுடைய முக்கியத்துவம் சார்ந்தும், உரையாடப்பட்ட விதம் சார்ந்தும் நரேந்திரமோடி ஜெலன்ஸ்கியை சந்தித்தபோது வெளிப்படுத்தப்பட்ட உடல்மொழி சார்ந்தும் பொருள் கொள்தல் சரியானது.

நரேந்திரமோடிக்கும் புடினுக்கும் இடையிலான சந்திப்பின் உடல் மொழியையும், உக்ரைன்ஜனாதிபதியுடனான சந்திப்பின் உடல் மொழியையும் கவனத்தில் கொள்வது மிக முக்கியமானது. இத்தகைய இராஜதந்திர செய்முறை ஒரு வலுவான பிராந்தியச் சூழலையும், கீழைத்தேச அரசியல் சூழலையும் வெளிப்படுத்தியிருக்கிறது. கீழைத்தேச நாடுகள் அல்லது கீழைத்தேச ஏகாதிபத்தியங்கள் தமக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதில் கவனம் கொள்ளுகின்றனர் என்பதே இதன் வெளிப்பாடாகத் தெரிகிறது.

எனவே நரேந்திரமோடியின் உக்ரைன் பயணம் அரசியல், இராணுவ ரீதியான முக்கியத்துவத்தைக் கொண்டது. உக்ரைனுடைய ஊடுருவல் தாக்குதல் ரஷ்யாவுக்குள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றபோது இந்த விஜயத்தினுடைய முக்கியத்துவம் அதிகமான அரசியல் வெளிப்பாடுகளையும், இராஜதந்திர உத்திகளையும், இராணுவ ஒழுங்கு முறையில் நிலவக்கூடிய மாற்றங்களையும் தெரிவிப்பதாகவே அமைந்திருக்கின்றன.




# ஈழத்தில் பா நாடகங்களுக்கு வித்திட்ட முருகையன்



ஈழத்து நவீன கவிஞர்கள் நாடகத்துறையில் 1950 ஆம் ஆண்டுகளில் ஈடுபடத் தொடங்கிய பின்னரே இங்கு பா நாடகம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு நாடக வகையாக வளர்ச்சியடைந்தது. ஆகவே ஈழத்துப் பா நாடக வளர்ச்சி 50ஆம் ஆண்டுகளிலிருந்து தொடங்குவதே பொருத்தமாகத் தோன்றுகிறது. திருச்சிக் கவிஞர் கலைவாணனின் 'மணல்வீடு' என்ற கவிதை நாடகத்தைக் கேட்ட சூட்டோடு சூடாக 1953இல், தான் எழுதிய 'நித்திலக் கோபுரம்' என்பதே இலங்கையில் முதல் முதலில் எழுந்த பாநாடகம் என்று முருகையன் கூறுவதற்கும் இதுவே காரணம் ஆகலாம். இவ்வகையில் பார்த்தால் முருகையனே ஈழத்துப் பா நாடகத் துறையின் முன்னோடி எனலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், ஞானம் சஞ்சிகை நூறாவது இதழில் எழுதிய ஈழத்துப் பா நாடகங்கள் என்ற கட்டுரையில்.

முருகையனின் நித்திலக்கோபுரம் வானொலியில் ஒலிபரப்பாகியது. மேடையை விட, பா நாடகங்களுக்கு வானொலி மிக வாய்ப்பான ஒரு சாதனம் எனலாம். வானொலி நாடகத்துக்கு மேடைக்குரிய காட்சிப்படிமங்கள் அவசியமில்லை. ஒலிப்படிமங்களையே அது அடிப்படையாகக் கொண்டது. மேடைச் சிக்கலிலிருந்து அது கவிஞர்களுக்கு விடுதலை வழங்குகிறது.

1936ஆம் ஆண்டிலே சோமசுந்தரப்புலவர் இயற்றிய 'உயிர் இளங்குமரன்' நாடகம் வெளிவந்தது. இடையிடையே வசன நடையில் உரையாடல்கள் இடம் பெற்றிருப்பினும் பிரதானமாக இது ஒரு பா நாடகமே. சைவசமயக் கருத்தை விளக்குவதற்கு எழுந்த இந்நாடகமே ஈழத்தில் மேடையேற்றப்பட்ட முதலாவது பா நாடகமாகும்.

1960களில் ஈழத்துப்பா நாடக உலகில் ஒரு புதிய பண்பைக் காண்கிறோம். மேடைக்காகத் திட்டமிட்டு நாடகம் எழுதும் முயற்சியே அது. உயிரிளங்குமரனுக்குப் பிறகு ஈழத்திலே மேடையேறிய பா நாடகம் முருகையனின் 'குற்றம் குற்றமே' என்பதாகும். கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் இடம்பெற்ற முற்போக்கு எழுத்தாளர் சங்க மகாநாட்டில் இறுதி நிகழ்ச்சியாக இந்நாடகம் மேடையேற்றப்பட்டது.

கல்வயல் கிராமத்தில் 23.04.1935இல் முருகையன் பிறந்தார். இவரது தந்தையார் இராமுப்பிள்ளை ஒரு புகழ்பெற்ற தமிழாசிரியர். தாயார் பெயர் செல்லம்மா. இவருடன் கூடப்பிறந்தவர் நாடக வல்லுனரும் கவிஞருமான சிவானந்தன்.

முருகையன் தனது ஆரம்பக் கல்வியை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றவர். உயர்கல்வியை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பெற்று 1956இல் விஞ்ஞானப் பட்டதாரி ஆனார். 1961இல் லண்டன் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1985இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1956முதல் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிய முருகையன் பின்னர் அரச மொழித் திணைக்களத்தில் அறிவியல் பாடநூல் மொழிபெயர்ப்பாளராகவும், தமிழ்மொழிப் பாடநூல் திணைக்களத்தில் முதன்மைப் பணிப்பாளராகவும், 1978 1983 காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் 1984 முதல் முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றி இறுதியாக 1986இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதுணைப் பதிவாளராகப் பணியாற்றினார். 1995இல் ஓய்வுபெற்றார். அதன்பின்னர், 2002வரை பல்கலைக்கழக தமிழ்த்துறையில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றினார். கவிதையின் மூலம், இலக்கியப் பிரவேசம் செய்த முருகையன் மேடைப் பா நாடகங்கள், வானொலிப் பா நாடகங்கள், மொழி பெயர்ப்பு, காவியங்கள், விமர்சனம், கட்டுரை, பாடலாக்கம் எனப் பல்வேறு துறைகளில் தடம் பதித்தவர்.

முருகையன் ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றைத் தமிழிலும் தமிழ்க் கவிதைகள் சிலவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

1950முதல் எழுதத் தொடங்கிய முருகையன் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியவாதம், மொழிஉணர்வு சார்ந்த கவிதைகளை எழுதினார். அறுபதுகளில் இருந்து சோஷலிசக் கருத்து நிலையில் தனது படைப்புக்களை வெளிக்கொணர்ந்தார். இக்கால கட்டத்தில் இவர் படைத்த அநேகமான படைப்புக்களில் முற்போக்குக் கருத்து நிலையின் செல்வாக்குப் பொதிந்திருந்தது. எண்பதுகளுக்குப் பின்னர் அவரது அநேகமான கவிதைகள் யுத்தகால, இராணுவ ஒடுக்குமுறைகள் பற்றியதாக அமைந்தன. முருகையன் ஒரு மரபுவழிக்கவிஞர்.

இவரது முதலாவது நூல் 'ஒரு வரம்" (1964) பன்னிரண்டு ஆங்கிலக் கவிஞர்களின் மொழிபெயர்ப்புத் தொகுப்பாகும். நெடும் பகல் காவியம் (1967), ஆதி பகவன் காவியம் (1978), அதுஅவர்கள் நீண்ட கவிதை (1986), மாடும் கயிறு அறுக்கும் (1990), நாங்கள் மனிதர் (1992), ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (2001) என்பன அவரது கவிதை நூல்களாகும். இவருடைய கவிதைகள் தனிக்கவிதை, நெடும்பாட்டு, பாநாடகம் என்ற மூன்று வகையாகக் காணப்படுகின்றன. புதுக்கவிதையை வெறுத்து மரபுக் கவிதையை விரும்பும் இக்கவிஞரின் ஒவ்வொரு கவிதையிலும் ஒலி நயமும், கலையம்சமும், சமுதாயப் பயன்பாடும் இருக்கும். பேராசிரியர் க. கைலாசபதி இவருடைய பாடசாலை நண்பன். இருவரும் சேர்ந்து 'கவிதைநயம்" என்னும் நூலை எழுதி வெளியிட்டனர். நண்பர் மஹாகவியுடன் (உருத்திர மூர்த்தி) இணைந்து 'தகனம்" என்ற காவிய நூலையும் எழுதினார். 'தகனம்" நூலுருப் பெறவில்லை.

மேடைக் கவிஞருக்குத் களமமைத்து தலைமைக் கவிஞராகக் கவிதை படிப்பதுடன் இளங்கவிஞர்களுக்கும் களமமைத்துக் கொடுத்தார். இதனால் பல இளங்கவிஞர்கள் உருவாக்கப்பட்டனர்.

முருகையன் எழுதிய முதல்நாடகம் சிந்தனைப்புயல் என்பதாகும். இந்நாடகம் இந்துக்கல்லூரியில் இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எழுதியது. அதிலே இவரே கதாநாயகியாக நடித்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பின்னர் இவர் ஒரு கவிதை நாடகத்தை வானொலிக்காக எழுதினார். முதன்முதலில் இவர் எழுதிய நித்திலக்கோபுரம் (1953) நாடகத்தை தயாரித்தவர்கள் வானொலிக்காரர்கள்தான். அந்த ஊக்கத்தில் இவர் தொடர்ந்து சில வானொலி நாடகங்களை எழுதினார். பின்பு காலப்போக்கில் மேடை நாடகங்களை எழுதும் நாட்டம் இவருக்கு ஏற்பட்டது.

இலங்கையில் அதிகமான பா நாடகங்களை எழுதியவர் முருகையனே.

இவரது கடூழியம், அப்பரும் சுப்பரும் (1971) ஆகிய மேடைநாடகங்கள் மிக முக்கியமான அரசியல் நாடகங்கள் எனக் கருதப்படுகின்றன.

கடூழியம் மார்க்சிய கருத்து நிலையில் எழுதப்பட்ட நாடகமாகும். இந்த இரண்டு நாடகங்களும் முற்போக்கு எழுத்துக்கு உதாரணமாக விளங்கும் மேடை நாடகங்களாகும். இவைதவிர பொய்க்கால், குற்றம் குற்றமே ஆகிய மேடை நாடகங்களையும் இவர் படைத்துள்ளார்.

இவர் எழுதிய பா நாடக நூல்களாக, வந்து சேர்ந்தன,(1965) தரிசனம், உண்மை, (மொழிபெயர்ப்பு 2002) கோபுர வாசல், (1969) மேற்பூச்சு, (1995) வெறியாட்டு, (1989) சங்கடங்கள்(2000) ஆகியன வெளி வந்துள்ளன.

மேடைநாடக நூல்களாக கடூழியம், அப்பரும் சுப்பரும் (1971) ஆகியன வெளிவந்துள்ளன.

முருகையன் எல்லாமாக 24 நாடகங்களை எழுதியுள்ளார். அவையாவன நித்திலக்கோபுரம், அந்தகனே ஆனாலும், வந்து சேர்ந்தன, தரிசனம், கோபுர வாசல், கடூழியம், செங்கோல், கலைக் கடல், கொண்டுவா தீயை கொளுத்து விறகை எல்லாம், சுமசும மகாதேவா, அப்பரும் சுப்பரும், கந்தப்ப மூர்த்தியர், வழமை, அந்தகனே ஆனாலும், இடைத்திரை, குனிந்ததலை, வெறியாட்டு, பொய்க்கால், குற்றம் குற்றமே, தந்தையின் கூற்றுவன், இரு துயரங்கள், கலிலியோ, உயிர்த்த மனிதர் கூத்து, எல்லாம் சரிவரும், என்பனவாம்.



கவிஞர் முருகையனின் ஆங்கிலப்புலமை அசாத்தியமானது. ஷேக்ஸ்பியர் என்னும் சிறப்பிதழை இவர் வெளியிட்டுள்ளார். யாழ். பட்டதாரி மாணவர்களுக்கு 'மொழி பெயர்ப்பு நுட்பம்" பற்றி விரிவுரைகள் ஆற்றியுள்ளார். அவ்விரிவுரைகள் அனைத்தும் அதே பெயரில் நூலுருப் பெற்றுள்ளன.

இலங்கை அரச மொழிகள் திணைக்களத்தில் பணியாற்றிய முருகையன் தமிழ் கலைச்சொல்லாக்கத்திற்குக் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார்.

ஒருசில விதி செய்வோம், இன்றைய உலகில் இலக்கியம் ஆகிய திறனாய்வு நூல்களையும் முருகையன் எழுதியுள்ளார். 'திருவெம்பாவையர்" இவர் எழுதிய உரை நடைச் சித்திர நூலாகவும், இளநலம் (வடமொழி குமார சம்பவத்தை ஒட்டியது), மொழிபெயர்ப்பு நுட்பம் ஆகிய கட்டுரை நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

இவற்றைவிட முந்நூறுக்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகம் இவரது இலக்கியப் பணியினைப் பாராட்டி கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது. அரச உயர் விருதான சாஹித்யரத்னா விருது இவருக்கு 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

முருகையன், தனது 74ஆவது வயதில் 27.06.2009 அன்று அமரரானார்.

# ஒஸ்லோவில் புதுமை நிறை அரங்கேற்றம்



இதிகாசக் கதாபாத்திரங்களை மீள் வாசிப்புச் செய்யும் வகையில் பாடல்களை உருவாக்கி, அதற்கான நடன உருப்படிகளையமைத்துத் தமிழ் மரபோடு இணைந்த அரங்கேற்றமொன்றை நடன ஆசிரியர் கவிதாலக்ஷ்மி நோர்வேயில் நிகழ்த்தியிருந்தார். இருபது வருடங்களுக்கு மேலாக மாணவர்களுக்கு பரதக்கலையையும் இலக்கிய நுட்பங்களையும் போதித்து வரும் இவரது அரங்கேற்றங்கள் எப்போதும் பார்வையாளர்களைக் கவர்வதுடன் சிந்தனைக்கும் வலுச் சேர்ப்பனவாக இருக்கும். இவர், பன்முக ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டவர். நடன ஆசிரியர் என்பதற்கு அப்பால் நடன இயக்குனர், கவிஞர், எழுத்தாளர், கட்டுரையாசிரியர், ஓவியர். இலக்கியப் புலமையாளரெனப் பரந்த அறிவு நோக்கித் தன்னை வளப்படுத்தியுள்ளார்.

கலாசாதனா கலைக்கூட நிர்வாகியாகவும் திகழும் கவிதாலக்ஷ்மியின் மாணவிகள் ஹறிணி நகுலேஸ்வரதாஸ், தீபிகா மகேசன் இருவருமே 17.08.2024 அன்று மாலை 5.00 மணிக்கு நோர்வே ஒஸ்லோ *Sandvika Teater* இல் ''தீதும் நன்றும்'' எனும் பரதநாட்டிய அரங்கேற்றத்தை நிகழ்த்தினர். அன்றைய பொழுதைக் கலைப் பொழுதாக்கி கண்களுக்கும் மனதுக்கும் இரசனைப் பொழுதாக அமைத்துத் தந்த ஆடலரசிகள் இருவரும் ஆசிரியருடன் சேர்ந்து பாராட்டுதல்களுக்குரியவர்களாவர்.



அலாரிப்புத் தொடக்கம் தில்லானா வரை தமிழ் இலக்கியம் உயிர் பெற்றிருந்தது. அலாரிப்பின் போது மூன்று திருக்குறட்பாக்களை ஆடலரசிகள் இருவரும் அபிநயித்திருந்தனர். தொடர்ந்து தாடகை, கூனி, இராவணன், பாஞ்சாலி, சூர்ப்பனகை, சிகண்டி, சகுனி என இதிகாசக் கதாபாத்திரங்களை அவர்தம் இயல்பில் நின்று தர்க்கரீதியான அவர்களது நியாயங்களை உணர்த்தும் வகையில் கவித்துவம், கதையாடல் மிக்கதாக வர்ணம், பதம், கீர்த்தனம் போன்றன அமைந்தன. நடனத்துக்குரிய பாடல்களை ரூபன் சிவராஜா, உமாபாலன், கவிதாலக்ஷ்மி ஆகியோர் யாத்திருந்தனர். தில்லானா நடன உருப்படி, கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' எனும் செய்யுள் வரிகளை அபிநயிப்பதாக அமைந்திருந்தது.

குரு தந்த அறிவை அப்படியே உள்வாங்கி இந்த அரங்கில் வெளிப்படுத்தி குருவுக்கும் சபைக்கும் களிப்பையும் பெருமிதத்தையும் கொடுத்ததில் ஆடலரசிகள் ஹறிணி, தீபிகா இருவரதும் கெட்டித்தனம் தெரிந்தது. பாவத்துடன் கூடிய அபிநயங்கள் எங்கள் கண்களைப் பரவசப்படுத்தின. ஒவ்வொரு கதாபாத்திரங்களாக மாறி இருவரும் நிகழ்த்திய கச்சிதமான நடன அசைவுகள் நாட்டிய நாடகத்தைப் பார்க்கும் உணர்வினைத் தந்தன. புதுமைகள் நிறைந்திருந்த அரங்கேற்றமாக விளங்கிய காரணத்தால் அரங்கேற்றம் இன்னொரு பரிமாணம் பெற்றிருந்தது.

கலை என்பது ஒரு யோகம் என கலாஜோகி கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி குறிப்பிடுவார். யோகம் என்பது சித்தத்தை அதாவது மனதை விருத்தி செய்வது. மனம் விருத்தி பெறும் போது வாழ்வின் அனைத்து விடயங்களிலும் சிறப்பாக இயங்கக் கூடியவர்களாக விளங்குவர். இது ஆடலரசிகள் இருவருக்கும் பொருந்தும். நடனத்தோடு ஒன்றியிருந்த சபை, கரகோசம் எழுப்பித் தங்களது வியப்பையும் பாராட்டுதல்களையும் வழங்கியது.

பக்கவாத்தியக் கலைஞர்களாக வாய்ப்பாட்டு ஹறிகரன் சுயம்பு, மிருதங்கம் பிரசாந் பிரணவநாதன், வயலின் அதிசயன் சுரேஷ், வீணை சௌமியா ராமச்சந்திரன், நட்டுவாங்கம் கவிதாலக்ஷ்மி ஆகியோர் அமர்ந்திருந்து நேர்த்தியாகத் தங்களது பணியைச் செய்தமையால் மேலும் சிறப்புப் பெற்றிருந்தது. சிறப்புரையை மாதவி சிவலீலன் இலண்டனில் இருந்து வந்து வழங்கினார். நிகழ்ச்சித் தொகுப்பை கவிஞர் இளவாலை விஜேந்திரன் கலாசாதனா கலைக்கூட மாணவிகள் இணைந்து திறன்பட அமைத்திருந்தார். ஆரம்ப சலங்கை பூசை தமிழில் அர்ச்சகர் சிவாஜினி ராஜனால் நடாத்தப்பட்டது. அனைத்தும் செம்மையுற அமைய பக்கத்துணை நின்ற பெற்றோர்கள் போற்றுதற்குரியவர்களாவர். ஆடலரசிகள் இருவரதும் கலைப் பயணம் அழகுற அமையும் என்பதற்கு இந்த அரங்கேற்றம் முத்தாய்ப்பாக விளங்கியது.

**மாதவி சிவலீலன்**

# ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வெல்வது என் வாழ்வின் இலட்சியம்!

## தாய்லாந்தில் நடைபெற்ற தெற்காசிய WUSHU boxing போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற சாதனை வீரர் கம்பளை சுதாகரன் கூறுகிறார்

தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய 'வூசு' (WUSHU) போட்டியில் கம்பளையைச் சேர்ந்த கணேசன் சுதாகரன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்திருந்தார்.

கம்பளையைச் சேர்ந்த அதிபர்களான கணேசன் புவனேஸ்வரி தம்பதியினரின் இரண்டாவது புதல்வர் சுதாகரன் ஈட்டிய கடல் கடந்த ஆசிய சாதனை தொடர்பாக பலரும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

இந்த சர்வதேச சாதனை காரணமாக இலங்கை வான்படையில் அவருக்கு தொழிலும் கிடைத்துள்ளது.

சுதாகரனின் தந்தை தங்கையா கணேசன் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 1991/92 காலப்பகுதியில் விஞ்ஞான பயிற்சி ஆசிரியராக இருந்தவர். தற்பொழுது புசல்லாவை சரஸ்வதி மத்திய கல்லூரி அதிபராக இருக்கிறார். அவரது புதல்வரின் இந்த சர்வதேச சாதனையை பாராட்டும் முகமாக மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 91/ 92 புலன அணியினர் அதன் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் அண்மையில் கம்பளைக்கு சென்று அவரது இல்லத்தில் பாராட்டை நிகழ்த்தினர்.



இலங்கை வான்படையில் பணியாற்றும் மிக இளவயது(22) தமிழ் இளைஞரான கணேசன் சுதாகரன் மும்மொழியிலும் தேர்ச்சி பெற்றவராவார்.

கம்பளையில் உள்ள தனது இல்லத்தில் வைத்து அவர் தினகரனுக்காக மனம் திறந்து பேசினார்.

**கேள்வி: தங்கள் ஆரம்பகாலம் பற்றிக் கூறுங்கள்?**

பதில்: நான் கம்பளையில் பிறந்தேன். எனக்கு வயது 22. எனது தந்தையார் புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி அதிபர் ஆவார். தாயார் புவனேஸ்வரி. மாவத்துறை கலைமகள் வித்தியாலய அதிபராக இருக்கின்றார். எனக்கு ஒரு தங்கையும் தம்பியும் இருக்கின்றார்கள்.

**கேள்வி: தங்களது கல்வி நிலை பற்றிக் கூறுங்கள்?**

பதில்: நான் ஆரம்பக் கல்வியை கம்பளை இந்துக் கல்லூரியில் பயின்றேன். பின்னர் ஆறாம் தரத்திலிருந்து உயர்தரம் வரை கண்டி கன்னொறுவை றணவிம றோயல் கல்லூரியிலும் பயின்றேன். அப்பொழுது எனக்கு தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய வூசு போட்டியில் கலந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் இலங்கையிலிருந்து 14 பேர் அங்கு சென்றிருந்தோம். அங்கு எனக்கு முதலிடம் கிடைத்தது. தங்கப்பதக்கமும் கிடைத்தது. அதைத் தொடர்ந்து இலங்கை வந்த போது அரசாங்கமும் எமது சமூகமும் பெரிய வரவேற்பளித்தன. அவை என்னை பெரிதும் ஊக்கப்படுத்தின.

அதன் பின்னர் இலங்கை வான்படைக்கு விண்ணப்பித்தேன். அங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்த பொழுதிலும், 200 பேர் தெரிவானார்கள். அவர்களுள் தமிழரான நானும் தெரிவு செய்யப்பட்டேன். அதற்கு எனது தங்கப்பதக்கம் பெரிதும் உதவியது. *Aircraft man* என்கின்ற பதவியில் நான் இருக்கின்றேன். இலங்கை வான்படை அணிக்காக விளையாடுகிறேன். அத்துடன் பயிற்சியிலே ஒரு பயிற்றுவிப்பாளராகவும் (coach) கடமை ஆற்றுகின்றேன். நான் ஏற்கனவே அகில இலங்கை வூசு போட்டிக்கான பயிற்றுவிப்பாளராக பயிற்சி பெற்று அதற்கான பரீட்சையில் சித்தி பெற்று பயிற்றுவிப்பாளர் அனுமதி (licence)பெற்றிருக்கின்றேன் .



**ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றெடுப்பதே தனது வாழ்வின் எதிர்கால இலட்சியம் என்று தாய்லாந்தில் நடைபெற்ற வூசு (WUSHU) என்ற boxing போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற கம்பளை வீரர் கணேசன் சுதாகரன் தெரிவித்தார்.**

**கேள்வி: தங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?**

பதில்: எனது எதிர்கால இலட்சியம் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு வூசு போட்டியிலே தங்கப்பதக்கம் பெற வேண்டும் என்பதாகும்.

**கேள்வி: இளம் சந்ததியினருக்கு இளைஞராகிய நீங்கள் என்ன கூற வருகிறீர்கள்?**

பதில்: எதிர்கால சந்ததிக்கு நான் சொல்ல வேண்டியது விளையாட்டின் மூலம் நாங்கள் உயர்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன என்பதாகும். ஆகவே விளையாட்டை விளையாட்டாக எடுத்துக் கொள்ளாமல் அதனை நீங்கள் கவனமாக எடுத்துக் கொண்டால் நிச்சயமாக உயர முடியும். நிறைய வாய்ப்புகள் உள்ளன. வாய்ப்புகளை தவறவிடாமல் பயன்படுத்துங்கள்.

**– வி.ரி.சகாதேவராஜா**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

# மோகனத் தீவு

## மொரீசியஸ் முதல் ரீயுனியன் வரை...

மாத்தளை சோமு

02



இந்தியாவிலிருந்து 5100 கிலோ மீற்றர் தூரத்திலும், கிழக்கு ஆபிரிக்கக் கடற்கரையிலிருந்து 3318 கி.மீற்றர் தூரத்திலும், மடகஸ்காரிலிருந்து 1132 கி.மீற்றர் தூரத்திலும் இருக்கும் தீவு மொரீசியஸ், அது ஆபிரிக்கக் கண்டத்தைச் சார்ந்தது. அதனை இந்தியப் பெருங்கடலில் உள்ள ‘வெயிலில் நனைந்த தீவு’ என்றும், ‘வானவில் தேசம்’ என்றும், ‘மோகனத் தீவு’ என்றும் பயணத்துறை உலகில் புகழ்ந்திருக்கிறார்கள். அதன் தலைநகரம் போர்ட் லூயிஸ். ஆபிரிக்காவிலேயே பணக்கார நாடான மொரீசியஸின் மக்கள் தொகை 2023 ஆண்டின் கணக்கெடுப்பின்படி 1300887 ஆகும். இதில் 68% சதவீதமானவர்கள் இந்திய வம்சாவளி மக்கள். சமய வழியில் 48% சதவீதமானவர்கள் இந்துக்கள். கிறிஸ்தவர்கள் 23.6%. இஸ்லாமியர்கள் 16.6%. அரச மொழியாக பிரெஞ்சும், ஆங்கிலமும் மக்கள் மொழியாக, போஜ்புரி மொழியும் 31.4% (இம்மொழி பீகார், உத்ர காண்ட், நேபாளம் ஆகிய பகுதிகளில் பேசப்படும் மொழி; இந்திக்கும் இதற்கும் நெருக்கமான உறவு உண்டு. இதனை இந்தி என்றே சொல்வார்கள் ). ஆனால் மக்களின் பேச்சு மொழியாக கிரியோல் இருக்கிறது.

டாக்ஸியை ஓட்டி வந்த வீரனுக்கு



பிரெஞ்ச், ஆங்கிலம், கிரியோல் ஆகிய மொழிகள் தெரியும். தமிழ் பேசத் தெரியாததால் எங்களோடு ஆங்கிலத்தில் பேசினார்.

''வீரன் என்ற பெயரே சுத்தமான தமிழ்ப்பெயர். எப்படி உங்களால் தமிழ் பேச முடியவில்லை. மொரீசியஸில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இருந்தும் நீங்கள் தமிழ் பேசவில்லையே என்று கவலையடைகிறேன்'' என்றார், வழக்கறிஞர் மதியழகன்.

வீரன் டாக்ஸியை ஓட்டிக் கொண்டே, ''தமிழ் பேசவரவில்லை என்பது எனக்கு கவலை தான். என் தாத்தா தமிழ் நாட்டிலிருந்து கரும்புத் தோட்ட வேலைக்கு வந்தவர். படிப்பில்லை. தொழிலாளி. என் தந்தையும் அவரைப் போல் கரும்புத் தோட்டத் தொழிலாளி. நான் பள்ளியில் படித்தேன். ஆங்கிலமும் பிரெஞ்சும் கற்க வேண்டிய கட்டாயம். தமிழ் படிக்க முடியவில்லை. வீட்டில் அப்பாவோடு கொஞ்சம் கொஞ்சம் (இதனைத் தமிழிலேயே சொன்னார்) தமிழ் பேசினேன். அப்பா இருக்கும் வரை அந்த தமிழ் இருந்தது. பிரெஞ்சு ஆட்சியில் கட்டாயம் பிரெஞ்ச் படிக்க வேண்டும். இந்துவாக இருந்தாலும் கிறிஸ்டியன் பெயர் வைக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியில் ஆங்கிலம். இப்போது கிரியோல் பேசுகிறோம். தமிழ் பேச்சே இல்லாமல் போய் விட்டது. முன்னர் கேட்ட சில தமிழ் பாட்டுகள் நினைவில் உள்ளன....''என்று சொல்லிவிட்டு வீரன் உடனே பாடத் தொடங்கினார்.

‘காலங்களில் அவள் வசந்தம்
கலைகளில் அவள் ஓவியம்
மாதங்களில் அவள் மார்கழி
மலர்களில் அவள் மல்லிகை....’

''அட குரலும் நன்றாக இருக்கிறது. தமிழும் நன்றாக இருக்கிறதே! என்றேன்....''

அப்போது வீரன் சொன்னார்....'' நான் இங்கு நிகழ்ச்சிகளில் தமிழ் பாட்டு பாடுவேன். பழைய தமிழ்ப் பாட்டு தான் எனக்குத் தெரியும்....''

''தொடர்ந்து பாடுங்கள்...'' என்று சொல்லிவிட்டு, ''இப்போது எங்கே போகிறோம்!'' என்று கேட்டேன்.

''மொரீசியஸ் வரலாற்றில் முக்கியமான ஒரு இடத்தைப் பார்க்கப் போகிறீர்கள். அதற்காக ஒரு இடத்தில் இறக்கி விடுகிறேன். அங்கிருந்து சிறிது தூரம் நடந்தால் அந்த இடம் வரும். குடியேறிய இந்தியர்களின் முக்கியமான இடம். அதன் பெயர் AAPRAVASI GHAT. ஆப்ரவாசி என்பது குடியேறுபவருக்கான இந்திச் சொல்லாகும். காட் என்பது நிலத்துக்கும் கடலுக்கும் உள்ள நதிக்கரையைச் சொல்லும் சொல்லாகும்.'' வீரன் இறக்கிவிட்ட இடத்திலிருந்து சிலரிடம் வழி கேட்டு ஆப்ரவாசி காட் என்ற இடத்திற்குப் போனோம். அது மொரீசியஸில் இந்தியர்கள், மற்ற இனத்த



வர்கள் குடியேறிய வரலாற்றைச் சொல்லும் இடம். இன்றைக்கு மொரீசியஸில் வாழ்கிற 70 வீதமானவர்களின் மூதாதையர்கள் கப்பலில் வந்து இறங்கியவர்கள். அவர்கள் முதன் முதலில் கால் பதித்த இடம். அதனை ‘யுனெஸ்கோ’ பாரம்பரியச் சின்னமாக அங்கீகரித்துள்ளது.

1734இல் பிரெஞ்சு ஆட்சியில் கரும்பு பயிர் செய்கை தொடங்கிய போது ஆப்பிரிக்கத் தொழிலாளர்கள் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டனர். 1727இல் பிரெஞ்ச் கிழக்கு இந்தியக் கம்பனியால் பாண்டிச்சேரியிலிருந்து தமிழர்கள் கொண்டு வரப்பட்டதாகத் தகவல் இருக்கிறது. அவர்களே காடுகளை அழித்து தீவை மனிதர்கள் குடியேறி வாழும் நிலமாய் மாற்ற பாடுபட்டவர்கள். அவர்கள் மிகச்சிறிய தொகையினர். ஆனால், மொரீசியஸை பிரிட்டன் கைப்பற்றிய பிறகு தான் தமிழர்களின் வருகை கூடியது; 1835க்கும் 1924க்கும் இடையில் 1,14,500 தமிழர்கள் தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்டார்கள். பிரித்தாளும் கொள்கையில் ஊறித் திளைத்த பிரிட்டிஷார் ஒரு இனம் இருந்தால் தீவை ஆட்சி செய்ய முடியாது. பிரச்சினைகள் வரும் என்ற எதிர்ப்பார்ப்பில் இந்தி, தெலுங்கு, போஜ்புரி, வங்காளம், உருது, மராத்தி பேசுபவர்களையும் கொண்டு வந்தனர்.

மொரீசியஸை கரும்பு தான் தொடக்கக் காலத்தில் உலக அரங்கில் பரவலாக அறிமுகம் செய்தது. 1812 – 1849 வரை 467 தொன் கரும்பிலிருந்து 400000 தொன் வரை உற்பத்தி செய்யப்பட்டது. 1825இல் 157 சர்க்கரை ஆலைகள் இருந்தன. அது 1860இல் 260 ஆகியது.

மொரிசீயசில் குடியேறிய தமிழர்கள் சிலர் காலப்போக்கில் கரும்புத் தோட்டங்களை வாங்கி நடத்தியிருக்கிறார்கள். அவர்களில் வடிவேல் அண்ணசாமி, ராமதி ரொமூடி செட்டியார், விதவை அருளானந்தா, முனுசாமி வி. அய்யாசாமி, குமாரசாமி மருதநாயகம், செல்லாண்டி, ஜெ.பி.நல்லதம்பி, காதன் கிருஷ்ணா, ஆர்.விங்கிடா, எம். சண்டபா கிருஷ்ணன், ஆதிராமசாமி ஆகியோர் முக்கியமானவர்கள். ஆனால் சில தமிழர்கள் உட்பட்ட இந்தியர்களுக்கும், பெருவாரியான பிரிட்டிஷாருக்குப்



பணத்தை அள்ளிக் கொடுத்த கரும்புத் தொழிலின் பின்னே ஆயிரக்கணக்கான சோகக் கதைகள் இருக்கின்றன...

அமைதியான காற்று வறண்ட கடல்கள் (SILENT WINDS DRY SEAS) என்ற நாவலை ஆங்கிலத்தில் எழுதிய வினோத் புஸ்ஜித் கரும்புத் தோட்டங்களைக் ‘கரும்பு நரகம்’ என்கிறார். அவர் ஒரு நேர்காணலில், 'ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்களை அழைத்து வந்தார்கள். ஒப்பந்தம் என்பது அடிமைத்தனத்தின் ஒரு வடிவம். அதன் மூலம் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள், தங்கள் அடையாளத்தை இழந்தனர்.

அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையால் மூட நம்பிக்கை அல்லது சூனியம் என அழைக்கப்படும் தங்கள் மதத்தைக் கடைப்பிடிக்க அவர்களுக்குச் சுதந்திரம் இல்லை. அவர்கள் தங்கள் மொழியையும் பெயர்களையும் வைத்துக் கொள்ள முடியவில்லை. அவர்களை அவமானப்படுத்த மிக மோசமான பெயர்களைக் கொடுத்ததோடு தீயவர்களாகவே நடந்து கொண்டனர் 'என்று கூறுகிறார்.

1901இல் மகாத்மா காந்தி மொரீசியஸ் தீவுக்குப் போன போது கரும்புத் தோட்டங்களில் மக்கள் படும் பாடு அவரைக் கலங்க வைத்தது. குறுகிய பயணத்தை மேற்கொண்டதால் யாரையாவது அனுப்பி விபரம் சேகரிக்க நினைத்தார். ஆனால் உடனடியாகப் பொருத்தமான நபரைக் கண்டு பிடிக்க முடியாததால் 1907இல் தான் வழக்கறிஞர் மணிலாலை மொரீசியசுக்கு அனுப்பினார்.

அப்போது அவருக்கு உதவியவர்கள் தமிழர்கள். இந்தியர்களுக்கு எதிரான வழக்குகளில் வாதாடி நீதி பெற்றுக் கொடுத்தார்.

கரும்புத் தோட்டத்தில் தமிழர் பட்ட துன்பங்கள் பாரதியின் காதுகளை எட்டுகின்றன. அவர் ‘தமிழ்ச்சாதி’ என்ற தலைப்பில்

‘ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினு
பூமிப் பந்தின் கீழ்ப்புறத்துள்ள
பற்பல தீவினும் பரவியிவ் வெளிய
தமிழ்ச் சாதி தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்’

என்று எழுதிய கவிதையில் தென்னாபிரிக்கா, மொரீசியஸ் (ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்) ரியூனியன் ஆகிய நாடுகளையே சொல்கிறார். ‘கரும்புத் தோட்டத்திலே’ என்ற கவிதையில் ‘விம்மி விம்மி விம்மி, விம்மியழுங் குரல் கேட்டிருப்பாய் காற்றே! துன்பக் கேணியில்...’ என்றும் பிஜித்தீவிலே கரும்புத் தோட்டத்திலே (தெற்குமா கடலுக்கு நடுவினிலே, ஆங்கோர் கண்ணற்ற தீவினிலே’ அது பிஜி தான்) என்றும் அந்த மக்கள் பட்டத் துன்பத்தைப் பாடியிருக்கிறார்.

இலங்கையிலே தேயிலை, இறப்பர்,

கொக்கோ, கோப்பி ஆகிய செய்கைக்காகத் தலைமன்னாரிலும், இறப்பர் பயிர் செய்கைக்காக மலாயா பினாங்கிலும் தமிழர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் இறங்கியதைப் போல் பாண்டிச்சேரியிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் ‘ஆப்ரவாசி காட்’டில் இறங்கினார்கள் தமிழர்கள்.

1849ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதற்காக இந்தக் கிடங்கு கட்டப்பட்டது. அதற்கு அங்கு முன்னர் மக்களை அடி மைகளாகக் கொண்டு வந்து இறக்கினார்கள். 1834ஆம் ஆண்டு அடிமைத்தனம் ஒழிப்பதாகச் சட்டம் இயற்றியதால் கொண்டு வருபவர்களின் சுதந்திர மேன்மையை நிரூபிக்க இச்சட்டம் தேவைப்பட்டது. அங்கு தங்குவதற்கான கொட்டகை, சமையலறைகள், கழிவறைகள், மருத்துவமனைகள் என கருங்கல்லில் கட்டப்பட்ட மிகப்பெரிய குடிவரவுக் கிடங்கு. அது இன்று மொரீசியஸ் தமிழர்கள், இதர குடியேற்ற மக்கள் ஆகியோரின் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் காட்டும் நினைவுச் சின்னம்.

1830 முதல் 1920 வரை மொத்தம் 22 மில்லியன் ஒப்பந்தத் தொழிலாளர்கள் உலகின் பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அந்நாடுகளில் மொரீசியசும் ஒன்று. மொரீசியஸின் இந்த தரையிறங்கு கிடங்கை பிற பகுதிகளுக்கு மாற்றவும் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களை இறக்கவும் பயன்படுத்தினர்.

முதலில் 1987ஆம் ஆண்டு கூலிகாட் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டபோது அதன் பெயர் ‘ஆபிரவாசி காட்’ என மாற்றப்பட்டது. ‘ஆபிரவாசி காட்’டை சுற்றிப் பார்த்துவிட்டு டாக்சிக்காகக் காத்திருந்தோம்.

(தொடரும்)

# சிந்தை கவரும் பாக்களினால் சிறந்து விளங்கும் "விருத்தமாயிரம்"

ஈழத் தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் "புலம்பெயர் இலக்கியம்" அமைகின்றது. இனப்பிரச்சினை காரணமாக இங்கிருந்து உலகத்தின் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்ற நம்மவர்கள், தாய் மொழியாம் தமிழை மறக்காமல், அதன் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் துணை செய்யும் வகையில் இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு கொண்டு இயங்கி வருகின்றனர். இங்கிருந்த போதே, இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருந்த சிலர், புலம்பெயர் நாடுகளிலும் தமது படைப்பிலக்கிய முயற்சிகளைத் தொடர்வதனூடாகப் புகழ் பூத்த புலம்பெயர் இலக்கியகாரர்களாக அடையாளம் பெற்றுள்ளனர்.

இன்னும் சிலர், அங்கு சென்ற பின் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, கல்வி, கலை, இலக்கிய ஆற்றலை வளர்த்துக் கொண்டு நாவல், சிறுகதை, நாடகம், குறும்படம், ஒலிபரப்பு, கவிதையென்று பல்துறைகளிலும் ஆர்வம் காட்டிப் பிரபலம் பெற்று வருகின்றனர். அவ்வாறு அடையாளம் பெற்று வருபவர்களில் ஒருவராக முன்னெழுபவர் பாவலர்மணி சரளா விமலராசா.

அவர் அக்கரைப்பற்று, பனங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சுவிஸில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்து வருபவர். பிரான்சு கம்பன்கழகம், தொல்காப்பியர் கழகம், பாவலர் பயிலரங்கம், என்பவற்றின் தலைவராக இருக்கின்ற பாட்டரசர் கி. பாரதிதாசனின் பயிலரங்கத்தில் சேர்ந்து யாப்பிலக்கணத்தை முறையாகக் கற்று, பா வடிவங்களில் பலநூறு பாக்களை எழுதிப் பயின்று, தேர்ச்சி பெற்று 'பாவலர்', 'பாவலர்மணி' ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.


பனங்காட்டு அந்தாதி, சிந்து பாடுவோம், பாட்டரசர் புகழ் கலி விருத்தம், அகவல் ஆலயம் என்ற பெயர்களில் மரபுக் கவிதை நூல்களைத் தந்திருப்பவர். வரம் பெற்ற தாய்' சரளாவின் முதலாவது கவிதைத் தொகுதி.

அவரின் விருத்தமாயிரம்' நூல் 402 பக்கங்களில் இரண்டு பகுதிகளில் உள்ளடங்கிய 1000 பாக்களோடு அன்மையில் மலர்ந்திருக்கின்றது. வெவ்வேறு சீரொழுங்கில் அரசியல், புலம் பெயர் வாழ்க்கை, பெண்கள் நிலை, பக்தி, அறிவியல், காதல், இயற்கை என்ற கருப்பொருட்களில் அமைந்த விருத்தப் பாக்கள் நூலை அலங்கரிக்கின்றன.

"வாழ்வியலில் கிராமநிலம் மாறிப் போக மண்வாசம் தேடிமனம் வாடி நிற்கும்
ஊழ்வினையால் ஊரைவிட்டு வந்த போதும் உணர்வினிலே எந்நாளும் நிலைத்து நிற்கும் தாழ்வாரம் சேர்ந்திருந்து நிலவில் பேசி தங்கிடவே தாய் மடியை எண்ணும் நெஞ்சம் பாழ்மனத்தில் பதிந்துள்ள மண்ணின் காட்சி பார்வையிலே விரிகிறது பரமா காப்பாய்!
"(தாய்மண்) என்று எண்சீர் விருத்தத்தில் அமைந்த பா, தாய் மண்ணைப் பிரிந்து புலம் பெயர் நாட்டில் வாழ்கிறபோது ஏற்படும் துயரத்தை, ஏக்கத்தை

அவலச்சுவை ததும்ப எடுத்தியம்புகிறது. "சொர்க்கம் தான் என்றாலும் சொந்த ஊரைப் போல வருவதில்லை" என்பதில் உள்ள உண்மையை இப்பா வரிகளும் நமக்கு உணர்த்துகின்றன.

"அவலம் நிறைந்த மாந்தர் வாழ்வில்
அவளோ என்றும் முதிர்கன்னி!
தவழும் குழந்தைப் பருவம் தன்னில்
தாவித் திரிந்த வளர்கன்னி
பவள முத்து மாலை அணிந்து
பாடிப் பறந்த இளம்கன்னி
குவளை யெடுத்து நீரை அள்ளி
குளிரக் குடித்த எழிற்கன்னி!
வயதும் செல்ல வரனும் பார்க்க
வருவார் ஆண்கள் பெண்பார்க்க
கயவர் முன்னே காட்சிப் பொருளாய்
கனத்த நெஞ்சம் உடைந்திடுமே !
புயலாய் வீசும் நாவால் கேட்பார்
பொன்னும் பொருளும் அன்பாக
அயலார் கூடி அனைத்தும் பார்க்க
அல்லல் பட்டு துடித்தாளே!
ஏக்கம் பிறக்கும் என்று விடியும்
ஏங்கித் தவிக்கும் ஏழையவள்
தாக்கம் தன்னில் தடமாய்ப் பதிய
தனிமை தேடும் பாவையவள்
வாக்குக் கொடுத்தோர் வரவை யெண்ணி
வஞ்சி நாளும் காத்திடுவாள்
ஊக்கம் குறைந்தே உலகம் பழிக்க
உயிரை மாய்க்கும் கோழையவள்!
(முதிர்கன்னி)



எழுசீர் விருத்தத்தில் அமைந்துள்ள 'முதிர்கன்னி' என்ற பாவில்வரும் மேலுள்ள வரிகள், பெண்களின் பருவங்களைக் கூறுவதோடு, பெண் பார்க்கும் சம்பிரதாயங்களில் அவர்கள் காட்சிப் பொருளாக ஆக்கப்படுவதையும், மணம்முடிப்பதற்காக பொன் பொருளை வரதட்சணையாகக் கேட்கும் கயவர்களால் 'முதிர்கன்னி' களாக அவர்கள் துயரப்படுவதையும், வாக்குக் கொடுத்தோர் வராமல் போவதனால் அவர்கள் உயிரை மாய்த்துக் கொள்வதையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

வலிகள் நிறைந்த வரிகளினால் கவிதை சொல்லும் கவிஞர் 'கோழையவள்' என்று குறிப்பிடுவதன் மூலம் உயிரை மாய்த்துக்கொள்ள எடுக்கும் முடிவு பிழையானது, கோழைத்தனமானது என்று குறிப்பிட்டு அறிவுரை தரவும் தவறவில்லை.

பெண்கள்நிலை குறித்த பல கவிதைகளை விருத்தமாயிரத்தில் பதிவுசெய்திருக்கிறார். பாவலர்மணி சரளா.

"மங்கைப் பருவம் அடைந்தாலே
மனையில் இருக்க வைத்திடுவார்
எங்கும் செல்ல முடியாமல்
ஏங்கும் நெஞ்சம் பலவுண்டு
செங்கல் வைத்து மதில்கட்டி
சிறைபோல் அடைத்து வைப்பார்கள்"

என்று அறுசீர் விருத்தத்தில் அக்கால மங்கையர் இருந்த நிலைமை குறித்தும் பாடியிருக்கிறார்.

விருத்தமாயிரம் நூலுக்கு அவதானக் குறிப்புகளை எழுதியிருக்கின்ற கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ரூபி வலன்ரீனா பிரான்ஸிஸ், "தாய், மங்கையர் நாள், பெண்ணின்பெருமை, அச்சம் தவிர், தலையெழுத்தை மாற்று, அம்மா" என்ற தலைப்புகளில் அவர் பெண்கள் குறித்த கவிதைகளை எழுதியிருப்பதைக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளதோடு பெண் விடுதலை நாடும் ஒரு இலட்சியக் கவிஞராகவும் அவரை விதந்துரைத்துள்ளமை இங்கு குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாகும்.

"இன்று மரபுக் கவிதை வடிவங்களைப் பயன்படுத்தி கவிதை எழுதுகின்ற பெண் கவிஞர்கள் மிக அரிது என்றே கூற வேண்டும். அதுவும் புலம் பெயர் இலக்கியச் சூழலில் அத்தகைய ஆற்றல் உள்ளவர்கள் இல்லை என்றே கூற வேண்டும். இச்சூழலில் விருத்தமாயிரம் நூலின்மூலமாக சாதனைபுரிந்தவராகவும் முன்னோடியாகவும் சரளா விமலராசா காணப்படுகின்றார்" என்று நூலுக்கு அணிந்துரை வழங்கியிருக்கின்ற மறைந்த பேராசிரியர் செ. யோகராசா குறிப்பிட்டு பாராட்டியுள்ளமையும் இங்கு எடுத்துக் காட்டத் தக்கதாகும்.

பாவலர்மணி சரளா விமலராசாவின், விருத்தப்பாக்கள் அவரின் யாப்பிலக்கணப் பயிற்சியையும் தேர்ச்சியையும் நன்கு புலப்படுத்துகின்றன. பாக்கள் பல்வேறு பொருட்பரப்பிலும் அமைந்து மெருகூட்டுகின்றன. அவருக்கு நமது வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றோம்.

ஈழத்தில் நமது முன்னோடிக் கவிஞர்கள் வளர்த்துச் சென்ற யாப்பமைதி குன்றாத, பேச்சோசைப் பண்புடைய நவீன தமிழ்க்கவிதைப் பண்பினிலும் தேர்ந்து கொண்டு இன்னும் பல பனுவல்களை அவர் தரவேண்டு மென்பதே நமது அவா.

நூல் விருத்தமாயிரம்,
ஆசிரியர்: பாவலர்மணி சரளா விமலராசா,
பனங்காடு, அக்கரைப்பற்று.
வெளியீடு: பாட்டரசர் பதிப்பகம்,
37, கருமாரத் தெரு,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.
இந்தியா.

பாவேந்தல் பாலமுனை பாறூக்

# சிறந்த திரைக்கதை போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ள "19:53 – Lost in Language"






தனது சொந்த மொழியில் உரையாடும் சந்தர்ப்பம் மறுக்கப்படும்போது ஒரு மனிதனோ அல்லது ஒரு சமூகமோ எவ்வாறான சவால்களை சந்திக்கும் என்பதை விவரிக்கும் குறும் திரைப்படம் “19:53 Lost in Language”

வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும், சொந்த நாட்டில் தாய்மொழியில் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கும், இந்த திரைப்படத்தில் "சமத்" ஜெர்மன் மொழி தெரியாமல் ஜெர்மனியில் உயிராபத்தின்போது உதவி தேடும் தருணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்துடன் இது 1953ஆம் ஆண்டு சிங்கள மொழிச் சட்டம் (Sinhala only act) தமிழ் பேசும் மக்கள்மீது ஏற்படுத்திய தாக்கத்தை இந்த குறும் திரைப்படம் நினைவுபடுத்துகிறது. இந்த திரைப்படம் மொழித் தடைகளால் ஏற்படும் துன்பநிலைகளையும், அதனால் ஏற்படும் பிரிவினையையும் காட்சிப்படுத்த முயல்கிறது.

இந்த திரைப்படம் ஜெர்மனிய அரசின் டார்ம்ஸ்டாட் பல்கலைக்கழக திரைப்பட கல்லூரியால் பகுதியாக தயாரிக்கப்படுகிறது. இதில் பங்குபெறும் பன்னாட்டைச் சேர்ந்த திரைத்துறை மாணவர்களும் கலைஞர்களும் தங்கள் உழைப்பை இலவசமாகவே வழங்குகின்றனர். இருப்பினும் தயாரிப்பு செலவுகளில் 800 அளவான பணம் தேவைப்படுகிறது.

இதற்காக ஒரு கூட்டு நிதிநல்கை (Crowd funding) தொடங்கப்பட்டுள்ளது. lostinlanguage.de என்ற இணையதளத்தில் அல்லது பங்களிப்பை வழங்கலாம்.

பதுர்ஜன் விஜயசேகர
குல்யா அமபோவா

## பெரும்பாலான கட்சிகளின்... (14 ஆம் பக்க தொடர்ச்சி)

அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்ட போதிலும் அவருக்கு பல கட்சிகளின் ஆதரவு கிடைத்துள்ளது. அவ்வாறு கிடைத்துள்ள ஆதரவின் சிறப்பு என்னவென்றால் இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களுக்குரிய கட்சிகளைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் ஜனாதிபதிக்கு கிடைத்திருப்பதாகும். குறிப்பாக சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் போதே அக்கட்சியினைச் சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர். அவர்களிடையே பிரபலமிக்கவர்களான ராஜித சேனாரத்ன, மலையக மக்கள் பிரதிநிதியான வடிவேல் சுரேஸ், அரவிந்த குமார், எம்.வேலுகுமார் போன்றோரும், ரஜரட்ட சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற இஷாக் ரஹ்மான் மற்றும் குமார் வெல்கம ஆகியோரும் அடங்குகின்றனர்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய நபர்களான ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, நீதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். அவர்களைத் தவிர, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்டர்கள் உட்பட 90க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு ஒத்துழைப்பை வழங்க இணங்கியுள்ளனர். இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுதந்திரமாக செயற்பட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்களும் தற்போது இக்குழுவில் இணைந்து கொண்டுள்ளதாக அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன உள்ளிட்ட முழுக் கட்சியினது ஆதரவும் ஜனாதிபதிக்கே கிடைத்துள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் பிரதமருமான தினேஷ் குணவர்தன தலைமையில் ஆகஸ்ட் முதலாம் திகதி கூடிய கட்சியின் மத்திய குழுவில் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. குறிப்பாக இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி உட்பட பல அமைச்சர்கள் அக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

கடந்த ஜுலை 31ஆம் திகதி கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பீடமும் மத்தியக் குழுவும் இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளன. அது தொடர்பில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவைக் கோரி எழுத்துமூல கோரிக்கையை விடுத்தது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என அக்கட்சியின் தலைவரும், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்கவும் குறிப்பிட்டுள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதோடு, அவர்களுள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்தவொரு கட்சிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என பகிரங்கமாக அறிவித்துள்ளார். அத்துடன் தயாசிறி ஜயசேகர தவிர்ந்த ஏனைய 12 உறுப்பினர்களும் தமது ஆதரவை ஜனாதிபதிக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன் மற்றும் சாரதி துஷ்மந்த ஆகியோர் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை அவரோடு இணைந்து கொண்டனர்.

மேலும், வடக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (EPDP) இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் குலசிங்கம் திலீபன் ஆகியோரும் ஜனாதிபதிக்கு ஆதரவை வழங்குவதற்காக அவரோடு இணைந்துள்ளனர். அவர்கள் இருவரின் ஆதரவு கிடைப்பது என்பது வடக்கில் பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதித்துவமாகும். விசேடமாக வடக்கு மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருந்த மீன்பிடி துறைமுகம் மற்றும் காணி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சியும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க இணக்கம் தெரிவித்துள்ளது. அது கிழக்கில் ஒரு பலமிக்க தூணாகும். இவரைத் தவிர கிழக்கின் மற்றுமொரு பலமிக்க தூணான 'பிள்ளையான்' எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனும் ஜனாதிபதிக்கு பூரண ஆதரவை வழங்கியுள்ளார். அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை 'பிள்ளையான்' என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உற்சாகமாக வரவேற்று மக்களின் கூடிய ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். அவர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவராகும். அதன்படி கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த அனைத்து சங்கங்கள் மற்றும் உள்ளூர் கிளைகளின் ஆதரவும் ஜனாதிபதிக்கு கிடைக்கவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தோட்ட மக்களின் கோரிக்கைகளில் கவனம் செலுத்தும் தலைவர் என்ற வகையில், இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அவர் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர் காங்கிரஸினதும் ஆதரவு கிடைப்பது தோட்ட மக்களின் பூரண ஆதரவைப் பெறுவதற்குச் சமனானதாகும். குறிப்பாக கடந்த ஆகஸ்ட் 18 அன்று அக்கட்சியின் தேசிய சபை கூடி இந்த முடிவை எடுத்துள்ளது. ஹட்டன் கொட்டகலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

அந்தக் கலந்துரையாடலில் அக்கட்சியின் தேசிய சபை உறுப்பினர்கள் அனைவரும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஏகமனதாக தீர்மானித்ததாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். இரண்டு வருடங்களாக இந்த நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளை தீர்த்து, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கும், அந்த மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், காணி உரிமைகளை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவித்திருப்பதால் தேசிய சபை இந்த தீர்மானத்தை எடுத்ததாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அவரைத் தவிர ஒட்டுமொத்த பெருந்தோட்ட மக்களும் ஜனாதிபதியுடன் கைகோர்த்து செயற்பட வேண்டும் என அக்கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமானும் தெளிவு படுத்தியுள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, அதில் றிசாத் பதியுதீன் தவிர்ந்த ஏனைய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் தற்போது ஜனாதிபதிக்கு தமது ஆதரவை வழங்க அவரோடு இணைந்துள்ளனர். அக்கட்சியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அனுராதபுரம் மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் ஆகியோரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இஷாக் கடந்த பொதுத் தேர்தலில் அனுராதபுரம் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவராவார்.

அதுமட்டுமின்றி திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்பும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். அக்கட்சி எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்த மூன்று எம்.பி.க்களும் விசேட செய்தியாளர் சந்திப்பை நடத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்தனர்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல், ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்களான ராஜித சேனாரத்ன, வடிவேல் சுரேஷ் மற்றும் அரவிந்த குமார் ஆகியோர் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளமையினை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும். அத்துடன் கண்டி மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான கோப் குழுவின் முன்னாள் உறுப்பினர் எம். வேலு குமார், நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஆகியோரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். ஐக்கிய மக்கள் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினராகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவான டிரான் அலஸ் உள்ளிட்ட முழுக்கட்சியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்காக இணைந்துள்ளது. ஸ்ரீடெலோ அமைப்பின் ஆதரவும் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டது. கொழும்பு 07 இல் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அதன் தலைவர் பரராஜசிங்கம் உதயராசா தனது முடிவை அறிவித்தார். அதேபோன்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கைபரப்புச் செயலாளர் யு.எல்.எம்.என். முபீனின் ஆதரவும் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 15 கட்சிகளில் 9 கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்துள்ளது.

மீதி 6 கட்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 உறுப்பினர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் மூன்று உறுப்பினர்களைத் தவிர மற்ற 4 கட்சிகளிலும் இருப்பது தலா ஒரு பாராளுமன்ற உறுப்பினரே.

இதேவேளை, ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சியின் தலைவர் கலாநிதி எம். அன்வர் அக்கட்சியின் முழுமையான ஆதரவை ஜனாதிபதிக்கு வழங்குவதாக அறிவித்துள்ளார். அம்பாறை சம்மாந்துறையில் அக்கட்சியின் தலைமையகத்தில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.




### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

**காலத்தை நீடித்தல்**

**முதலீட்டு வாய்ப்புகள்**

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு துறைமுகத்தினுள் அமைந்துள்ள பெறுமதி வாய்ந்த காணிப்பரப்பை சர்வதேச துறைமுகம் சார்ந்த சேவை வழங்கல் நிலையத்திற்கு குத்தகைக்கு வழங்கல்**

1. கொழும்பு துறைமுகத்தின் ஆழநீர் கொள்கல முனையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் சர்வதேச துறைமுகங்கள் சார்ந்த சேவை வழங்கல் நிலையமொன்றை செயற்படுத்த விரும்புகிறவர்களிடமிருந்து சாத்தியமான விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது அழைப்பதற்கு விரும்புகின்றது.
2. ஆர்வமுள்ள தரப்பினர் கீழே கூறப்பட்டுள்ளவாறு கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
3. 2024.09.09ஆம் திகதி முதல் வார நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 464A இலக்க HQ கொழும்பு கட்டிட 8 ஆம் மாடியின் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் காணி முகாமைத்துவ பிரிவு பிரதான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை, கேள்வியிடக்கூடிய வரிகள் அல்லது நிருவாக அறவீடுகளின் ஆகுசெலவாக மீளளிக்கப்படாத தொகையாக 100,000.00 ரூபா அல்லது 325 அமெரிக்க டொலர்களைச் செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்விப் பிணை முறியின் தொகை 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பதுடன் நிபந்தனையற்ற உத்தரவாதங்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
5. சித்திகரமான விலைமனுதாரர் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
6. ஆரம்ப குத்தகை ஒப்பந்த காலமானது 35 வருடங்களாகும்.
7. உள்ளூர் இறக்குமதி அல்லது உள்ளூர் ஏற்றுமதி மற்றும் பலநாடுகள் ஒன்றிணைந்த உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றிற்கான இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தண்டப்பண விகித பணக்கொடுப்பனவுகள் கேள்வி விண்ணப்பங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.
8. விலைமனுதாரரின் நிதி நிலைமையை உறுதி செய்வதற்காக விலைமனுதாரர் கீழே வழங்கப்பட்டுள்ள தகைமைகளுக்கான ஆகக்குறைந்த மூலப் பிரமாணங்களை திருப்திப்படுத்தல் வேண்டும்.
   ஏ) தகுதிக்காக முன்னைய நிதி ஆண்டுகளில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளின் வருடாந்த வருமானது 15 பில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும். அதே காலப்பகுதிக்காக வெளிநாட்டு அமைப்புக்கள் வருடாந்த நிதிப்புரள்வாக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டு ஆதனங்களின் வருமானமானது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் அறிக்கைகள் 15 பில்லியன் ரூபாவை விஞ்சினால் மாத்திரமே கூட்டு ஆதனங்கள் அனுமதிக்கப்படும்.
9. விலைமனுக்கள் பாதுகாப்பு முத்திரைக்குறி இடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு துறைமுகத்தினுள் அமைந்துள்ள பெறுமதி வாய்ந்த காணிப்பரப்பை சர்வதேச துறைமுகம் சார்ந்த சேவை வழங்கல் நிலையத்திற்கு குத்தகைக்கு வழங்கல் (குறிப்பீட்டிலக்கம்: SLPA/PREM/03/06/2024)" என குறிப்பிடப்பட்டு இடப்பரப்புக்கள் மற்றும் காணி அபிவிருத்தி பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும்.

**விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முகவரி:**
பிரதான முகாமையாளர் (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்),
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
5 ஆம் மாடி, தலைமையக கொழும்பு கட்டிடம்,
இல. 464A, T.B. ஜாயா மாவத்தை
கொழும்பு-10.

10. விலைமனுக்கள் 2024.09.10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2024.09.10ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்மொழிவுகள் கேள்விச் சபையினால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
11. இது தொடர்பான மேலதிக விபரங்களை 0711732275 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பதில் கடமையாற்றும் பிரதி பிரதான முகாமையாளரிடமிருந்து (இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்) பெற்றுக் கொள்ளலாம்.
12. இந்த விலைமனுக்கோரல் செயற்பாட்டிற்கான எந்தவொரு நிகழ்வு தொடர்பாக எந்தவொரு சாராருக்கேற்படும் எந்தவொரு செலவிற்கான எந்த கடப்பாட்டையும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ளாது.

unicef | for every child | සෑම දරුවෙක් වෙනුවෙන්ම | ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்

### REQUEST FOR EXPRESSION OF INTEREST (EOI)

### REGISTRATION OF FEMALE LED ORGANIZATIONS FOR SUPPLY OF GOODS AND SERVICES FOR REGULAR PROGRAM AND EMERGENCY SUPPLIES.

United Nations Children's Fund (UNICEF) has long embraced and prioritized gender equality and women's and girls' empowerment not only as core principles and practices, but as essential to the realization of the human rights and social development. UNICEF established its first Gender Policy in 2010, as the global community was advancing a more progressive normative framework around gender equality and the empowerment of girls and women. UNICEF believes that both the achievement of gender equality and the empowerment of all girls and women are paramount in their own right, as well as essential contributors to, and central elements of, inclusive and sustainable development and our vision of a more equitable world. Women-owned/led businesses contribute significantly to the world economy, generating millions of new employment opportunities and spurring local development. But their full economic potential remains largely untapped or underutilized.

In this connection UNICEF Sri Lanka wishes to create a database of suppliers whose organizations are led by females to ensure equal and fair opportunities for those organizations to participate in procurement activities of UNICEF and other UN agencies in Sri Lanka. UNICEF is creating this database on behalf of all UN agencies in Sri Lanka for their use as part of the UN Joint Procurement Team's terms of reference for promoting female led businesses through UN Business Operations Strategy. Therefore UNICEF, Sri Lanka Country Office invites EoIs from qualified and experienced institutions led by women to register as potential suppliers of goods and services to UNICEF and other UN agencies for the regular programs as well as emergency responses.

**Required expertise, experience, and capacity.**

- Expertise – Any type of goods or services
- Should be a legal entity registered in Sri Lanka.
- At least 5 years of experience in the respective trade.
- Female representation as owner/entrepreneur, partner, chairman, managing director or any other leadership position controlling the whole organization is a must.

Interested institutions are requested to follow the below steps to make their submission.

1. Register their business in the United Nations Global Marketplace (UNGM). Guidance for registration in UNGM can be found in **https://help.ungm.org/hc/en-us/artiles/360012810860-How-to-register-as-a-supplier-on-UNGM**
2. Complete the online form by scanning the QR code below. You will need to upload documentary proof of female leadership to a public shared drive such as google drive and share the link in the form. More details and instructions will be available in the form itself.

**Please make your submission on or before 30th September 2024. The form will be blocked after this date.**

**Please note:**

- We do NOT require any prices at this stage; we seek only your expression of interest for inclusion in the database.
- A response to this Request for Expression of Interest does not automatically ensure that you will be awarded any purchase orders or contracts. Responses will used to select suppliers for tenders and will be carefully reviewed, hence please ensure to provide accurate information in the EOI.
- For any technical clarifications, you may contact the following staff via email: **mwickramasinghe@unicef.org or pulinda.perera@undp.org**

### சுகாதார அமைச்சு
### இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

SPMC

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**தேசிய போட்டி ரீதியான விலை கோரல் - (NCB)**

**புத்தம் புதிய இன்லைன் பை உலர்த்தி (சிலிகா ஜெல்) உள்ளிடும் இயந்திரம் (Inline Pouch Desiccant (Silica Gel) Inserting Machine) ஒன்றை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக்காண்பித்தல்**

**கேள்வி இல: SPMC/PD/03/2024 - 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்**

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை புத்தம் புதிய இன்லைன் பை உலர்த்தி (சிலிகா ஜெல்) உள்ளிடும் இயந்திரமொன்றை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| 1 | புத்தம் புதிய இன்லைன் பை உலர்த்தி (சிலிகா ஜெல்) உள்ளிடும் இயந்திரம் (Inline Pouch Desiccant (Silica Gel) Inserting Machine) ஒன்றை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக்காண்பித்தல் | ரூபா 5,000.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2024 ஆகஸ்ட் 26ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 19ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீளளிக்கப்படாத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024 செப்டெம்பர் 06ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் இன்லைன் பை உலர்த்தி (சிலிகா ஜெல்) உள்ளிடும் இயந்திரம் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அன்றைய தினமே அமைவிடத்திற்கான விஜயம் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
7. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் உற்பத்திகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 0112-637574)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி இல.: (00)94-11-2635353/2637574**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**
**இணையதளம்: www.spmclanka.lk**

# பிரணவம் அறக்கட்டளை, திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்ற ஓராண்டு நிறைவு விழா



திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாணையின் வண்ணம் பிரணவம் அறக்கட்டளையினதும், திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்தினதும் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி பிரணவம் அறக்கட்டளைக்கும் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்றத்துக்கும் திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாசி வழங்கி சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்த அருளாசி வழங்கும் நிகழ்வு இன்று 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் ஸ்ரீ கஜலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த அருளாசி வழங்கலைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந்த அருளாசி வழங்கும் நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை வழங்குகிறது.

## மட்டக்களப்பு நகரில் விவேகானந்தர் பூங்கா இன்று திறந்துவைப்பு

(காரைதீவு குறூப் நிருபர் சகா)

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி விவேகானந்தர் பூங்கா இன்று (25) ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 70 அடி உயர திருவுருவச்சிலை முதலில் திறந்து வைக்கப்படும்.

பின்னர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தர் கர்மயோகி சுவாமி ஜீவனானந்த ஜீ ஆகியோரின் திருவுருவச் சிலைகள் ஏக காலத்தில் சுவாமிகளால் திறந்து வைக்கப்படும்.

இந்த திறப்பு விழாவில் பிரதம அதிதியாக

தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் கலந்து கொள்ளவுள்ளார்

## தமிழர் நற்பணி மன்ற கல்விக் கருத்தரங்கு

தமிழர் நற்பணி மன்றம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்திவரும் இலவசக் கல்விக் கருத்தரங்குகளை இவ்வாண்டும் நாட்டின் பல இடங்களில் நடத்தி வருகிறது.

இம்மன்றம், கொழும்பு நகர அரிமா கழகத்தின் ஆதரவில், மலையக மாணவர்களுக்கான விசேட கல்விக் கருத்தரங்கை இன்று 25 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பண்டாரவளை தமிழ் கல்லூரியில் நடத்தவுள்ளது.

ஆசிரியர் வரதராஜ் தனராஜின் விரிவுரையுடன் மாணவர்களுக்கான விசேட முன்னோடிப் பயிற்சி பரீட்சையும் இங்கு நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறந்த பயனை பெற்றுக் கொள்ளுமாறு தமிழர் நற்பணி மன்றத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## தேர்தலில் பிரம்மாண்ட ஜனத்திரள்... (09 ஆம் பக்க தொடர்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்து அக்கட்சி வெறும் எட்டு உறுப்பினர்களையே வெற்றி பெற்றுக் கொண்டது. இடதுசாரிக் கட்சிகள் அரசியல் களத்திலிருந்து துடைத்தெறியப்பட்டிருந்தன. ஐக்கிய தேசிய கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்று மிகப் பிரமாண்டமான மக்கள் ஆணையைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாவது ஜனாதிபதி தேர்தலில் இந்நாட்டு சமூகத்தில் பிரசாரக் கூட்டத்திற்கு போஸ்டர்களை ஒட்டுவதற்குக் கூட முடியாத சூழல் இருந்தது.

நாடு முழுவதும் பயங்கரவாதத்தின் கை ஓங்கியிருந்தது. வேட்பாளர்கள் ஒலிபெருக்கியின் மூலமே பொதுமக்களிடம் உரையாற்றினர்கள்.

கூட்டங்களில் மக்கள் கலந்து கொள்ளவில்லை. எனினும் ரணசிங்க பிரேமதாச அத்தேர்தலில் வெற்றி பெற்றார். மக்கள் கூட்டம் கூடுமளவுக்கு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற முடியாது என்பதற்கு மிக நெருக்கமான உதாரணத்தை கடந்த ஜனாதிபதி தேர்தலிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டங்களுக்கு மக்கள் கூட்டப்பட்டது பல்லாயிரக்கணக்கானோரை ஒன்று ஒன்று கூட்டியாகும். சில கூட்டங்களில் ஒரு இலட்சம் பேர் வரையிலும் கூட்டப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் இருந்தது.

அவ்வாறானதொரு கூட்டமே அனுராதபுரத்திலும் இடம்பெற்றது. அந்நேரம் மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது பிரசாரக் கூட்டம் அனுராதபுரத்தில் இடம் பெற்றதோடு அந்தக் கூட்டத்திற்கு இலங்கை போக்குவரத்து சபையைச் சேர்ந்த சுமார் 1200 பஸ்கள் மூலம் மக்கள் அழைத்துவரப்பட்டனர்.

---

**இலங்கை முதலீட்டுச் சபை (BOI)**

**பெறுகை அறிவித்தல்**

**மல்வத்த ஏற்றுமதி செயற்பாட்டு பூங்காவிற்கு பாதுகாப்புக் கெமராக்கள் 13ஐக் கொண்ட அமைப்பை வழங்குதல், பொருத்துதல் இணைத்தல் மற்றும் பராமரித்தலுக்கான பெறுகை கோரல்**

**ஒப்பந்த இலக்கம்: BOI/TS/MEPP/2024/05.09.012**

மேற்படி ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட விபரமான அறிவித்தல் 2024 ஓகஸ்ட் 25 ஞாயிறு Sunday Observer பத்திரிகையில் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
(www.investsrilanka.com)

இதுபற்றிய மேலதிக தகவல்களை சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (மல்வத்த ஏற்றுமதி செயற்பாட்டுப் பூங்கா) 033-2288826, 033 2296620ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

---

**துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு**

**இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபை (CAASL)**

**விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல்**

**SP/2024-07**

**செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் இலங்கை சிவில் விமானசேவைகள் அதிகாரசபைக்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல்**

தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஒரு வருட காலத்திற்கு செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபையின் சிரேஷ்ட பதவிநிலை அலுவலர்களுக்கு பதின்மூன்று (13) எண்ணிக்கையுடைய கலப்பு வாகனங்களை (கார்கள்) வாடகைக்கு அமர்த்துவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை இசிவிஅ இன் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

7/2022 மற்றும் 7/2022(i) ஆகிய இலக்கங்களையுடைய தேசிய வரவுசெலவு திட்ட சுற்றறிக்கைகளுக்கமைவாக விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாட்டின் மூலம் நடத்தப்படும்.

2024.08.26ஆம் திகதிக்கும் 2024.09.18ஆம் திகதிக்குமிடையில் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வரிகள் இல்லாமல் மீளளிக்கப்படாத கட்டணமான ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை (1500 ரூ.) செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கையேற்கப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

கேள்விப்பிணையான ஏழு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபாவானது, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையிலுள்ள புகழ்பெற்ற வங்கியொன்றிலிருந்து பெற்றிருத்தல் வேண்டும். கேள்விப்பிணையானது கேள்விக்கோரல்களை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு குறையாத காலப்பகுதியாக இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவலை CAASL இன் பிரதான பெறுகை அலுவலரிடமிருந்து 0112358824 என்ற தொலைபேசியூடாகவும் mgrrdp@caa.lk என்ற மின்னஞ்சலூடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கோரல்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை, இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க என்ற முகவரியில் 2024 செப்டெம்பர் 19 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bids for hire vehicles for Civil Aviation Authority of Sri Lanka on lease basis"** என குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சிவில் விமானசேவை அதிகாரசபை.**
**152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**

---

**சுகாதார அமைச்சு**

**இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)**

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**

**தேசிய போட்டி ரீதியான விலை கோரல் - (NCB)**

**02 எண்ணிக்கையான புத்தம் புதிய Inline Checkweigher முறைமைகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக்காண்பித்தல்**

**கேள்வி இல: SPMC/PD/04/2024 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்**

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை 02 எண்ணிக்கையான புத்தம் புதிய Inline Checkweigher முறைமைகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| 1 | 02 எண்ணிக்கையான புத்தம் புதிய Inline Checkweigher முறைமைகளை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | ரூபா 5,000.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2024 ஆகஸ்ட் 26ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 19ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீளளிக்கப்படாத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024 செப்டெம்பர் 06ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் Inline Checkweigher முறைமை பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அன்றைய தினமே அமைவிடத்திற்கான விஜயம் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
7. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் உற்பத்திகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 0112-637574)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை,**
**இலங்கை.**

**தொலைபேசி இல.: (00)94-11-2635353/2637574**
**மின்னஞ்சல்: chairman@spmc.gov.lk**
**இணையதளம்: www.spmclanka.lk**

---

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

**பதவி வெற்றிடம்**

**சத்திரசிகிச்சைகூட தொழில்நுட்பவியலாளர் பதவி**

**மேலேயுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன**

| | |
|---|---|
| தகைமைகள் மற்றும் அனுபவம் | : க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சிங்களம்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச்சித்தி அடங்கலாக ஆறு (6) பாடங்களில் பெற்ற சித்தி.<br>மற்றும்<br>இயைபுள்ள துறையில் 05 ஆம் மட்டத்தில் பெற்ற தேசிய தொழில்வாழ் தகைமை சான்றிதழ்.<br>மற்றும்<br>அங்கீகரிக்கப்பட்டஅரசாங்க வைத்தியசாலையொன்றில் சத்திர சிகிச்சை கூட தொழில்நுட்பவியலாளராக ஐந்து (05) வருட அனுபவம். |
| வயது | : 18 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். |
| சம்பள மட்டம் | : எம்என்3 தரம் 111<br>மாதாந்தம் 41,905-10x600-11x890-10x985-10x1015 – 77,695 ரூபா. |
| வேலைவாய்ப்பு நியதிகள் | : நிரந்தரமானதும் சேமலாப நிதி அடிப்படையிலும் அமைந்துள்ளது. |

அரசாங்க சேவையில் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் பணியாற்றும் நிறுவன தலைவரூடாகவும் நேரடியான பிரதியொன்றுடனும் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரியானவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் விடுவிக்கப்படுவார் என நிறுவன தலைவரிடமிருந்து தெரிவிக்கும் சான்றிதழும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

நியமனமொன்றை வழங்கல் அல்லது வழங்காமலிருத்தல் தொடர்பான உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையானது கொண்டுள்ளது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது குறிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை முழுமையான சுயதரவுடன் மற்றும் இரு (02) உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்களுடனும் 2024 செப்டெம்பர் 09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**

---

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

**பதவி வெற்றிடம்**

**விடுதிப் பொறுப்பாளர் பதவி**

**மேலேயுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன**

| | |
|---|---|
| கல்விசார் தகைமைகள் : | சிங்களம் அல்லது தமிழ் மொழி, ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறேதாவது பாடம் அடங்கலாக நான்கு (04) திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி.<br>மற்றும்<br>க.பொ.த. (உ/த) பரீட்சையில் பொது வினாத்தாள் நீங்கலாக மூன்று பாடங்களில் சித்தி. |
| அனுபவம் : | மாணவர் விடுதி பொறுப்பாளராக புகழ்வாய்ந்ததொரு நிறுவனத்தில் மூன்று (3) வருட அனுபவம் அல்லது இயைபுள்ள தகைமையொன்று. |
| வயது : | 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். |
| சம்பள மட்டம் : | எம்என்1 - தரம் 111<br>மாதாந்தம் 36,640-**10x405-40,690** ரூபா. |
| வேலைவாய்ப்பு நியதிகள் | : நிரந்தரமானதும் சேமலாப நிதி அடிப்படையிலும் அமைந்துள்ளது. |

அரசாங்க சேவையில் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் பணியாற்றும் நிறுவன தலைவரூடாகவும் நேரடியான பிரதியொன்றுடனும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரியானவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் விடுவிக்கப்படுவார் என நிறுவன தலைவரிடமிருந்து தெரிவிக்கும் சான்றிதழும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

நியமனமொன்றை வழங்கல் அல்லது வழங்காமலிருத்தல் தொடர்பான உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையானது கொண்டுள்ளது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது குறிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை முழுமையான சுயதரவுடன் மற்றும் இரு (02) உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்களுடனும் 2024 செப்டெம்பர் 09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடங்கள்

## பெயின்டர் பதவி/ மேசன் பதவி

மேற்படி பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரு திறமைச் சித்திகள் (2) உடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தொழில்சார் தகைமைகள் :**

I. ஆரம்ப தரத்தில் (திறன் அல்லாத) மற்றும் அரைவாசி திறன் பதவியொன்றில் குறைந்தபட்ச 05 வருடத்திற்கு குறையாத தொடரான திருப்திகரமான நிரந்தர சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல்.

II. பதவியுடன் சம்பந்தப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் கைத்தொழில்/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் தேசிய தொழில்சார் தகைமையுடன் 4ம் மட்டம் (NVQ4) இற்கு குறையாத மட்டத்தில் தேர்ச்சி சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அனுபவம் :** அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் குறித்த அலுவல் பற்றிய 05 வருட அனுபவம் இருத்தல்.
(சான்றிதழ்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்)

**வயது :** 18 வயதிற்கு குறையாது இருப்பதுடன் 30 வருடத்திற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

**வேறு :** ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

**சம்பள குறியீடு :** PL2-III தரம்

**சம்பள அளவு :** ரூ.34,090 - 10x365-37,740/- (மாதாந்தம்)

II. மேற்படி சம்பளத்திற்கு மேலதிகமாக சகல அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**சேவை நிபந்தனைகள் :**

நிரந்தர அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியின் உரித்துடன்.

அரச சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் நிறுவன தலைமையூடாக நேரடியாக பிரதியொன்றை சமர்ப்பித்து அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படின் விடுவிக்க முடியும் என்பதை நிறுவனத் தலைமையின் உறுதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.

பதவிக்கு நியமிக்கும் அல்லது நியமிக்காதிருக்கும் உரிமை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் நிர்வாகச் சபைக்கு உரித்தாகும். விண்ணப்பிக்கும் பதவியை உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரிகளால் தமது முழுமையான சுயதரவு மற்றும் உறவினர் அல்லாத பரிந்துரைப்பவர்கள் இருவரின் பெயருடன் 2024.09.09ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணுபவருக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை**
**2024.08.22**

---

### மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபை

# வெற்றிடங்கள்

மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் முகாமைத்துவச் சபையின் கீழ்க்காணும் வெற்றிட பதவியை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பாதுகாப்பு உதவியாளர் IIIம் தரம் (15 வெற்றிடங்கள்)
2. தொழில்நுட்பவியலாளர் (இலத்திரனியல்/ மின்) - IIIம் தரம் (02 வெற்றிடங்கள்)
3. தொழில் நுட்பவியலாளர் (கட்டிடம்/மேசன்) - IIIம் தரம் (01 வெற்றிடம்)

விண்ணப்பங்கள் 09.09.2024 அல்லது அதற்கு முன்பு அனுப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் இணைய தளத்திற்கு பிரவேசியுங்கள் https://moj.gov.lk/images/SCCB/VACANCY-SCCB.pdf

**பிரதம நிறைவேற்று அதிகாரி/மார்ஷல்,**
**மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,**
**த.பெ. 223, கொழும்பு -12.**
**தொ. பே. 011-2437501**

---

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 011 2 129 347
011 2 429 383 011 2 429 342/343

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் மருத்துவ நிபுணர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Consultant Cardiologist - 02 Vacancies
2. Consultant Urologist
3. Consultant Ophthalmologist
4. Consultant in Plastic Surgeon
5. Consultant in Sports & Exercise Medicine
6. Consultant Neuro Surgeon

**தகைமைகள்** : இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்திலிருந்து (PGIM) இயைபுடைய நிபுணத்துவத்திற்கான MD சபைச் சான்றிதழ் சகிதம் அரசாங்க அல்லது தனியார்துறை வைத்தியசாலைகளில் மருத்துவ நிபுணராகவிருத்தல்.

**வயது** : விண்ணப்பதாரர்கள் 50 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : ரூபா 118,800.00 - 12x3645.00 - 162,540.00 மாதாந்தம்.
இதற்கு புறம்பாக அரசாங்கத் துறைக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்**: நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவன தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2024-09-09ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
2024-08-01.

---

# கொள்வனவு அறிவித்தல்

## இலங்கை கடற்படை

### பாதுகாப்பு அமைச்சு

**2024 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2026 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக இலங்கை கடற்படையின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்ய செடான் வகையின் 45 கார்களை வழங்குனர்களிடமிருந்து குத்தகைக்கு எடுப்பதற்காக போட்டி ரீதியிலான விலைகளின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

1. 2024 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2026 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இலங்கை கடற்படையின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்ய இலங்கை கடற்படைக்கு செடான் வகையின் 45 கார்களை விலைமனுதாரர்களிடமிருந்து குத்தகைக்கு எடுப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் 2024 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி முதல் 2026 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலாகும்.

2. இது தொடர்பாக ஆர்வம் காட்டுபவர்கள் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமான ரூபா.5,000.00 ஐ செலுத்துவதன் மூலம், நிதிப் பணிப்பாளர், இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01, க்கு செலுத்தவும். 2024 ஆகஸ்ட் மாதம் 26 திகதியில் இருந்து 2024 செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப 10.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்குமிடையில் சிரேஷ்ட பணியாளர் அதிகாரி (பழுதுபார்ப்பு) அலுவலகத்தில் விலைமனு ஆவணங்கள் பெற முடியும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2024 செப்தெம்பர் 19.ஆம் திகதி 1400 மணிக்கு முதல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும் (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்).
   - அ. விலைமனு ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் விலைமனுதாரர் 2014 ஆண்டு அல்லது அதற்குப் பிறகு தயாரிக்கப்பட்ட செடான் வகையின் குறைந்தபட்சம் ஐந்து (05) வாகனங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்களைக் கொண்டிருக்க வேண்டும். இலங்கையில் வாகன வர்த்தக நாமங்களின் பட்டய வாகன விற்பனையாளராகவோ அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிதி நிறுவனமாகவோ அல்லது குத்தகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் நிறுவனமாகவோ இருக்க வேண்டும்.
   - ஆ. நிலையான மூலதன வசதிகள்.
   - இ. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை
   - ஈ. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல்)
   - உ. வர்த்தக நிறுவனம்/தனி பெயர் ஐ பதிவு செய்து கொண்டுள்ள சான்றிதழ் அல்லது ஒருங்கிணைப்புச் சான்றிதழின் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. விலைமனுதாரர்கள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது விலைமனு ஆவணத்துடன் மதிப்பு கூட்டப்பட்ட வரியின் பதிவு எண்ணை சமர்ப்பிப்பது கட்டாயத் தேவையாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத விலைமனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

5. விலைமனுதாரர்கள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது கடித அட்டையின் இடதுபுறத்தில் "2024/2026 ஆம் ஆண்டிற்கான செடான் வகையின் 45 கார்களை வழங்குவது குறித்து விலைகளை சமர்ப்பித்தல்" (எஸ்பீ/எச்ஆர்/01/72/2023) விலைமனு ஆவணங்களை திறக்கும் திகதி / நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த விலைமனு ஆவணப்பெட்டியில் (டென்டர்) இட வேண்டும்.

   **தலைவர்,**
   **திணைக்களக் கொள்வனவுக் குழு,**
   **இலங்கை கடற்படை**
   **இலங்கை கடற்படை தலைமையகம்,**
   **த.பெ. இல 593,**
   **கொழும்பு 01.**

6. விலைமனு ஆவணங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதி மற்றும் நேரம் முடிந்த உடனேயே விலைமனு ஆவணங்களை திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரி அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் விலைமனு ஆவணங்கள் திறக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைமனு ஆவணங்கள் மற்றும் எழுத்துப்பூர்வ ஆதாரம் தேவைக்கேற்ப சமர்ப்பிக்கப்படாத விலைமனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும். எந்த விலைமனு விண்ணப்பத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்கும் உரிமை திணைக்களக் கொள்வனவுக் குழு தலைவரிடம் உள்ளது.

8. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

9. விலைமனு ஆவணங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி சிரேஷ்ட பணியாளர் அதிகாரி (பழுதுபார்ப்பு), இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01. என்ற இடத்தில் பரிசோதிக்கலாம்.

10. மேலதிக விபரங்களுக்குத் சிரேஷ்ட பணியாளர் அதிகாரி (பழுதுபார்ப்பு) தொலைபேசி 011 7 192 385, இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01 மூலம் தொடர்பு கொள்ளவும்.

11. மேற்குறிப்பிட்ட விபரங்கள் மற்றும் விலைமனு ஆவணங்கள் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான www.tender.navy.lk மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
**இலங்கை கடற்படை**
**கொழும்பு 01.**

---

# பெறுகை அறிவித்தல்

## லங்கா சதொச லிமிடெட்டுக்கு கணினி உபகரணங்களை வழங்கல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/05/131/Com.Equipment–Buffer(2)/2024
தேசிய போட்டிரீதியான விலைமனு

லங்கா சதொச லிமிடெட்டுக்கு கணினி உபகரணங்களை வழங்குவதற்கு விரும்பும் உள்ளூர் வழங்குநர்கள், உள்ளூர் முகவர்கள் மற்றும் அவர்களின் அங்கீகாரம் பெற்ற முகவர்களின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடெட், திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்புகள்: விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு.

தேவை :

| # | Item | Quantity |
|---|---|---|
| 01 | POS Machine (Full Set) | 23 |
| 02 | POS Machine | 08 |
| 03 | POS Printer | 10 |
| 04 | Barcode Scanner | 05 |
| 05 | Cash Drawer | 06 |
| 06 | Desktop PC | 28 |
| 07 | Document Printer (Monochrome Laser) | 08 |
| 08 | Dot Matrix Printer (Voucher) | 13 |
| 09 | Network Switch (16 Port) | 21 |
| 10 | Network Cable Box | 05 |
| 11 | Laptops | 20 |
| 12 | UPS | 100 |

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 5,000.00 ரூபா (மீளளிக்கப்படாதது) கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2024 ஒகஸ்ட் 26 ஆம் திகதி தொடக்கம் 2024 செப்டெம்பர் 18 ஆம் திகதி வரை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து அங்கீகார கடிதத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை பெற முடியும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள முகவரியில் 2024 செப்டெம்பர் 11 ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு இடம்பெறும்.

விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 18 ஆம் திகதி பி.ப. 01.00 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது மேலுள்ள முகவரியில் விலைக்கேட்பு பெட்டியில் இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/131/Com.Equipment–Buffer(2)/2024"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் உள்ளூரில் இயங்கும் உரிமம் பெற்ற வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட கூறுவிலையிடப்பட்ட பெறுமதியில் இருந்து நிபந்தனையற்ற 1% விலைமனு பிணையை (மீளளிக்கப்படும்) கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 18 ஆம் திகதி பி.ப. 01.00 இற்கு மூடப்படுவதோடு விலைமனுதாரர்கள் முன்னிலையில் அதன் பின் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

ஏதேனும் தெளிவை பெறுவதற்கு, தொடர்புகொள்ளவும்,
நிர்வாக சிக்கல்களுக்கு (திலினி) - 0701560428
தொழில்நுட்ப விடயங்களுக்கு (ஷாஜா) - 070 3611438

இந்த ஒப்பந்தம்/ கேள்விமனு தொடர்பில் இறுதி முடிவு லங்கா சதொச லிமிடெட், பெறுகைக் குழுவின் தலைவரினால் எடுக்கப்படும்.


**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**லங்கா சதொச லிமிடெட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02**

---

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361



## எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???

இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமைமிக்க ஊழியர்களை கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவ பண்புகளுடைய, முன்னனுபவமுள்ள தொழில் வல்லுனர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பிரதான உள்ளக கணக்காய்வாளர் (CIA)

**முக்கிய தேவைகள்**

- ஆகக் குறைந்தது பின்வருவனவற்றில் ஒன்றில் தொழில் நிபுணத்துவ உறுப்புரிமை
  - அ) இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம்.
  - ஆ) இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டய கணக்காளர் நிறுவனம்.
  - இ) சான்றளிக்கப்பட்ட இங்கிலாந்து கணக்காளர் சங்கம்.
  - ஈ) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் இங்கிலாந்து - இலங்கை அல்லது வேறு எந்தவொரு தொழிற்சார் தகைமை.
- சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (பிரதான முகாமையாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட, அவற்றில் 05 வருட கால உதவி பொது முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட) 08 வருட அனுபவம் காணப்படவேண்டியதுடன் அதில் 05 வருடங்கள் வங்கியொன்றிலோ அல்லது நிதி நிறுவனமொன்றில் உள்ளக கணக்காய்வுப் பிரிவில் முன்னனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
- தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு தொழில் நுணுக்கங்களுடன் கையாளக்கூடிய சிறந்த அனுபவம்.
- ஆளணி முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை மட்டத்தில் இயங்கக்கூடிய தன்மை தொடர்பில் நிரூபிக்கக் கூடிய வகையில் அறிக்கைகளை முன்வைக்க வேண்டும்.
- வங்கித்துறையில் கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகள் பற்றிய பரிச்சயம் மற்றும் சர்வதேச நிதியறிக்கைகள் அறிக்கையிடல் நடைமுறை (IRFS) அறிவியலுடனான பிரகடனப்படுத்தக் கூடிய தேவைப்பாடுகள்.
- வயது - 56 வருடங்களுக்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்.

### பிரதான இடர் அதிகாரி

**முக்கிய தேவைகள்**

- வங்கியியல் தொடர்பில் தொழிற்தகைமை அல்லது பட்டப்பின்படிப்பு தகைமை ஒன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ICASL/ICA (England and Wales)/ACCA (UK)/CMA(UK)/(SL) போன்றவற்றில் ஒரு தொழிற்துறை நிறுவனத்தின் அங்கத்துவம் பெற்றிருத்தல்.
- சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 08 வருட கால முன்னனுபவத்துடன் (பிரதான முகாமையாளர் மற்றும் அதற்கு மேற்பட்ட, அவற்றில் 05 வருட கால உதவி பொது முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட) அதில் 03 வருடங்கள் வங்கியொன்றிலோ அல்லது நிதி நிறுவனமொன்றில் இடர் முகாமை அல்லது நிதி அல்லது கணக்காய்வுப் பிரிவில் முன்னனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
- கடன் மதிப்பீடு மற்றும் அனுமதியளிக்கும் நடைமுறைகள் தொடர்பிலான திறன் அனுகூலமாகக் கொள்ளப்படும்.
- வயது - 56 வருடங்களுக்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்**

03 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டு வருடாந்தம் செயற்றிறன் மதிப்பீடு மேற்கொள்ளப்படும் குறித்த பதவியானது நிறுவன முகாமைத்துவ (பிரதி பொது முகாமையாளர் தரத்திற்கு இணையான) பதவி நிலையாகும்.

**சம்பள கொடுப்பனவுகள்**

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் தகைமைகள் மற்றும் முன் அனுபவங்கள் தொடர்பில் கலந்துரையாடி கவர்ச்சிகரமான கொடுப்பனவுகளுடனான சம்பளம் அளிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இருவரின் தொடர்பு கொள்ளக்கூடிய விபரங்களுடன் உங்கள் சுயவிபரங்களை உட்படுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை 2024 செப்டெம்பர் மாதம் 03ம் திகதி அல்லது அதற்கு முன்னர் **careers@rdb.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அதில் விடயம் (Subject) எனும் பகுதியில் உரிய பதவி நிலையினைக் குறிப்பிடுங்கள்.

மேற்கூறிய தகைமைகளைக் கொண்டிருக்க தவறும் அல்லது தவறான தகவல்களை உட்படுத்தி தயாரிக்கப்படும் விண்ணப்பப்படிவம் ஆட்சேர்ப்பு படிமுறையின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்த மற்றும் இவ் ஆட்சேர்ப்பினை பிற்போட அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கே உரியதாகும்.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk

---

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

LECO

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| பாவனையாளர் சேவை நிலையம் / கிளை அலுவலகம் | விலைக்கோரல் இலக்கம் பெறுகையின் தலைப்பு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டிய விபரங்கள் | விலைக்கோரல் விபரங்கள் | எதிர்பார்க்கும் வாடகை / குத்தகை ஒப்பந்தக் காலம் | விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் / நேரம் |
|---|---|---|---|---|
| நீர்கொழும்பு | நீர்கொழும்பு - லெகோ பாவனையாளர் சேவை நிலையத்திற்காக கட்டிடத்துடன் கூடிய காணியொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல். LECO/24/NCB/PR4/257 | வ/ப இலங்கை மின்சார தனியார் நிறுவனத்தின் நீர்கொழும்பு பிரதேசத்தில் விசேடமாக கட்டுநாயக்க முதல் கொப்பரா சந்தி வரையான பிரதேசத்தில் பாவனையாளர் சேவை நிலையமொன்றுக்குப் பொருத்தமான பிரதான வீதிக்கு முகப்பாக மற்றும் அண்மையில் அமைந்துள்ள நீர், மின்சாரம், வடிகாலமைப்பு, தொலைபேசி மற்றும் 4 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதிகளுடன் கனரக வாகனங்கள் நுழையக்கூடிய 20 அடிக்குக் குறையாத பிரவேச பாதையைக் கொண்ட 30 - 40 பேர்ச்சிற்கு இடைப்பட்ட காணியில் அமைந்துள்ள சுமார் 5,500 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டிடமொன்று தேவையாகவுள்ளது. காணியைச் சுற்றி மதிலொன்று இருந்தால் மிகவும் உசிதமாகும். | இரண்டு வருடங்கள் | 2024-09-06 பி.ப. 3.00 மணி |
| கோட்டே | லெகோ கோட்டே கிளையின் மத்தியப்படுத்தப்பட்ட பராமரிப்புப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல். LECO/24/NCB/PR4/281 | இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் கோட்டே கிளையின் மத்தியமயப்படுத்தப்பட்ட பராமரிப்புப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கோட்டே கிளை அதிகாரப் பிரதேசத்தினுள் கொலன்னாவ, வெல்லம்பிட்டிய, கொட்டிகாவத்தை, IDH மற்றும் மாமரச் சந்திக்கு எல்லையாக, பிரதான வீதிக்கு அண்மையில், சுமார் 3 வாகனங்களை நிறுத்தக்கூடிய, நீர், மின்சாரம், வடிகாலமைப்பு, தொலைபேசி வசதிகள் சகிதம், சுமார் 18 பேர்ச் காணியில் அமைந்துள்ள 1,200 சதுர அடிக்குக் குறையாத, 2 அறைகள், விறாந்தை, பென்றி, உணவு அறை, 2 மலசலகூடங்கள், குளியலறையொன்று, கராஜ் ஒன்று மற்றும் ஏனைய சகல வசதிகள் சகிதம் கட்டிடமொன்று வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவையாகவுள்ளது. காணியைச் சுற்றி மதிலொன்று இருந்தால் மிகவும் உசிதமாகும். | இரண்டு வருடங்கள் | 2024-09-06 பி.ப. 3.00 மணி |
| மொரட்டுவ | லெகோ மொரட்டுவ கிளையின் மத்தியப்படுத்தப்பட்ட பராமரிப்புப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல். LECO/24/NCB/PR4/282 | இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் மொரட்டுவ கிளையின் மத்தியமயப்படுத்தப்பட்ட பராமரிப்புப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக புதிய காலி வீதி, எகொட உயன, பழைய காலி வீதி, ஹொரேதுடுவ பாலம் மற்றும் கட்டுபெத்த சந்திக்கு எல்லையாக, 20 அடி அகலமான வீதி சகிதம் பிரதான வீதிக்கு அண்மையில், ஒரே தடவையில் 2 அல்லது 3 வாகனங்களை நிறுத்தக்கூடிய, நீர், மின்சாரம், வடிகாலமைப்பு, தொலைபேசி வசதிகள் சகிதம், சுமார் 30 பேர்ச் காணியில் அமைந்துள்ள 1,200 சதுர அடிக்குக் குறையாத, 2 அறைகள், விறாந்தை, பென்றி, உணவு அறை, 2 மலசலகூடங்கள், குளியலறையொன்று, கராஜ் ஒன்று மற்றும் ஏனைய சகல வசதிகள் சகிதம் கட்டிடமொன்று வாடகைக்கு அல்லது குத்தகைக்குத் தேவையாகவுள்ளது. காணியைச் சுற்றி மதிலொன்று இருந்தால் மிகவும் உசிதமாகும். | இரண்டு வருடங்கள் | 2024-09-06 பி.ப. 3.00 மணி |

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024-09-06ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒவ்வொரு விலைக் கோரலுக்கும் 5ஆம் நிரலில் தரப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம் வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் திறக்கப்படுதல், விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து இடம்பெறும். விலைமனுதாரரால் இந்தப் பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவத்தில் உள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்தப் பெறுகைக்கான கேள்விப் படிவங்களை www.leco.lk (''கேள்வி அறிவித்தல்'' பகுதி) இணையதளத்தில் அல்லது www.promise.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து அல்லது 011-2371637 எனும் இலக்கத்தின் ஊடாக LECO பிரிவைத் தொடர்புகொண்டு எவ்விதக் கட்டணமும் செலுத்தாமல் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மற்றும் நேரத்திற்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். (தபாலில் அனுப்பப்படும் விலைமனுக்கள், விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரத்திற்கு முன் இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்திற்குக் கிடைத்தல் வேண்டும்.)

இடத்தில் உரிமையாளர்கள் மட்டும் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானால் தயவு செய்து மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவின் தலைவரை 011-2371600 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளவும்.

PROCUREMENT NOTICE
www.leco.lk

**பொது முகாமையாளர்,**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

LECO

---

PGIE POST GRADUATE INSTITUTE OF ENGLISH

## ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம் (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)

## பணிப்பாளர் பதவி

இலங்கை திறந்த பல்கலைக்கழக, ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து 2024.09.24 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப இறுதித் திகதிக்கு 63 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர் பட்டப்பின்படிப்பு தகைமைகள் (ஆங்கிலம்/ ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான துறையில் கலாநிதிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் விரும்பத்தக்கது) மற்றும் நிர்வாக அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். வெற்றிகரமான அபேட்சகர் பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச கல்விசார் நிறுவனங்களில் உள்ள ஏனைய அமைப்புகளுடன் பணி உறவுகளை நிறுவுவதற்கு மற்றும் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்க பொறுப்பு வகிப்பார். அவர் சிறந்த ஆளிடை திறன்களை பெற்றவராகவும் நிறுவனத்தின் சமூகத்திற்கான பொறுப்புகள் பற்றி புரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தொலைக் கல்வி முறையில் கற்பித்தல்/ கற்றலில் உள்ள அனுபவம் அனுகூலமாக அமையும்.

2005இன் 04 ஆம் இலக்க ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவக கட்டளை விதிகளின்படி, பணிப்பாளரானவர் நிறுவனத்தின் முழு நேர அதிகாரியாகவும், முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும், முதன்மை கல்விசார் அதிகாரியாகவும், கணக்கு பொறுப்பு அதிகாரியாகவும் இருப்பார். பணிப்பாளரானவர் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் தலைவர் மற்றும் கல்விசார் குழுக்களின் பதவிவழி உறுப்பினராவார். நியமிக்கப்படும் பணிப்பாளர், நியமனத் திகதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்காக அல்லது 65 ஆவது வயது பூர்த்தி செய்வது ஆகிய நிகழ்வுகளில் முதலில் ஏற்படும் நிகழ்வு வரை பதவி வகிப்பார்.

ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம் நிறுவப்பட்டது குறிப்பாக ஆங்கில மொழி கற்பித்தல் (ELT) மற்றும் ஆங்கில ஆசிரியர் கல்வியை வளர்ப்பது மற்றும் மேம்படுத்துவதற்காகும். கடந்த ஆண்டுகளில் நிறுவகத்தின் வளர்ச்சி கணிசமான முன்னேற்றம் கண்டிருப்பதோடு இன்று இந்த நிறுவனம் பலவிதமான ஆங்கில கற்றல்கள் தொடர்பான துறைகளில் கற்கைகளை வழங்குகிறது.

சிறந்த கல்விப் பின்னணி, சிறப்பான ஆய்வு மற்றும் முகாமைத்துவ பதிவு மற்றும் சவால்களை சந்திக்கும் பார்வையுடனான ஒருவரை முகாமைத்துவ சபை தேடுகிறது.

U - AC 5 – (ரூபா.117,350-13X2700-152,450/) சம்பள அளவு மற்றும் பதவிக்கு பொருந்துகின்ற கொடுப்பனவுகளை பெற பணிப்பாளர் தகுதி பெறுவார். தற்போது அரச சேவையில் உள்ளவர்கள் மற்றும் மேற்கூறிய சம்பள அளவின் ஆரம்பத்தை விட அதிகமாக சம்பளம் பெறுபவர்கள் சமமான சம்பள புள்ளியில் வைக்கப்படுவார்கள். 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு விண்ணப்பதாரர் ஒரு ஆசிரியராயின், அடிப்படை சம்பளத்தின் 203% கல்விசார் கொடுப்பனவு ஒன்று அவருக்கு வழங்கப்படும்.

**பணிப்பாளருக்கு வழங்கப்படும் ஏனைய நன்மைகள்:**

- அரசு அங்கீகரித்த போக்குவரத்து கொடுப்பனவுகள்
- அடிப்படை சம்பளத்தின் 12% உபசரிப்பு படி
- பல்கலைக்கழக சேமலாப நிதிய (UPF) பங்களிப்பு.
- ஊழியர் நம்பிக்கை நிதிய (ETF) பங்களிப்பு.

**விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.**

- விண்ணப்பதாரரின் பிறந்த திகதி உட்பட முழுமையான சுயவிபரக் கோவையின் பிரதி ஒன்று
- பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் நிறுவகத்தை அபிவிருத்தி செய்வது பற்றிய பார்வை மற்றும் விண்ணப்பதாரரின் அடைவு நோக்கு பற்றிய சுருக்கமான அறிக்கை.
- பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என்பதை குறிப்பிடும் தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம் (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள், அரச சேவை, கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தும்.)

குறுகிய பட்டியலுக்கு தேர்வு செய்யப்பட்டால், விண்ணப்பதாரர் நிறுவகம் தொடர்பில் தமது பார்வை பற்றி அவர் முகாமைத்துவ சபைக்கு முறையாக அறிவிப்பதற்கு கோரப்படுவர். பணிப்பாளர் பதவிக்கான தேர்வு நடைமுறை நியமன நடைமுறைக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட 2024.01.01 ஆம் திகதிய 01/2024 ப.மா.ஆ. சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை 2024.09.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் டபிள்யு.டி.டீ. திலகரத்ன, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், த.பெட்டி 21, நாவல, நுகேகொட என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறை ஒன்றில் கைகளால் சேர்த்தல் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பணிப்பாளர் பதவி/ PGIE'' என்று பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.

முழுமை பெறாத அல்லது தேவைகளுக்கு இணங்காத அல்லது இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தவிர, PDF வடிவில் மேலுள்ள ஆவணங்களுடன் வேறு ஏதேனும் ஆதார ஆவணங்களையும் சேர்த்து மென் பிரதி ஒன்றாக sarpgie@ou.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 2024 ஜனவரி 1 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க ப.மா.ஆ. ஆணைக்குழு சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

**டபிள்யு.டி.டீ. திலகரத்ன**
**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ முகாமைத்துவ சபை செயலாளர்**
**ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**த.பெட்டி 21, நாவல, நுகேகொட - தொலைபேசி 011-2825805**
**2024 ஓகஸ்ட் 25**

---

## விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIS)

### பேராதனை பல்கலைக்கழகம்

## பணிப்பாளர் பதவி

பேராதனை பல்கலைக்கழக, விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் (PGIS) பணிப்பாளர் பதவிக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகமானது விஞ்ஞானத் துறையில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகளை வழங்குதல், முன்னெடுத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நோக்கத்திற்காக 1996 ஆம் ஆண்டு தேசிய நிறுவகம் ஒன்றாக நிறுவப்பட்டது. PGIS நிகழ்ச்சித் திட்டத்தில் உயிர் இரசாயனம் மற்றும் உயிரியல், உயிர் மருத்துவ விஞ்ஞானங்கள், இரசாயன விஞ்ஞானங்கள், புவி விஞ்ஞானங்கள், சுற்றுச்சூழல் விஞ்ஞானம், கணிதவியல், பௌதீகவியல், தாவர விஞ்ஞானம், விஞ்ஞானக் கல்வி, புள்ளிவிபரம் மற்றும் கணினி விஞ்ஞானம் மற்றும் விலங்கியல் விஞ்ஞானம் ஆகிய பதினொரு துறைகளில் கற்கைகள் நடத்தப்படுகின்றன.

PGIS இன் கட்டளையின் பிரகாரம், பணிப்பாளரானவர் முழு நேர அதிகாரி என்பதோடு முதன்மை நிறைவேற்று அதிகாரி, முதன்மை கல்விசார் அதிகாரி மற்றும் நிறுவகத்தின் கணக்கு அதிகாரியுமாவார். பணிப்பாளரானவர் முகாமைத்துவ சபை, ஒருங்கிணைப்புக் குழுவின் பதவி வழி உறுப்பினர் மற்றும் தலைவர் என்பதோடு நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கை சபையின் பதவி வழி உறுப்பினர் ஒருவருமாவார். இந்தப் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் என்பதோடு விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாகவும் விண்ணப்ப இறுதித் திகதிக்கு 63 வயதுக்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர் ஆய்வு மற்றும் நிர்வாக அனுபவத்தின் சிறந்த களப் பதிவு ஒன்றுடன் மேல் குறிப்பிடப்பட்ட விஞ்ஞான துறைகளில் ஏதாவதொன்றில் பட்டப்பின்படிப்பு தகைமையை பெற்றிருத்தல் வேண்டும். கல்வி நிறுவகம் ஒன்றில் நிர்வாக அனுபவம் அனுகூலம் ஒன்றாக அமையும். வெற்றிகரமான அபேட்சகர் பலதரப்பட்ட கல்விச் சூழல் ஒன்றில் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான சிறந்த ஆளிடை திறன்களை பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பதோடு சமூகத்திற்கான நிறுவகத்தின் கடப்பாட்டை தெரிந்திருத்தல் வேண்டும். அவர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் முகாமைத்துவ சபையின் முடிவுகளை செயற்படுத்துவதற்கும் பொறுப்பாவார்.

விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்:

I. பிறந்த திகதி, வெளியீடுகளின் பட்டியல், வகித்த நிர்வாக பதவிநிலைகள் மற்றும் கல்வி/ தொழில்முறை அடைவுகள் உள்ளடங்கிய விண்ணப்பதாரரின் விரிவான சுயவிபரக் கோவை.

II. நிறுவகத்தின் மேம்பாட்டுக்கான நோக்கின் அறிக்கை ஒன்று.

III. நியமிக்கப்பட்டால் முன்மொழியப்படும் அடைவுகள் தொடர்பில் சுருக்கமான விபரம் ஒன்று.

IV. பதவியில் உள்ள பணிப்பாளர் அல்லது இதற்கு முன்னர் நிறுவகத்தின் பணிப்பாளராக பதவி வகித்தவர் விண்ணப்பதாரராயின் அவரது முதல் பதவிக் காலத்தில் பெற்ற அடைவுகள் தொடர்பில் குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

V. விண்ணப்பதாரர்கள் அரச சேவை, கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபைகள் அல்லது உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் பட்சத்தில், நியமனம் பெற்ற விண்ணப்பதாரரை விடுவிக்க முடியும் என்பதை குறிப்பிட்டு தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம் ஒன்று.

விண்ணப்பங்களை 2024 செப்டெம்பர் 24 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு சிரேஷ்ட உதவி பதிவாளர், விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம், பேராதனை பல்கலைக்கழகம், த.பெட்டி: 25, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி, விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம், த.பெட்டி 25, பேராதனை பல்கலைக்கழகம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

தவிர, மேலுள்ள ஆவணங்கள் மற்றும் வேறு எந்த ஒரு ஆவணங்களையும் PDF வடிவத்தில் மென் பிரதிகளில் sar@pgis.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். மேலதிக விபரங்களுக்கு, சாதாரண அலுவலக நேரங்களில் 081-2394782 என்ற தொலைபேசி இலக்கத்தில் PGIS, சிரேஷ்ட உதவிப் பதிவாளரை தொடர்புகொள்ளவும் அல்லது www.pgis.lk என்ற PGIS இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2024 ஜனவரி 01 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட முறையை பின்பற்றி தேர்வு மேற்கொள்ளப்படும். பணிப்பாளர் பதவியின் நியமன நடைமுறை தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம்
2024 ஓகஸ்ட் 25

# மக்கள் விரும்பும் மாற்றுச் சிந்தனை கொண்டவன் நானே!

## மவ்பிம மக்கள் கட்சியின் தலைவர், ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர

- யாருக்கு வாக்களிப்பது என இன்னும் முடிவு செய்யாத 40% பேர் மூலமாக நாம் அலையை உருவாக்க வேண்டும்.
- நாங்கள் வேறுபட்ட மூலோபாய திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

**மக்களின் வேட்பாளர் நீங்களே என்றும், ஏனைய வேட்பாளர்கள் அதிகாரத்தைப் பெறுவதற்காக மட்டுமே போட்டியிடுவதாகவும் நீங்கள் கூறுகிறீர்கள். நீங்கள் எவ்வாறு மக்கள் வேட்பாளரானீர்கள்?**

எமது இலங்கையின் அரசியலை நாம் தொடர்ந்து அவதானிப்போமேயானால், அனேகமாக எந்தவொரு வேட்பாளரும் பெரும்பாலும் கொள்கை விளக்கங்களை வழங்கியிருந்தாலும் அவர்கள் வரலாறு முழுவதிலும் அவற்றை நிறைவேற்றியிருக்க மாட்டார்கள்.



நாங்கள் அதற்கு முற்றிலும் வேறுபட்ட மூலோபாய திட்டத்தை முன்வைத்துள்ளோம். நாம் தேர்தல் விஞ்ஞாபனத்திற்குப் பதிலாக மூலோபாயத் திட்டத்தையே முன்வைத்துள்ளோம். இந்த இரண்டுக்கும் இடையிலான வித்தியாசமாக இருப்பது மூலோபாயத் திட்டத்தை முன்வைப்பது எப்படி? எப்போது? என்பதாகும். அவ்வாறு நடக்காவிட்டால் என்னவாகும் என்ற நிலைப்பாடாகும். அவ்வாறு நடக்காவிட்டால் இந்த அறிக்கையை சட்ட ஆவணமாக கருதி சட்ட நடவடிக்கையும் கூட எடுக்கும் நிலை ஏற்படும். இவற்றையெல்லாம் மக்கள் பக்கத்திலிருந்து செய்ய முடியும்.

அதற்குத் தேவையான ஏற்பாடுகள் எங்கே உள்ளன? அவற்றை எவ்வாறு செயற்திறன்மிக்க வகையில் பயன்படுத்துவது? என்ற விடயங்களை நாம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம். இதனால்தான் நான் மக்கள் வேட்பாளர் என்கிறேன்.

**மற்றைய வேட்பாளர்கள் மக்களுக்காக நிற்கவில்லை என்றா கூறுகின்றீர்கள்?**

ஆமாம். இந்த பிரதான மூன்று கட்சிகளும் சரியான வேலைத்திட்டங்களை இன்னமும் முன்வைக்கவில்லை. எதிர்வரும் நாட்களில் அவர்கள் முன்வைப்பார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்கள் பொதுமக்களின் பங்களிப்பு இல்லாமலேயே முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்கள் என்பது தெளிவானது. நாங்கள் இரண்டு வரைவுகளை சமர்ப்பித்துள்ளோம். 7 கட்சிகள் இணைந்து தயாரித்த ஆவணத்தை மக்களிடம் கொண்டு சென்று கருத்துகளைப் பெற்றுக் கொண்டோம். தற்போது இரண்டாவது வரைவினை முன்வைத்துள்ளோம். இதனை அறிஞர்கள் மற்றும் நிபுணர்களிடம் சமர்ப்பித்துள்ளோம். மக்களிடமிருந்து வெளிப்பட்ட மூலோபாய திட்டத்தில் இருந்து கொண்டுதான் செயல்படுவோம் என்பது தெளிவாகிறது. ஆனால் மற்றைய வேட்பாளர்கள் அவ்வாறு சிந்திப்பதில்லை. எனது முன்வைப்பானது மக்களுக்கு மகிழ்ச்சியான ஒரு சூழலை உருவாக்குவதற்கேயாகும்.

**நீங்கள் ஒரு தொழில் முயற்சியாளர். நாட்டை ஆட்சி செய்வதற்குத் தேவையான அனுபவம், ஆற்றல் உங்களிடம் இருக்கின்றது என நீங்கள் நம்புகின்றீர்களா?**

என்னிடத்தில் தொழில் முயற்சி அனுபவங்கள் உள்ளன. அதே போன்று நான் மறைமுக அரசியலில் ஈடுபட்ட ஒருவராகும். மூன்று ஜனாதிபதி தேர்தல்கள் உட்பட 5 தேர்தல்களில் செயற்பட்டுள்ளேன். அதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மிகுந்த அனுபவத்தைக் கொண்டவன் நான். மற்றைய எல்லா வேட்பாளர்களை விடவும் நான் முன்னணியில் இருக்கிறேன் என்பதோடு, இந்த விவகாரங்களை நிர்வகிப்பதில் எனக்கு நிறைய அனுபவம் உள்ளது.

**நாட்டை ஆட்சி செய்வதற்கான அனுபவம் உங்களிடம் இருக்கின்றது என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

ஒரு ஜனாதிபதியிடம் இருக்க வேண்டிய பாரம்பரியமாகக் கூறப்படும் அரசியல் அனுபவத்தை நான் முக்கியமற்ற ஒரு காரணியாகவே கருதுகிறேன். நான் சுமார் 30 வருடங்களாக தனியார் நிறுவனங்களில் செயற்பட்டிருக்கின்றேன். அதில் நான் நிர்வாகத் திறமையை நிரூபித்த ஒருவனாவேன். மிகவும் கடினமான சூழ்நிலைகளை முகாமைத்துவம் செய்து வெற்றி பெற்றிருக்கின்றேன்.

அந்த அறிவினை அரசியலில் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றே நான் நினைக்கிறேன். மறுபுறம், அரசியல் அனுபவம் இல்லை என்பது தைரியம் இல்லை என்பதுதானே.. இந்த அப்பாவித்தனம்தான் அரசியலுக்கு ஏற்பட்ட விதியாகும். தந்திர வேலைகளைச் செய்வதற்கு நான் விரும்பவில்லை. எனது அனுபவத்தை பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த அரசியலை உருவாக்க வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும்.

**மற்றைய முக்கிய வேட்பாளர்கள் மக்களுக்காக சில சில விடயங்களைச் செய்திருக்கின்றார்கள். அவ்வாறு மக்களுக்கு நீங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள்?**

''மனுசத் தெரண'' போன்ற பாரிய சமூக நலத்திட்டத்தின் நிறுவனர் நான். இது கிட்டத்தட்ட 6000 கிராமங்களை உள்ளடக்கியது. இவை மக்களின் துன்பத்தை குறைக்கும் வேலைத்திட்டங்கள்தான். பிரபலமாக இல்லாவிட்டாலும் தனிப்பட்ட முறையில் நிறைய பணத்தை பொது வேலைகளுக்காகச் செலவிட்டுள்ளேன். நான் அரசுக்கு வரி செலுத்துபவன். எந்த ஒரு வேட்பாளரும் வரி செலுத்துபவர்கள் அல்ல.

நான் கோடிக்கணக்கான வரியையும், ஈடிஎஃப், இபிஎஃப் வரிகளையும் செலுத்தியுள்ளேன். அவர்களை விட எனக்கு அதிக உரிமை உள்ளது. இலவசக் கல்வியைக் கற்று இங்கு வந்த எனக்கு மற்றவர்களை விட அதிக தகுதிகள் உள்ளன. மற்ற வேட்பாளர்களுக்கு அந்த தகுதிகள் இல்லை. பெட்டிக்கடை ஒன்றையோ செய்யாதவர் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்ற ஒரு கூற்று உள்ளது. நான் பெட்டிக் கடையை அல்ல. பல்வேறு துறைகளில் பாரிய 53 முதலீடுகளைச் செய்துள்ள ஒருவன் நான். எனவே மற்றையவர்களுக்கு இணையாக நான் பெற்றுள்ள அனுபவம் மிகப் பெரியதாகும். அதனை இந்த நாட்டுக்காகப் பயன்படுத்தலாம்.

**திருடர்களைப் பிடிப்போம், நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்போம். இவை அனேக வேட்பாளர்களின் கோஷங்களாகும். தேர்தல் மேடையில் உங்கள் கோஷம் என்ன?**

அவை எதிர்மறையான கோஷங்கள். என்னிடம் நேர்மறையான கோஷங்கள் உள்ளன. நான் முன்வைத்துள்ள வேலைத்திட்டத்தில் அரசியலமைப்பை மாற்றுவது, திருடர்களைப் பிடிப்பது போன்றவற்றை விட முற்றிலும் வித்தியாசமானது. முன்பு அவை அரசியல் முழக்கங்களாக இருந்தன. நாம் சிறு வயதிலிருந்தே ஒவ்வொரு தேர்தலிலும் இந்த கோஷங்களைக் கேட்டிருக்கின்றோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்பது மற்றுமொரு பழைய கோஷம். இன்றும் இது போன்ற மிகப் பழமையான கோஷங்களே உள்ளன. இவற்றைத் தாண்டிய கோஷங்கள் இருக்க வேண்டும்.

**தற்போதைய பொருளாதாரச் சவாலுக்கு மத்தியில் நீங்கள் ஜனாதிபதியானால் உங்களுக்கும் பெரிய பணிகள் ஒப்படைக்கப்படும். அதற்கு உங்களிடத்தில் இருக்கும் வேலைத்திட்டங்கள் என்ன?**

நாம் அதற்காகவே விஞ்ஞான ரீதியான வேலைத்திட்டங்களை முன்வைத்திருக்கின்றோம். ஏனைய பிரதான மூன்று வேட்பாளர்களும் பேசுவது கடன் முகாமைத்துவத்தைப் பற்றியாகும். சுமார் 100 பில்லியனைத் தாண்டிய கடன் எமக்குள்ளது.

கடனைப் பெற்றுக் கொண்டு கடன் முகாமைத்துவத்தைச் செய்ய முடியாது என்ற அடிப்படையின் பிரகாரம் நாம் தேசிய நிதித் திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

அதற்காகவே தொழில்முயற்சியாளர்களுக்கு அரசாங்கம் ஒன்று தேவைப்படுகின்றது. இப்படிப்பட்ட ஆட்சியில்தான் செல்வத்தை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்த முடியும்.

**எம். எஸ். முஸப்பிர்**

---

## தேர்தல் களத்தில்

# ரணிலுக்கு இணையான தலைவர் எவரும் இல்லை

## ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன

- மக்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும் தேவையான அனைத்தையும் வழங்கிய தலைவர்.
- எரிவாயு சிலிண்டரே இந்த சந்தர்ப்பத்தில் இருக்கும் வலுவான சின்னமாகும்.
- சொல்லாமல் சம்பளத்தை அதிகரிப்பவர் ஜனாதிபதி.

**ஜனாதிபதி தேர்தல் களத்தில் தற்போதைய ஜனாதிபதிக்கு இணையான தலைவர் இல்லை என நீங்கள் கூறுகின்றீர்களே...?**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இணையான எந்தவொரு வேட்பாளரும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவில்லை. இது ஒரு இனத்திற்கோ, மதத்திற்கோ, சாதிக்கோ ஒரு தலைவனைத் தேடும் பயணமல்ல. நாம் ஒரு நாட்டிற்கு தலைவனைத் தேடுகிறோம். இலங்கையின் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கு தலைமைத்துவம் தேவை. பல வருட பாராளுமன்றப் பதவியும் இரண்டு வருட ஜனாதிபதி அனுபவமும் கொண்டவர் என்ற வகையில் அவருக்கு இணையானவர்கள் எவருமில்லை. இதனை இலங்கை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். சிந்தித்துச் செயற்பட வேண்டும். வருங்கால சந்ததியைப் பற்றி சிந்தித்துச் செயற்பட வேண்டும். உலக அளவில் இலங்கையை உயர்த்துவதற்கு அக்கறை காட்ட வேண்டும்.



**அவர் செய்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த எந்த வேட்பாளராலும் முடியாது என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?**

ஆம். இலங்கைத் தாய் இருந்தது அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலாகும். நோயாளி வைத்தியசாலையில் இருக்கும் போது வைத்தியர் மாற்றப்பட்டால் என்ன நடக்கும்? அப்போது நோயாளியின் நோய் தீவிரமாகும். எமது நாட்டின் தலைமைத்துவம் மாறினால் மோசமான நிலை ஏற்படக் கூடும்.

**தற்போதைய ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் போதும் கூட அதிகளவான அரச ஊழியர்கள் உள்ளிட்ட பெருமளவானோருக்கு சம்பளத்தை அதிகரிப்பதற்கும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளாரே?**

இது மிகவும் முக்கியமான கேள்வியாகும். சர்வதேச ரீதியில் எமக்கு ஆதரவளிக்கும் குழுக்களிடமிருந்து பெறப்படும் தகவல் முறைமையின் ஊடாகவே அவர் இந்த சம்பள அதிகரிப்பை செய்யவுள்ளார். பொதுமக்கள் அவரிடம் கேட்காவிட்டாலும், பொதுமக்களின் சிரமங்கள் தொடர்பில் அவருக்கு இருந்த புரிதலின் காரணமாக மக்களுக்குத் தேவையானதைக் கொடுத்த தலைவர் அவர். பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள 25 இலட்சம் குடும்பங்களின் கணக்கில் 15,000 ரூபாய் வீதம் வைப்பிலிட்டு வருகிறார். இலங்கையின் அரச துறையில் பணியாற்றும் 15 இலட்சம் ஊழியர்களில் நிறைவேற்றுத் தரத்தைச் சேர்ந்த 20,000 பேரின் சம்பளம் 25,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 14,800,000 பேருக்கு சம்பள உயர்வு கிடைக்கவில்லை. இந்தக் குழு பலவீனமடைந்தால், பொருளாதார மாற்றச் சட்டத்தின் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. தனியார் துறையில் பணிபுரியும் சுமார் 65 இலட்சம் பேருக்கு ஈ.டி.எஃப்., ஈ.பி.எஃப். ஊடாகவும், செயற்திறன் அடிப்படையிலும் சம்பளம் அதிகரிக்கப்படுகிறது. அதிர்ஷ்டசாலிகளாக இருப்பது சுயதொழில் செய்பவர்கள்தான். எனவே, இந்த ஏற்றத்தாழ்வு சமநிலையை அடைய வேண்டும். மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருப்பவர்கள் அரச துறையில் இருக்கும் 15 இலட்சம் பேராகும். ஜனாதிபதி சொல்லாமல் சம்பளத்தை அதிகரிக்கக் கூடியவர். அவர்களின் சம்பளத்தை 25 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தல் மற்றும் அரசாங்க இயந்திரத்தில் நிலவும் சம்பள ஏற்றத்தாழ்வுகளை மாற்றவும் தனியான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் மிகவும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள தரப்பினரின் சம்பளம் ஜனவரி மாதம் முதல் 25,000 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும்.

**ராஜபக்‌ஷக்களின் விலகல் தேர்தல் பிரசாரத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது?**

இது தொடர்பில் என்னால் எதனையும் கூற முடியாது. அவர்கள்தான் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்நாட்டை ஒப்படைத்தவர்கள். அந்நேரம் யாரும் நாட்டைப் பொறுப்பேற்காத, பொறுப்புக்களைத் தட்டிக்கழித்த சந்தர்ப்பத்திலேயே ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார்.

**ராஜபக்‌ஷக்கள் வெளியேறியதையடுத்து தாய் வீட்டிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். எதிர்காலத்தில் இந்த நிலையில் முன்னேற்றத்தைக் காண முடியுமா?**

ராஜபக்‌ஷக்கள் இருப்பது அல்லது இல்லாமல் இருப்பதை ஒரு முக்கிய காரணியாக நான் பார்க்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 16 முக்கியஸ்தர்கள் இதுவரை எங்களுடன் இணைந்துள்ளனர். இன்னும் வருவார்கள். இந்த தேர்தல் பிரசாரம் முழுக்க முழுக்க மக்களால் மேற்கொள்ளப்படுகிறது.

**வரும்நாட்களில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து இன்னும் பலர் உங்களுடன் இணைந்து கொள்வதற்கான சாத்தியங்கள் உள்ளனவா?**

ஆம். நிச்சயமாக உள்ளது. ஏராளமான நடுத்தர, கிராம, உயர்மட்டங்களைச் சேர்ந்த தரப்பினர் எங்களுடன் இணைந்து கொள்ள தயாராக உள்ளனர்.

**தற்போதைய ஜனாதிபதியின் வெற்றிக்காக அவரைச் சுற்றித் திரண்டிருப்பது ஐக்கிய தேசியக் கட்சியினரை விட பொதுஜன பெரமுனவினைச் சேர்ந்தவர்களேயாகும். அவர்களுடன் வரவிருக்கும் தேர்தல் திட்டம் எவ்வாறு இருக்கிறது?**

அது தவறானது. உதாரணமாக 2022 மே 12ஆம் திகதி இந்நாட்டின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க கடமைகளைப் பொறுப்பேற்ற போது கூறிய விடயம், "நாம் பிரிந்திருந்தது போதும். இந்தப் பிரச்சினையை நான் தீர்த்துத் தருகிறேன். அனைவரினதும் ஒத்துழைப்பும் எனக்கு வேண்டும்" என்பதாகும். பாராளுமன்றத்தின் அனைத்து அரசியல் கட்சிகளினதும் 134 வாக்குகளை அவருக்கு வழங்கி இணக்கப்பாட்டிற்கு வந்தோம். அந்த இணக்கப்பாடு என்னவென்றால், தேசிய கட்டமைப்புக்குள் இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றுபட்டுச் செயற்படுவதாகும். ஒற்றுமையினால் அன்று நாம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டோம். அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட எந்த தடையும் இல்லை. அதற்கான முன்னுதாரணங்கள் வரலாற்றில் உள்ளன.

**அரசியல் கட்சித் தாவல்களால் மக்களும், கட்சி ஆதரவாளர்களும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளார்கள் என நீங்கள் நினைக்கவில்லையா?**

சந்திரிகா குமாரனதுங்கவின் ஆட்சிக்காலத்தில் பிரதம நீதியரசர் வழங்கிய தீர்ப்புகளினாலேயே இந்த நிலை ஏற்பட்டது. இவ்வாறான நிலைமை மாற வேண்டும். இதற்கு அரசியலமைப்பில் திருத்தங்கள் தேவை.

எதிர்காலத்தில் சில மாற்றங்கள் செய்யப்படவே வேண்டும். எனக்கு நினைவிருக்கும் வரையில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் சுமார் நூற்று முப்பது முறை மாற்றப்பட்டுள்ளது. எனவே, தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**அவர் தெரிவு செய்துள்ள தேர்தல் சின்னம் தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றனவே? ஏன் அவ்வாறான சின்னம் தெரிவு செய்யப்பட்டது?**

அதற்கான அடிப்படை ஒன்றுள்ளது. அரசியல் கட்சிகளின் சின்னங்கள் மக்களுக்கு நினைவில் உள்ளது. அரசியல் கட்சிகளின் சின்னங்களை விட, மக்கள் தாம் பாதிக்கப்பட்டு தேடிச் சென்ற எரிவாயு சிலிண்டர் நன்றாக நினைவில் உள்ளது. அதுவே இந்த நேரத்தில் சக்தி வாய்ந்த அடையாளமாக அது உள்ளது. பொதுமக்களின் மனதில் பதிந்துள்ள சின்னம். மக்கள் இதனைத் தோளில் சுமந்துசென்று வீதியில் இறந்த சம்பவங்களும் உண்டு. மக்களின் இதயங்களில் எரிவாயு சிலிண்டர் உள்ளது.

**எம். எஸ். முஸப்பிர்**

---

# பழனியில் ஆரம்பமாகியது முத்தமிழ் முருகன் மாநாடு







பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டின் பிரமாண்ட நுழைவு வாயிலை அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, சேகர் பாபு ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

'அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு' பழனியில் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியது. குன்றக்குடி மற்றும் பேரூர் ஆதீன கர்த்தாக்கள் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். இதனைத்தொடர்ந்து முத்தமிழ் முருகன் மாநாட்டின் பிரமாண்ட நுழைவு வாயிலை அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, சேகர் பாபு ஆகியோர் திறந்து வைத்தனர்.பழனியாண்டவர் கலை பண்பாட்டு கல்லூரியில் அமைக்கப்பட்ட மாநாட்டு அரங்கத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு திருவிளக்கு ஏற்றுதல், நாதஸ்வரம், தவில் மங்கள இசையுடன் மாநாடு தொடங்கியது. காலை 8.55 மணிக்கு ரத்தினகிரி பாலமுருகனடி சுவாமிகள் மாநாட்டு கொடியை ஏற்றி வைத்தார். தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தலைமை தாங்கி கண்காட்சியை தொடங்கி வைத்தார். உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலை வகித்தார். திண்டுக்கல் எம்.பி. சச்சிதானந்தம், இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் வேல் கோட்டத்தை தொடங்கி வைத்தனர். பின்னர் சீர்காழி கோ.சிவசிதம்பரத்தின் இறைவணக்கத்துடன் மாநாடு நடைபெற்றது.

நிகழ்ச்சியில் அறநிலையத்துறை முதன்மை செயலாளர் சந்திரமோகன் அனைவரையும் வரவேற்று பேசினார். அதையடுத்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தொடக்கவுரை ஆற்றினார். தருமபுரம் ஆதீனம் தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், மதுரை ஆதீனம் ஹரிகர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். மாநாட்டு விழா மலர், ஆய்வு மலர் என்பன வெளியிடப்பட்டன.

இரண்டாவது அமர்வு வியாழக்கிழமை காலை 11 மணி முதல் 11.45 மணி வரை 'உலகளாவிய உயர்வேலன்' என்ற தலைப்பில் நடைபெற்றது. மலேசியா தொழில்முனைவோர் கூட்டுறவு துறை அமைச்சர் டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன், இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான், இங்கிலாந்து நாட்டின் இப்ஸ்விச் நகரபிதா இளங்கோ கே.இளவழகன், மலேசியா சிலாங்கூர் மாநில செயற்குழு உறுப்பினர் டி.எச்.பாப்பாராய்டு வேரமன், சுவிட்சர்லாந்து நாட்டை சேர்ந்த ஆறுமுகம் செந்தில்நாதன், அவுஸ்திரேலியாவை சேர்ந்த சந்திரிகா சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

**எம். கே. ஷாகுல் ஹமீது, எச்.எச்.விக்கிரமசிங்க**




# படித்ததும் பகர்வதும் 205



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

**மாணவர்களின் ஒழுக்கம்!?**



நாட்டின் நாளைய தலைவர்களாக வர உள்ள, இன்றைய மாணவர்களின் ஒழுக்கம் சீர்குலைந்துள்ளமை பற்றி பரவலாக பேசவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் சில மாணவர்கள் பற்றி வெளியான பயங்கரமான, அசிங்கமான, மிகக் கேவலமான தகவல் பலரது மனங்களையும் உலுக்கி விட்டு, அதிர்ச்சியினை ஏற்படுத்தியதை எவராலும் மறக்க முடியாது.

பதினெட்டு மாணவர்கள் ஒன்று சேர்ந்து, சக மாணவி ஒருவரை ஒரு வருடமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய செய்தியை இலகுவில் ஜீரணிக்கத்தான் முடியுமா? பாடசாலை கல்வியைக் கூட பூர்த்தி செய்து முடிக்க முன்னரேயே இத்தகைய கேவலமான செயலில் ஈடுபடும் வக்கிர மனோநிலையை இம்மாணவர்கள் எவ்வாறு பெற்றார்கள்? என்பது பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இவர்கள் பார்க்கின்ற சினிமாக்களின் காரணமாகவா? அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் காரணமாகவா? அல்லது வாசிக்கின்ற சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள் காரணமாகவா? அல்லது சமூக ஊடகங்களின் தவறான பாவனை காரணமாகவா? என வெவ்வேறுபட்ட காரணங்களை, இது விடயத்தில் அலசி ஆராய வேண்டியுள்ளது.

படிக்கும் போது பண்பட வேண்டிய மனம் இவ்வாறு விகாரமடைந்து, பண்பற்று நடக்கின்ற நிலைமை உருவாகியிருப்பது வேதனைக்குரிய விடயமாகவே இருக்கின்றது. இம்மாணவர்கள் இவ்வாறு ஒழுக்கக் கேடாக, மிருகத்தனமாக, மனிதாபிமானமன்றி, வாழ்வியல் விழுமியங்களை மீறி செயல்பட்டிருப்பதற்கு காரணம் இவர்களது பெற்றோரா?, ஆசிரியர்களா?, அதிபரா?, நண்பர்களா?, சக மாணவர்களா? அல்லது அனைவருமா? சிந்திக்க வேண்டியுள்ளது. ஒரு மாணவனின் நடத்தையில் அவ்வப்போது ஏற்படுகின்ற மாற்றங்களை, அவனுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள், அவனை கட்டுப்படுத்துகின்ற உயர் வகுப்பு மாணவர்கள், அவனது சக நண்பர்கள், அவனது பெற்றோர், சூழலில் வாழ்பவர்கள் என எல்லாத் தரப்பினரும் உற்றுக் கவனித்து, தேவைக்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து, அவர்களை நெறிப்படுத்த வேண்டிய தலையாய கடமை அவர்கள் மீது இருக்கின்றது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டியது அவர்கள் மீதுள்ள தார்மீக கடமையாகும். இது கட்டாயமானதும் கூட.

ஒருவனின் அசைவிலிருந்து அவனது அடுத்த செயற்பாட்டை ஊகித்து அறியக்கூடிய ஆற்றல் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும். அது அவர்கள் மீதுள்ள பாரிய பொறுப்பும் ஆகும். அத்தகைய ஆற்றல் குறைந்தவர்கள் அவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியமான விடயமாகும். இவர்கள் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள் என்பதை இத்தகைய பயங்கர நிகழ்வுகள் எடுத்துரைக்கின்றன என்றால் மிகையல்ல.

இவற்றை நன்கு சிந்தித்து, சரியான கவனமெடுத்து, முறையான நடவடிக்கைகள் மூலம் மாணவ சமுதாயத்தை ஒழுக்கமுள்ளதாக ஆக்க வேண்டிய பாரிய கடமை பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், உயர்தர மாணவர்கள், சக நண்பர்கள், சமூகத் தலைவர்கள், கல்வியியலாளர்கள், பேராசிரியர்கள், கலாநிதிகள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைத்து தரப்பினரையும் சார்ந்ததாகும் என்பதை எல்லோரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

## பிரிந்தார் பெருமை

**கலைஞர் ஆர். இராஜசேகரன்**



இலங்கையின் பிரபல தமிழ் நாடகக் கலைஞர் 'லயன்' ஆர். இராஜசேகரன் கடந்த ஆகஸ்ட் 20ஆம் திகதி (2024.08.20) தனது 66 ஆவது அகவையில் காலமானார். இலங்கை தமிழ் கலைஞர் சங்கத்தின் தலைவர், வெள்ளி நிலா கலாலயத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர், பின் அதன் செயலாளர், தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பின் நிறுவனர்களில் ஒருவர், கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழக தலைவர் என பல கலை, சமூக நிறுவனங்களில் பல்வேறு பதவிகளை வகித்து கலைக்கும், கலைஞர்களுக்கும், சமூகத்துக்கும் சேவையாற்றிய மனித நேயமிக்க கலைஞர் இவர். 'தமிழ் விவாகப் பதிவாளர்' பதவியின் மூலமாகவும் சிறப்பான சமூகப் பணியாற்றியவர். 1974ஆம் ஆண்டு சிலோன் 'யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ்' குழுவினர் மேடையேற்றிய "உறவுகள்" நாடகத்தின் மூலம் இயக்குனர் கே. செல்வராஜனால் கலைத்துறைக்கு அறிமுகம் செய்யப்பட்டவர். அதனைத் தொடர்ந்து வெள்ளிநிலா கலாலயம் மேடையேற்றிய கற்பின் கனல், கோடில்லா கோலம், கஞ்சன் கந்தசாமி, முக்கோணத்தில் மூவர், வாடகைக்கு அறை, புல்லுருவி, தோட்டத்து ராணி, களங்கம், அவளைக் கொன்றவள் நீ போன்ற பல வெற்றி நாடகங்களை தயாரித்து நடித்து புகழ் பெற்றார். சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்டேஜ் நாடகங்களான உறவுகள், பிரளயம் போன்ற நாடகங்கள் மூலமாகவும் தனது நடிப்புத் திறனை உலகறியச் செய்தார்.

இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான முதல் தமிழ் தொடர் நாடகமான "கெரி ஒன் டிரக்டர்" மற்றும் "காலங்கள்", "அவளைக் கொன்றவள் நீ", "திருப்பம்" போன்ற தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்து இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் இதயங்களில் இடம் பிடித்தார். ஆர். இராஜசேகரனின் "இருட்டிலே தேடாதீங்க" நாடகம் இலங்கையின் பல பாகங்களிலும் அதிக தடவைகள் மேடையேறியதும், இவரது தயாரிப்பில் "ஒன்று எங்கள் ஜாதியே" என்ற நாடகம் தேசிய நல்லிணக்க அமைச்சினால் மேடையேற்றப்பட்டதும் விசேடமாக குறிப்பிடத்தக்கவை.

முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, இவரது கலைச்சேவையைப் பாராட்டி "சிறந்த குணச்சித்திர நடிகர்" பட்டம் சூட்டி கௌரவித்தார். தென்னிந்திய கலைஞர்களான நடிகை தேவிகா, பாடகர் டி. எல். மகாராஜன் ஆகியோரிடமிருந்து "நவரச நாயகன்" பட்டம் பெற்றுள்ள இவர் அரசினால் 'கலாபூஷணம்' விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டுள்ளார்..

இலங்கையின் பிரபல சினிமா நடிகை ஹெலன் குமாரி ராஜசேகரன் இவரது மனைவி என்பதோடு இருவரும் இணைந்து இலங்கை தமிழ், சிங்கள கலைத்துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்புகள் காலத்தால் அழியாதவை.கலைஞர் ஆர். இராஜசேகரனின் மறைவு இலங்கை கலைத்துறைக்கு ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு என்றால் மிகையல்ல.

## அந்த நாள் ஞாபகம்

இளம் வயதிலிருந்தே சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என எழுதி வரும் வலம்புரி கவிதா வட்டத்தின் செயலாளர் பீ. எம். முர்ஷிதீன் தனது இளம் வயதிலேயே எழுதத் தொடங்கியவர். அன்று முதல் இன்றுவரை என்னோடு நட்போடு இருப்பவர். மாணவப் பருவத்திலேயே நூல்களை வெளியிட்டவர். 1988 ஏப்ரல் மாதத்தில் வெளிவந்த இவரது சிறுகதைகள், கவிதைகள், எண்ணச் சிதறல்களின் தொகுப்பான 'ஒரு வாசகனின் வாசகங்கள்' என்ற இரண்டாவது நூலில் இடம் பிடித்துள்ள, 1986இல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய இளைஞர் பரிசளிப்புப் போட்டியில் அகில இலங்கை புதிய பாடல் போட்டியில் முதலிடம் பெற்ற பாடல் இங்கே அந்த நாள் நினைவாக...

**இளசுகள் மீட்டும் கானங்கள்**



இளமைப் பூக்களின் பாடல்களே
இனிமை பூத்திடும் கானங்களே
எண்ணங்கள் – பூபாள ராகங்கள்
சின்னங்கள் – கார்கால மேகங்கள்
பொங்குமே ...
இன்பமே ... எங்குமே.
லட்சிய மலர்களின் வாசங்கள்
லட்சங்கள் மிஞ்சிடும்
வாழ்த்துக்கள்
வாழ்ந்து காட்டிடும் வாசங்கள்
வாழ்வதில் தானே சாகசங்கள்
வாழுவோம் ... வாழ்த்துவோம் ... வாழவே
மலரத் துடிக்குது சாதனைகள்
மலர்ந்து விட்டதே சிந்தனைகள்
சந்தோஷத்தால் ஆராதனைகள்
தெருக்களெங்கும் புது முகங்கள்
தேடினோம் ... பாடினோம் ... வாழ்த்தவே
நாங்கள் எழுதிய முகவரிகள்
நாளைய உலகின் புது வரிகள்
புதிய சிந்தனைச் சுந்தரிகள்
புது யுக ராஜ்ஜிய மந்திரிகள்
கீதங்கள் ... பாடுவோம் ... நாங்களே ...

## சிந்தனை செய் மனமே

**கழுதையும் குப்பைகளும்!**



ஒரு விவசாயியின் கழுதை ஒரு நாள் ஒரு கிணற்றில் விழுந்துவிட்டது. அது மணிக்கணக்கில் உள்ளிருந்து சத்தமாக கத்தியது. விவசாயி அதனை வெளியே கொண்டுவருவதற்கு எத்தனையோ விதமான முயற்சிகளை செய்தான். எதுவும் பலனளிக்கவில்லை.

அந்தக் கழுதைக்கு வயதாகிவிட்டதனாலும், ஏற்கனவே அந்தக் கிணறு வறண்டுபோய் இருந்ததனாலும் அந்தக் கிணற்றை மூடிவிட வேண்டும் என்று கடைசியாக, விவசாயி முடிவு செய்தான். உண்மையில் கழுதையை கிணற்றிலிருந்து வெளியே எடுப்பது புத்திசாலித்தனமல்ல என்பது அவனது எண்ணமாக இருந்தது.

இதனால் அக்கம்பக்கத்தில் இருந்த அனைவரையும் அவன் தனது உதவிக்கு வருமாறு அழைத்தான். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு மண்வெட்டியை எடுத்து வந்து அழுக்குகளையும், குப்பைகளையும் அள்ளி அள்ளி கிணற்றில் வீசத் தொடங்கினர்.

என்ன நடக்கிறது என்பதை உணர்ந்த கழுதை பயங்கரமாகக் கத்தியது. சிறிது நேரத்தின் பின்னர், அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் கழுதை அமைதியாகி விட்டது. கடைசியாக கிணற்றுக்குள் இறங்கிப் பார்த்த விவசாயி, வியந்து போனான். கிணற்றில் விழுந்த ஒவ்வொரு மண்வெட்டி மண்ணிலும், அழுக்குகளிலும், குப்பைகளிலும் கழுதை நம்ப முடியாத ஒன்றைச் செய்து கொண்டிருந்தது: அது அவற்றை தனது கால்களினால் அசைத்து, மண்ணின் மேல் மிதித்துக்கொண்டிருந்தது.

போடப்பட்ட அழுக்குகள், குப்பைகளினால் வெகு விரைவிலேயே அந்தக் கிணறு நிரம்பியதால், கழுதை கிணற்றின் வாயை அடைந்து, பின்னர் மிக இலகுவாக கிணற்றை விட்டு வெளியே சென்றதை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

வாழ்க்கையில் உங்கள் மீதும் அழுக்குகளும், குப்பைகளும் பிறரால் வீசப்படலாம். எல்லா வகையான அழுக்குகளும், குப்பைகளும் நீங்கள் மேல் எழுவதற்கான படிக்கற்களாக உங்களால் மாற்றப்பட வேண்டும். அவற்றை சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அசைத்து, சீர்படுத்தி அவற்றைப் பயன்படுத்தி மேலே செல்வது தான் நாம் எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சினையையும் வெற்றி கொள்வதற்கான சிறந்த வழிகளாக அமையும்.

## நொறுக்குத் தீனி

**சிந்தனைக்குச் சில..**



சாவியை தொலைத்துவிட்டு, நாம் பூட்டுக்கு தண்டனை கொடுகிறோம்.

பொருத்தமில்லாத ஜோடிகள் செருப்பாகக் கூட இருக்க முடியாது

வாசிக்காமல் வைத்திருப்பது, ஒரு புத்தகத்துக்குச் செய்யப்படும் மிகப் பெரிய துரோகம்!!

விசா இல்லாம வியட்நாம் வரைக்கும் கூடப் போயிடலாம். ஆனால், வேலை இல்லாம சொந்தக்காரன் வீட்டுக்குக் கூட போக முடியாது

குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதைக் குழந்தைகளிடம் கற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் பொம்மைகளை அடிப்பது இல்லையே.

'ஏன் எங்கிட்ட பேசல?'னு ஆரம்பிச்சு, பேசாம இருந்ததுக்காகச் சண்டை போட்டு, அதுக்குத் தண்டனையாக நம் கூடப் பேசாம இருக்கப் பெண்களால் மட்டும்தான் முடியும்.

ஒருகாலத்தில் நல்லா ஆங்கிலம் பேசறவங்களை வியந்து பார்த்த நாம, இப்ப நல்லா தமிழ் பேசறவங்களை வியந்து பார்க்கிற நிலைமைக்கு ஆளாகிட்டோம்

காசு கொடுத்துக் கடவுளைப் பார்த்து, கடவுளுக்கும் காசு கொடுத்து, கடைசியில கடவுள்கிட்டயே காசு வேணும்னு கேட்கிறவன்தான் மனிதன்!

சதுரங்கத்தில் கூட 'மந்திரிகள்' நேர் வழியில் பயணிப்பதில்லை!

## கைவண்ணம் காணீர்

**களி மண்ணினால்
செய்யப்பட்ட
கலை வடிவம்!
உயிரோட்டமாய்
உணர்வைத்
தூண்டும் படம்!!
என்னே இந்தக்
கலைஞனின் ஆற்றல்!!!**



இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207




38

ஜனரஞ்சக எழுத்தாளர் **மொழிவாணன்**

# அடடா! துப்பாக்கிமுனையில் இத்தனை மர்மங்களா! அக்கிரமங்கள் செய்யும் நீங்கள் இனிமேல் உருப்படுவீங்களா!

மீண்டும் தொடர்ந்தார் சிரஞ்சீவி,

இருவரும் நேருக்கு நேர் சந்திக்கும் போது அதைக் காட்டிக் கொள்ளாமல் இருந்தாலும் மனதிற்குள் ஒருவரை ஒருவரை எதிரிகளாகவே நினைத்துக் கொண்டிருந்தார்கள்! அதுவும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அதேநேரம் பெந்தகோஸ் திருச்சபையின் கிளை ஒன்ற பியன்கலவில் திறந்து வைக்கப்பட்டது. பலரும் அதில் சேர்ந்து ஞானஸ்தானம் பெறுவதையும் இவர்கள் இருவரும் அவதானித்தார்கள்! இதைப் பயன்படுத்திக் கொண்டு, செல்வராகவனை அச்சுறுத்த விரும்பிய சொலமன், தான் பொந்தகோஸ் சபையில் சேரப் போவதாக செல்வராகவனிடம் கூறியுள்ளார். இதனால் செல்வராகவன் நன்றாகவே பயந்து போனார்!

"ஓ அப்படியானால் இவர் இருக்குமிடையில் ஏதோ ஒரு மர்மம் இருந்திருக்கிறது என்று தானே நீங்கள் சொல்ல வாறீங்க மாமா" இதுவரையில் அமைதியாக இருந்த சிந்துஜன் கேட்டான்!

ஆமாம் நான் முன்பு சொன்னது போல், இந்த மர்மங்களுக்கெல்லாம் மூல காரணமாக அதுதான் இருக்கிறது! அதையும் நாம் விரைவிலேயே தெரிந்து கொள்ளலாம்!" சொல்லிவிட்டு,

மீண்டும் தொடர்ந்தார்.

"உண்மையிலேயே செல்வராகவனைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணமெல்லாம் சொலமனுக்கு இருக்கவே இல்லை. செல்வராகவனை பயங்காட்டி எப்படியாவது துர்காவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் மட்டும் தான் அவரிடமிருந்தது!"

"ஆனால் அதற்கு முன்பே சொலமனைக் கொலை செய்துவிட வேண்டுமென்று செல்வராகவன் முடிவு செய்தார். அவர் திறமையான ஒரு பொலிஸ் அதிகாரி என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்தானே! பொதுவாகவே அவர் சரியான ஒரு தந்திரசாலி. அதோடு சேர்த்து பொலிஸ் உத்தியோகத்தில் கிடைத்த அனுபவங்களையும் வைத்து பயங்கரமான திட்டமொன்றைத் தீட்டினார்!"

சொல்லிவிட்டு,

எல்லோரையும் ஒருமுறை பார்த்தார்.

"என்ன! பயங்கரமான திட்டமா? வியப்புடன் கேட்டார் சப் இன்ஸ்பெக்டர்.

"சொல்கிறேன் அதில் முதலாவது கட்டம் தான், வாதத்தினால் தான் முடமாவதாகக் காட்டிக் கொண்டது! இரண்டாவது என்னையும் எனது மருமகன் சிந்துஜனையும் அவரது இல்லத்திற்கு வரவழைத்தது"

"என்ன இது அவர் செய்யப் போகும் கொலைக்கும் உங்கள் வரவிற்கும் என்ன தொடர்பு! மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போலிருக்கிறதே!"

"அவசரப்படாமல் சொல்வதைக் கேளுங்கள். எங்கள் இருவரையும் அங்கே அழைத்ததன் காரணமே அவர் அடுத்ததாகச் செய்யப் போகும் காரியம் நல்ல படியாக முடிந்தால், அதற்கு நாங்கள் இருவரும் சாட்சியும் சொன்னால் அவர் மீது எவருக்குமே சந்தேகம் வராது என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. அவரது மூன்றாவது திட்டம் என்னவென்று பார்ப்போம். அவரது வீட்டுக்குப் பக்கத்தில் திருமதி மீனா மெண்டிஸ் என்று ஒரு விதவைப் பெண் இருக்கிறாள். அவருக்கும் சொலமனுக்கும் இடையே தகாத உறவொன்று இருந்தது. அவர் திருட்டுத்தனமாக அங்கே போய் வருவதை செல்வராகவன் பார்த்திருக்கிறார். இதைக் கேள்விப்பட்ட அவளுடைய மகன், அவளை கண்டித்திருக்கிறான். இதனால் அவன் இல்லாத நேரங்களில் மட்டும் சொலமனை வரவழைத்துக் கொள்வதற்கான ரகசிய ஏற்பாடொன்றைச் செய்தாள். அதாவது மின்சார விளக்கு வெளிச்சத்தின் மூலம் கொடுக்கும் ஒரு சைகைதான் அது!"

"அதெப்படி?" சிந்துஜன் கேட்டான்.

"அதாவது தோமஸின் மாடியின் ஒரு பகுதி, சொலமனின் அறையில் இருந்து பார்க்கும் போது நன்றாகவே தெரியும். இதனால் தனது மகன் வீட்டில் இல்லாத சமயங்களில் மின்சார விளக்கொளியை தோமஸின் கண்ணாடி ஜன்னலின் மீது பாயச் செய்வாள் மீனா. அதைப் பார்க்கும் சொலமன் ரகசியமாக அங்கே போவார். கோவில் பாதை வழியாக மட்டும்தான் அங்கே போகமுடியும்! இந்த விஷயம் வேலைக்கார முனியாண்டிக்கும் செல்வராகவனுக்கும் மட்டும் தான் தெரிந்திருந்தது! அன்று, அதாவது அந்த 7ஆம் திகதி தோமஸின் வீட்டு கண்ணாடி ஜன்னலின் மீது மின்சார விளக்கொளி விழுந்ததை செல்வராகவன் பார்த்து விட்டார். செல்வராகவன் மட்டுமல்ல நானும் பார்த்தேன்! ஆனால் நான் அதை வேறு விதமாக எடுத்துக் கொண்டேன்!"

"எப்படி?" என்றார் இன்ஸ்பெக்டர்

"பிறகு சொல்கிறேன். முதலில் நடந்த சம்பவத்தை சொல்கிறேன் கேளுங்கள். இந்த விளக்கொளியைப் பார்த்துவிட்டு சொலமன் அங்கே போவார் என்பதைப் புரிந்து கொண்ட செல்வராகவன், கயிறு ஒன்றையும் எடுத்துக் கொண்டு அங்கே சென்று கஜுமரத்தில் ஏறி, சொலமன் வரும்வரை கஜுமரக் கிளையில் மறைந்திருந்தார். துர்காவிற்கு பேய் ஒன்று வந்ததென்று பயந்தது அவருக்குத் தான். கஜுமரத்தின் கீழே அவர் போகும் போது கழுத்தில் கயிற்றை மாட்டி அவரை அப்படியே மரத்தில் தொங்க விட்டு கொலை செய்ததாகக் காட்டத் தான் அவர் எதிர்பார்த்திருந்தார். அப்போது அது தற்கொலையாகவும் நிரூபணமாகியிருக்கும்!" என்று சொல்லிவிட்டு நிறுத்தினார் சிரஞ்சீவி.

அடுத்து என்ன நடந்திருக்கும் என்பதை அறிந்துகொள்ளும் ஆவலில்

எல்லோரும் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதேநேரம்

"நீங்கள் சொல்வது எப்படி சாத்தியமாகும் பக்கவாதத்தால் செல்வராகவன் கால்கள் முடமாகிப்போயல்லா இருந்தார்?"

என்று தனது வியப்பை வெளிப்படுத்தினான் சிந்துஜன்.

அவன் சொன்னதைக் கேட்டதும்,

மெல்லச் சிரித்தார் சிரஞ்சீவி.

"இல்லை அவர் கால்கள் முடமான நொண்டி அல்ல, அவர் சரியான ஒரு திருடன். அவர் திட்டமிட்டே நொண்டியைப்போல் நடித்தது எங்களை ஏமாற்றத்தான். இந்த நோய்க்காக அவர் எந்த டொக்டரிடமிருந்தும் மருந்துகள் எதையும் எடுக்கவில்லை.

"அப்பா பயங்கரமான ஒரு பேர்வளி தான்" துர்கா முணுமுணுத்தாள்.

"ஆமாம்.. அதிபயங்கரமான, புதுமையான ஒரு பேர்வளிதான் அவர். அவரது காலணிகளில் சகதிபடாமல் இருப்பதற்காக வேறு இரண்டு கென்வஸ் காலணிகளை அவர் பயன்படுத்தியிருந்தார். ஆனாலும் நினைத்தது நடக்காததும், நினைக்காதது நடப்பதும் மண்ணுலகில் இயற்கையல்லவா?. ஆனால் செல்வராகவன் நினைத்ததுபோல் எதுவும் நடக்கவில்லை. அவர் வீசிய கயிறு குறி தவறியது. அவர் எதிர்பார்த்ததைப்போல் அது சொலமனின் கழுத்தில் விழவில்லை". பதறிப்போய் மேலே பார்த்த சொலமனுக்கு மரக்கிளையில் ஏதோ ஓர் உருவம் இருப்பது தெரிந்தது. அடுத்து, திடீரென்று அவர் கையிலிருந்த ரிவால்வர் வெடித்தது. சொலமனுக்கு வெட்டிய குழியில் செல்வராகவன் விழுந்தார். இந்தச் சம்பவங்கள் முழுவதையும் தோமஸ் பார்த்துக்கொண்டிருந்தார்.

"என்ன தோமஸ் பார்த்துக்கொண்டிருந்தாரா?. என்ன மாமா சொல்லுறீங்க?..." வியப்பை விழிகளில் கட்டிக்கொண்டான் சிந்துஜன்.

"ஆமாம், அதற்கும் ஒரு ஆதாரம் இருக்கிறது. அதாவது துர்கா வீட்டை விட்டு ஓடி வந்தபோது, அவள் பின்னால் யாரோ வந்தார்கள் என்று அவள் சொன்னாள். அது யாரென்று பார்ப்பதற்காக அவர் போனபோது இந்தப் பயங்கர காட்சிகளைத்தான் அவரால் காணமுடிந்தது. இதனால்தான் தோமஸை நான் முதல்முறையாகச் சந்தித்து, செல்வராகவனை கொலைசெய்து விட்டார்கள். என்று நான் சொன்னபோது "துப்பாக்கியால் சுட்டாரா?" என்று அவர் என்னிடம் கேட்டார்.

"நடந்த சம்பவங்களையெல்லாம் தோமஸ் நேரிலேயே பார்த்து விட்டார் என்ற விபரம் சொலமனுக்கு அப்போது தெரியாது. அதனால் தான் உடனே வீட்டுக்குச்சென்று முனியாண்டியிடம் சொல்லி வாயில் துணியைத் திணித்துக் கொண்டு கயிற்றால் கட்டிக்கொள்ளச் செய்தார். அன்று சொலமனின் வாயில் திணிக்கப்பட்டிருந்த துணி, முனியாண்டியின் வேஷ்டியிலிருந்து கிழிக்கப்பட்ட ஒரு துண்டு. முனியாண்டியின் டிரங்கு பெட்டியிலிருந்து அந்த வேஷ்டியை நேற்று நான் கண்டுபிடித்தேன். செல்வராகவனை கொலைசெய்தவர்கள்தான் தன்னையும் தாக்கினார்கள் என்று பொலிஸாரை நம்பவைப்பதற்காகத் தான் சொலமன் இந்த நாடகத்தை நடத்தினார்.

செல்வராகவன் எழுதிய டயரி அல்லது அவர் தன்னைப்பற்றி எழுதியதாகச் சொன்ன அந்த சுயசரிதை என் கையில் கிடைத்துவிடக் கூடாது என்ற எண்ணத்திலும் எங்கள் இருவரையும் கொலைசெய்துவிடும் எண்ணத்திலும் தான் மறுநாள் செல்வராகவன் வீட்டுக்குத் தீ வைத்தார். அன்றிரவு துர்கா ரெஸ்ட் ஹவுசில் தான் தூங்குவாள் என்று அவர் எதிர்பார்த்தார். மறுநாள் பாண்டியனின் பேச்சிலிருந்து இந்த மர்மங்களெல்லாம் தோமஸிற்கு தெரிந்திருக்கிறது என்பதை நான் புரிந்துகொண்டேன். இதனால் அன்றிரவே சொலமனின் துப்பாக்கி அவரைக் குறிபார்த்தது.

ஆனாலும் அவரது அதிர்ஷ்டமோ என்னவோ, அவர் உயிர்பிழைத்துக்கொண்டார்."ஆனாலும் தோமஸ் சேரை சுட்டது பாண்டியன் தானே.. அந்தப் பயங்கரச் சிரிப்பு.. அப்பப்பா.." இடையில் குறுக்கிட்டாள் துர்கா.

"இல்லை அது பைத்தியக்காரனோ, பாண்டியனோ இல்லை. இந்தமாதிரியான சந்தர்ப்பங்களில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று தெரிந்திருந்த ஒருவரால் நடாத்தப்பட்ட ஒரு நாடகம்தான்.

நீங்கள் முகங்கொடுத்த அந்தப் பயங்கர இரவு, அந்த இரவு நேரத்தில் ஒரு பிணத்தின் அருகில் இருக்கும் ஒருவரின் மனநிலை எப்படியிருக்கும் என புரிந்துவைத்திருக்கும் ஒருவர் திடீரென அடித்தொண்டையால் கத்தியபடியே பயங்கரமாகச் சிரித்து மற்றவர்களை அச்சத்தினால் ஆடிப்போகச் செய்துவிடுவார். இது ஒரு மனோதத்துவ முறையும்கூட. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர் அங்கிருந்து



பாய்ந்தோடிவிட்டார். அவர் அப்படி பாய்ந்தோடவில்லையென்றால் கண்டிப்பாக எனது துப்பாக்கி அவரை பதம் பார்த்திருக்கும்".

மறுநாள் மாறுவேடம் போட்டுக்கொண்டு ரெஸ்ட் ஹவுசுக்குள் நுழைந்த அவர் துர்காவின் டயரியைத் திருடிச்சென்றார். செல்வராகவன் எழுதிய சுயசரிதை மற்றும் அவரது கடிதங்கள் எல்லாமே தோட்டத்திலிருந்த ஓய்வறையில்தான் இருக்கின்றன. என்பதைத் தெரிந்துகொண்ட சொலமன், முனியாண்டியை வைத்து அவை எல்லாவற்றையும் திருடி எடுத்துக்கொண்டான். சொலமனின் வீட்டிலிருந்து நாம் அவற்றையெல்லாம் கைப்பற்றிவிட்டோம். துர்காவை காப்பாற்றவேண்டிய அவசரத்தில் இருந்ததால் அவற்றையெல்லாம் என்னால் படிக்கமுடியாமல் போனது.

முனியாண்டியைக் கைதுசெய்தபோது அவற்றையெல்லாம் பொலிஸாரிடம் ஒப்படைத்து விட்டேன். இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தலையாய காரணம் எதுவென்பதை இங்கு போனபிறகு தெரிந்துகொள்ளலாம் என்று நான் சொன்னேன்.

இதன் பிறகு நடந்தவைகளெல்லாம் உங்களுக்கும் தெரியும் என்பதால் இத்தோடு நான் நிறுத்திக்கொள்கிறேன்". என்று சொல்லிவிட்டு துர்காவின் பக்கம் திரும்பினார்.

"ம்.. துர்கா, நீங்கள் கண்டுபிடித்த அந்த எலும்புக்கூட்டைப் பற்றி சொல்லுங்கள்?" என்றார்.

**(தொடரும்...)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 128

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ✱ | 04 | 05 |
| 06 | ✱ | 07 | 08 | ✱ | 09 |
| 10 | 11 | 12 | ✱ | 13 | ✱ |
| 14 | ✱ | 15 | 16 | 17 | 18 |
| ✱ | 19 | ✱ | ✱ | 20 | ✱ |
| 21 | 22 | ✱ | 23 | 24 | 25 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
தொலைபேசி இல ........................................
பாடசாலை பெயர் ........................................
வதிவிட முகவரி ........................................
........................................
.................... ....................
மாணவரின் பெயர்
வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) வாகனம் செலுத்துபவரைக் குறிக்கின்ற சொல்.
(4) குறித்த நிலப்பரப்பு ஒன்றுக்கு சுற்றிவர எல்லையாகவும், பாதுகாப்புக்காகவும் அமைக்கப்படுவது.
(7) இச்சொல்லை வீடு, இல்லம், அகம் என்றெல்லாம் கூறலாம்.
(10) இன்றைய உலகில் இது இல்லாமல் எம்மால் வாழ முடியாது. எமக்கு அவசியமான அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றியவாறு வாழ்வதற்கு அவசியமானது இது.
(15) ஒரு மணித்தியாலத்தின் அறுபதில் ஒரு பங்கு அல்லது ஒரு செக்கனின் அறுபது மடங்கு.
(21) மனத்துணிச்சல் இல்லாத, பயந்த சுபாவமுள்ள ஒருவரை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(23) பிற மனிதர் மீது மாத்திரமன்றி, பிராணிகள் மீதும் வைக்க வேண்டிய நேசம்.

**மேலிருந்து கீழ்**

(1) சேதனப் பொருட்களை தீயில் எரித்த பின்னர் தூள் வடிவில் எஞ்சுவது இது?
(3) எத்தனை கோடி பணம், சொத்துகள் இருந்தாலும், நோய்நொடியில்லாத மனஅமைதியான வாழ்வுதான் பெரிது. அந்த மனஅமைதியைக் குறிக்கும் சொல் இது. (தலைகீழான சொல்)
(5) இது ஒரு பாலூட்டி உயிரினம். இந்தப் பிராணியினால் பல வீடுகளில் தீராத தொல்லை. இரவு நேரத்தில் வீட்டுக்குள் நுழைந்து, சமையலறையில் உள்ள உணவுப்பொருட்களை தின்றுவிட்டுச் சென்றுவிடும். (தலைகீழான சொல்)
(13) ஆண் என்பதன் ஒத்தபொருள் சொல்.
(19) இலட்சத்தின் நூறு மடங்கு. பத்து மில்லியன் என்றும் சொல்ல முடியும். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 127

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. நண்டு 04. நிலா 07. ஏணி 11. ஆமை
13. பணம் 16. மாதா 18, வரி 21. சம்பளம்

**மேலிருந்து கீழ்**

01. நரி 03. ஏடு 05. பலா 08.ஆணி
10. ஆணவம் 12. மைதானம் 13.பரி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 126

### பாராட்டு பெறுவோர்

**1. சஹா நிபான்**
தரம் 05, நாங்கல்ல ம. வித்தியாலயம்,
நலீமா மன்சில், நாங்கல்ல, துல்ஹிரிய.

**2. என். ஷேத்தரனியா,**
தரம் 05, கார்மேல் பாத்திமா கல்லூரி,
உடையார் வீதி, கல்முனை.

**3. எம்.ஆர். சுமையா ஸெய்னப்**
தரம் 05, தங்காலை மு. வித்தியாலயம்,
இல. 21, முஸ்லிம் வீதி, தங்காலை.

**4. எம்.பி. மனுல்மி சகசமி**
தரம் 05, மினு/ நாலந்தா மத்திய பாலிகா வித்தியாலயம்,
மினுவன்கொடை.

**5. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**6. எம்.எம். ஹப்ஸா**
தரம் 07 அஸ்ஸம்ஸ் மு. வித்தியாலயம்,
இல. 179, நிவ் எல்பிட்டிய, கெலிஓயா.


**7. இர்பான் ஜெஹான்**
தரம் 05B கைரியா, முஸ்லிம் மகளிர் கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை,
கொழும்பு 10.

**8. எம்.வை. யூசுப் உமர்**
தரம் 05, கே/ ஜாமியுல் அசர் மத்திய கல்லூரி,
இல. 17/1, தரகமுவ வீதி, உடதலவின்ன, மடிகே.

**7. எம்.ஆர். முஹம்மது யூசுப்**
தரம் 05A, லலித் அத்துலத் முதலி கல்லூரி,
இல. 44/40, இந்திரஜோதி மாவத்தை, இரத்மலானை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 128
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



புகழ்: வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொ
ழிய வாழ்வாரே வாழா தவர்

*தெளிவுரை :*
*தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர், புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.*

# சொர்க்கம், நரகம்

சிறு வயது முதலே சொர்க்கம், நரகத்தை அறிந்துகொள்ள, படாத பாடு பட்டான் பாவரசு. அவனுக்கு சரியான பதிலை யாரும் சொல்லவில்லை.

ஊருக்கு புதிதாக வந்திருந்த சாமியாரிடம் கேட்டால், கண்டிப்பாக பதில் கிடைக்கும் என்று அறிந்தான்.

சாமியாரை, "கத்தி முனையில் மிரட்டியாவது, சொர்க்கம், நரகம் பற்றி தெரிந்து கொண்டு தான், மறுவேலை" என்ற முடிவோடு சென்றான் பாவரசு.

அவன் சென்ற நேரம் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார் சாமியார். வெளியே நின்றபடி, 'எனக்கு சொர்க்கம், நரகம் பற்றி உடனே தெரிய வேண்டும்...' என்று சத்தமிட்டான் பாவரசு.

பதில் ஏதும் உள்ளிருந்து வரவில்லை.

சற்று தாமதித்து, "காது கேட்கவில்லையா... சொர்க்கம், நரகம் பற்றி உடனே சொல்லுங்கள்..." என்று மீண்டும் சத்தமிட்டான்.

தியானத்தில் இருந்த சாமியார் கண் விழித்தார். யாரும் எதிர்பார்க்காத வகையில், 'யாரடா நீ முட்டாளே... கலைந்த தலையுடன், அசிங்க முகத்துடன் என் முன் நின்று தொந்தரவு செய்கிறாயே...' என்றார்.

சாமியாரின் வார்த்தைகள், பாவரசு மனதில் ஈட்டி போல் இறங்கியது. கடும் கோபத்தை உண்டாக்கியது.

தன்னிலை மறந்தவனாக, 'என்ன செய்கிறேன் பார்...' என்று குதித்தபடி சாமியாரை வெட்ட வாளை உருவினான்.

அமைதி காத்தபடி, 'பார்த்தாயா... உன் இந்த நிலை தான் நரகம்...' என்று சுட்டிக்காட்டினார் சாமியார். தவறை உணர்ந்தான் பாவரசு.

கோபம் தணிந்து, இயல்பு நிலைக்கு திரும்பினான். மிகப்பெரிய பாவம் செய்ய இருந்தவன், அதிலிருந்து தப்பியதை எண்ணி சந்தோஷமடைந்தான்.

அவன் முகத்தில் அமைதியை சுட்டிக் காட்டி, 'உன் இந்த நிலை தான் சொர்க்கம்...' என்றார் சாமியார்.

நீண்ட நாட்களாக தேடிய கேள்விக்கு விடை கிடைத்தது. திருப்தியுடன் வீடு திரும்பினான் பாவரசு.

சிறுவர்களே... சொர்க்கம், நரகம் என்பது நம் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் தான் இருக்கிறது.

# வளிமண்டல நதிகள்

தெற்காசியாவின் வளிமண்டலத்தில் அதிக மாற்றங்கள் உருவாகி வருகிறது. பறக்கும் நதிகள் என்று அழைக்கப்படும் வளிமண்டல நதிகள் பிறந்துள்ளன.

இது பட்டை வடிவிலான கண்ணுக்குத் தெரியாத மிகப்பெரிய தொடர் நீராவி ரிப்பன்களாகும் (*ribbons of water vapour*).



கடலின் வெப்பம் அதிகரித்து கடல் நீர் ஆவியாகும் போது நீராவியின் மிகப்பெரிய, கண்ணுக்குத் தெரியாத இந்த ரிப்பன்கள் உருவாகின்றன. அவை ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் அகலம் கொண்டவை. இந்த நீராவி ரிப்பன்கள், வளிமண்டலத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு பட்டை அல்லது ஒரு நெடு வரிசையை உருவாக்குகிறது.


இது மேலே உயர்ந்து, குளிர்ச்சியான அட்ச ரேகைகளுக்கு நகரும்போது, 'பறக்கும் நதிகள்' உருவாகி அதிதீவிர மழை பொழிகின்றன. இது வான்வெடிப்பு (*cloudburst*) போன்றே இருக்கும். அதன் பின்னர் கனமழை அல்லது பனியாகப் பெய்து, வெள்ளம் மற்றும் ஆபத்தான பனிச்சரிவுகளை ஏற்படுத்தும் அளவுக்குப் பேரழிவுக்கு வழிசெய்யும்.



## இவ்வார மழலை

எஸ். விகாஷினி
சதீஸ்குமார் – சிந்துஜா



அ. அகில்
தரம் 04, அ/ நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம்.

## அறிந்து கொள்வோம்

★ பறவைகள் தூங்கப் போகும் நேரத்தில் தூங்கச் சென்று, அவை விழிக்கும் நேரத்தில் எழுந்திருங்கள்.
★ அதிகம் இயற்கையான உணவுகளை உண்ணுங்கள். வலுவான கால்களையும், துணிச்சல் மிக்க இதயத்தையும் பெறுவீர்கள்.
★ அமைதியாக இருங்கள், கொஞ்சம் பேசுங்கள். உங்கள் இதயத்தில் மௌனம் குடிகொள்ளும். உங்கள் ஆன்மா எப்போதும் அமைதியாக இருக்கும்.

## கோபி பாலைவனம்

**மத்திய ஆசியப்பகுதியில் அமைந்துள்ள கோபி பாலைவனம் 10,00,000 சதுர கி.மீ பரப்பளவினைக் கொண்ட உலகின் ஐந்தாவது பெரிய பாலைவனமாகும்.**

**இது இரு நாடுகளின் எல்லைகளைப் பிரிக்கின்றது. அதில் ஒன்று சீனா. மற்ற நாடு மொங்கோலியா.**

**இதன் பெரும்பான்மையான பகுதி மணற்பாங்காக அல்லாமல் கற்பாங்காகவே உள்ளது.**

**திபெத்திய பீடபூமியால் உருவாக்கப்பட்ட மழைநிழல் பாலைவனம் இது. இங்கு மழையே கிடையாது. இமயமலையானது இந்தியப் பெருங்கடலில் இருந்து வரும் மழைமேகங்களைத் தடுத்து இப்பகுதியை பாலைவனமாக்கி உள்ளது. எனவே இது மழை மறைவுப் பாலைவனம் என்று அழைக்கப்படுகிறது.**

**இது குளிர் பாலைவன வகையைச் சார்ந்தது. இங்கு வெப்பநிலை கோடையில் 50 டிகிரி செல்சியஸாகவும், குளிர்காலத்தில் 40 டிகிரி செல்சியஸாகவும் இருக்கும்.**





## உலகின் மிகப்பெரிய விதை

உலகிலேயே மிகப்பெரிய விதை உடைய தாவரம் கடல் தேங்காய். இது பெரிய வகை தேங்காய் போல் இருக்கும். இதை கடல்பனை, மாலைதீவுத் தேங்காய் எனவும் அழைக்கின்றனர்.

உட்புறம் பனை விதையில் உள்ளது போல் பிளவுடன் காணப்படும். இந்திய பெருங்கடலில், செஷல்ஸ் மற்றும் மாலைதீவுகளில் காணப்படுகிறது. இந்தியாவில் கொல்கத்தா தாவரவியல் பூங்காவில் ஒரு மரம் பராமரிக்கப்படுகிறது.

பனைமரம் போல இதற்கும் ஆண், பெண் பாகுபாடு உண்டு. ஆண் மரத்தில், ஆறு அடி நீளத்தில் பூ மலரும். பெண் மரம் முளைத்து, 100 ஆண்டுகளுக்கு பின் பூக்கத் துவங்கும்.

இது வாழ்நாளில், 100க்கும் குறைந்த விதைகளையே உற்பத்தி செய்யும். மரத்தில் பூ மலர்ந்து கனிய, 10 ஆண்டுகள் ஆகும். விதையின் வெளிப்புற நார் அடர்த்தியுடன் வலுவாக இருக்கும். கனிப்பகுதி கெட்டியான ஓட்டுக்குள் இருக்கும். முதலில் நுங்கு போல் காணப்படும். முற்றியதும் தேங்காய் போல சுவைக்கும்.

முற்றிய கனி உதிர்ந்த பின், கடல் நீரில் அமிழ்ந்து விடும். நீண்ட நாட்களுக்கு பின், மிதந்து கரையில் ஒதுங்கும். கடல் நீரோட்டத்தின் வழியாக விதை பரவி, முளைக்கத் துவங்கும். முதல் இலை தோன்ற மூன்று ஆண்டுகள் வரை ஆகும்.

இந்த மரம், 35 மீற்றர் உயரம் வரை வளரும். சுற்றளவு, 12 அடி. இலைகள் விசிறி வடிவில் பனை ஓலை போல் இருக்கும். ஒரு இலை, 10 மீற்றர் உயரமும், 4.5 மீற்றர் அகலமும் இருக்கும். விதை, 1 அடி உயரமும், 3 அடி சுற்றளவும் கொண்டிருக்கும். ஒரு விதையின் எடை, 23 கிலோ வரை இருக்கும்.

இதன் எடை அதிகம் என்பதால், நீரினுள் விழுந்தவுடன் மிதப்பதில்லை. அமிழ்ந்து, கடலின் அடிப்பகுதிக்கு போய் விடும். சில நாட்களுக்கு பின், எடை குறையும் போது, நீர்மட்டத்தில் மிதக்கும்.

இதை முதலில் பார்த்த விஞ்ஞானிகள், நீருக்கடியில் வளரும் தாவரத்தின் விதை என்றே நம்பினர். எனவே, பிரெஞ்சு மொழி சொல்லான, 'கோகோ டி மீர்' என்ற பெயரில் அழைத்தனர். அதன் பொருள் கடல் தேங்காய் என்பதாகும். பண்டைய காலத்தில் துறவிகள், இந்த விதையை குடைந்து திருவோடு போல் உருவாக்கி, பாத்திரமாக பயன்படுத்தியுள்ளனர்.

## பெயர்கள் மாற்றப்பட்ட சில நாடுகள்

★ 1931ஆம் ஆண்டு வரையில் "'யாம்' என்ற பெயரில் தாய்லாந்து இருந்தது.
★ 1977ஆம் ஆண்டு ஜைர் என்ற பெயரைக் கொண்ட நாடு, 'கொங்கோ ஜனநாயகக் குடியரசு' என்று மாற்றம் பெற்றது.
★ பர்மா எனும் நாடு இராணுவ ஆட்சியாளர்களால் 1989ஆம் ஆண்டு முதல் 'மியான்மார்' என்று அழைக்கப்பட்டது.
★ 1935ஆம் ஆண்டு வரை 'பெர்சியா' என்ற பெயரில் இருந்த நாடு, பின்னர் 'ஈரான்' என்றானது.
★ ஐரீஷ் சுதந்திர நாடு 1937ஆம் ஆண்டில் இருந்து 'அயர்லாந்து' என அழைக்கப்படுகிறது.
★ ஒல்லாந்து என்ற நாடானது ஜனவரி 2020இல் 'நெதர்லாந்து' என்ற புதிய பெயரைப் பெற்றது.
★ ஓட்டோமான் பேரரசு சமகாலத்தவர்களால் 'துருக்கி' அல்லது 'துருக்கி பேரரசு' என அழைக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு டிசம்பரில் துருக்கி என்று பெயர் மாற்றம் பெற்றது.

## நீர் அருந்தாத விலங்குகள்?

*வாழ்க்கையில் தண்ணீர் மிக முக்கியமானது. மனிதனால் தண்ணீர் இல்லாமல் உயிர் வாழ முடியாது. ஆனால் சில உயிரினங்கள் வாழ்நாள் முழுவதும் தண்ணீரே குடிக்காமல் உயிர் வாழ்கின்றன.*

**ஆடக்ஸ் மான்**

*ஆடக்ஸ் என்கிற ஒரு வகை மான் சகாரா பாலைவனத்தில் உள்ளது. தாவரங்களில் உள்ள பனித்துளிகளில் இருந்தும் அடர்த்தியற்ற தாவரங்களிலிருந்தும் தனக்கு தேவையான நீரை பெற்றுக் கொண்டு வாழ்கிறது இந்த மான்.*

*இந்த மானுக்குத் தேவையான பெரும்பாலான தண்ணீர் இதன் உடலிலேயே மூச்சுக்காற்றின் துணைப் பொருளாக உற்பத்தி செய்யப்படுகிறது. தண்ணீரையும் கரியமில வாயிலையும் வெளியிடுவதன் மூலம் குளுக்கோஸ் பிராண வாயுவுடன் சேர்ந்து அதற்கு சக்தியை தருகிறது.*

**கங்காரு எலி**

*வட அமெரிக்காவில் காணப்படும் மணற்பாங்கான இடங்களில் வாழ்க்கை நடத்தும் கங்காரு எலி வாழ்நாள் முழுவதும் தண்ணீர் குடிக்காமல் வாழ்கிறது. இது மணலில் ஒரு அடி ஆழத்திற்கு குழி தோண்டி வாழும்.*

*இது பசுமையான சாறு நிரம்பிய செடிகளை உணவாக உட்கொள்கிறது. மேலும் பனித்துளி மூலமாக நிறைய ஈரத்தை பெற்றுக் கொள்கிறது. இரவில் தான் சுறுசுறுப்பாக வெளியே இரை தேட வருகிறது. சூரிய ஒளி பட்டு தன் உடம்பு உலர்ந்து போவதால் வெளியே வருவதில்லை.*

*இது தன் வளையின் வாசலைக் கூட கள்ளிச்செடிகளின் துண்டுகளைக் கொண்டு அடைத்து வைத்துக் கொள்ளும் இதனால் வளையின் ஈரம் பாதுகாக்கப்படுகிறது. வளை முழுவதும் மணலால் நன்கு போர்த்தப்பட்டு இருப்பதால் இந்த எலி மேற்பரப்பில் நிலவும் கடுமையான தட்ப வெப்ப மாறுதலிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்கிறது.*

**நீர்வாழ் உயிரினம்**

*நீர் அருந்தாத நீர் வாழ் உயிரினம் டொல்பின் ஆகும். இது ஒரு பாலூட்டி சிற்றினம். இந்த டொல்பின்கள் நீரில் வாழ்ந்தாலும் நீரை அருந்துவதில்லை.*

# விளையாட்டு



# விதியை வென்றவர்களின் ஒலிம்பிக்







பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் தொடர்ச்சியாக பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் 28 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 8 ஆம் திகதிவரை நடைபெறப்போகிறது. என்றாலும் பாரிஸ் கோடைகால ஒலிம்பிக் அளவுக்கு இந்த விளையாட்டுப் போட்டியை உலகம் பெரிதாக அவதானிக்காது.

ஆனால் சமூகத்தில் உள்ள விசேட தேவையுடையோருக்கான இந்த விளையாட்டுப் போட்டி சாதாரண ஒலிம்பிக் போட்டி அளவுக்கே முக்கியத்துவத்துடன் நடத்தப்படுகிறது. என்றாலும் சாதாரண ஒலிம்பிக்கின் பிரமாண்டத்தை பாராலிம்பிக்கில் பெரிதாக எதிர்பார்க்க முடியாது.

பாராலிம்பிக்கை இணை ஒலிம்பிக், மாற்றுத் திறனாளர் ஒலிம்பிக் என்றும் அழைக்கலாம். உடலியக்கக் குறைபாடுகள் உள்ளோர், உறுப்பு நீக்கப்பட்டோர், கண் பார்வை குறைவுள்ளோர், மற்றும் பெருமூளை வாதம் உள்ளோர் இந்த போட்டியில் பங்கேற்கின்றனர்.

பாரிஸ் நகர் கோடைகால ஒலிம்பிக்கை மூன்று முறை நடத்தி இருந்தாலும் அங்கு பாராலிம்பிக் நடைபெறுவது இது தான் முதல்முறை. 17 ஆவது முறையாக நடைபெறும் பாராலிம்பிக்கில் கடைசியாக 2020 டோக்கியோவில் நடந்தது போல் 22 விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன.

மொத்தமாக 549 பதக்கங்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதில் கடந்த முறையை விடவும் பெண்களுக்காக 235 போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளமை விசேட அம்சம்.

கோடைகால ஒலிம்பிக் அளவுக்கு நாடுகள் பங்கேற்காத போதும் இந்த விளையாட்டு விழாவில் நூற்றுக்கும் அதிகமான நாடுகள் பங்கேற்பது நிச்சயம். தெற்கு சூடான், சாட், குவாம் என 12 நாடுகள் முதல் முறையாக பாராலிம்பிக்கில் பங்கேற்கின்றன.

பொலிவியா 1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாகவும், பங்களாதேஷ் 2008 இற்குப் பின்னர் முதல் முறையாகவும் பங்கேற்பதோடு மேலும் பல நாடுகளும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாராலிம்பிக்கில் பங்கேற்கவுள்ளன.

இம்முறை பாராலிம்பிக்கில் ஒட்டுமொத்தமாக 4,400க்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

சாதாரண ஒலிம்பிக் போன்று பாராலிம்பிக்கிற்கு என்று தனி மரபு இருக்கிறது. 1948 இல் லண்டன் ஒலிம்பிக் போட்டி ஆரம்பித்தபோது பிரிட்டனில் உள்ள ஸ்டொக் மன்டவில்லே கிராத்தில் இரண்டாம் உலகப் போரில் காயமடைந்தவர்களுக்கு இடையே சக்கர நாற்காலி விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. இதுவே பாராலிம்பிக்கின் பூர்வீகம்.

ஆரம்பத்தில் ஸ்டொக் மன்டவில்லே விளையாட்டுப் போட்டி என்று அழைக்கப்பட்ட இந்தப் போட்டி, 1960 இல் இத்தாலி ரோம் நகரில் பாராலிம்பிக் போட்டியாக உருவெடுத்தது. இதுவே படிப்படியாக முன்னேற்றம் கண்டு 1989 இல் சர்வதேச பாராலிம்பிக் குழு நிறுவப்பட்ட பின்னர் ஓர் உறுதியான கட்டமைப்பை பெற்றது.

இந்த மரபை நினைவுகூரும் வகையில் பிரிட்டனின் அதே ஸ்டொக் மன்டவில்லே கிராத்தில் ஒகஸ்ட் 24 ஆம் திகதி (நேற்று) ஒலிம்பிக் தீப்பந்தம் ஏற்றப்பட்டது. தொடர்ந்து அந்தத் தீ பிரான்ஸுக்கு எடுத்துவரப்பட்டு ஒகஸ்ட் 28 ஆம் திகதி நடைபெறும் ஆரம்ப நிகழ்வின்போது ஏற்றப்படவுள்ளது.

பாரிஸ் கோடைகால ஒலிம்பிக் போட்டி போன்றே பாராலிம்பிக் போட்டியும் அரங்கிற்கு வெளியில் முதல் முறை நடைபெறவுள்ளது. என்றாலும் சீன் நதிக்கு பதில்; போட்டியில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகளின் அணிவகுப்பு வீதி நெடுக நடைபெறப்போகிறது.

சாதாரண ஒலிம்பிக் போட்டி நடந்த பல மைதானங்கள் மற்றும் இடங்கள் பாராலிம்பிக்கிற்கும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, ஒலிம்பிக்கின் அதே பிரமாண்டத்தை இணை ஒலிம்பிக்கிலும் பார்க்கலாம்.

**இலங்கையின் வாய்ப்பு எப்படி**

இம்முறை பாராலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் எட்டு வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இவர்களில் ஆறு தடகள வீரர்கள் மற்றும் ஒரு நீச்சல் மற்றும் டென்னிஸ் வீரர்கள் அடங்குவர். இதில் குறைந்தது மூன்று பதக்கங்களை வெல்ல இலங்கை எதிர்பார்க்கிறது.

குறிப்பாக சமித்த துலான் (எப்–44 ஈட்டி எறிதல்), பாலித்த பண்டார (எப்–42 குண்டெறிதல்) மற்றும் நுவன் இந்திக்க (டீ–44 100 மீ.) ஆகியோர் பற்றி அதிக நம்பிக்கை உள்ளது.

கடைசியாக 2020 ஆம் ஆண்டு நடந்த டோக்கியோ பாராலிம்பிக்கில் இலங்கை இரு பதக்கங்களை வென்றது. தினேஷ் பிரியன்த ஹேரத் எப்–46 ஈட்டி எறிதலில் 67.79 மீற்றர் தூரம் வீசி புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றார். அவர் மீண்டும் ஒரு முறை பதக்கம் வெல்ல தயாரானபோதும் அவரது பயணம் தடுக்கப்பட்டுவிட்டது.

அவரது போட்டி பிரிவான எப்–46 ஈட்டி எறிதல் போட்டியானது முழங்கைக்கு கீழ் கையொன்று செயலிழந்திருக்கும் வீரர்களுக்கான பிரிவில் தொடர்ந்து இடம்பெறாத நிலையிலேயே அவரால் பங்கேற்க முடியாமல் போயுள்ளது. இதனால் பாரிஸ் பாராலிம்பிக்கிற்கு தகுதி பெற்றிருந்த அவர் திடுதிடுப்பென்று தகுதி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

என்றாலும் டோக்கியோ பாராலிம்பிக்கின் எப்–64 பிரிவின் ஈட்டி எறிதலில் 65.61 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலம் வென்ற சமித்த துலான் இம்முறை களமிறங்குவதோடு அவரிடம் இருந்து பதக்கம் ஒன்றை எதிர்பார்க்கலாம்.

பர்மிங்ஹாமில் நடந்த பொதுநலவாய விளையாட்டு போட்டியில் பரிதிவட்டம் எறிதலில் வெண்கலப் பதக்கம் வென்ற பாலித்த பண்டார பாராலிம்பிக்கில் பங்கேற்கிறார். எனினும் அவர் எப்–42 குண்டெறிதல் பிரிவிலேயே பங்கேற்கவுள்ளார்.

மற்றொரு பதக்க எதிர்பார்ப்பான நுவன் இந்திக்க டீ–44 பிரிவின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்கிறார். அவர் 2022 இல் சீனாவில் நடந்த ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றவராவார்.

இவர்கள் தவிர டீ–46 ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் பிரதீப் சோமசிரி, டீ–42 ஆண்களுக்கான 100 மீற்றர் பிரிவில் அனில் பிரசன்ன ஜயலத், டீ– 47 பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் ஜனதி தனஞ்சனா, எஸ் –9 ஆண்களுக்கான 400 மிற்றர் பிரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் நவீட் ரஹீம் மற்றும் டபிள்யு. எஸ். ஆண்களுக்கான சக்கர நாற்காலி ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் சுரேஷ் தர்மசேன ஆகியோர் இம்முறை பாராலிம்பிக்கில் இலங்கை சார்பில் பங்கேற்கின்றனர்.

பாராலிம்பிக் போட்டியில் இலங்கை முதல் முறை பங்கேற்றது 1996 ஆம் ஆண்டிலாகும். அப்போது இலங்கை சார்பில் ஒரே ஒருவராக காலிக்க பத்திரண பங்கேற்றிருந்தார். என்றாலும் அது தொடக்கம் இலங்கை எல்லா பாராலிம்பிக் போட்டிகளிலும் பங்கேற்று வருகிறது. இதுவரை இலங்கையால் மொத்தம் நான்கு பதக்கங்களை வெல்ல முடிந்திருக்கிறது. இது கோடைகால ஒலிம்பிக் போட்டி வரலாற்றில் இலங்கை இதுவரை வென்ற இரண்டு பதக்கங்களை விடவும் அதிகமாகும்.

இதில் இலங்கை அணியின் தலைவராக சமித்த துலான் செயற்படவிருப்பதோடு ஆரம்ப நிகழ்வில் இலங்கை தேசியக் கொடியை அவரே எடுத்துச் செல்லவிருக்கிறார். மாத்தறை தெனியாயவில் பிறந்த துலான் பாடசாலை காலத்தில் இருந்து விளையாட்டில் ஆர்வம் காட்டினார். 2009 இல் இராணுவ பொலிஸ் சேவை படைப்பிரிவில் இணைந்தார். 2016இல் இராணுவ மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் களமிறங்கிய அவர், ஈட்டி எறிதல் போட்டியில் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

அவரது விளையாட்டு வாழ்க்கை சாதாரண வீரராகவே கடந்து சென்றது. என்றாலும் 2017 இல் நடந்த சம்பவம் ஒன்று அவரது வாழ்வை புரட்டிப்போட்டது. ஈட்டி எறிதல் பயிற்சிகளை முடித்து விட்டு விடுதிக்கு செல்லும் போது, துரதிஷ்டவசமாக துலான் மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றுக்கு முகங்கொடுத்தார். இதன் காரணமாக அவரது வலதுகால் செயலிழந்ததுடன், சுமார் இரண்டு ஆண்டுகளாக இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

'என்னால் விளையாட முடியாது என்பதை அறிந்ததும், நான் உலகம் முழுவதையும் இழந்தது போல் உணர்ந்தேன். மருத்துவமனையில் இருந்தபோது நான் ஒரே விடயத்தைத் தவிர வேறொன்றையும் நினைக்கவில்லை. யோசிக்கவும் கூட இல்லை. ஈட்டி எறிதல் விளையாட்டு எனது உடம்பில் வேரூன்றியது. அதை எனது மனதிலிருந்து எளிதாக நீக்க முடியாத அளவுக்கு இருந்தது.

அதேபோல, விபத்தினால் ஏற்பட்ட இழப்பைக் காட்டிலும் ஒரு வீரராக தொடர்ந்து விளையாட முடியாது என்ற விடயம் என்னை மிகவும் வருத்தப்படுத்தியது' என்கிறார் துலான்.

என்றாலும் அவரது விளையாட்டு வாழ்க்கை அத்தோடு முடியவில்லை. பாரா விளையாட்டில் அவதானம் செலுத்தினார். 2018 இராணுவ பாரா மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரின் ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற அவர் அதே ஆண்டில் நடைபெற்ற தேசிய பாரா மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி வென்றார்.

அது தொடக்கம் அவரது விளையாட்டு வாழ்க்கை ஏறு முகத்தை கண்டது. இன்று இலங்கைக்கு தங்கம் வெல்லும் அளவுக்கு முன்னேறி இருக்கிறார். இது பாராலிம்பிக்கில் பங்கேற்கும் ஒவ்வொரு வீரருக்கும் பொருந்தும்.

பாராலிம்பிக் போட்டி என்பது ஏதோ ஒரு வகையில் உடல் ரீதியில் சவால்களை வென்று முன்னோக்கிச் செல்பவர்களின் விளையாட்டு என்றும் கூட குறிப்பிடலாம்.

**எஸ்.பிர்தௌஸ்...**



# பந்துவீச வந்து துடுப்பெடுத்தாடிய மிலான்



ஓல்ட் டிரபர்ட்டில் இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் புதுமுக வீரராக களமிறங்கிய மிலான் ரத்னாயக்க பந்துவீச்சாளராக சோபிப்பார் என்று பார்த்தால் துடுப்பாட்டத்தில் யாரும் எதிர்பார்க்காத வகையில் அபாரமாக ஆடினார்.

கடந்த புதன்கிழமை (21) ஆரம்பமான இந்த டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டம் கண்டபோது ஒன்பதாவது வீரராக களமிறங்கி நேர்த்தியாக துடுப்பை சுழற்றினார். இலங்கை அணி 113 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்திருந்தபோது அவர் அணித் தலைவர் தனஞ்சய டி சில்வாவுடன் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் இணைந்து எட்டாவது விக்கெட்டுக்கு 63 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர். மிலான் ரத்னாயக்க பௌண்டரிகளையும் சிக்ஸர்களையும் விளாசி ஓட்டங்களை சேர்த்தார். 135 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 6 பௌண்டரிகள் 2 சிக்ஸர்களுடன் 72 ஓட்டங்களை பெற்றார். ஷொவை பஷீர் வீசிய பந்தை உயர்த்தி அடித்தபோது கிறிஸ் வோக்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முதல் இன்னிங்ஸில் தனஞ்சய டி சில்வாவுக்கு (74) அடுத்து இலங்கை அணி சார்பில் அதிகூடிய ஓட்டங்களை பெற்றவர் மிலான் ரத்னாயக்க தான்.



ஆறு அடி உயரமான மிலான் ரத்னாயக்கவுக்கு இது தான் கன்னி டெஸ்ட் போட்டி. விசேட வேகப்பந்து வீச்சாளராக அணியில் சேர்க்கப்பட்டார். இலங்கையின் 166 ஆவது டெஸ்ட் வீரராக போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் முன்னாள் வீரர் குமார் சங்கக்காரவிடமிருந்து டெஸ்ட் தொப்பியை பெற்றே களமிறங்கினார்.

விசேட பந்து வீச்சாளர்கள் துடுப்பாட்டத்தில் இருந்து நின்று சோபிப்பது வழக்கம் தான். ஆனால் இங்கிலாந்து ஆடுகளத்தில் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் இசகுபிசகு இன்றி துடுப்பெடுத்தாடி அரைச்சதம் ஒன்றை பெறுவது என்பது சிறப்பானது.

ரத்னாயக்கவின் இந்த ஓட்டங்கள் 41 ஆண்டு பழைமையான டெஸ்ட் சாதனை ஒன்றையும் முறியடித்திருக்கிறது. அதாவது கன்னி டெஸ்ட் போட்டி ஒன்றில் 9ஆவது துடுப்பாட்ட வீரராக அதிக ஓட்டங்கள் பெற்ற சாதனையையே அவர் முறியடித்திருக்கிறார்.

இதற்கு முன்னர் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் பல்விந்தர் சந்து 1983 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி ஹைதராபத்தில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான தனது கன்னி டெஸ்ட் போட்டியில் களமிறங்கி 9ஆவது விக்கெட்டுக்கு 71 ஓட்டங்களை பெற்றதே சாதனையாக இருந்தது.

'இந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடுவது இலகுவாக இருக்கவில்லை. பந்து தாழ்வாக வருகிறது, சில நேரம் உயிர்ந்து வருகிறது. ஆட வேண்டிய பந்துகளை ஆடியும் விடவேண்டிய பந்துகளை விட்டுமே நான் ஆடினேன். அந்த நேரத்தில் அணித் தலைவருக்கு உதவுவது மாத்திரமே எனது வேலையாக இருந்தது. நிலைமைக்கு ஏற்ப அழுத்தத்தை கையாண்டு துடுப்பெடுத்தாடுவதையே நான் செய்தேன்' என்று மிலான் ரத்னாயக்க முதல் நாள் ஆட்ட நேரம் முடிவின் பின்னர் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டிருந்தார்.

மிலான் தனது 72 ஓட்டங்களை பெறுவதற்கு 135 பந்துகளுக்கு முகம்கொடுத்து நிதானமாகவே செயற்பட்டார்.

ஆறு அடி உயரம் கொண்ட 28 வயதான மிலான் ரத்னாயக்க 2017 இல் மாவட்ட ரீதியிலான ஒருநாள் தொடரில் திருகோணமலை மாவட்டத்திற்காக களமிறங்கியதன் மூலம் கிரிக்கெட்டில் அறிமுகம் பெற்ற நிலையில் முதல் தர கிரிக்கெட்டில் சிறப்பாக செயற்பட்டு வந்தார்.

இதுவரை 40 முதல்தர போட்டிகளில் ஆடியிருக்கும் அவர் 81 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார். துடுப்பாட்டத்தில் பெரிதாக சோபிக்காதபோதும் அதிகபட்சமாக 59 ஓட்டங்களை பெற்றிருக்கிறார். ஒருகட்டத்தில் இலங்கையில் தனது கிரிக்கெட் வாழ்வை நிறுத்தி விட்டு தொழிலுக்காக அவுஸ்திரேலியா புறப்பட்டுச் சென்றார். அங்கே ஓர் ஆண்டு காலம் இருந்து கழகப் போட்டிகளில் ஆடினார். கொவிட் தொற்று பரவிய போது மீண்டும் இலங்கை திரும்பிய அவர் சோனகர் கழத்திற்காக முதல்தர போட்டிகளில் ஆட ஆரம்பித்தார்.

2023 உள்ளூர் பருவத்தில் அவரது ஆட்டம் திரும்பிப் பார்க்க வைத்தது. அந்தப் பருவத்தில் அவரது பந்துவீச்சு சராசரி 29 ஆக இருந்ததோடு சிறந்த பந்துவீச்சாக 50 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

2023 பெப்ரவரியில் நியூசிலாந்துக்கு எதிரான தொடருக்கான இலங்கை டெஸ்ட் குழாத்திற்கு ரத்னாயக்க அழைக்கப்பட்டார். தொடர்ந்து அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்காகவும் இலங்கை அணியில் இடம்பெற்றார். பின்னர் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இலங்கைக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடுவதற்கு ஆப்கானிஸ்தான் இலங்கை வந்தபோதும் அந்த டெஸ்ட் குழாத்திலும் மிலான் ரத்னாயக்கவுக்கு இடம் கிடைத்தது. என்றாலும் அதில் ஒன்றில் கூட அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

'நீண்ட காலம் காத்திருந்து அணியில் இடம் கிடைத்தது என்று குறிப்பிட முடியது. இது தான் எனது சிறந்த காலம் என்று நான் கருதுகிறேன். எனக்கு முன்னர் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று கவலைப்படவில்லை. எனக்கு கிடைக்க வேண்டிய சிறந்த காலத்திலேயே வாய்ப்புப் பெற்றிருக்கிறேன் என்று நினைக்கிறேன்' என்கிறார் மிலான் ரத்னாயக்க.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# காகிதச்சுவடி...

காற்றிலே புரண்ட காகிதப் பக்கங்களை மெதுவாகச் சரிசெய்துகொண்டே, யாரும் காணாதபடி கண்களில் வழிந்த கண்ணீர் துளிகளைத் துடைத்துக்கொண்ட உதயனை ஓடி வந்து கட்டித்தழுவினான் அவனது மகன் வசந்த்.

"அப்பா, இந்தக் கொப்பில அப்பிடி என்னதான் இருக்கு, எப்ப பாத்தாலும் இதையேதான் பாக்குறீங்க. என்னதான் இதுல இருக்குண்ணு எனக்கும் சொல்லுங்களேன்" என ஆர்வத்தோடே கேட்ட வசந்தை தனது மடியில் அமரவைத்து, "வசந்த் இது ஒரு அழகான கதை. உனக்கு வயசு வரும்போது அப்பா இதைக் கட்டாயம் சொல்லுவேன்" என தன் மகனை அன்போடு நோக்கினான்.

பத்தே வயதான வசந்தின் பார்வையில் தெரிந்த ஏக்கமும், பரிதவிப்பும் இப்போதே அந்தக் கதையை கூறிவிடுங்கள் என்பதை மௌன மொழியில் உணர்த்தியமையும் உதயனுக்கு தெரியாமலில்லை.

உதயன் வசந்தின் வயதில் இருக்கும்போது அவனால் செய்ய முடியாத, மாற்ற முடியாத சில விடயங்கள்தான் காற்றில் இன்று காகிதங்களாகப் பறந்துகொண்டிருந்தன. அதைப்போல பல காகிதப் பக்கங்கள் இனியும் சேரக்கூடாதெனில் அந்தப் பக்கங்களுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் அந்தக் கதை இப்போதே வசந்திற்கு தெரிவதும் அவசியமே என்ற எண்ணமும் உதயனின் மனதில் ஆழ வேரூன்றியது.

தனது மகனை அணைத்துக்கொண்டே, "இந்தக் கதை இப்போதே உனக்குத் தெரியவேண்டுமா?" எனக்கேட்க, அவனும் "ம்ம்ம்ம்" என தலையசைக்க, ஆறாதரணமாய் காகிதங்களில் சேகரிக்கப்பட்ட வலிகளை கட்டுடைக்க ஆரம்பித்தான் உதயன்.

அப்போதெல்லாம் அந்தப் பாதைகள் முழுவதும் செம்மண்ணாகத்தான் இருக்கும். வீதியோரமெங்கும் பூவரசு மரங்கள் புன்னகைத்துக்கொண்டே காற்றின் பாடலுக்கு நடனமாடிக்கொண்டிருக்கும். குழாய்களைத் திறந்தால் இப்போது தண்ணீர் வருவதைப் போல அப்போது இல்லை. குளிப்பு முழுக்குக்கும், குடிதண்ணிக்கும் 2 கிலோமீற்றர் தூரத்திலிருக்கும் குளமும், கிணறும் தான். ஊரிலிருந்த பெண்களெல்லாம் இடுப்பிலும், தலையிலும் குடங்களை வைத்துக்கொண்டு 5 மணிக்கே நடக்க ஆரம்பித்துவிடுவார்கள். வசதியாய் இருந்தவர்கள் வண்டிலில் மாடுகளைப் பூட்டிக்கொண்டு தண்ணீர் எடுத்து வந்து கிராமத்தில் உள்ளவர்களுக்கு விற்பனை செய்வதும் வழக்கம்.



உனது பாட்டியும் தாத்தாவும் அப்போது பக்கத்து ஊரில் ஆசிரியர்களாக வேலைசெய்துகொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு ஒரேயொரு பிள்ளை. எங்கள் வீட்டின் மூலையில் ஒரு சிறிய குடில் இருக்கும். அங்கே ஒரு வயதான பாட்டி இருந்தார். அவரிடம்தான் என்னை விட்டுவிட்டு எனது அம்மாவும் அப்பாவும் வேலைக்குப் போவார்கள். காலையில் பள்ளிக்கூடம், ரியூசன், மாலையில் ரியூசன் என ஓடிக்கொண்டேயிருந்தார்கள் அவர்கள். எனது வாழ்க்கையில் அந்தப் பாட்டி மட்டுமே எனக்கான ஒரேயொரு ஆறுதலாக இருந்தார்.

அவளுக்கென்று வேறு யாருமில்லை. நானும் எனது பெற்றோரும் மட்டும்தான். அவளுக்கும் ஒரேயொரு மகன் மட்டும்தான். இளமைக் காலத்திலேயே தனது கணவனை இழந்தவள். தனது ஒரே மகனுக்கு வறுமை தெரியக்கூடாது என்று, பல்வேறு கூலித்தொழில்களைச் செய்துதான் தன் பிள்ளையையும் வளர்த்தவள். அவள் நினைத்தபடியே அவள் பிள்ளையையும் ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவந்தவள்.

உன்னைப்போல நானும் ஓரளவு வளர்ந்த பிறகு பாட்டி வீடே எனது வீடாகிப்போனது. அதிகாலையிலேயே எழுந்து என்னுடைய வீட்டின் உடுப்புக்களை பெரிய மூட்டையாகக் கட்டிக்கொண்டு அதை தலையில் வைத்து, கைகளால் பிடிக்காமலே நடப்பார். அந்த வயதிலும் அவரது உடலின் சமநிலையும், வலிமையும் இன்று நினைத்தாலும் என்னை வியக்கச்செய்கிறது. வீதியோரத்தில் இலந்தை மரங்களிலிருந்து விழுந்திருக்கும் பழங்களைப் பொறுக்கிக்கொண்டே அவருக்குப் பின்னால் நானும் நடப்பேன்.

குளக்கரையை சென்றடையும்வரை ஆர்வமாகச் செல்லும் நான், தண்ணீரைக் கண்டவுடன் கரையிலேயே உட்காந்துவிடுவேன். என்னை இழுத்துத் தூக்கி, தண்ணீரில் நனைத்து, ஒருவழியாக குளிக்கச்செய்துவிடுவது பாட்டியின் வழக்கம். குளக்கரையில் ஓங்கியுயர்ந்த ஆலமரத்தின் விழுதில் ஊஞ்சல் ஆடி, குறும்புகள் செய்து, கண்கள் சிவக்கும்வரை நான் குளித்து முடிக்கும்வரையில் எங்கள் வீட்டின் உடுப்புக்களை துவைப்பதிலே அவளது நேரம் போயிருக்கும்.

வீட்டுக்குப் போனதுமே என்னைத் தயார்ப்படுத்தி, உணவு ஊட்டிவிடுவாள், ஒவ்வொருமுறை வாய்க்குள் உணவை வைக்கும்போதும் பொய் சொல்லக்கூடாது, நல்ல பிள்ளையா இருக்கணும், குழப்படி செய்யக்கூடாதென்றெல்லாம் பல அறிவுரைகளைச் சொல்லி பாடசாலைக்கு அனுப்பிவைப்பது அவளது வழக்கமாகிப்போனது. நானும் உன்னைப்போல சிறுவனாக இருக்கும்போதுஅவற்றையெல்லாம்கருத்தில்கொள்வதேயில்லை. "ம்ம்ம்" என தலையை ஆட்டிவிட்டு ஓடிச்சென்றுவிடுவேன். பாட்டிக்கு நான், எனது குடும்பம், என்பதைத் தாண்டி அவளுக்கென்று வேறு உலகமே கிடையாது.

பாட்டிக்கென்று வருமானம் ஏதும் கிடையாது. அவளது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளும் காலப்போக்கில் காணாமலேயே போய்விட்டன. என்னுடைய தந்தை எப்போதாவது கொடுக்கும் பணத்தில்தான் அவளது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. இருளுக்குப் பின் அனைவருக்கும் ஒளி தோன்றினாலும், பாட்டி எதிர்பார்த்த ஒளி மட்டும் தோன்றவேயில்லை. அப்போது நான் மட்டும் அவளுக்கு ஒரு ஒளிக்கீற்றாக இருந்தேன். எத்தனையோ தடவைகள் அவளின் ஆசைகள், எதிர்பார்ப்புக்களை அறிய முயன்றபோதும் சிறுவனாகவிருந்த எனக்கு அவளது புன்னகையைத்தவிர வேறு பதிலேதும் கிடைத்ததுமில்லை.

எப்போதாவது அவளிடமிருக்கும் மிச்சப் பணத்தில் எனக்கென்று எதையாவது வாங்கி வைத்துக்கொள்வதற்கு அவள் மறந்துபோனதில்லை.

கடைப்பக்கம் சென்றாலே இனிப்புக்களை வாங்கி தனது சட்டைக்குள் முடிந்து வைத்திருந்து நான் வந்ததும் அதை கொடுப்பதற்காக ஏங்கிக்கொண்டிருக்கும் அவளது விழிகள் இப்போதும் என் கண்முன்னே வந்து போகின்றது. விளையாட்டுப் பொருட்கள், கலர் பெட்டிகளென எனக்குப் பிடித்ததையெல்லாம் வாங்கிக்கொடுப்பதில் அவளுக்கு அலாதி பிரியம்.

முன்பெல்லாம் இரவில் பெற்றோர்களுடன் சென்று உறங்கிக்கொள்ளும் நான், பின்னர் பாட்டியுடனே உறங்க ஆரம்பித்தேன். அவள் வீட்டின் கூரைகளிலிருந்த இடுக்குகள் வழியாக வானத்து விண்மீன்களை எண்ணிக்கொண்டே பாட்டி கூறும் கதைகளோடு உறங்குவதற்கு எனது விழிகள் பழக்கப்பட்டிருந்தன.

அவளும் சலிப்பின்றி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய கதைகளை எனக்காக தயார்ப்படுத்தி என் வரவிற்காக காத்திருக்கத் தொடங்கினாள். இவ்வாறே அன்பின் பிணைப்பால் நகரத்தொடங்கிய எம் நாட்கள் சடுதியாக முடிவுற்றுப்போகுமென அப்போது நாம் இருவருமே நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

வழமைபோல் அன்றும் பாடசாலை முடித்து வீடு வந்திருந்தேன். எனது பெற்றோர்கள் வழமைக்கு மாறாக அன்று நேரத்திற்கே வீட்டிற்கு வந்திருந்தனர். இருவரும் தமது அறையினுள்ளே மிகவும் காரசாரமாக எதையோ பேசிக்கொண்டிருந்தார்கள். அது என்னவென்று என்னால் அப்போது பொருள்கொள்ள முடியவில்லை. ஆனால் ஏதோ பிரச்சினையிருப்பதை மாத்திரம் என் மனது உணர்ந்துகொண்டது. அதையெதையும் கருத்திலெடுக்காமல் வழமையைப்போலவே நான் பாட்டியின் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். அங்குதான் எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

பாட்டியின் விழிகளை முழுவதுமாய் கண்ணீர்த்துளிகள் நிரப்பியிருந்தன. எப்போதும் புன்னகைக்கும் அவளது முகத்தில் இன்று வாட்டம் மாத்திரம் குடிகொண்டிருந்தது. நான் காணக்கூடாதென்று அவள் கரையிட்டிருந்த மிச்சக் கண்ணீரும் என்னைக் கண்டதும் கரைபுரண்டோடியது. அவள் என்னை அணைத்துக்கொண்ட அணைப்பில் வழமைக்கு மாறான பரிதவிப்பை என்னால் நிச்சயமாக உணரமுடிந்தது. என்ன பாட்டி?, என்ன நடந்தது? என கேள்விக்குமேல் கேள்விகேட்டும் கண்ணீரைத்தவிர பதிலேதுமில்லை. அவளது வாய் வார்த்தைகளுக்கு பூட்டிட்டவர் யார் என்பதைக் கண்டுகொள்ள என் மனம் தவியாய் தவித்தது. அவளுக்கு நாளை என்ன நடக்கப்போகிறது என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் எனக்குத் தெரியவேண்டாம் என அவள் நினைத்துக்கொண்டாள்.

அணைப்புக்களும், தவிப்புக்களும் மெல்ல விலக, அந்த இராப்பொழுதில் தன்னுடைய துணிகளையெல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டிருந்த அவளது முகத்தைப் பார்த்தபடியே அன்று என்னுடைய கண்கள் உறங்கிப்போனன.

வழமைபோல மறுநாள் காலையில் விழித்துக்கொண்டேன். அன்பாய் என்னை எழுப்பும் பாட்டியின் குரல் அன்று கேட்கவில்லை. வெளியில் ஏதோ சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. இந்த இடமும் புதிதாய் இருந்தது. உயர்ந்த கட்டடங்கள், ஒலியெழுப்பும் வாகனங்களெல்லாம் வீதியை நிறைத்திருந்தன. வாகனத்தில் ஏற்றப்பட்டிருந்த எனது வீட்டுப் பொருட்களை யாரோ இறக்கி உள்ளே கொண்டுசென்று கொண்டிருந்தார்கள். அம்மாவும் அப்பாவும் மும்முரமாக வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். என் இரு விழிகள் மாத்திரம் இடுக்குகளிலெல்லாம் பாட்டியைத் தேடிக்கொண்டிருந்தது. பாட்டியும் இல்லை, பாட்டி எங்கே என்ற கேள்விக்குப் பதிலும் இருக்கவில்லை. பாட்டி மீதான ஏக்கத்தில் என் உடல்நிலையும் பல நாட்களாக மோசமாயிருந்தது. காலப்போக்கில் பாட்டி இல்லாமலேயே என்னை வாழப் பழக்கிவிட்டனர்.

என் பெற்றோருக்கு நகரத்திலுள்ள பாடசாலையொன்றிற்கு இடமாற்றம் கிடைத்திருந்தது.

அதனால்தான் இங்கு வந்துவிட்டோம் என்பதைக் காலப்போக்கில் தெரிந்துகொண்டேன். ஆனால் பாட்டிக்கு என்ன நடந்தது?, ஏன் வரவில்லை? என்பதெல்லாம் என் மனதில் கேள்விகளாய் சேர்ந்துகொண்டேயிருந்தது.

தான் சொல்லிக்கொண்டிருப்பது தனது சொந்தப் பாட்டியின் கதைதான் எனும் உண்மை தனது குழந்தைக்குத் தெரியாமல், அவன் மனதைக் காயப்படுத்த விரும்பாமல் உதயன் கதையைக் கூறிக்கொண்டிருக்க, "நீங்க வளர்ந்த பிறகும் அந்தப் பாட்டியைத் தேடவில்லையா அப்பா" எனக் கேட்டான் வசந்த்.

அவனது கேள்விகள் தொடரும்போதே உதயனின் தாய் பழங்கள் நிறைந்த பையுடன் அறையினை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் அப்பம்மா" என பாய்ந்தோடிக் கட்டிணைத்து "அப்பா ஒரு பாட்டிய சின்னவயசில தொலச்சிட்டாராம், நீங்க என்ன விட்டு எங்கயும் போயிராதீங்க" என்றான்.

இந்தக் கதையூடாக வசந்திற்கு விளங்க வைக்க வேண்டுமென உதயன் கருதிய அத்தனையும், வசந்தின் அந்த ஒற்றை வார்த்தையில் நிறைவேற்றப்பட்டதையெண்ணி மனத்திருப்பியுற்றான் உதயன்.

தங்களது இடமாற்றத்துக்காக முதியோர் இல்லத்திற்குப் பாட்டி அனுப்பப்பட்டதை அன்றுவரை மகனிடமிருந்து மறைத்து வைத்திருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கும் உதயனின் தாயின் மன நிலையும், பாட்டியின் நிலையை பிற்காலத்தில் அறிந்திருந்தும் தன் பெற்றோருக்கு அது தெரிந்ததாக வெளிப்படுத்திக்கொள்ளாமல் இருபத்தைந்து ஆண்டுகளாக மனதிற்குள்ளே புழுங்கிக்கொண்டிருக்கும் உதயனின் மன இரணங்களும் பார்வைகளின் பரிதவிப்பால் ஒன்றித்துப் போயின.

"என் பேரனுக்கு" என எழுதப்பட்டு காற்றில் பறந்துகொண்டிருந்த பாட்டியின் காகிதச்சுவடியோடு



**கிரிஜா அருள்பிரகாசம்**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள்.**

**— ஆர் —**

# தொடர்கதைகளை நோக்கி வாசகர்களை ஈர்த்தவர்

## கே.வி.எஸ்.வாஸ்

பத்திரிகையில் வெளிவரும் தொடர் கதையை இலட்சக் கணக்கான வாசகர்கள் விழுந்து விழுந்து படிக்கும் படியான ஒரு புரட்சிகர சாதனையை நிலை நாட்டியவர் அமரர் கல்கி.'ஆனந்த விகடன்" இதழில் அவர் எழுதிய 'தியாக பூமி" என்ற தொடர்கதையை அந்த நாட்களில் தமிழ் வாசகர்கள் வெகுவாகப் பாராட்டிப் படித்தார்கள்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பினாங்கு, பர்மா, பீஜி, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வசித்த தமிழர்களும் படிக்கலானார்கள். அதேயளவுக்கு இலங்கையில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் விரும்பிப் படிக்கும் படி செய்தவர் 'ரஜினி' என்ற புனைபெயருக்குள் மறைந்து கொண்டு கதைகள் எழுதிய கே.வி.எஸ். வாஸ் தான். அவர் எழுதிய 'குந்தளப் பிரேமா" என்ற தொடர் நவீனம் வெளிவந்த போது பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் கவரப்பட்டார்கள்.

பின்னர் 'நந்தினி" என்ற தொடர்கதையை எழுதினார். நந்தினியைத் தொடர்ந்து மேலும் பல நவீனங்களை எழுதி, இலங்கையின் தலைசிறந்த நாவலாசிரியர் என்ற பெயரையும் புகழையும் தட்டிக் கொண்டார்.



கே.வி.எஸ்.வாஸ் சுமார் 37 வருட காலம் வீரகேசரியில் உதவியாசிரியாராகப் பணிபுரிந்தார்.

1933 ஆம் ஆண்டில் வந்து சேர்ந்து, படிப்படியாக பதவி உயர்வு பெற்று செய்தி ஆசிரியரானார். பின்னர் வீரகேசரி தினசரிக்கும், வார இதழுக்கும் பிரதம ஆசிரியராக இருந்து 1970 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். கும்பகோணத்தில் பிறந்து, திருச்சி சென்.ஜோசப் கல்லூரியில் பயின்று சென்னை பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டதாரியானார். அதன் பின்னரே அவர் பத்திரிகைத் தொழிலில் இறங்கினார். கல்கி ஆசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி, கே.வி.எஸ்.வாஸ் பற்றி எழுத நேர்ந்த போது, 60 தொன் ரஷ்ய தாங்கிக்கு சமமானவர் என்று எழுதினார். இவர் எழுதிய 'குந்தளப் பிரேமா" எனும் தொடர் பாராட்டக்கூடிய பாத்திரப் படைப்பும், வர்ணனை விநோதமும், சீர்திருத்த கருத்துக்களும் கொண்ட ஒரு சிறந்த நாவல் என்பதில் ஐயமில்லை. இவரின் படைப்புகளில் இருக்கும் விறுவிறுப்பே இவரது ப்ளஸ் பொயின்ட். இவரின் 36வது நினைவு தினம் இம்மாதம் 30ஆம் திகதியாகும்.

**கே.வி.எஸ் மோகன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல:135

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | 04 | ■ | 05 | 06 |
| | ■ | 07 | | | 08 | ■ | |
| | ■ | 09 | | | | ■ | |
| ■ | 10 | ■ | 11 | | | 12 | |
| 13 | | 14 | ■ | | ■ | | ■ |
| | ■ | 15 | | ■ | 16 | | 17 |
| 18 | 19 | ■ | ■ | 20 | | | |
| 21 | | | | ■ | 22 | | |

**திரு/திருமதி.செல்வி** ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
**முகவரி** ........................................
........................................
........................................

.................... ....................
**திகதி** **கையொப்பம்**

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 135**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 135

**இடமிருந்துவலம்**

1. பணம், பதவி, அந்தஸ்து போன்றனவற்றால் பிறரின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்வது
5. ஒரு வனவிலங்கு (திரும்பியுள்ளது)
7. நான்கு பாகமும் சம அளவுடையது.
9. இருமலுடன் சம்பந்தப்பட்ட ஒருவகை நோய் (குழம்பியுள்ளது)
11. கர்நாடக இசைப்பாடகரை இப்படியும் சொல்வர். (குழம்பியுள்ளது)
13, ஒரு தமிழ் மாதம்
15. பாரம்
16. விருந்தினர்
18. மகிழ்ச்சி
20. பாராட்டத்தக்க வகையில் சிறப்பாக இருப்பது (குழம்பியுள்ளது)
21. உருவம் இல்லாதது (திரும்பியுள்ளது)
22. அவசியமற்ற பிரச்சினை அல்லது வீண் தகராறு(திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. பேட்டி அல்லது நேர்முகம்
2. வீட்டின் நுழையும் வழி
3. துப்பாக்கி (குழம்பியுள்ளது)
4. ஒருவகை தானியம்
6. மத்தியஸ்தர்
8. பகுதி அல்லது நூலின் தொகுதி
10.சிறப்பு அல்லது கீர்த்தி
12. ஒரு காரியத்தை சாதிக்கக் கையாளும் சாதுரியமான வழிமுறை
13. மண்ணுலகம்
14. குழந்தை
16. கணை
17. கால நெருக்கடியால் ஏற்படும் அவசரம் (குழம்பியுள்ளது)
19. காற்று (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 134

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. உபகாரம்
5. துவி
7. சிரிப்பு
8. காயம்
9. புளி
10 பிரபு
11. நாம்
13. வால்
14. அரிவரி
17. தொன்மை
18. சுடுகாடு
21. மைதிலி
23. கரட்
24. தாம்பூலம்

**மேலிருந்து கீழ்**

1. உசிதம்
2. பரி
3. காப்பு
4. புரளி
5. தும்பி
6. விகாரம்
8. புயல்
12. நாவன்மை
13. வாரிசு
15. அமைதி
16. ஆகாரம்
19. கடும்
20. பூட்டு
22. தாலி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :134

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ஆர். சந்திரமலர்,** மேதகன்கொட, ரக்குவாணை | **அயனா மன்சீர்,** எஹெட்டுமுல்ல, நாகொல்லாகொட | **எம்.எல். ஆதம்லெப்பை** 71/சி டவுன் பள்ளி வீதி, அக்கறைப்பற்று |

### பாராட்டு பெறுவோர்

1. **வி. பாலேந்திரா** வெள்ளவத்தை
2. **எஸ். சந்திரிக்கா,** களுவாஞ்சிக்குடி
3. **என்.கே. வேணி** பலாங்கொடை
4. **சீ. அருந்ததி,** பதுளை
5. **எஸ். தமிழ்மலர்** பாண்டிருப்பு
6. **மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை
7. **எஸ் ஸக்கூர்** மடவள பஸார்
8. **எம்.எம் ஷசாத்** மருதமுனை
9. **எம்.நிஸாஹிர்** பேருவளை
10. **எம்.எச்.சீ.என். ஹம்தா,** வெலிகம

# வாரபலன்



25.08.2024 - 31.08.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் தோன்றும். நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். சுற்றுலா பயணம் செல்லும் வாய்ப்புகளும் கிடைக்கும். எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைப்பட்ட பணவரத்து தடைநீங்கி கைக்கு வந்து சேரும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகளும் நீங்கும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த இலாபங்கள் கிடைக்கும். பெண்களுக்கு மனக்குறைகள் நீங்கி மனதில் நம்பிக்கை உண்டாகும். மாணவர்கள், ஆசிரியர்கள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பதால் முன்னேற்றம் அடைவார்கள்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

தடைப்பட்ட பணம் கைக்கு கிடைக்கும். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அவசர முடிவுகளை எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. வீடு, மனை, நிலம், வாகனம் போன்ற சொத்துக்களில் எடுக்கும் முயற்சிகள் வெற்றி கிடைக்கும். தொழில் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு தாமதப்படலாம். வெளிநாடு செல்வதில் எதிர்பாராத சிக்கல் ஏற்படலாம். எதிர்ப்பாலினத்தாரிடம் பழகும் போது எச்சரிக்கை அவசியம். கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்கள் உண்டாகலாம். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் வந்து குவியும். பெண்கள் இந்த மாதம் எதிலும் மிகவும் கவனமாகசெயல்படுவது நல்லது. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம். விளையாட்டுகளில் ஈடுபடும் போது கவனம் தேவை.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

வசதிகள் பெருகும். உறவினர்களுடன் சுமூக நிலை காணப்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பொருளாதார வளம் மேம்படும். தொழில் உன்னத நிலையை அடையும். குடும்பத்தில் முன்னேற்றமும், சுபநிகழ்ச்சிகளும் நடைபெறும். தொழிலில் நற்பெயர் கிடைக்கும். மேலதிகாரிகளின் அனுசரணை கிடைக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. நெருப்பு தொடர்பான வேலையில் இருப்பவர்கள் சற்று கவனமாக இருக்கவும். வழக்கு விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பெண்களுக்கு கைவிட்டுப் போன பொருட்கள் மீண்டும் கிடைக்கும். கலைஞர்கள் நல்ல புகழும் பெருமையும் கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் சிறப்பான பலனைக் காணலாம். நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். மேற்படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

*எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரத்தில்* இருந்த போட்டிகள் விலகும். உங்களின் பொருளாதார வலிமை கூடும். அதேவேளையில் பொருட்களின் மீது கவனமும் தேவை. இழப்பு ஏற்படலாம். வாழ்க்கையில் பொன்னான வாய்ப்புகள் தேடி வரும். வாழ்க்கை வளம் முன்னேறும். அதேவேளையில் தெய்வ அனுகூலத்துடனும் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போவதால் நிலைமையைச் சமாளிக்கலாம். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் சீரான வளர்ச்சி இருக்கும். கலைத்துறையினருக்கு தீவிர முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்கள் திறமைக்கு ஏற்ற புகழ் பாராட்டு கிடைக்கலாம். மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்து படிப்பது நல்லது.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

திடீரென இடம்பெயரும் சூழ்நிலை உருவாகும். உங்களின் தரத்தை விட தீயோரோடு சகவாசத்தை குறைக்க வேண்டும். எனினும் தெய்வ அனுகூலத்தால் விடுபட்டு முன்னேற்றம் வந்து சேரும். உறவினர்கள் வகையில் வீண்மனக்கசப்பு வரலாம். வெளியூர் பயணம் ஏற்படும். அதீத உழைப்பின் மூலமே அனைத்து நற்பலன்களையும் பெற முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அறிவைப் பயன்படுத்தி ஏற்றம் காணலாம். கலைஞர்கள், புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறுவர். புகழ் பாராட்டு கிடைக்கும். மாணவர்கள் தொடர்ந்து சிறப்பான நிலையில் இருப்பர். நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். பலருக்கு வெற்றி நிச்சயம். பொதுநல சேவகர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். பெண்கள் உற்சாகமாக காணப்படுவர். கணவர் மற்றும் அண்டை அயலாரின் அன்பும் பாசமும் கிடைக்கும். எதிலும் சாதகமான நிலை ஏற்படும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும் வாரம். எந்த பிரச்சினையையும் சந்தித்து முறியடிக்கும் வல்லமையைப் பெறலாம். காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும். மதிப்பு மரியாதை சுமாராகவே இருக்கும். வீண் வாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வீடு வாங்க வாய்ப்பு உண்டு. குழந்தை பாக்கியம் கிடைக்கும். கணவன் மனைவி இடையே அன்பு நீடிக்கும் என்றாலும் சிற்சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்த குறையும் இருக்காது. உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பண விஷயம் திருப்திகரமாக இருக்கும். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்து போக வேண்டியிருக்கும். மாணவர்கள் படிப்பில் தீவிர அக்கறை எடுக்க வேண்டும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

உடல்நலத்தில் கவனம் கொள்ள வேண்டியது அவசியம். உங்களுடைய உடல்நலத்தை பொறுத்தவரை உஷ்ணம் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட உபாதைகள் வரலாம். சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம். நல்ல பணப் புழக்கம் இருக்கும். முயற்சிகளின் பேரில் சுபகாரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். வியாபாரிகள் சிறப்பான முன்னேற்றத்தை பெறலாம். லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் சற்று தாமதமாக வந்தாலும் முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும். பொருளாதாரம் எதிர்பார்த்தபடி இருக்காது. உடன் இருப்போரால் பிரச்சினைகள் வரலாம். மாணவர்கள் சிரத்தை எடுத்து படிப்பர்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சிகளில் சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர். தடைகளை முறியடித்து காரிய வெற்றி காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் பெருகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும். தொழிலால் அனுகூலம் ஏற்படும். எதிரிகளால் இருந்து வந்த தொந்தரவு நீங்கும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்களால் பொருளாதார லாபம் கிடைக்கும். சமூக நல சேவகர்கள் சிறப்படைய மிகுந்த முயற்சி தேவை. மாணவர்களுக்கு அனுகூலமான போக்கே காணப்படுகிறது. நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். பெண்களுக்கு சிறப்பான பலன்கள் கிடைக்கும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும். கைவிட்டுப் போன சொத்துக்கள் மீண்டும் வந்து சேரும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும். உங்கள் சொல்லுக்குப் பிறர் மரியாதை கொடுப்பர். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்ப பிரச்சினை கட்டுக்குள் அடங்கி இருக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் நல்ல வளர்ச்சியைக் காணலாம். உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்தவர்கள் தவறை உணர்ந்து உங்களிடம் வந்து சரணடைவார்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். தொழில் புரிவோருக்கு இருந்து வந்த மந்தநிலை மறையும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். ஏற்கனவே இருந்து வந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பெண்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு உண்டு. உங்கள் சொல்லுக்கு பிறர் கட்டுப்படும் நிலையும் உருவாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பான முன்னேற்றத்தை அடைவார்கள்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். மனைவி வழியில் சிற்சில கருத்துவேறுபாடுகள் வரலாம். ஆனாலும் அது நொடிப் பொழுதில் சரியாகி விடும். உத்தியோகத்தர்கள் அதிக வேலைபளுவை சுமந்தாலும் அனைத்தையும் சுலபமாக செய்வீர்கள். அலைச்சல்கள் வரலாம். முதலீடுகளை திருப்பி எடுப்பதோடு மட்டுமல்லாமல் லாபத்தையும் அள்ளுவீர்கள். வரவு செலவு கணக்கில் இருந்து வந்த சந்தேகங்கள் நீங்கும். கலைத்துறையினருக்கு மிகப் பொன்னான காலமிது. புதிய ஒப்பந்தங்களை துணிந்து ஏற்றுக் கொள்ளலாம். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகள் செய்து அனுசரணையாக இருப்பார்கள். பெண்கள் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை திறமையாகச் செய்து முடிப்பர். மாணவர்கள் சிறிது சிரத்தை எடுத்தாலே பெருவெற்றி பெறலாம். அனைத்திலும் நினைத்த மதிப்பெண்கள் கிடைக்கும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

நல்ல பொருளாதாரம் வளமும் மேன்மையும் உண்டாகும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மதிப்பு, மரியாதை சிறப்படையும். செல்வாக்கு ஓங்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தம்பதிகளிடையே அன்பு மேலோங்கும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களினதும் உதவி கிடைக்கும். சிலர் அதிகாரி அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவர். வியாபாரிகள் செய்து வரும் தொழிலில் சிறப்பான பலன்களைக் காணலாம். தொழிலை விரிவுபடுத்துவதற்கான வேலைகளை இப்போது ஆரம்பிக்கலாம். தொழில் நிமித்தமாக சிலர் தூர தேச பயணம் மேற்கொள்ள வேண்டி வரலாம். கலைஞர்கள் தங்குதடையின்றி புதிய வாய்ப்புகளைப் பெறலாம். புகழ் பாராட்டு வந்து சேரும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரும். மாணவர்கள் நல்ல நிலைக்கு உயர்த்தப்படுவீர். மேற்படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

நீண்ட நாட்களாக இருந்து வந்த குறைகள் ஒவ்வொன்றாக மாறும். ஒவ்வொரு நாளும் முன்னேற்றத்திற்கான பாதைகளை வகுப்பீர்கள். காரிய அனுகூலங்களும் உண்டு. செய்யும் முயற்சிகளில் தடை வந்தாலும் அதனை முறியடிக்கும் வல்லமை உங்களுக்கு உண்டு என்பதை உணருங்கள். தம்பதிகளிடையே அன்பு அதிகரிக்கும். சுபநிகழ்ச்சிகள் உடனே நிறைவேறாமல் போகலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கும். கலைத்துறையினருக்கு பணவரவு சீரான நிலையில் இருக்கும். அதிக சிரத்தை எடுத்தால்தான் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்களுக்கு அண்டை அயலாருடன் இருக்கும் மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும். சிக்கல்கள் அனைத்தும் தீரும்.மாணவர்கள் தீவிர முயற்சி எடுத்து படிப்பது அவசியமாகும். உடல்நலனில் மிகுந்த கவனம் தேவை.

# வெவ்வேறு தளங்களில் இயங்கும் அரசியல் பிரமுகர்கள் தமிழ் அன்னைக்காக ஓரணியில் திரண்ட அற்புதம்

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 47

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை துபாயில் நடத்துவதற்கான தீர்மானத்தையே கடந்த பத்தாவது மாநாட்டில் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் அங்கு நடத்துவதில் ஏற்பட்டிருந்த சிக்கல் நிலையினைத் தொடர்ந்து மலேசியாவில் இம் மாநாட்டை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந் நிகழ்வின் ஏற்பாட்டில் "ஓம்ஸ் அறவாரியம்" அமைப்பின் பங்கேற்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. இவ் அமைப்பு மலேசியாவில் வாழும் தமிழர்களின் மனதை வென்ற ஓர் அமைப்பாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழிக் கல்வி அமுலாக்கம் தொடர்பில் மிக கரிசனையை காட்டிவரும் அமைப்பாகத் திகழ்வதோடு, இம் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டு விடயம் தொடர்பில் அதீத கவனத்தைக் கொண்டு செயற்படும் சுயாதீன அமைப்பாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இவ் அமைப்பு இந்தியத் தமிழர்களின் பேராதரவுடன் ஏனைய இன மக்களின் நேச ஒத்துழைப்போடும் வழிநடத்தப்படுகிறது. இவ் அமைப்பின் தலைமைப் பொறுப்பில் பா.தியாகராஜா என்ற ஆளுமையின் பங்கேற்பு முன்னுதாரணமாக திகழ்கிறது.

துபாயில் இம் மாநாட்டை நடத்துவதற்கான சூழ்நிலை சாதகமாக இல்லாத போது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் த.மாரிமுத்து, செயலாளர் நந்தன் மாசிலாமணி ஆகியோர் "ஓம்ஸ் அறவாரியம்"; அமைப்பின் உதவியையே நாடியுள்ளார்கள். முதலில் இவ் அமைப்பு அதனை ஏற்க மறுத்த நிலையில் பின்னர் அதனை ஏற்றுக்கொண்டதாக அறிய முடிகிறது. அதன் விளைவாக இம் மாநாட்டின் ஓர் முக்கிய அங்கமாக "ஓம்ஸ் அறவாரியம்" அமைப்பு திகழ்ந்ததையடுத்து இந் நிகழ்வின் ஏற்பாடுகளை வழிப்படுத்தும் பொறுப்பில் பா.தியாகராஜாவின் வகிபங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இவ் அமைப்பில் இவரது உணர்வுபூர்வமான ஈடுபாடு இவரை "ஓம்ஸ் பா.தியாகராஜா" என்றே அடையாளப்படுத்துகிறது. மலேசியாவில் வாழும் இந்தியத்; தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களை அக்கறையுடன் முன்னெடுக்கும் அமைப்பார்ந்த செயற்பாடுகள் முன்மாதிரியானதாக விளங்குகின்றன. இவ் அமைப்பின் நிறுவுனர் என்ற வகையில் இவரது வழிப்படுத்தலில் வெளியாகும் "தமிழ் மலர்" தினசரியும் ஊடக அனுசரணையினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் சோழர்களின் காலத்திலிருந்தே தொடர்புகள் காணப்பட்ட போதிலும் 1700களின் பின்னர் காலனித்துவ ஆட்சியின் விளைவாக தென்கிழக்காசிய நாடுகளில் தென்னிந்தியாவில் இருந்து தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். சமகாலத்திலேயே இலங்கைக்கும் அவ்வாறே தமிழர்கள் புலம்பெயர்ந்த வரலாறு குறிப்பிடத்தக்கது. மலேசியாவிற்கும் இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் உட்பட வர்த்தக நோக்கத்திற்காக புலம்பெயர்ந்த தமிழர்களும் மலேசியாவின் புதிய கலாசாரத்திற்கு வித்திட்டமை கவனிக்கத்தக்கது. இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களில் கலைஞர்கள், தமிழ் பற்றாளர்கள், எழுத்தாளர்கள், ஆன்மிக அறிஞர்களின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் பற்றுறுதி கொண்ட செயற்பாடுகள் தமிழின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் தொடர்ச்சி நிலையில் மலேசியாவில் தமிழ் இதழ்களின் ஆளுகை முக்கியத்துவம் பெறுகிறது. அவ்வாறான இதழ்களின் பரிணாமத்திலேயே "தமிழ் மலர்" இதழின் பங்கேற்பும் முக்கியத்துவம் பெறுகிறது. தினகரன் இதழில் வெளிவரும் இத் தொடரை "தமிழ் மலர்" இதழிலும் மீள்பிரசுரம் செய்வதற்கான வாய்ப்பினை ஓம்ஸ் பா.தியாகராஜா வழங்கியமை அவதானிக்கத்தக்கது. "உண்மையின் உரைகல்" எனும் மகுட வாசகத்துடன் 1960ஆம் ஆண்டு தொடக்கம் "தமிழ் மலர்" இதழ் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தமிழ் இதழ்கள் தொடர்பான அவதானம் பல மட்டங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. பிரதேச மட்டங்கள் தொடர்பான வகைபாடுகளுடன் இவ் அவதானம் விரிவு பெறுகிறது. அவ் வகையில் மலேசியாவில் தமிழர்களின் தடத்தைப் போன்ற அவதானத்தை இந் நாட்டில் இந்திய வம்சாவளி தமிழர்கள் பெறுகிறார்கள். இம் மக்களின் சமூக நகர்வின் பரிமாணம் மலையக மக்கள் என்ற கோசத்தை வலுவடைய செய்திருக்கிறது. மலையக மக்களின் இத்துறை தொடர்பான ஈடுபாடு தனித்து மதிப்பிடக் கூடியதாக உள்ளது. அதன் விளைவாகவே "மலையக இதழியல் வரலாறு" என்ற பார்வை அவதானத்தை வென்றுள்ளது. குறிப்பாக மலையக இலக்கிய ஆளுமையான தெளிவத்தை ஜோசபின் ஆவணப்படுத்தல் முயற்சி கவனிக்கத்தக்கதாகும். 1918இல் லாரி முத்துகிருஷ்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளியான "ஜனமித்திரன்" இதழே மலையகத்தின் முதல் இதழாக கொள்ளப்படுகிறது. அதனைத் தொடர்ந்தே கோ.நடேசய்யரின் தேசநேசன், தேசபக்தன் ஆகிய இதழ்கள்' தடம் பதிக்கின்றன.

மலேசியாவை பொறுத்தமட்டில் 1875இல் வெளியான "சிங்கை வர்த்தமானி" முதல் தமிழ் இதழாக அடையாளப்படுத்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பினாங்கிலிருந்து 1877இல் "உலக நேசன்" எனும் இதழ் இரு வாரத்திற்கு ஒருமுறை வெளியாகியுள்ளது. 1896ல் "தேஜாபிமானி" "பினாங்கு வர்த்தமானி" ஆகியவை நாளிதழ்களாக வெளியாகியுள்ளன. இவற்றைத்தொடர்ந்து "இருபதாம் நூற்றாண்டின் வர்த்தமானன்" "விஜயன்" "ஜனோபகாரி" "மகாயுத்த சமாசாரம்" "ஞானசூரியன்" "சத்தியவான்" "பாதுகாவலன்" ஆகிய இதழ்கள் வெளியாகி தங்கள் பயணத்தை நிறுத்திக் கொண்டன. 1930களில் "மித்ரன்" "கலியுக நண்பன்" "சிந்தாமணி" "முன்னேற்றம்" ஆகிய இதழ்கள் வெளியாகியுள்ளன. இலங்கையின் இதழியல் வரலாற்றில் "சிந்தாமணி" என்ற நாமம் மறக்க முடியாத அனுபவங்களை தந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மலேசியாவின் இதழ்களில் மிக நீண்டகாலத் தடத்தில் "தமிழ் நேசன்" "தமிழ் முரசு" ஆகியன கவனத்திற்குரியனவாகும். 1924இல் தொடங்கப்பெற்ற "தமிழ் நேசன்" இன்று வரையில் தடம் பதிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே முதலாவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டிலும், மலாயா பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை உருவாக்கத்திலும் 'தமிழ் முரசு' இதழின் பங்கேற்பு முக்கியத்துவம் பெறுகிறது. தமிழ்வேள் சாரங்கபாணியின் அயராத உழைப்பும் வழிப்படுத்தலும் இப் பத்திரிகையின் நீட்சியில் பெரும் பங்கு வகிக்கின்றமை அவதானத்திற்குரியதாகும். இப் பத்திரிக்கை மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இணைந்திருந்த நிலையில் தொடங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது மலேசியாவில் இவ் இதழ் தடைப்பட்டிருந்தாலும் சிங்கப்பூரில் தொடர்ந்து வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. "சங்கமணி" இதழும் வர்க்க ரீதியான உந்துதலில் அதன் பரிமாணமும் முக்கியத்துவம் பொருந்தியதாகவே அமைகிறது. அதன் வரிசையில் 'மலேசிய நண்பன்'.'மக்கள் ஓசை','தாய் 'மொழி, 'புதிய பார்வை', 'தமிழ் மலர்' ஆகிய இதழ்கள் தற்போது வெளியாகின்றன. இவற்றில் 'தமிழ் மலர்' 'மக்கள் ஓசை' ஆகிய இதழ்கள் மாநாட்டு சிறப்பிதழ்களை வெளியிட்டமை கவனிக்கத்தக்கது.



அத்தோடு இலவச விநியோகத்தையும் இவ் இதழ்கள் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் ஊடாக தமிழர்கள் வாழும் கடல் கடந்த நாடுகளுக்கும் மாநாடு பற்றிய செய்திகளை காவிச் செல்வதில் பங்காற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். 1960இல் தொடங்கப்பெற்ற 'தமிழ் மலர்' 1980 காலப்பகுதியில் இடைநிறுத்தப்பட்டிருந்தமையை அறிய முடிகிறது. பின்னர் தொழிலதிபர் ஓம்ஸ் பா.தியாகராஜாவின் பொறுப்பேற்றலின் பின்பே தொடர்ச்சியாக வெளிவருகின்றமை கவனிக்கத்தக்கது. இவ் இதழின் காரியாலமும் இம் மாநாட்டு ஏற்பாடு தொடர்பில் கலந்துரையாடல் களமாகவும் தீர்மானம் நிறைவேற்றுக் களமாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பல தமிழ் இதழ்கள் தினசரிகளாக, மாத இதழ்களாக, வார இதழ்களாக வெளிவந்திருக்கின்றன. அவ்வாறான இதழ்களில் இலங்கையில் இருந்து வெளியான இதழ்களை ஒத்த பெயரில் இதழ்களும் வெளியாகியுள்ளன. 'தினமணி', 'தினமுரசு', 'தினக்குரல்', 'இதயம்', 'சூரியன்' ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இலங்கையின் சிற்றிதழ் வரலாற்றில் 'மல்லிகை' எனும் இதழ் முக்கிய தடத்தை பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அப் பெயரை ஒத்த வகையில் எஸ்.பொன்னுத்துரையை ஆசிரியராகக் கொண்டு மலேசியாவில் சிறிது காலம் 'மல்லிகை' எனும் பெயர் இதழ் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. இம் மாநாட்டில் முக்கிய பங்காற்றிய செனட்டர் சரஸ்வதி கந்தசாமியும் இதழியல் அனுபவத்தை பெற்றவராகவும் அறியப்படுகிறார்.

'விடியல்' எனும் பெயரில் இவரால் வார இதழ் நடத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சி நிலையில் ஓம்ஸ் பா. தியாகராஜாவினால் இவ் இதழ் சிறிது காலம் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 'ஓம்ஸ்' பா.தியாகராஜாவின் தலைமையிலேயே நிகழ்வின் ஏற்பாடுகள் பெரும்பாலும் பூர்த்தியாகியிருந்தன. இந் நிலையில் அப் பொறுப்பை பிரதமர் அன்வர் இப்ராஹிமின் ஆலோசனைக்கமைய விட்டுக்கொடுத்த பெருந்தகையாக மதிக்கப்பட்டார். இதற்கு முன்னர் இடம்பெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை அரசும் இணைந்தே நடத்தியிருக்கிறது. அரசியல் தலைவரொருவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வை பிரதமர் பதவியை வகித்தவர்கள் உத்தியோகபூர்வமாக தொடங்கி வைத்துள்ளார்கள். அவ்வாறான மரபின் வழியில் இந் நிகழ்வையும் செய்வோம், அரசாங்கமும் முழுமையான ஆதரவை வழங்கும் என்ற பிரதமரின் ஆலோசனையை ஏற்றே தலைமை விடயத்தில் இவ்வாறான விட்டுக்கொடுப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ் விடயத்தை தலைமையேற்றிருந்த அமைச்சர் சிவகுமாரும் நன்றியுணர்வுடன் எடுத்துரைத்தமையும், பா.தியாகராஜா பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுத்தமையையும் அவர்களது உரைகள் பறைசாற்றின. இவ்வாறே பல முரண்பாடுகள் உருவாகிய நிலையில் அதனை மத்தியஸ்தம் வகித்து இணக்கப்பாட்டை ஏற்படுத்திய பா.தியாகராஜாவின் பணி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வெவ்வேறு தளங்களில் இயங்கும் அரசியல் பிரமுகர்கள் தமிழ் அன்னைக்காக ஓரணியில் திரண்டிருந்த தன்மையை தமிழர்கள் வாழும் எந்த நாட்டிலும் பார்க்க முடியாது, என்பது அனுபவம் தந்த உண்மையாகும். அதன் நிலையிலேயே சரஸ்வதி கந்தசாமி, மு.சரவணன் ஆகியோரது ஒன்றிணைந்த ஈடுபாடும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் கல்வி தொடர்பில் ஆழ்ந்த ஈடுபாட்டை பா.தியாகராஜாவிடம் அவதானிக்க முடிந்தது. தமிழ் கல்வியில் ஆளுமையை வெளிப்படுத்திய மாணவர்கள் ஓம்ஸ் அறவாரியத்தால் வருடந்தோறும் தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படுகிறார்கள். அதன் வரிசையில் இவ் வருடம் தேர்ச்சி பெற்ற நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பிரதமரின் கரங்களால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பயணம் தொடரும்...

# நாடு கடந்த கல்வி: ஆய்வறிக்கையை வெளியிட்டது பிரிட்டிஷ் கவுன்சில்

இலங்கையில் நாடு கடந்த கல்வியின் (TNE) தற்போதைய நிலை மற்றும் எதிர்கால சாத்தியங்கள் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்கும் ஒரு முக்கிய அறிக்கையை பிரிட்டிஷ் கவுன்சில் வெளியிட்டது.

இது மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் வாய்ப்புகள் மற்றும் சவால்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

BMICH இல் நடந்த நிகழ்வில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டதுடன் மற்றும் இந்நிகழ்வில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பேட்ரிக், கல்வி அமைச்சின் அதிகாரிகள், கல்விக் கொள்கை வகுப்பாளர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அதிகாரிகள், அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் அவுஸ்திரேலிய கல்விப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இங்கு பேசுகையில்: "இலங்கையின் கல்வியறிவு வீதம் மற்றும் அடிப்படைக் கல்வியில் ஈர்க்கக்கூடிய முன்னேற்றங்கள் இருந்த போதிலும், உயர் கல்வி திறனில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. 171,532 தகுதியுள்ள மாணவர்களில் 44,000 பேர் மட்டுமே 2022 இல் அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றிருந்தனர். தனியார் உயர் கல்வி மற்றும் நாடு கடந்த கல்விக்கான வளர்ந்து வரும் தேவை கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. "இலங்கையின் உயர்கல்வித் துறையில் நாடு கடந்த கல்வியானது எவ்வாறு இடைவெளியைக் குறைக்க முடியும் என்பதை இந்த அறிக்கை தெள்ளத்தெளிவாக உணர்த்தும் என்று நாங்கள் நம்புகிறோம்."



## புதிய தொழிற்சாலையை திறந்து வைத்துள்ள Sadaharitha நிறுவனம்



Sadaharitha நிறுவனம், 22 ஆண்டுகள் பூர்த்தியைக் குறிக்கும் வகையில், அதிநவீன வல்லப்பட்டை தொழிற்சாலையை திறந்து வைத்துள்ளது

கடந்த இரு தசாப்தங்களில், இலங்கையின் முன்னணி, வர்த்தக ரீதியான வனவியல் முகாமைத்துவ நிறுவனமாக பரிணாம வளர்ச்சி கண்டுள்ள Sadaharitha Plantations, இத்துறையில் தொடர்ச்சியாக புதிய தரநியமங்களை நிலைநாட்டி, வளர்ச்சியை முன்னெடுத்து வந்துள்ளது. தற்போது 22 ஆண்டுகள் பூர்த்தியைக் கொண்டாடும் இந் நிறுவனம், கடுவெலையில் அதிநவீன வல்லப்பட்டை பதனீட்டு தொழிற்சாலையை விமரிசையாக திறந்து வைக்கின்றமை குறித்து பெருமையுடன் அறிவித்துள்ளது. புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை, Sadaharitha நிறுவனத்தின் மூலோபாய விரிவாக்க இலக்கில் முக்கியமானதொரு படியாக அமைந்துள்ளதுடன், முதலீட்டாளர்களுக்கு வலுவான பிரதிபலனுக்கான உத்தரவாதத்தை வழங்கி, சந்தை முன்னோடி என்ற ஸ்தானத்தைப் பேணுவதில் தான் கொண்டுள்ள அர்ப்பணிப்பை மீளவலியுறுத்தியுள்ளது. வனவியல் முகாமைத்துவத்தில் அதன் மகத்துவத்தில் நீடித்த அர்ப்பணிப்பை Sadaharitha அடிக்கோடிட்டுக்காட்டியுள்ளதுடன்,நிறுவனத்தின் போற்றத்தக்க வளர்ச்சிப் பயணத்தையும் இந்த முக்கியத்துவம் வாய்ந்த தருணம் பிரதிபலிக்கின்றது.

வல்லப்பட்டை மரங்களில் நோய்த்தொற்று தடுப்பிற்கு தனது தனியுரிமையைக் கொண்ட "SP Tech" தொழில்நுட்பத்தை பகிர்ந்து, விற்பனை செய்வதற்காக மலேசியாவில் தனியார், கூட்டாட்சி மற்றும் அரச துறை வல்லப்பட்டை பயிர்ச்செய்கையாளர்களுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டு சர்வதேசரீதியாக அண்மையில் வெற்றிகரமான சாதனையை நிலைநாட்டியிருந்தது Sadaharitha,

## Kaspersky இன் ஆசிய பசுபிக் பிராந்திய இணையப் பாதுகாப்பு மாநாடு 2024




உலகளாவிய இணையப் பாதுகாப்பு சேவை வழங்குநரான Kaspersky, ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான தனது வருடாந்த இணையப் பாதுகாப்பு வார இறுதி அமர்வை 2024 ஆகஸ்ட் 4 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை இலங்கையில் நடத்தியது.

இணையப் பாதுகாப்பு தொடர்பான முன்னேற்றங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் சமீபத்திய பாதுகாப்பு சவால்களை முகங்கொடுப்பது குறித்த விழிப்புணர்வை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இதில் உலகின் முன்னணி இணையப் பாதுகாப்பு நிபுணர்கள், ஊடகவியலாளர்கள், முன்னணி தொழில்துறை நிர்வாகிகள் மற்றும் பிற தொழில்வல்லுநர்கள் எதிர்கொள்ளும் கடும் சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் AI இன் பிரபலத்தால் ஏற்படக்கூடிய சவால்கள் குறித்த ஆழமான பகுப்பாய்வை Kaspersky இன் இணையப் பாதுகாப்பு வல்லுநர்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால், Ransomware போன்ற இணையத் தாக்குதல்கள் மேலும் சிக்கலாகவும், நுணுக்கமாகவும் மாறிவருகின்றன. இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, Kaspersky நிறுவனத்தின் வல்லுநர்கள் உலகின் முன்னணி இணையப் பாதுகாப்பு நிபுணர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், முக்கிய தொழில்துறைகளில் இருந்து வந்த தலைமை அதிகாரிகளுக்கும் (CTOs) விரிவான பகுப்பாய்வுகளையும் தகவல்களையும் வழங்கினர். மேலும், தற்போதைய அச்சுறுத்தல்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு பரவுவதால் ஏற்படக்கூடிய சவால்கள் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

## இளம் மனங்களில் நிதியியல் அறிவைத் தூண்டும் NDBயின் பஞ்சா மாமா



NDB வங்கியானது அண்மையில் குழந்தைகளிடையே நிதியியல் கல்வியறிவு மற்றும் நிலையான வாழ்க்கை பழக்கங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு NDB இன் பஞ்சா மாமாவை முதன்மைப்படுத்தி தொடர்ச்சியான பயிற்சிப் பட்டறைகளை நடத்தியது.

ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடத்தப்பட்ட இந்த பயிற்சிப் பட்டறைகள் வத்தளை, மினுவாங்கொடை, ஜாஎல மற்றும் நிட்டம்புவ முதலிய இடங்களில் உள்ள பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களைச் சென்றடைந்தன.

இந்த பயிற்சிப்பட்டறைகள், சேமிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், ஈடுபாட்டுடன் கூடிய செயல்பாடுகளுடன் கல்வி உள்ளடக்கத்தை கொண்டதாக அமைந்திருந்தன.

நிதியியல் சேமிப்பிற்கு அப்பால், நீர் மற்றும் மின்சாரத்தை வீணாக்காது பாதுகாத்தல் போன்ற நிலையான நடைமுறைகளை இந்த பயிற்சி அமர்வுகள் முன்னிலைப்படுத்தின. இந்த முழுதளாவிய அணுகுமுறையானது, இளம் பங்கேற்பாளர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கவனமிக்க வள முகாமைத்துவ பழக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

சிறுவர்களுக்கு மேலதிகமாக, பயிற்சிப் பட்டறைகள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களையும் வரவேற்றன, ஒவ்வொரு அமர்விலும் சுமார் 200 – 250 பங்கேற்பாளர்கள் ஈர்க்கப்பட்டனர்.

வேடிக்கையான விளையாட்டுகளைக் கொண்ட ஊடாடும் வடிவமானது அமர்வுகளை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சுவாரஸ்யமான கற்றல் அனுபவமாக மாற்றியது.

இந்த பயிற்சிப்பட்டறைகள் ஊடாக , NDB வங்கி எதிர்காலத்திற்கான சேமிப்பின் பெறுமதியினை இளைய தலைமுறையினருக்கு வழங்க முயல்கிறது.

## Pelwatte Dairy யின் விசேட நிகழ்வு



அதியுயர் தரம் கொண்ட தயாரிப்புக்களுக்கு பெயர்பெற்றுள்ள இலங்கையின் முன்னணி உள்நாட்டு பால் வர்த்தகநாமமான Pelwatte Dairy ஆனது Cultural Triangle Chef's Guild of Lanka இன் ஒத்துழைப்புடன், சமையல் கலை தொழில் வல்லுனர்களை ஒன்றுதிரட்டி, விசேட நிகழ்வொன்றை அண்மையில் நடத்தியுள்ளது. தம்புள்ளை Amaya Lake ஹோட்டலில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன், இலங்கையின் செழுமையான சமையல் கலை பாரம்பரியத்தைப் போற்றிக் கொண்டாடி, மேம்படுத்துவதற்காக பிராந்தியத்திலிருந்து பல சமையல் கலை வல்லுனர்கள் பங்குபற்றியுள்ளனர்.



# யூனியன் கெமிஸ்ட்ஸ் உடன் கைகோர்க்கும் யூனியன் அஷ்யூரன்ஸ்

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், வாடிக்கையாளர்களின் நலமான வாழ்க்கையை தொடர்ந்தும் மேம்படுத்தும் தனது செயற்பாடுகளில் மற்றுமொரு அங்கமாக, 60 வருடங்களுக்கு மேலாக உயர் தரம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பு தயாரிப்புகளை வழங்குவதில் சிறப்பைக் கொண்டுள்ள, நாட்டின் முன்னணி மருந்துப் பொருட்கள் சேவை வழங்குநரான யூனியன் கெமிஸ்ட்ஸ் உடன் கைகோர்த்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, மருத்துவத்துடன் தொடர்புடைய செலவுகள் அதிகரித்துக் காணப்படும் காலகட்டத்தில், மருந்துப் பொருட்களை மிகவும் சிக்கனமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் எதிர்பார்க்கின்றது.



யூனியன் அஷ்யூரன்ஸ் தனது காப்புறுதிதாரர்களுக்கு, எந்தவொரு யூனியன் கெமிஸ்ட்ஸ் மருந்தகங்களிலும், மருந்துச் சிட்டைகளுக்கான மருந்துகளை கொள்வனவு செய்யும் போது விலைக்கழிவுகளை பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளது. ஆயுள் காப்புறுதித் துறையின் பரிபூரணமான மொபைல் app ஆக கருதப்படும் நிறுவனத்தின் மொபைல் app ஆன Clicklife ஊடாகவும் இந்த விலைக்கழிவுகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும். சௌகரியத்தை மேம்படுத்தும் வகையில், ஒவ்வொரு யூனியன் கெமிஸ்ட்ஸ் நிலையத்துக்கும் பிரத்தியேகமான WhatsApp இலக்கம் காணப்படுகின்றது. அதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு மருந்துச் சிட்டையை பதிவேற்றி தமது ஓடர்களை மேற்கொள்ளலாம். மேலும், யூனியன் கெமிஸ்ட்ஸ் இனால் நாடளாவிய விநியோக சேவையும் வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களின் வாயிலுக்கு மருந்துப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றமை உறுதி செய்யப்படுகின்றது.

# புதுக்குடியிருப்பில் புதிய கிளையைத் திறந்துள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி

இலங்கையில் வங்கி அல்லாத நிதிச்சேவைகளை வழங்குவதில் முன்னிலை வகித்து வருகின்ற பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, 2024 ஜுலை 12 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பில் தனது புதிய கிளையொன்றைத் திறந்து வைத்துள்ளது. இல.10, முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு என்ற முகவரியில் அதிநவீன வசதிகளுடன் அமைந்துள்ள இக்கிளையானது பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி வழங்கும் ஒட்டுமொத்த தீர்வுகள் மற்றும் சேவைகளையும் வழங்குகின்றது. பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தனது சமூகங்கள் மீது கொண்டுள்ள அர்ப்பணிப்பின் அடையாளமாக, இந்த முக்கியமான தருணத்தைக் குறிக்கும் வகையில், முல்லைத்தீவு/முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர் பாடசாலையில் ஆதரவை எதிர்பார்த்துள்ள 50 சிறுவர்களுக்கு காலணிகளுக்கான வவுச்சர்களை இது வழங்கியுள்ளது.




இப்புதிய கிளையானது பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சியின் பிரசன்னம் வட மாகாணத்தில் தொடர்ந்தும் விரிவடைந்து கொண்டிருக்கும் நிலையில், கொடிகாமம், கிளிநொச்சி, சுன்னாகம், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், நெல்லியடி மற்றும் தற்போது புதுக்குடியிருப்பு என 8 கிளைகளை அது தற்போது கொண்டுள்ளது.

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் உயர் மட்ட அதிகாரிகள், சிரேஷ்ட முகாமைத்துவ அணிகள் கலந்துகொண்ட விசேட திறப்பு விழா வைபவத்தில் புதுக்குடியிருப்பு கிளை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான சிரேஷ்ட அதிகாரிகள் பங்குபற்றியமை இந்நிகழ்வின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கின்றது.

## விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தும் லிற்ரோ கேஸ்

இலங்கையின் முன்னணி LPG வழங்குநரான Litro Gas Lanka, அதன் விநியோக மற்றும் வழங்கல் வலையமைப்பில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகளை அறிவித்துள்ளது. 2024ஆம் ஆண்டிற்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் திட்டங்களின் படி, விநியோக விரிவாக்கத்திற்கான பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நாடு முழுவதும் எல்பிஜி சேவைகளின் அணுகல் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான மூலோபாய முயற்சிகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அளுத்கம, பாணந்துறை, பாலமுனை மட்டக்களப்பு, மற்றும் நாவலடிமட்டக்களப்பு ஆகிய இடங்களில் தற்போதுள்ள விநியோகஸ்தர் அமைப்புகள் புதுப்பிக்கப்பட்டு, புதிய அலுவலகக் கட்டமைப்பு மற்றும் விரிவாக்கப்பட்ட வாகனங்கள் கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது . இந்த மேம்படுத்தல்கள்



சேவையின் தரம் மற்றும் விநியோகத் திறனை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த புனரமைப்புகளுக்கு மேலதிகமாக, வெல்லவாய, கொடகவெல்ல, பாதெனிய, வரதெலகொடதெனியாவ, வளத்தாப்பிட்டிஅம்பாறை மற்றும் முலமல்தெனிய ஆகிய இடங்களில் புதிய விநியோக அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த விரிவாக்கம் சேவைக்கான எல்லையை மேம்படுத்துகிறது, குறிப்பாக கிராமப்புறங்களில், அனைத்து இலங்கையர்களுக்கும் சிறந்த LPG அணுகலை வழங்குகிறது.

# SLITAD மக்கள் விருத்தி விருதுகளில் Star Garments க்கு தங்க விருது

Star Garments Group ("Star") அண்மையில் நடைபெற்ற 2023/24 காலப்பகுதிக்கான SLITAD மக்கள் விருத்தி விருதுகள் நிகழ்வில், தங்க விருதை சுவீகரித்திருந்தது.

இலங்கையின் ஆடைத் தொழிற்துறையில் புதிய நியமங்களை ஏற்படுத்திய வண்ணம், சிறந்த மனித மூலதன செயன்முறைகளை தொடர்ந்தும் பின்பற்றுகின்றமையை கௌரவித்து இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை பயிற்சி மற்றும் விருத்தி நிறுவகத்தினால் (SLITAD) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் விருத்தி விருதுகளின் 5ஆம் பதிப்பு, ஆகஸ்ட் 4ஆம் திகதி கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. மக்களினதும், தேசத்தினதும் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் மனித வளங்கள் அபிவிருத்தி செயன்முறைகளை பின்பற்றும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் அமைந்திருந்தது. Star Garments Group இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ. சுகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில், "ஆக்கத்திறன், இணைந்த செயற்பாடு மற்றும் மனித மூலதன விருத்தி ஆகியவற்றை ஊக்குவிக்கும் உள்ளடக்கமான கலாசாரத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கும், எமது நிறுவனத்தின் மாற்றியமைப்பு வளர்ச்சி மற்றும் புத்தாக்கமான சிறப்பு ஆகியவற்றின் முக்கிய பங்காளர்களாகத் திகழும் எமது ஊழியர்களின் செயற்பாடுகளுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இந்த விருது அமைந்துள்ளது." என்றார்.




முதன்முறையாக இந்த விருதுகள் வழங்கலில் பங்கேற்றிருந்த Star ஐ பொறுத்தமட்டில் இந்த விருது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சாதனையாக அமைந்துள்ளது.




## நீறு பூத்த நெருப்பாய்

நீறு பூத்த நெருப்பாய்
நெஞ்சுக்குள் படரும்
காஸா தேசத்து குண்டுச் சத்தம்
என்னைக் கொல்லும்
நித்திரை கலைந்த
நீண்ட நாட்கள்

மனிதமும் மனச்சாட்சியும்
தொலைந்து போனது
பலஸ்தீனில்
சல்லடை யாகும்
மனித சடலங்கள்
கனவுகளும் காட்சிகளும்
நெஞ்சைக் கொல்லும்

துள்ளித் திரியும்பள்ளிப்
பாலகர் கையில்
பித்தளைப் பாத்திரங்கள்
புத்தகமில்லை
உணவுக்காய்
கியூவரிசை
எரியும் நெருப்பில்
எண்ணெய்.
வார்க்கப்படுகிறது

அமைதி
தேடி
ஆ ண் ட வன்
சந்நிதிக்குச்
சென்றோர் வித்துட
லாய்
திரும்பி வரும் காட்சி
பிஞ்சுப் பாடகர்களையும்
விஞ்சவில்லை
மரணப் பிடி

முஸ்லிம் நாடுகள்
குரல் ஒடுக்கப்பட்டு விட்டது
எப்போது திறக்கும்
எல்லாம் முடிந்தபின்
எழுப்புங்கள் தஹஜ்ஜுத்
தொழுகையில்
ஏந்தி நிதம் துஆ கேளுங்கள்

**தோப்பூர்.எஸ்.சிறாஜுதீன்**
நற்பிட்டிமுனை
கல்முனை



## உனக்குப் பிடிக்குமென்பதால்

உனக்குப் பிடிக்குமென்பதால்
மூடிய கதவுகளை
மூச்சுப்பிடித்து
தட்டிக்கொண்டிருக்கிறாய்

உனக்குப் பிடிக்குமென்பதால்
அழையா விருந்தாளியாய்
அடிக்கடி சென்று அவமானத்துடன்
திரும்புகிறாய்

உனக்குப் பிடிக்குமென்பதால்
சிலரிடம் வலிந்து
கரிசனை காட்டுகிறாய்

உனக்குப் பிடிக்குமென்பதால்
சிலருக்கு அதிக முக்கியத்துவம்
கொடுக்கிறாய்

உனக்குப் பிடிக்குமென்பதால்
உன்னை நீ விட்டுக்கொடுக்கிறாய்

உனக்குப் பிடிக்குமென்பதால்
உன் அந்தரங்கங்களை
அவர்களிடம்
அதிகமதிகம் பகிர்கிறாய்

உனக்குப் பிடிக்குமென்பதால்
கண்ணீர்மல்க
மன்றாடுகிறாய்

உனக்குப் பிடிக்குமென்பதால்
உன் தன்மானத்தில்
நீயே சூடு வைத்துக்கொள்கிறாய்
உனக்குப் பிடிமென்பதால்தான்
உன்னை நீ காவு கொடுக்கிறாய்
உனக்குப் பிடிக்குமென்பதால்
உன் தலையை நீயே
அடமானம் வைக்கிறாய்

இதுவெல்லாம் எதற்காக

உன் பிடித்தங்களை
உரியவர்களிடம்
கொட்டித்தீர்க்கத்தானே

உன்னையும் அவர்களுக்கு
பிடித்திருந்தால்
இத்தனை கடினமாகவா
உன்னை நீ நிலைறுத்த
வேண்டியிருக்கும்

**மயிலிறகு மனசு**

## அவள் விதவை...!!!

இரு விழிகளின் ஓரம்
ஏளனப் பார்வை வேண்டாம்
அவள் மீது

புன்னகைத்தாலும்
உள்ளே உருகும் மெழுகு அவள்

புன்னகைத்தாலும்
தீக் குழம்பை குடிப்பவள் அவள்

உள்ளே எரிந்தும்
வெளியே குளிராய்
தோற்றம் கொடுப்பவள் அவள்

உணர்வுகள் சற்று வாழட்டும்
அவள் விதவை...!!!

**நினைவின் தோழன் இம்ரான்**
அரனாயக



## கடவுளின் யாசகன்


கோபுரவாசலில்
கடவுளின்யாசகன்
கடந்து செல்கின்றனர்
எல்லா உயிரிலும்
கடவுளை கண்டவர்கள்

பேருந்துப் பயணத்தில்
யாசகனை கண்ட நொடிகள்
கண்மூடித்தூங்கும்
சமூகசேவையாளர்கள்

வீட்டு வாசலில் உணவுநாடி
வீதியோர யாசகன்
விரதமென அனுப்புகின்றார்
விருதுகள் பெற்ற சமூகசேவகன்

**இணுவில் வாகீசன்**

## வறுமை பேசும் சிறுவன்



இந்த ஏக்கத்தினூடாக
காத்திருக்கிறது எனக்கான
ஏமாற்றம்

ஆனந்தமில்லாத பூமியில்
ஆதரவு தர
யாருமில்லை இந்த
தனிமையைத் தவிர

பாசத்தோடு பேசிய
உறவுகள் பணத்தோடு
துள்ளிக் குதித்து
மகிழ்வதால் ஊமையானது
என்னோடு சேர்ந்து
வலிகளும்

ஏக்கத்தோடு நகரத்
தொடங்கும் என்

வாழ்க்கையினைப் பார்த்து
ஆனந்தம் கொள்கிறது
விதி


என்னுள் விதைத்து
போன வறுமையும்
வழிகளும் மிக
ஆழமானது என்பதால்
உங்களுக்கு தென்படவில்லை
என் சோகங்கள்

சிறுவனாக இருந்து
சிதறிப்போன வாழ்க்கையில்
என்றாவது சாதித்து
விடுவோமென துடிக்கிறது
கரங்களோடு சேர்ந்து
இதயமும்

ஏக்கத்துடன் வாழப்
பழகியதால் ஏமாற்றங்கள்
எதுவும் புதிதல்ல
இருந்தும் வலிகளுக்குள்
மீண்டும் வலி
வந்து போகிறது
இது என்ன
கடவுளின் இரக்க
குணமோ எனத்
தெரியவில்லை இன்றுவரை

சிதறிப் போன
புன்னகையை சிறையிட
தினந்தோறும் காத்திருக்கிறேன்
காலங்களை கடத்தியபடி
வறுமையோடு.

**பொத்துவில் அஜ்மல்கான்**



## பரவசக்காரி

கோட்டை கொத்தளங்கள்
இடித்தாலும் தன்மீது
தூசு படாது என
நினைக்கும் தூயவள்

நாடகத்தில் சாமரம் வீசும்
வேடங் கூட தாங்கியவள்
ஊருக்கு ராணியாக
தனக்குத் தானே மகுடம்
சூடிய ராசிக்காரி
ஊரின் தகவல் காப்பகம்

முதிர் கன்னிகளின்
பட்டியலை
முடிந்து வைத்திருப்பவள்

யார் வீட்டில் எது பூக்குமென
ஏகமாய் அறிபவள்
தைக்கு முன்
பந்தக்கால் நட்டவர்கள்
வெட்டி வைத்த பந்தக்காலை

வேலியில் இட்டவர்கள்
சேர்ப்பு முறிவு மணப்பட்டியல்
இவள் அரிய சேகரிப்பு

தங்கத்தின் சேதாரம்
பார்ப்பவர்கள் போல
மணப் பந்தலில் இருந்தபடி

திருமணத்தின் கலப்பை
கணடறியும் மோப்பக்காரி

ஊரில் தரித்திரம்
தலையெடுத்தோர்
தகிடு தத்தங்கள்
பட்டியலும் இவள் கையில்

நடுநிசியில் நாய் குரைக்கும்
அலையோசை பிடித்து
ஒப்பாரி ஓலம் கேட்குமுன்
விழுந்த, விழப்போகும் சாவுகள்
எங்கென்று கூறும் குறிகாட்டி

பஞ்சாங்கம் பார்க்காமல்
திதி சொல்லும் பரவசக்காரி
இவள் பரம்பரையில் என்றும்
கோடாங்கி குறிசொல்வோர்
எவரும் பிறக்கவில்லை

**எஸ். கிருஷ்ணன்**
கேகாலை

## அதிகமாக நேசிக்கப்பட்டவள்!



வெப்பம் மண்ணைத்தின்ன
முற்றத்துத் தென்னையின்கீழ்
மூச்சற்றுக் கிடந்தான்
என் ஆருயிர் தோழன்

சற்று முன்னர்வரை மூப்பின்
முதிர்ச்சியால் தள்ளாடி
நின்றிருந்தான்
நான் அருகில் அமர
என் மடிமீது
சாய்ந்துகொண்டான்.

இரக்கம்மிகு ஏக்கத்தின்
பார்வை என் இதயத்தை
பிழந்து நரகத்தின் வேதனையை
ஊற்றி அடைத்தது.

ஆம்! அவன்
மரணிக்கப் போகிறான்
என்பதை என் ஆன்மா
உறுதியாகவே உணர்ந்தது
பதினோர் ஆண்டுகள்
என்னோடிருந்தவன்.

பல முகங்கள்
காலக்கண்ணாடியில்
தோன்றி மறைந்தாலும்
எப்போதும் மாறாத
நேசம் அவனுடையது.

இப்போதும் அதே ஏக்கம்
நிறைந்த கண்களோடு
என்னையே வெறித்துப்
பார்க்கிறான்.

அன்புக்குரிய அத்தனை
வார்த்தைகளும், வார்த்தைகளை
கோர்த்த அகராதிகளும்
அப்பார்வையில்
அடையாளமற்றுப் போயின.

நேசத்தின் ஏக்கம்
எத்தகையதென்பதை
அப்போது அறிந்துகொண்டேன்.
அவன் ஆவியடங்கப்போவதை
அவனது விம்மல் உணர்த்தியது.

மூச்சற்ற வெற்றுடல்
மண்மீது கிடந்தது.

கண்களில் அந்த ஏக்கம்மிகு
பார்வை மட்டும்
நேசத்தின்
நெருடல்களுடன்
தொடர்ந்தது.

நாமிருவரும் அதீதமாய்
நேசிக்கப்பட்டவர்கள்.
பதினோர் ஆண்டுகளாய்
ஒன்றாயிருந்தவர்கள்.

எவ்வித எதிர்பார்ப்புமற்று
இரக்கத்தின் கயிற்றால்
எப்போதும்
கட்டப்பட்டிருப்பான்.

எல்லையற்ற அன்பென்பதை
இப்போதுவரை
வேறெங்கிலும் கண்டுணரேன்...

கண்கள் நீர் பெருக ரணங்களின்
அம்புகளால்
புதைத்துவைத்தோம்.

நாள்முழுதும்
அழுதும் அவன்
நினைவுகள் அடங்கவில்லை.

அடுத்தநாளே சென்று
இரண்டு குட்டிகளை
தத்தெடுத்துக்கொண்டேன்.

அவன் நினைவுகளோடு
இப்போதும்
இவர்கள்
என்னோடிருக்கிறார்கள்.

**கிரிஜா அருள்பிரகாசம்**

## வலி நிறைந்த வார்த்தைகள்

உயிருக்கு உயிராய்
ஆழமாக நேசித்தாலும்
அளவுக்கு அதிகமாக
விருப்பம் கொண்டாலும்
அளவே இல்லாத பாசத்தை
பகிர்ந்தாலும்
உரிமை என்று உண்மையாக
இருந்தாலும்
அக்கறையோடு அருகில்
இருந்து அரவணைத்தாலும்
கோபமாய் பேசிவிடும்
ஒரு வார்த்தையும்
கோபத்தை உண்டாக்க
கூடிய வார்த்தையும்

மனம் வெறுக்கக் கூடிய
வார்த்தையும்
மனதை காயப்படுத்த
கூடிய வார்த்தையும்
உள்ளம் நோகக் கூடிய வார்த்தையும்
வலிகள் நிறைந்த
வார்த்தைகள் ஆகுமே
ஆழமான வலிகளை
உள்ளம் தாங்கிடுமே
ஆனால் அவை அனைத்துமே
உள்ளத்துக்கு

வலி நிறைந்த
வார்த்தைகளாக கணிக்கப்படுமே
வார்த்தைக்கு உயிருள்ளது
என்று பலரும் கூறுவதுண்டோ
அனைவரும் இதை

உணர மறுப்பது ஏனோ
வருடமானாலும் பேசிய
வார்த்தைகள்
யாதும் அழிந்து போகாதே
அழியும் நிலை வந்தாலும்
உடலில் உயிர் இருக்காதே

கொஞ்சமோ அதிகமோ
பேசிய எந்த வார்த்தையாகினும்
அந்த வார்த்தைகள்
யாவும் உள்ளத்தை
காயப்படுத்தக் கூடிய
வார்த்தைகளாகவோ
உள்ளத்தை நொறுங்கக்கூடிய
வார்த்தைகளாகவோ
ஆழமாய் சிந்திக்க வைக்க
கூடிய வார்த்தைகளாகவோ

யோசிக்க வைத்து
வேதனையை உண்டு
பண்ணக்கூடிய
வார்த்தைகளாகவோ
இருந்தால் அவை
வலிகள் நிறைந்த வார்த்தைகளே
அதுவே உள்ளத்துக்கு
ஆழமாக வலியை
ஏற்படுத்தும் வார்த்தைகள்

அதுவே புரிதல் இல்லா
பிரிதலை தரும் வார்த்தைகள்
அதுவே வாழ்வையும் உலகை
வெறுத்திட வைக்கும் வார்த்தைகளே

அதுவே ஆழமான
நேசத்தையும் பாசத்தையும்
வேண்டாமென
ஒதுக்கி ஓரம் தள்ளி
வைத்திட நினைக்கும்
வார்த்தைகளே
அதுவே உயிராய் மாய்த்துக்கொள்ள
வைக்கும் வார்த்தைகளே.

**பஸ்லா காதர்**
நாவலப்பிட்டி

## புதுமைச் சிலந்தி...!

குளியலறை சுவர் கண்ணாடி!
கண்ணாடியோரம்
பெரும் சிலந்தி!
முகம் தப்பிய அதிர்வில்
பதறிய கரத்தில் செருப்பு!
பட்ட அடிகள் பல தாங்கி


கண்ணாடி பின் ஓடி...
வழி தேடி... வாயில் நாடி..
தரையில் தாவி முயன்றும்...
தப்ப வழியின்றி
அடியில் சுருண்டது தேகம்!

சிலந்தியினம் எனக்கு
தீங்கேதும் செய்ததில்லை!
ஆயினும் பேரச்சம்...!

புணர்ச்சி முடிந்தவுடன்
ஆணைக் கொன்று விடும்
பெண் சிலந்தி என்ற கதை
செவிக்கு வந்த பேரச்சம்..!

**இரா.ஜெயக்குமார்**

## பாலைவனத்து தனி மரம்



வெப்பக் காற்றில் தூது சொல்லி
ஈரக்காற்றில் தாகம் ஆற்றும்
பாலைவனத்து மரத்தின் வலியை
தண்ணீரில் வேரூன்றிய
மரங்கள் அறிவதில்லை.
நிழலுக்காய் வருபவர் கூட
நீர் ஊற்றிச் செல்வதில்லை.
மழையின் கருணையையும்
தேக்கி வைக்க
முடியவில்லை.
நான்
பாலைவனத்து தனி மரம்.
மகா மகன்

**( டிஷு கார்த்திக்)**

## மனிதம் பெற்ற சாபம்

உயிர் ஊதப்பட்ட
காரணத்தை
மறந்து பொறுமை இழந்து
நவீனம் என்று குப்பையில் வைரம்
தேடிக் கெட்டலையும் யுகம்...!!!

திரும்பும் திசை எங்கும் அழுகை
ஏமாந்து விட்டேன் என்ற கதறல்
சுயசிந்தனை இழந்து பித்துப்
பிடித்ததைப் போல் புலம்பும்
மானிடர்கள்..!!!

சமூக வலைத்தளமெனும் பாதாளப்
படுகுழியில் துணை தேடித் தனக்குத்
தான் விஷம் ஊட்டிக் கொள்ளும்
அவலம் மிகுந்த நிலை...!!!

போலிகள் மிகுந்த பாரினில்
சாதுரியமாக வேடம் பூண்டு அன்பு
எனும் விதையை சிந்தையில் தூவி
சிறையிட்டு சிதைக்கும்

மாய வலை...!!!
மூழ்கியவர் மீளாமலும்
மூழ்காதவர்கள்
மூழ்க துடிக்கும் போதையென்று
உணராமலே பலரையும்
ஆட்கொண்டு
தன்பால் ஈர்த்துக்
கொண்ட போதை...!!!

முகநூலில் தேடி கிடைத்த முகம்
தெரியாத உறவுக்காக கடவுளால்
நமக்கென்று
படைக்கப்பட்ட உறவை
புறந்தள்ளி கட்டிக்காத்த
தாய் தகப்பனை
எட்டி உதைத்து
அழியும் இளம் தலைமுறை...!!!

**தௌபீக் முஹம்மது நவீத்**
(புல்மோட்டையூரான்)



Senthooram
செந்தூரம்

2024 ஒகஸ்ட் 25 ஞாயிற்றுக்கிழமை



# நடை பவனியாக இலங்கையை சுற்றி வரும் சாதனை வீரன்

# சஹ்மி சஹீத்

"பேருவளை மண்ணை புகழோங்கச் செய்து இன்று எமது தேசத்தின் மூவின மக்களினதும் அன்பையும் பாராட்டையும் பெற்ற எமது மண்ணின் மைந்தன் சஹ்மி சஹீதுக்கு சீனன்கோட்டையிலிருந்து ஒரு வாழ்த்து..."

சமூகசேவையாளர் அல்ஹாஜ் சர்பான் முஸம்மில்

# எம்முடன் வாழ்ந்த அடிமைகள்

அடிமை யுகம் என்பது வரலாற்றுப் புத்தகத்தில் தான் இருக்கிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில் உலகில் இருந்து அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது இற்றைக்கு 43 ஆண்டுகளுக்கு முன்னர் தான்.

வட மேற்கு ஆபிரிக்க நாடான மொரித்தானியா உலகின் கடைசி நாடாக அடிமை வைத்திருப்பது சட்டவிரோதம் என அரசாணை பிறப்பித்தது. என்றாலும் உண்மையில் அதனை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது 2007 ஆம் ஆண்டில் தான். அதாவது அடிமைகளை ஒழிப்பதாக அரசு சட்டம் போட்டாலும் அதற்கு தண்டனை வழங்க சட்டத்தில் எந்த ஏற்பாடு இருக்கவில்லை.

2007 இல் குற்றவியல் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் தான் உண்மையில் உலகில் அடிமை யுகம் முடிவுக்கு வந்தது. அது வரை நாட்டு மக்கள் தொகையில் கணிசமானவர்கள் அடிமைகளாக வாழ்த்திருக்கிறார்கள். சில கணக்கெடுப்புகளின்படி அது மக்கள் தொகையில் 10 வீதத்துக்கும் அதிகமாம்.



# சொதப்பிய போர் தந்திரம்



சீனக் குடியரசு மற்றும் ஜப்பான் பேரரசுக்கு இடையே 1937 தொடக்கம் 1945 வரை இடம்பெற்ற இரண்டாவது சீன–ஜப்பான் போர் இரண்டாம் உலகப் போரின் ஆசியாவின் பாகம் என்றே பார்க்கலாம். ஜப்பானியப் படை சீனாவுக்குள் வேகமாக முன்னேற ஆரம்பித்தது. சீனாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

கடைசியில் ஜப்பானின் முன்னேற்றத்தை தடுக்க ஹெனன் மாகாணத்தில் மஞ்சள் நதியின் அணையை உடைக்க சீன இராணுவம் உத்தரவிட்டது. இதனால் திட்டமிட்டபடி ஜப்பான் படையின் முன்னேற்றத்தை தற்காலிகமான நிறுத்த முடிந்தது. ஆனால் ஜப்பான் படை முன்னேறினாலும் நிகழாத பேரழிவு ஏற்பட்டது.

நதியில் இருந்து பெருக்கெடுத்த வெள்ளத்தால் எட்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் பலியாகினர். மில்லியன் கணக்கானவர்கள் வீடுகளை இழந்தார்கள். வெள்ள நீர் 54,000 சதுர கிலோமீற்றர் நிலத்தை மூழ்கடித்தது. இது மனிதனால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய அனர்த்தங்களில் ஒன்றாக வரலாற்றில் இடம் பிடித்தது.

# பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

## பிரமிடும் கம்பளி யானையும்



எகிப்தின் கிசா பிரமிடுகள் உலகுக்கு இன்றும் ஆச்சரியமான ஒன்று. 5000 ஆண்டுகளுக்கு முன்னர் நவீன இயந்திரங்கள் எதுவும் இன்றி இத்தனை பிரமாண்டமான கட்டுமானத்தை கட்டுவதை பார்த்தால் ஆச்சரியப்படுவதைத் தவிர என்ன செய்ய முடியும். ஆனால் அதனை விடவும் ஓர் ஆச்சரியம் இந்த பிரமிடு காலத்தில் வரலாற்றுக்கு முந்தைய உயிரினமாக பார்க்கப்படும் கம்பளி யானைகள் பூமியில் உலாவித் திரிந்திருக்கின்றன.

கி.மு. 2550 மற்றும் 2490 இற்கு இடையிலேயே கிசா பிரமிடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் மமொத் என்று அழைக்கப்படும் கடைசி பனி யுக காலத்து கம்பளி யானைகள் கி.மு. 1650 ஆம் ஆண்டு வரை பூமியில் வாழ்;ந்திருக்கின்றன. அதாவது பிரமிடுகள் கட்டப்பட்டு 900 ஆண்டுகளின் பின்னரே இந்த வகை யானைகள் பூமியில் இருந்து முற்றாக அழிந்து விட்டன.



# நர மாமிசம் சாப்பிடுவதிலும் கின்னஸ் சாதனை

உலகில் அதிக நர மாமிசம் சாப்பிட்டவர் என்று கூட ஒருவர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ரடு உட்ரே உட்ரே என்ற அந்த நபர் ஏகத்திற்கு மனித இறைச்சி சாப்பிட்டிருக்கிறார். பீஜி தீவு கோத்திரத் தலைவர்கள் எதிரியின் உடலை சாப்பிடுவது அந்தக் காலத்தில் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.


ஆனால் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோத்திரத் தலைவர் உட்ரே உட்ரே கிட்டத்தட்ட 872 தொடக்கம் 999 பேரை உண்டிருக்கிறார். அதாவது கோத்திரத் தலைவர் ஒவ்வொரு முறை நர மாமிசம் சாப்பிடும்போதும் அதனை சுடுவதற்கு பயன்படுத்திய கல்லை தம்முடன் வைத்துக்கொள்வது வழக்கமாகும். அப்படி வைத்துக் கொண்ட கற்கள் இன்றும் உட்ரே உட்ரேவின் கல்லறையைச் சூழ குவிந்து கிடப்பதை அங்கு போனால் பார்க்கலாம்.



# நாயால் ஏற்பட்ட பயங்கர யுத்தம்

பல்கேரியா மற்றும் கிரேக்கத்திற்கு இடையே 1925 ஆம் ஆண்டு பயங்கர யுத்தம் ஒன்று வெடித்தது. கிட்டத்தட்ட ஒரு வாரம் நீடித்த அந்த யுத்தத்தில் 171 பேர் கொல்லப்பட்டார்கள். கடைசியில் அப்போது இருந்த தேசிய லீக் சர்வதேச அமைப்பு மத்தியஸ்தம் வகித்தே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால் இந்த யுத்தத்திற்கான காரணத்தை கேட்டால் சிரிப்பீர்கள்.

எல்லையில் காவல் காத்துக்கொண்டிருந்த கிரேக்க படை வீரர் ஒருவரின் நாய்க்கு நாடுகளின் எல்லைகள் தெரியுமா என்ன! அது தன்னிஷ்டத்திற்கு எல்லை கடந்து பல்கேரியா பக்கம் போனது. அந்த நாயை பிடிப்பதற்கு கிரேக்க வீரரும் எல்லையை கடந்து வர பல்கேரிய வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். கடைசியில் யுத்தத்தில் வந்தது முடிந்தது.



# கலைத் துறையின் கலங்கரை விளக்காக திகழ்ந்தவர் கலைஞர் ராஜசேகரன்

இலங்கை கலைத்துறைக்கு ஒரு கலங்கரை விளக்காக திகழ்ந்தவர் கலைஞர் ஆர். ராஜசேகரன். கொழும்பு, கொட்டாஞ்சேனை விவேகானந்தா கல்லூரி இவரது அறிவுத் திறனுக்கு ஒளியூட்டி வழிகாட்டிய கல்லூரி. கல்லூரியில் படிக்கின்ற காலத்திலும் படித்த பின்பும், தான் கல்வி கற்ற பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.







இலங்கை மேடை நாடகத்துறையின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர். இவர் இறுதியாக நடித்த நாடகம் கொழும்பு மருதானை எல்பிஸ்டன் அரங்கில் மேடையேற்றப்பட்ட ஜாதகப் பொருத்தம் நாடகம். 1974ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்ட உறவுகள் நாடகத்தின் மூலம் மேடை நாடகத் துறைக்குள் பிரவேசித்தார் இவர்.அதன் பின் தனக்கென ஒரு தனியான நாடக மன்றத்தை ஸ்தாபித்து பல கலைஞர்களை உருவாக்கினார். வெள்ளி நிலா கலாலயம் என்ற அந்த நாடக மன்றத்தின் மூலம் பல கலைஞர்களை அறிமுகப்படுத்தியது டன் நிறைய கலைஞர்களுக்கு நடிப்பதற்கு வாய்ப்பும் அளித்தார். நிறைய நாடகங்களை மேடையேற்றினார்.


இவர் மேடையேற்றிய நாடகங்கள் அனைத்தும் வெற்றி நாடகங்களளாகவே அமைந்தன. தனக்கென ஒரு ரசிகர் பட்டாளத்தையே வைத்திருந்தார். எனவே இவரது நாடகத்தைப் பார்க்க ரசிகர்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் இருக்கவில்லை. கற்பின் கனல், கோடில்லா கோலம், கஞ்சன் கந்தசாமி, முக்கோணத்தில் மூவர், வாடகைக்கு அறை, புல்லுருவி, தோட்டத்து ராணி, களங்கம், அவளைக் கொன்றவன் நீ, கெரி ஒன் டிரெட்டர், ஒன்று எங்கள் ஜாதியே, போன்ற பல வெற்றி நாடகங்களை மேடையேற்றினார்.





அவர் எந்த மேடை நாடகத்தை மேடையேற்றினாலும் அதில் எனக்கு ஒரு பாத்திரத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு கொடுக்கத் தவறியதே இல்லை. எனக்கு ஒத்திகைகளில் கலந்து கொள்ள நேரம் கிடைக்காது. எனவே நடிக்கவில்லை என்று கூறினாலும் விடாமல் எனக்கு எப்பொழுது எல்லாம் ஒத்திகைக்கு வரமுடியுமோ அதற்கு தகுந்த மாதிரி ஒத்திகை தினங்களை அமைத்து எனக்கு மேடை நாடகத் துறையில் பங்களிப்பு செய்வதற்காக வாய்ப்பு கொடுத்தவர். பொதுவாகவே இலங்கை மேடை நாடக வரலாற்றிலே நடிகர்களுக்கு காசு கொடுப்பது கிடையாது. ஆனால் இவருடைய நாடகத்தில் ஒரு சிறிய பங்களிப்பு செய்தாலும் நாடகம் மேடையேற்றி முடிந்த மறுகணமே அதற்குரிய காசை கொடுத்து விடுவார். அத்தோடு நின்று விடுவதில்லை. நாடகம் மேடையேற்றி முடிந்த அதே வாரத்தில் தடல் புடலாக விருந்து வைத்து மகிழ்வித்து விடுவார். அபுநானா புகழ் கே ஏ ஜவாஹர், கந்தையா, சிதம்பரம், ஏகாம்பரம், நடராஜா, டொன் பொஸ்கோ ஆகிய கலைஞர்கள் இவரது நாடகங்கள் அனைத்திலும் நடித்த கலைஞர்கள். இலங்கை வரலாற்றில் தமிழ் கலைஞர் ஒருவர் தொழில் அதிபராகத் திகழ்ந்தார் என்றால் அது இவர் ஒருவரே. தனக்கென தனியான அச்சகம் ஒன்றை நிறுவி அச்சுக்கலையில் சிறந்து விளங்கினார். கொழும்பு ஜப்பார்ஜியில் வேலை செய்து வந்தவர் அச்சத்துறைக்குள் புகுந்து அதில் முன்னேறியவர். இவர் திருமணப் பதிவாளராக நியமனம் பெற்றதும் அதன்மூலம் நிறைய பேரின் திருமணங்களை நடத்தி வைத்தவர்.இவருக்கு இரண்டு பிள்ளைகள். ஒரு மகன். ஒரு மகள். இரு பிள்ளைகளும் திருமணம் முடித்து விட்டார்கள் சமூக சேவையிலும் தீவிர நாட்டம் கொண்ட இவர் தனது சமூக சேவைகளை விஸ்தரித்து கொள்வதற்காக அரிமா சங்கமாகிய லயன்ஸ் கழகத்தில் சேர்ந்து அதன் தலைவராகிய துடன் சிறந்த பல சேவைகளை ஆற்றினார்.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543











# வவுனியாவில் Junior Super Singer















## தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் மாணிக்கவாசகர் தமிழ் கல்லூரிக்கு விஜயம்




தமிழ்நாடு தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள், ஸ்ரீ கந்தப்பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அண்மையில் வத்தளை உணுப் பிட்டி மாணிக்கவாசகர் தமிழ் கல்லூரிக்கு விஜயம் செய்தார். பிரணவம் அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் சிததிரவேல் ரமேஷ் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.




# அழகுக்கலை தொடர்பான பயிற்சிப் பட்டறை





ஹிமாயா பிரைடல் ஸ்டுடியோ பணிப்பாளரும் பிரபல அழகுக்கலை நிபுணருமான ஹிமாயா நியாஸ் நடத்திய அழகுக்கலை தொடர்பான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் நிகழ்வில் பங்கு பற்றிய மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வில் மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, முன்னாள் லயன் தலைவர், சர்வதேச லியோ சொசைட்டி நிகழ்ச்சி ஆலோசகர் டாக்டர் கே.எச். லசந்த குணவர்தன மற்றும் ஹிமாயா பிரைடல் ஸ்டுடியோ பணிப்பாளர் ஹிமாயா நியாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# நந்தவனம் சந்திரேசேகரனின் இதழியல் பணிக்காக இரண்டு விருதுகள்




தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து கடந்த 27 வருடங்களாகஇனிய நந்தவனம் மாத இதழை சிறப்பாக நடத்தி வருவதையும் சர்வதேச அளவில் செய்து வரும் தமிழ்ப்பணியையும் பாராட்டி நந்தவனம் சந்திரசேகரனுக்கு திருச்சியிலிருந்து வெளிவரும் இலட்சியம் வெல்லும் மாத இதழின்10 ஆம் ஆண்டு விழாவில் திருச்சி புகையிரத காவல் கண்காணிப்பாளர் Dr. T.செந்தில்குமார் IPS , இதழ்மாமணி என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இலட்சியம் வெல்லும் இணையாசிரியர் சுரேஷ் ஆப்ரகாம், செய்தி நேரம் துணையாசிரியர் ஐசக் அருள்ராஜ் மற்றும் இலட்சியம் வெல்லும் துணையாசிரியர் சிவக்குமார் முன்னிலையில் நடந்த விழாவில். ஸ்ரீசெல்வபந்தம் குழுமத்தின் நிர்வாக இயக்குனர். எஸ். பி. மாரிமுத்து, விக்னேஷ் குழுமம் நிர்வாக இயக்குனர் பி. வேலுச்சாமி தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்க மாநிலத்தலைவர் எஸ். சரவணன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இலட்சியம் வெல்லும் இதழாசிரியர் சு.சதாசிவம் ஏற்புரை வழங்கினார். இரண்டாவது விருதாக திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கம் திருச்சியில் சிறப்பாக தமிழ் பணியாற்றி வரும் ஒன்பது ஆளுமைகளை தேர்வு செய்து, தமிழ் ஆளுமைகள் என்ற விருதினை வழங்கியது. திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கத்தில் அமைச்சர் பெ. உதயகுமார் தலைமையில், திருச்சி ABC மருத்துவமனை மூளை நரம்பியல் நிபுணர் மருத்துவர் எம். ஏ. அலீமினால் இவ் விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திருச்சியின் ஒன்பது தமிழ் ஆளுமைகளில் ஒருவருராக நந்தவனம் சந்திரேசேகரனும் தேர்வு செய்யப்பட்டு தமிழ் ஆளுமை விருது பெற்றுள்ளார். விருது பெற்றவர்களுக்கு பத்மஸ்ரீ மி. சுப்புராமன், திருக்குறள் சு. முருகானந்தம். சூர்யா சுப்பிரமணியன், கவிஞர் மணமேடு குருநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க பொருளாளர் ஆ.கேத்தரின் ஆரோக்கியசாமி முன்னிலை வகிக்க திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க பொதுச்செயலாளர் கவிஞர் வி. கோவிந்தசாமி அனைவரையும் வரவேற்றார். திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் ஜவஹர் ஆறுமுகம் நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# சிறந்த பெண் விளையாட்டு செய்தி தொகுப்பாளராக ஆஷிகா பர்ஸான் தெரிவு



இலங்கையின் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2024 ஆகஸ்ட் 21ஆம் திகதி நடைபெற்ற ஐகானிக் விருது 2024 நிகழ்வில், சிறந்த பெண் விளையாட்டு செய்தி தொகுப்பாளராக திருமதி ஆஷிகா பர்ஸான் தெரிவு செய்யப்பட்டார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, தயாசிறி ஜெயசேகர மற்றும் வசந்த யாப்பா பண்டார உட்பட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

ஆஷிகா பர்ஸான், கட்டாரில் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற AFC ஆசிய கோப்பை கால் பந்தாட்ட போட்டியில், கட்டாரின் முன்னணி தமிழ் ஊடகமான ஸ்கை தமிழ் சார்பாக ஊடகப் பணியாற்றியதற்காக இந்த விருதைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.





**K. Avinash**
*Father : **Kamalchandran***
*Mother : **Indusha***

# இசை பயணத்தில் இனிமை காணும் இளம் ஆசான் இராசையா ஸ்ரீஸ்கந்தராஜா

**கே: நீங்கள் ஒரு இசையாசிரியராக இருக்கிறீர்கள். இசைத்துறை, அறிவிப்புத்துறை , கலைத்துறையில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது என்பதனையும் உங்களைப்பற்றிய மேலதிகமான தகவல்களையும் தாருங்கள் ?**

முதலில் என்னை ஈன்றெடுத்த எனது தாய் தந்தையருக்கும், என்றும் ஆதரவு தந்து கொண்டிருக்கும் என் தொப்புள்கொடி உறவுகளுக்கும், என்னை வழிநடத்தும் இறைவனுக்கும் முதற்கண் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சிறுவயதில் ஒரு இசை பிரியன் தான். பாடல்கள் பாடும் போது இனிமையாக இருக்கிறது என எனையோர்களின் பாராட்டுக்கு உரித்தானேன். ஆனால் பாடசாலை கல்வியில் ஆரம்பத்தில் நான் சித்திர பாடம் தான் படித்தேன். எதிர்பாராத வகையில் தமிழ் தின போட்டியில் இசை தனி போட்டிக்கு சென்று முதல் வாய்ப்பிலேயே வலய,மாகாண மட்டங்களில் முதலிடம் பிடித்து தேசிய மட்டத்தில் பங்கு பற்றி அதன் பிறகு இசையின் சுவையை உணர்ந்து இசையை கற்க ஆரம்பித்தேன். பாடசாலையிலும் இசையை தொடர ஆரம்பித்து பின்னர் படிப்படியாக இசை நிகழ்வுகளிலும், அறிவிப்பிலும் ஈடுபட தொடங்கினேன். எந்த



வொரு விடயமாக இருந்தாலும் அதனை ஆத்ம திருப்தியோடு ஏற்றுக்கொள்வதிலேயே எமது முன்னேற்றம் தங்கியுள்ளது என்பதையும் இவ்வாறே நான் அறிந்து கொண்டேன்.

ஓர் இசை பிரியனாக வலம் வந்த நான் பல்கலைக்கழக கல்வியில் சங்கீத நுண்கலை இளமானி கற்கை நெறியை செவ்வனே நிறைவு செய்து தற்காலிக போதனாசிரியராக கடமையாற்றி, புனித தோமஸ் கல்லூரியில் குறுத்தலாவையில் ஆசிரியராக பணி புரிந்து தற்போது கொழும்பு பிஷப்ஸ் கல்லூரியில் இசை ஆசிரியராக கடமை ஆற்றுகிறேன் என்பதில் இருதயம் முழு இன்பமுறும் வகையில் மட்டற்ற மகிழ்ச்சியும் நிறைந்த பெருமையும் அடைகிறேன்.



**கே: தற்காலத்தில் கச்சேரிகளில் இடம்பெறக்கூடிய அதிமுக்கிய இசைக்கருவிகள் என்ன ...ஏனென்றால் தற்போதைய நவீன காலகட்டத்தில் தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவிகள் என்ன வடிவம் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன..?**

கர்நாடக இசைக்கச்சேரி எனும்போது கச்சேரியில் பிரதானமாக குரலிசை காணப்பட்டால் அது இரண்டு முக்கிய இசை கருவிகளை கொண்டே தங்கியிருக்கும். குரல் இசையை வழங்கும் கலைஞருக்கு பக்க வாத்தியங்களாக இராக வாத்தியமாக வயலினும், தாள வாத்தியமாக மிருதங்கமும் இடம்பெறும். இவை பிரதான பக்க வாத்தியங்களாக இடம்பெறும். மேலும், கடம், கஞ்சிரா, முகர்சிங் என்பவை உபதாள வாத்தியங்களாக இடம் பெறும் போது அது சபையை ஈர்க்க கூடிய களைகட்ட வைக்க கூடிய ஒரு முழுமையான இசைக் கச்சேரியாக அமையப்பெறும். கருவியிசை பிரதானமாக இருந்தால் வீணையும், வயலினும் இடம்பெறும். இன்று மெண்டலின் மற்றும் சேக்ஸபோன் போன்ற வாத்தியங்களும் பிரதானமான முறையில் தனி கச்சேரிகளில் பிரதானமாக இடம்பெறுகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய இசை கருவிகள் எனும்போது அவை எண்ணமுடியாத அளவிற்கு இருந்தமைக்கான சான்றுகள்



பல உள்ளன. நான் பாரம்பரிய இசைக்கருவிகளின் தொய்வும் உயிர்ப்பும் எனும் தலைப்பில் ஒரு ஆய்வு கட்டுரையொன்றை எழுதி இருக்கிறேன். அதில் தமிழ் பாரம்பரிய இசைக்கருவிகளின் நிலையினை ஆராய்ந்துள்ளேன். அழிந்து வரும் இசை கருவிகளை மீள் உருவாக்கம் செய்து அதனை பாதுகாத்து வரும் தமிழ்நாட்டு பாரம்பரிய இசை கலைஞர்கள் கோசைநகரான் சிவகுமார் ஐயா அவர்களும், பாரம்பரிய இசை தகவல்களை எழுதும் பேராசிரியர் மு. மம்மது ஐயாவும் எனக்கு அநேக தகவல்களை தந்து இருக்கிறார்கள். இன்றைய இசையை பொறுத்தவரை தமிழ் இசைக்கருவிகளின் பயன்பாடு குறைவடைந்தாலும் அவை தனக்கென ஒரு தனி தகுதியை என்றுமே தக்க வைத்துள்ளன என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**கே: மரபிசைப் பாடல்களை தற்கால இசையுடன் பொருத்தி வெளியிடப்படும் தமிழ்ப்பாடல்களின் வெற்றி எந்தளவுக்கு மக்களை சென்றடைகிறது?**

மரபிசை பாடல்கள் அன்று எந்தவிதமான கலப்பு இசைகளும் இல்லாது தனித்துவம் மிக்க இசை பாடல்களாக இருந்தன. அதனை அன்றுள்ளது போல இன்றும் கேட்கும் போது மனதை அப்படியே ரீங்காரம் இட்டு செல்லும் விதத்தில் அவை இருக்கும். ஆனால், அவை தற்காலத்தில் கலப்பிசை பாடல்களாக அமைந்தாலும் காலத்தால் அழியாத கோலங்களாகவும் காவியங்களாகவும் இருக்கும். அவை மக்களை சென்றடையும் விதம் சற்று வித்தியாசமான முறையில் அமைந்தாலும் அன்று அதனை அமைத்த இசையமைப்பாளர்களின் பழைமை வாய்ந்த அதன் நுட்பங்கள் என்றும் தனக்கென ஒரு பாணியை வைத்துள்ளன. இதுவே அதன் வெற்றி என கூறலாம்.


**கே: இசைக்கற்றலை (வகுப்பு) மேம்படுத்துவதற்கான வழிவகைகளை இசையாசிரியர் என்ற முறையில் மாணவர்களுடனான முகாமைத்துவத்தில் எப்படி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. ?**

ஒரு ஆசிரியரின் முதலாவது கொள்கையே ஒரு மாணவனை சரியாக இனங்காணுதல் தான். அதனை சரியாக இனங்கண்டு , பதப்படுத்தி, பக்குவப்படுத்தி ஒரு சரியான பாதையை அம்மாணவனுக்கு சரிவர கொடுப்பதே ஒரு சிறந்த ஆசிரியரின் முதற்கடமையாகும். இசையை கற்பிக்கும் போது இசை மீதுள்ள ஆர்வத்தை தூண்டும் வகையில் மாணவர்களுக்கு கல்வி புகட்டல் இடம் பெற வேண்டும். முறையான சாதகம், இசையியல் விளக்கம் என்பவை தெளிந்த நீரை போல மாணவர்களுக்கு கற்று கொடுத்தல் வேண்டும். இவ்வாறு காணப்படும் போது அது ஒரு சிறந்த இசைக்கல்விக்கு வித்திடும் என்பதில் ஐயமில்லை.

**கே: நீங்கள் ஒரு இசையாசிரியராக இருக்கிறீர்கள் ...ஆனால் உங்களுக்கு பிடித்த மூத்த இசையாசிரியர்கள் யார் ?**

எனது ஆரம்ப குருவான திருமதி அமுதா முருகேஷ், இசைக்கல்வியை நான் பாடசாலையில் தொடர எனக்கு என்றும் ஆதரவு தந்த திருமதி பவானி ஆசிரியர், மேலும் எனக்கு எல்லா வகையிலும் பக்குவப்படுத்தி, நெறிப்படுத்தி, என்னை செதுக்கி என்றும் எனக்கு சகோதரத்துவத்தை தந்து கொண்டிருக்கும் எனது அன்பு ஆசான் திரு. செந்தூரன் ஆசிரியர் ஆகியோர் என்றும் என் வாழ்வில் முக்கியமானவர்கள். பல்கலைக்கழக கல்வியில் எனது விரிவுரையாளர்கள் கொடுத்த சிறந்த பாட புகட்டல்களும் ஆதரவும் என்றும் என்னில் தங்கியிருக்கிறது.

(07 ஆம் பக்கம் பார்க்க)



✍ பாத்திமா நளீரா





# தையல் கலையில் சிறந்து விளங்கும் பதுறுன் நிஷா இக்பால்

தையற் கலையில் பெண்கள் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்ட காலம் இன்று மலையேறிவிட்டது. தனது ஆடைகளை தாமே தைத்து அணிவதை விட தைத்த ரெடிமேட் ஆடைகளை வாங்கி அணிவதில் இன்றைய சந்ததியினர் அனேகமாக வழக்கமாகக் கொண்டுள்ளனர். தையல் மெஷினில் ஆடைகளை தைக்கும் தையல்காரப் பெண்கள் பலர் இருக்கின்றனர். எனினும் கை ஊசியால் தைக்கும் தையல் கலை என்பது இன்றைய இளசுகள் மறந்து போன கலை எனலாம். ஆனால் தன் கைப்பட கை ஊசியால் கலைவண்ணம் போடும் ஒரு கைவண்ணம் கொண்ட சகோதரிதான் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சகோதரி திருமதி பதுறுன்னிஷா இக்பால். இன்றைய கம்ப்யூட்டர் யுகத்தில் கை ஊசியால் எம்பிரோடிங் கலையில் தேர்ச்சி பெற்று



திகழ்கிறார். தலையணை உறை, கைகுட்டை, குழந்தைகளுக்கான ஆடைகள், சிறுமிகளின் ஆடைகள், திரைச் சேலைகள், குசன் கவர் போன்றவற்றிற்கெல்லாம் இவர் தனது கை வண்ணத்தைக் காட்டியுள்ளார். பாடசாலையில் ஏழாம் வகுப்பில் படிக்கும் காலத்திலேயே தையல் கலையைப் பயின்ற இவருக்கு தையல் கலையில் ஆர்வம் ஏற்பட்டதாம். பாடசாலை ஆசிரியரிடம் மட்டுமல்ல வீட்டுக்கு வந்து தனது தாயாரிடமும் கேட்டுப் பழகிய தையல் கலையை நன்கு கற்றுள்ளார் பதுறுன்னிஷா இக்பால். பாடசாலை மாணவியாக இருந்த காலத்தில் தையல் கலையில் ஏற்பட்ட ஆர்வம் இன்றும் தொடர்கிறது. முஹம்மது ரிஸ்மி, முஹம்மத் ரியாஸ் ஆகிய இரண்டு மகன்மார்களுக்கு தாயாரான இவருக்கு நான்கு பேரப்பிள்ளைகளும் உள்ளனர். தேவை உணர்ந்து சேவை செய்த இவரது அன்புக் கணவர் முகமது இக்பால் 2023. 04. 07 ஆம் திகதி காலமானார் என்பதை கவலையுடன் நினைவு கூரும் இவரின் பொழுதுபோக்கே தைப்பதுதான். ஓய்வாக இருக்கும் நேரங்களில் இன்றும் கையூசியால் தைத்துக் கொண்டிருக்கிறார். தையல் கலையில் மையல் கொண்ட இவர் இலக்கியத் துறையிலும் அதிகம் ஆர்வம் கொண்டவர். கொழும்பில் நடைபெறும் கலை இலக்கிய நிகழ்வுகளிலெல்லாம் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொள்வார். வாசிப்பையும் நேசிப்பவர். நல்ல நூல்கள் கிடைத்தால் அவற்றை விரும்பி வாசிப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார். இலக்கிய ஆர்வலராக, சிறந்த கையூசி தையற்காரியாகவும் இவர் திகழ்கிறார்.

கலாபூஷணம்
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்




## இசை பயணத்தில் ... (06 ஆம் பக்க தொடர்ச்சி)

கே : ஆளுமைத்திறன் என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையை சார்ந்ததாக இருக்கும். உங்களது ஆளுமைத் திறனை புடம்போட்ட சம்பவம் என்ன?

பல்கலைக்கழக கல்வியை முடித்த பிறகு முதலாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றமைக்கு தற்காலிகமாக மாணவர்களுக்கு விரிவுரைகள் புரிய எனக்கு கிழக்கு பல்கலைக்கழகம் வாய்ப்பினை வழங்கியது. "கற்பித்தல் ஒரு வகையான கற்றல்" என்பது போல இசையை கற்பித்தலில் எனது ஆளுமை வளர்ச்சி பெற்று இருக்கிறது என்பது என்றும் பெருமைக்குரிய விடயம். ஆகவே பல்கலைக்கழக மாணவர்களுக்கு கற்பிக்கும் போதே அது ஆளுமைமிக்க ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்று கூறினாலும் அது பொருத்தமாக இருக்கும். ஆகவே நான் விரிவுரை நடத்திய முதல் நாள் எனக்கு என்றும் மறக்க முடியாத ஒன்றாகும்.

கே : நீங்கள் உங்களது இந்த இசைப்பணியை ஆத்மார்த்தமான சேவையாகவா செய்கிறீர்கள்?

இசையை கற்கும் போது அதனை ஆத்ம திருப்தியோடு கற்பவனாகவும், அதனை முழு மனதோடு ஏனைய இசை கற்கும் சந்ததியினருக்கு கற்று கொடுப்பவனாகவும் இசை பாதையில் பயணித்து கொண்டு இருக்கிறேன். என்றுமே எனது இசை ஆசிரியத்துவம் ஒரு ஆத்துமார்த்த சேவையாகவே அமையும் என்பதில் பெருமையடைகிறேன்.

கே : ஆய்வுக் கட்டுரைகள் எழுதியிருக்கிறீர்கள். தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு தடையாக அமைவது எது?

தமிழ் மொழிக்கு என்றுமே தடையாக உள்ளது ஏனைய விடயங்களின் வளர்ச்சி அல்ல. தமிழர்களாகிய எமக்கு தமிழ் மீதுள்ள ஆர்வம் குன்றிய நிலையை அடைவதே ஆகும். தமிழர்களாகிய நாம் அதனை என்றும் போற்றி அதன் மீது நாட்டம் கொண்டு அதனை ஏனையோருக்கு கொண்டு செல்வதில் உயிரோட்டமாக செயற்பட்டாலே போதும் அவை துளிர் விட்டு எழுச்சி பெற்றுவிடும். சுருங்க கூறின், காலில் சக்கரங்களை கட்டிக் கொண்டு ஏனைய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு செலவழிக்கும் நேரத்தில் ஒரு சில மணித்துளிகள் தமிழின் வளர்ச்சிக்கு கிடைக்குமாயின் அது சாலச்சிறந்தது. தமிழின் தனித்துவத்தை மறுக்கவும் வேண்டாம்; மறைக்கவும் வேண்டாம். அதனை சுதந்திரமாக நிலைக்க செய்தால் தமிழின் சிறப்பு என்றும் மேலோங்கி நிற்கும். இலைமறை காயாக நிலைக்க செய்வதை பார்க்கிலும் தமிழின் சிறப்பை பறைசாற்ற வேண்டிய நிர்பந்தம் அனைவருக்கும் காணப்படுகிறது.

கே : தேனருவி இணைய வானொலி அறிவிப்பாளராக கடமை புரிந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முடியுமா?

மனித உயிராக பிறந்த அனைவருக்கும் மன அழுத்தம் எனும் உளைச்சல் நிலை ஏற்படும். அவ்வாறே எனக்கும் ஒரு சில காலப்பகுதி மிகுந்த மன உளைச்சலுக்கு வழி வகுத்தது எனலாம். இந்த கேள்விக்கு எனது கருத்து சற்று வித்தியாசமான முறையில் அமைந்திருக்கலாம். ஒரு சில நேரங்கள் என்னை முழுமையாக தனிமையை உணர வைத்தது. இவ்வாறு இருக்கும் வேளையில் தேனருவி இணைய வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்றும் வாய்ப்பொன்று கிடைத்தது. தனிமையை உணர்ந்தாலும் மனம் இதனை தட்டிகளிக்க இடம் கொடுக்கவில்லை. இதில் பணி புரிந்து சில நாட்களில் எந்தவித மன அழுத்தமும் ஏற்படாதிருந்தது இன்றும் பூரிப்படைய செய்கிறது. இன்று நினைத்தாலும் சற்று பிரம்மிக்க வைக்கும். எமது உணர்வுகளை ஏனைய சொந்தங்களோடு பகிர்ந்து கொள்வதும் ஏனையோர்களது உணர்வுகளை செவிமடுத்து அதன்பால் திருப்தி கொள்வதும் அறிவிப்புத்துறை எனக்கு தந்த சிறந்த மருந்தாகும். ஆகவே அறிவிப்புத்துறையானது மனதுக்கு ஒரு சிறந்த மருத்துவம் என கூறுவதே எனது இந்த கருத்தாகும். நான் இதில் கடமையாற்றிய காலத்தில் அனைத்து அறிவிப்பாளர்களும் சிறந்த முறையில் எனக்கு ஆதரவாக இருந்தார்கள். நேயர்களும் அன்பும் ஆதரவும் வழங்கி இருந்தனர். விசேடமாக, தேனருவி இணைய வானொலியின் முகாமையாளர் RJ நிலாவிற்கும் மற்றும் அறிவிப்பாளர் RJ சுகிர் அண்ணாவிற்கும், இந்த வாய்ப்பினை பெற்று தந்த அன்பு தங்கை RJ துர்க்காவிற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளை இந்த வேளையில் தெரிவித்து கொள்கிறேன்.

கே : இசையை தவிர்த்து கலைத்துறையுடன் என்னென்ன விடயங்களில் ஆர்வம் உள்ளது?

இசையை தவிர்த்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குதல் எனக்கு மிகவும் பிடித்த ஒன்றாகும். எழுத்து சார்ந்த விடயங்களும் எனக்கு சிறந்த அறிவுரைகளை வழங்கி இருக்கிறது. பாடல்கள் எழுதுதல், கவிதைகள் எழுதுதல் என்பதில் அதிக ஆர்வம் கொண்ட வகையில் கலைத்துறை பயணங்கள் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறன. நாடகங்கள் மேடையேற்றுதலிலும் அதற்கு பாடல்களை எழுதி அமைத்தலிலும், இசை அமைத்தலிலும் வாய்ப்புக்கள் கிட்டி அரச நாடக விழாக்களில் பங்குபற்றி விருதுகள் பெறுவதற்கும் அவை வழி வகுத்தன. நாடகத்தின் பயணத்தில் நான் கண்ட அதி உச்ச நாடக கலைஞரான திரு. பிரதீப் ராசா ஆசானுக்கு இந்த வேளையில் எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இவரின் சிறந்த வழிகாட்டலில் கீழ் அவை தொடர் வெற்றிகளுக்கு காரணமாக அமைந்தது.

கே : உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி கூறுங்கள் ?

பல்கலைக்கழக கல்வியில் முதல் தர வகுப்பில் சித்தி எய்தமைக்காக கிடைத்த "மஹாலக்ஷ்மி சிவலிங்கம் விருது", 47 வது வருட அபிமான அரச நாடக விழா 2019 இல் ஆண்டின் நெடும் நாடக பிரிவுக்கான "சிறந்த இசை அமைப்பு விருது" தேசிய இளைஞர் சேவைகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் "கிடைத்த தேசிய விருதுகள்" இளைஞர் விருது வழங்கும் விழா 2013 இல் பெற்ற "கர்நாடக இசை விருது ", "இளைஞர் பிரதீபா விருது" , தேனருவி வானொலியில் பெற்ற "சிறந்த அறிவிப்பாளர் விருது" போன்றவற்றை குறிப்பிடலாம். மேலும் குறுந்திரைப்படங்களுக்கு குரலிசை வழங்கியமை, நாத சங்கமம் சீசன் 02 இல் இரண்டாமிடம் பெற்ற பாடகர் விருது, L4C சர்வதேச இசை போட்டியில் முதலாம் இடத்திற்கான விருதுகள் கிடைக்க பெற்றன.

கே : நேர்காணலின் இறுதியாக மேலதிகமாக என்ன சொல்ல நினைக்கிறீர்கள். ?

ஒருவரின் வாழ்கையில் தான் அடைந்த அல்லது அடைந்து கொண்டிருக்கிற வெற்றி படிக்கட்டுக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு எல்லோருக்கும் அமைவதில்லை.

அவ்வாறு அமைவதென்பது மனிதத்துவத்திற்கு கிடைக்கும் ஒரு மாபெரும் சிலாக்கியம்.

ஆகவே எனது இசைப்பாதையில் நான் கண்ட ஒரு சில முக்கியமான தருணங்களை பகிர் வாய்ப்பளித்த தங்களுக்கும் தங்கள் துறையினருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

கலைத்துறையில் நான் கண்ட அனுபவங்கள் முதிர்ச்சி பெறாவிட்டாலும் நான் கற்றிருக்கிற ஒரு சில விடயங்கள் என்னை பக்குவத்தன்மை மிகுந்த ஒருவனாக மாற்றி இருக்கிறது என்பதில் பெருமை அடைகிறேன். சிறு வயதில் எனக்கு கிடைத்த ஒரு பெரிய வாய்ப்பாக இதனை நான் கருதுகிறேன். இவ்வாறான நேர்காணல்கள் ஒவ்வொரு கலைத்துறை ஆர்வலர்களையும் முதிர்ச்சிகொண்ட சாதனைகளை பெற செய்யும் என்று கூறுவதில் மனம் மிக்க மகிழ்ச்சியடைகிறது.

# ராஷ்மிகா பட்ட அவமானங்கள்

நடிகை ராஷ்மிகா மந்தனா என்றால் அவரது ரசிகர்கள் தொடங்கி தெலுங்கு சினிமா உலகின் முன்னணி நடிகர்கள் வரை பலரும் கூறுவது, நேஷ்னல் கிரஷ் என்பதுதான். இவர் நடிக்கும் படங்களில் இவருக்கு முக்கியமான கதாபாத்திரம் இருக்கின்றதோ இல்லையோ, ஆனால் படம் எப்படியும் ஹிட் அடித்து விடுகின்றது. ஆனால் தனக்கு கொடுத்த கதாபாத்திரத்திற்கு தன்னால் முயன்ற அளவிற்கு தனது நடிப்பின் மூலம் நியாயம் செய்து விடுகின்றார்.

சமீபத்தில் இவர் இந்தி படத்தில் நடிக்க ஆர்வம் அதிகரித்து அனிமல் படத்தில் நடித்தார். இந்த படத்தில் ராஷ்மிகா மந்தனா கவர்ச்சியான காட்சிகளில் மட்டும் இல்லாமல், படுக்கையறை காட்சிகளிலும் பாலிவுட் உலகின் டாப் கதாநாயகிகளே ஆச்சரியப்படும் அளவிற்கு கவர்ச்சியாக நடித்திருந்தார். இதனால் இவரது கால்ஷீட்டுக்காக பாலிவுட் உலகின் முன்னணி தயாரிப்பு நிறுவனங்கள் அவரை ஒரே நேரத்தில் அணுகியதால் இன்றைக்கு பாலிவுட்டிலும் பிசியான நடிகையாக மாறிவிட்டார்.

ராஷ்மிகா மந்தனா தற்போது பல படங்களில் இந்தி, தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் நடித்து வந்தாலும், அவரது நடிப்பில் வெளியாகவுள்ள புஷ்பா 2 படத்திற்கு இந்தியா முழுவதும் உள்ள ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த படத்தின் நடிகர் அல்லு அர்ஜுனுக்கும் இயக்குநர் சுகுமாறனுக்கும் இடையில் சில கருத்து வேறுபாடு காரணமாக படத்தின் இறுதி கட்ட படப்பிடிப்பு தள்ளிப்போய்கொண்டே உள்ளது என கூறப்படுகின்றது.

28 வயது நிரம்பிய ராஷ்மிகா மந்தனா தனது திரை வாழ்க்கை தொடங்கி சில ஆண்டுகளிலேயே இந்தியாவில் அதிகப்படியானோரின் அன்பைப் பெற்ற நடிகையாக மாறினார். குறிப்பாக, அவரை நேஷ்னல் கிரஷ் என புகழும் அளவிற்கு உச்சத்தைத் தொட்டார். இது மட்டும் இல்லாமல், தொடர்ந்து பிசியான நடிகையாக இருந்து வருகின்றார். தற்போது ஒரு படத்திற்கு ராஷ்மிகா மந்தனா, ரூபாய் 14 கோடிகள் சம்பளம் வாங்குகின்றார் என கூறப்படுகின்றது. தென்னிந்திய சினிமாவில் உள்ள நடிகைகளில் அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக உருவெடுத்துள்ளார். ஆனால் இவரது சினிமா வாழ்க்கை தொடங்குவதற்கு முன்னர், இவர் சந்தித்த இன்னல்களை பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். அதில், நான் சினிமாவில் வாய்ப்பு தேடிக்கொண்டு இருந்த கால காலட்டத்தில், எங்கு ஆடிஷன் நடந்தாலும் சென்று முயற்சிப்பேன். ஆடிஷன் முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போது கண்ணீருடனே திரும்பியிருக்கின்றேன். ஆடிஷன் செய்தவர்கள் இந்தக்கதைக்கு நான் பொருத்தமற்றவள் எனக் கூறியிருந்தாலும் பரவாயில்லை, நடிகைக்கான முகமே எனக்கு இல்லை எனக் கூறி நிராகரித்தார்கள். இப்படியாக 20 முதல் 25 படங்களில் என்னை நிராகரித்திருப்பார்கள். ஆனாலும் நான் எனது முயற்சியைக் கைவிடாமல், தொடர்ந்து முயற்சித்தேன். ஒரு படத்தில் நடிக்கத் தேர்வாகி, மூன்று மாதங்கள் படத்திற்கான பயிற்சி நடந்த பின்னர் அந்த படம் முற்றிலுமாக கைவிடப்பட்டது.





# ஓபனாக பேசிய சங்கீதா!



தமிழ் சினிமாவில் 90 ஸ் காலத்தில் பிரபல நடிகையாக இருந்தவர் சங்கீதா. இவர் தற்போது படங்களில் குணச்சித்திர கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். இவர் சமீபத்தில் பேட்டி ஒன்று கொடுத்தார், எனக்கு தமிழ் பிடிக்காது, தெலுங்கு தான் பிடிக்கும் என்று பேசி உள்ளது தமிழ் ரசிகர்களை கோபமடையச் செய்துள்ளது.

1997ம் ஆண்டு வெளிவந்த கங்கோத்ரி என்கிற மலையாள படம் மூலம் நடிகையாக அறிமுகமானவர் நடிகை சங்கீதா. இதையடுத்து 1998 ஆம் ஆண்டு வெளிவந்த காதலே நிம்மதி படம் மூலம் கோலிவுட்டில் எண்ட்ரி கொடுத்தார் சங்கீதா. இதையடுத்து தமிழ், தெலுங்கு, மலையாளம் என பல்வேறு மொழிகளில் பிசியாக நடித்து வந்த சங்கீதா. உயிர், தனம், நேபாளி என வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களில் நடித்தார். .திருப்புமுனையை ஏற்படுத்திய படம்: நடிகை சங்கீதாவுக்கு கோலிவுட்டில் மிகப்பெரிய திருப்புமுனையை கொடுத்த படம் பிதாமகன். பாலா இயக்கத்தில் வெளியான இப்படத்தில் விக்ரம், சூர்யா, லைலா, மனோபாலா, சிம்ரன் ஆகியோர் நடித்திருந்தனர். இந்த படத்தில் சங்கீதா எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருந்தார். அவரது நடிப்புக்கு பாராட்டுக்கள் கிடைத்ததோடு, சிறந்த துணை நடிகைக்கான தமிழக அரசின் மாநில விருதும் கிடைத்தது.

காதல் திருமணம்: அதைத்தொடர்ந்து பல திரைப்படத்தில் நடித்து வந்த சங்கீதா, பாடகர் கிரிஷை 2009ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்துகொண்டார். இந்த தம்பதிகளுக்கு ஒரு மகள் இருக்கிறாள். தற்போது, குணசித்திர கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவர் கடைசியாக விஜய் நடித்த வாரிசு படத்தில், ஸ்ரீகாந்தின் மனைவியாக நடித்திருந்தார். தமிழ் பிடிக்காது: இந்நிலையில், நடிகை சங்கீதா அளித்துள்ள பேட்டி ஒன்றில், எனக்கு தமிழ் பிடிக்கவே பிடிக்காது, தெலுங்கு தான் பிடிக்கும். தற்போது தெலுங்கு படத்தில் தான் நடித்துக் கொண்டு இருக்கிறேன். இதைப்பார்த்து, எவ்வளவு பேரு கோபப்பட்டாலும் அது பத்தி எனக்கு கவலை இல்லை. தெலுங்கு சினிமாவில் கிடைக்கும் மரியாதை, தமிழ் சினிமாவில் கொடுக்க மாட்டார்கள்.

அது ஏன் என்று எனக்கு தெரியவில்லை. அவர்களுக்கு இந்த மனப்பான்மை வருவதற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை. சங்கீதா மனதில் இருப்பதை ஓபனாக பேசி இருந்தாலும், இது தமிழ் ரசிகர்களின் மனதை புண்படுத்திவிட்டது என ரசிகர்கள் கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர்.

# Play Boy போன்ற பையன் வேண்டாம்

கீர்த்தி பாண்டியன் நடிகர் அசோக் செல்வனை திருமணம் செய்ததில் இருந்து நடிகை ரம்யா பாண்டியனுக்கு எப்போது திருமணம் ஆகும் என்கிற கேள்வி எழுந்து கொண்டு தான் இருக்கிறது. இந்நிலையில், தனது உடன்பிறந்த சகோதரி திரிபுர சுந்தரியுடன் சமீபத்தில் யூடியூப் சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பல விஷயங்களை பேசியுள்ளார். நடிகை ரம்யா பாண்டியனுக்கு கமல்ஹாசன் சிரித்துக் கொண்டே ஊசி போடும் மருத்துவர் என்றே பிக் பாஸ் வீட்டில் இருக்கும் போது பெயர் வைத்தார். விஷ பாட்டில் என்றெல்லாம் நெட்டிசன்கள் ட்ரோல் செய்துள்ளனர். பிக் பாஸ் ரசிகர்களின் தலைவியாகவும் மாறியவர் ரம்யா பாண்டியன்.

அவருக்கு இப்படியொரு லவ் பிரேக் சோகம் உள்ளதா? என ஆச்சர்யப்படுத்தும் வகையில் தனது மனதில் உள்ள வலிகளை சமீபத்திய பேட்டியில் வெடித்து ஓபன் பண்ணி பேசியிருக்கிறார். நடிகை ரம்யா பாண்டியன்: அருண் பாண்டியனின் சகோதரர் துரை பாண்டியனின் மகள் தான் ரம்யா பாண்டியன். 2015ம் ஆண்டு வெளியான டம்மி டப்பாசு படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார். 2016ம் ஆண்டு ராஜு முருகன் இயக்கத்தில் குரு சோமசுந்தரம் நடிப்பில் வெளியான ஜோக்கர் திரைப்படம் அவருக்கு மிகப்பெரிய அங்கீகாரத்தை கொடுத்தது. அதன் பின்னர், ஆண் தேவதை படத்தில் நடித்த ரம்யா பாண்டியனுக்கு பெரிதாக பட வாய்ப்புகள் இல்லாததால் போட்டோ ஷூட்களை நடத்தி வந்தார். விஜய் டிவியில் குக் வித் கோமாளி, பிக் பாஸ் உள்ளிட்ட ரியாலிட்டி ஷோவில் கலந்து கொண்டு கலக்கினார்.

33 வயதாகும் நடிகை ரம்யா பாண்டியன் இன்னமும் திருமணம் செய்து கொள்ளவில்லை. பிக் பாஸுக்கு பிறகு சூர்யா தயாரிப்பில் வெளியான ராமே ஆண்டாலும் ராவணே ஆண்டாலும் படத்தில் நடித்தார். மம்மூட்டியுடன் மலையாளத்தில் வெளியான நண்பகல் நேரத்து மயக்கம் படத்தில் நடித்த அவர் அடுத்ததாக இடும்பன்காரி எனும் படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில், தனது தங்கைக்கு எப்படி பட்ட மாப்பிள்ளை வேண்டும் என்பது குறித்தெல்லாம் அவரது சகோதரி பேசியுள்ளார்.

திருமண வாழ்க்கையை புரிந்து கொண்டு தங்கையை கவனமாக பார்த்துக் கொள்ளும் பொறுப்பான பையன் கிடைக்க வேண்டும். இந்த பிளேபாய் போன்ற பையன் எல்லாம் வேண்டாம் என அவரது அக்கா ஸ்ட்ரிக்ட்டாக கண்டிஷன் போட்டுள்ளார்.



# யார் இவர்?

ராஜகாளியம்மன், பாளையத்தம்மன் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்த அக்ஷயா ஜெயராம் சமீபத்தில் யூடியூப் சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டி தீயாக பரவி வருகிறது. பக்தி படங்களில் மட்டும் நடித்து வந்த அக்ஷயா ஜெயராம் அதன் பின்னர் சினிமாவில் நடிப்பதை நிறுத்தி விட்டார்.

பல ஆண்டுகள் கழித்து அவரை தேடிப் பிடித்து யூடியூப்களில் பேட்டி எடுத்து வரும் நிலையில், பட்டாசு போல அவர் பேசுவதை பார்த்த இளைஞர்கள் அவரது இன்ஸ்டாகிராம் ஐடியை தேடி அலைய ஆரம்பித்து விட்டனர்

மார்க்கெட்டிங் துறையில் பணியாற்றி வரும் அக்ஷயா ஜெய்ராம் இதற்கு மேல் சினிமாவில் நடிப்பீங்களா உள்ளிட்ட பல கேள்விகளுக்கு அந்த பேட்டியில் பதில் அளித்துள்ளார். ராமநாராயணன் படத்தில்: மூன்றரை வயதாக இருக்கும் போது தனது வீட்டில் செல்லப் பிராணிகள் அதிகம் இருந்ததாகவும் அதை கவனித்துக் கொண்ட டாக்டர் குடும்பத்துடன் பிக்னிக் போன போது எடுத்த போட்டோக்களை அந்த டாக்டரின் நண்பரான ராமநாராயணன் சார் பார்த்து விட்டு இந்த குழந்தையை ஸ்க்ரீன் டெஸ்ட் எடுக்க வைக்கலாம் என முடிவு செய்து பெற்றோர்களிடம் பேச, சாமி படம் தானே நடிக்கட்டும் என அனுமதிக்க அப்படித்தான் சினிமாவில் நடிக்க ஆரம்பித்தேன் என அக்ஷயா ஜெய்ராம் அழகாக தனக்கு கிடைத்த சினிமா வாய்ப்பு குறித்து கூறியுள்ளார்.



தொடர்ந்து நடிக்காதது ஏன்?: ஆரம்பத்திலேயே பள்ளிப் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என நினைத்து சில படங்களுக்குப் பிறகு வீட்டில் பெற்றோர்கள் குழந்தையை இதற்கு மேல் சினிமாவில் நடிக்க அனுப்ப வேண்டாம் என முடிவு செய்த நிலையில், படங்களில் நடிப்பதை விட்டு விட்டேன் எனக் கூறியுள்ளார்.

முதல் சம்பளம்: ஆரம்பத்தில் தனக்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தார்கள் என தெரியாது. ஆனால், ஒரு கட்டத்தில் என்னுடைய பெற்றோர்களிடம் கேட்ட போது, அப்போது குழந்தை நட்சத்திரங்களுக்கு 15 ஆயிரம் சம்பளம் கொடுத்ததாக கூறினர். எனக்கும் 15 ஆயிரம் தான் சம்பளமாக வழங்கியுள்ளனர் என்றார்.

மீண்டும் நடிப்பீங்களா?: மார்க்கெட்டிங் துறையில் பணியாற்றி வரும் அக்ஷயா ஜெய்ராம் மீண்டும் சினிமாவில் நடிக்கும் எண்ணம் தனக்கு இல்லை எனக் கூறியுள்ளார். சினிமாவில் நடிக்க வைக்க சிலர் அப்ரோச் செய்தனர் என்றும் ஆனால், மீண்டும் நடிக்க வேண்டும் என தான் நினைக்கவில்லை என்றும் கூறிவிட்டார்.



# டெஸ்லா குயின்

செய்தி வாசிப்பாளராக இருந்த பிரியா பவானி சங்கர் எப்படி சினிமாவில் ஹீரோயினாக வலம் வருகிறாரோ அதே போல செய்தி வாசிப்பாளரான திவ்யா துரைசாமியும் தொடர்ந்து படங்களில் நடித்து கலக்கி வருகிறார்.

மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள வாழை படத்தில் அவர் நடித்ததை பார்த்து கூட நடித்த நிகிலா விமலுக்கே அவர்தான் என அடையாளம் தெரியவில்லை என பேசும் அளவுக்கு அந்த படத்துக்காக தன்னை முழுவதுமாக மாற்றியது எப்படி எனக் கூறியுள்ளார்.

வாழை படத்தில் கலையரசன், திவ்யா துரைசாமி, நிகிலா விமல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அந்தப் படத்தின் புரமோஷனுக்காக தொடர்ந்து நிகிலா விமல் மற்றும் திவ்யா துரைசாமி உள்ளிட்டோர் பேட்டியளித்து வந்தனர்.

நடிகை திவ்யா துரைசாமியின் இடுப்பு அழகை பார்த்து வியந்துப் போன ரசிகர்கள் அவரை டெஸ்லா குயின் என்றும் டெஸ்லா அழகி என்றும் பெயர் வைத்து அழைத்து வருகின்றனர். இன்ஸ்டாகிராமில் அவர் வெளியிடும் கவர்ச்சி புகைப்படங்கள் இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலம். செய்திவாசிப்பாளராக இருந்து வந்த திவ்யா துரைசாமி தொடர்ந்து சினிமாவில் பல படங்களில் நடித்து வருகிறார்.

2019ம் ஆண்டு வெளியான இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும் படத்தில் நடிக்க ஆரம்பித்த திவ்யா துரைசாமி மதில், குற்றம் குற்றமே, எதற்கும் துணிந்தவன், ப்ளூ ஸ்டார் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். வாழை படத்தில் தனது கலர் டோனையே மாற்றி அவர் நடித்திருப்பதாக பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

வாழை படத்தில் கிராமத்துப் பெண்ணாக கருப்பு கலர்டோன் உடன் நடிக்க வேண்டும் என்பதற்காக முதல் நாள் படப்பிடிப்புக்கு கருப்பு மேக்கப் போட்டுக் கொண்டு சென்றேன். அதை பார்த்த மாரி செல்வராஜ் சுத்தமா செட்டாகல, எதுக்கு இப்படி கருப்பு மேக்கப் போட்டுக்கிட்டு வந்திருக்கீங்க என்றார்.

உடனடியாக தேங்காய் எண்ணெய்யை எடுத்து உடம்பு முழுக்க தேய்க்கச் சொல்லி வெயிலில் 2 நாட்கள் நிற்க சொன்னார். நான் எப்போது பார்க்கிறேனோ அப்போதெல்லாம் குடை நிழலிலோ, மர நிழலிலோ நிற்கக் கூடாது என கண்டிஷன் போட்டார். அதன் பின்னர் கலர் டோன் மாறிவிட்டது.

படம் முடிவுறு வரை சோப்பு போட்டோ, ஃபேஷ் வாஷ் யூஸ் பண்ணியோ குளிக்கவே இல்லை என்றார்.

திரும்பவும் என்னோட பழைய கலர் டோன் வர 6 மாசம் ஆகிவிட்டது என்றும் திவ்யா துரைசாமி அந்த பேட்டியில் கூறியுள்ளார். படத்தில் அவருடன் நடித்த நிகிலா விமலுக்கு படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பார்க்கும் போது, திவ்யா துரைசாமியை அடையாளமே தெரியவில்லை என்றும், தன்னுடன் நடித்தது வேறு ஒரு பெண் என்றும் இவர் இல்லை என்றே சொல்லி விட்டாராம். இருவரும் இணைந்து வாழ்ந்துள்ள வாழை திரைப்படம் நிச்சயம் தமிழ் சினிமாவின் பெருமைமிகு படைப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ஆளுமைத்திறனில் அபாரமானவர்கள் பெண்களே

அவள் தொலைநோக்குப் பார்வையுடன் தான் சிந்திக்கிறாள். பெண்ணைக் கலந்து எடுக்காத எந்த முடிவும் வெற்றி பெறுவதில்லை. ஆனால், இதை ஏற்றுக்கொள்ள ஆண்களுக்கு வறட்டு கௌரவம் தடுக்கிறது.

ஆணைக் கையாளும் பக்குவமும் பெண்ணுக்கு நிறைய உண்டு. தன்னைவிட 'இளைய' வயதுப் பெண்ணை ஓர் ஆண் மணமுடிக்க என்னென்னவோ காரணங்கள் சொல்லலாம். ஆனால், வயது அதிகமான ஆணைக் குறைந்த வயதுப் பெண் சுலபமாக 'ஹேண்டில்' செய்வாள் என்பதுதான் உண்மை.

பெண்ணின் ஆளுமைத்திறனுக்குச் சரியான எடுத்துக்காட்டாக அவளது 'மல்ட்டி டாஸ்கிங்' வேலைகளைச் செய்வதைச் சொல்லலாம். அவள் சமைத்துக் கொண்டே வாஷிங்மெஷினில் துணிகளைப் போட்டு விட்டு, குழந்தைக்கு பால்புட்டியைக் கொடுத்து, வயதானவர்கள் இருந்தால் காபி போட்டுக் கொடுத்து விட்டு, வரும் தொலைபேசி அழைப்பையும் கவனித்துக் கொள்ள முடியும். ஆனால், ஆணால் ஒரு நேரத்தில் ஒரு வேலைதான் செய்ய முடியும். சமையல்கூட நிறைய ஆண்கள் ஒவ்வொன்றாகத் தான் சமைப்பார்கள்.

ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வகை சமைக்க முடியாமல் திணறுவார்கள். அவ்வளவு ஏன் பெண்ணால் வீட்டுவேலை, அலுவலக வேலை இரண்டையும் அசால்ட்டாகச் சமாளிக்க முடியும். ஆணால் நிச்சயமாக முடியாது.

இயற்கையாகவே ஆண்களின் மூளையைவிடப் பெண்களின் மூளை 8 சதவீதம் சிறியதாக இருந்தாலும் அவர்களின் மூளைக்கு அதிக திறன் உள்ளதாக ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆளுமை என்பது மூளையின் அளவில் இல்லை, செயலில் தான் இருக்கிறது என்பது புரிகிறது.

படித்தவர்களைவிடப் படிப்பறிவு இல்லாத, அனுபவ அறிவு மிகுந்த கிராமப்புற மகளிர் எத்தனையோ இக்கட்டான சூழ்நிலைகளையும் இலகுவாகச் சமாளித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடலோர மீனவக் குடும்பங்களில் ஆண்கள் மீன்பிடித்து வருவதோடு அவர்களது வேலை முடிந்துவிடும். அந்த மீன்களைச் சுத்தப்படுத்தி, வியாபாரம் செய்து, மீதமான மீன்களைக் கருவாடாக்கி, காசு பார்ப்பது எல்லாம் பெண்கள் வேலைதான். சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன் கொண்டவர்கள் தான் அவற்றைச் சமாளித்துக் கடக்கிறார்கள்.

எனக்குத் தூரத்து உறவுப் பெண் ஒருவர் காதல் மணம் புரிந்தவர். ஒரு மகன் பிறந்த பிறகு கணவருக்கு நாள்பட்ட புற்றுநோய் என்று தெரியவந்தது. எவ்வளவோ மருத்துவச் செலவுகள் செய்தும் அவரைக் காப்பாற்ற இயலவில்லை. கணவர் இறந்தபின் உறவினர்கள் வற்புறுத்தியும் மறுமணத்தைத் தவிர்த்து விட்டு, வேலைக்குச் செல்லத் தொடங்கினார். வயதான தாயார், திருமணத்திற்குக் காத்திருந்த இரண்டு தங்கைகளைக் கவனித்துக் கொண்டு, வீடு ஒன்றையும் சிறியதாகக் கட்டி, மகனையும் நன்கு படிக்க வைத்தார். தங்கைகளுக்குத் திருமணத்தையும் முடித்து வைத்தார். இப்போது மகன் வேலைக்குச் செல்கிறார். இருந்தும் ஓய்வின்றி உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார். கணவர் இறந்ததும் சோகம் கொண்டாடிக் கொண்டு மூலையில் முடங்கிவிடாமல் இயங்கத் தூண்டிய அவரது ஆளுமைதான் அந்தக் குடும்பத்திற்கு உறுதுணையாக இருந்திருக்கிறது என்று உறுதியாகச் சொல்லலாம்.

கணவன் இறந்த பின்னும் வாழ்க்கையை நகர்த்திச் செல்லும் பெண்கள் ஏராளமாக இருக்கின்றனர்.

ஆனால், மனைவி இறந்தபின் மனதளவில் முடங்கிவிடும் ஆண்கள் மீதி வாழ்வை அச்சத்துடன்தான் எதிர்கொள்கின்றனர். அல்லது இன்னொரு பெண்ணை மணம்புரிந்து தங்கள் இருப்பைக் காப்பாற்றிக் கொள்கின்றனர் என்பது மறுக்கவியலா நிதர்சனம். இத்தகைய ஆளுமை மிக்கப் பெண்களை மட்டம் தட்டி வைத்திருக்கும் ஆண்கள் இனியாவது தங்கள் குடும்பத்தில் இருக்கும் பெண்களின் ஆளுமைத் திறனைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

# தந்தையும் மகளும்



**தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது.**
(68)

விளக்கம்:
தம்மைக் காட்டினும், தம் மக்கள் அறிவுடையவராக விளக்கம் பெறுதல், பெற்றோருக்கு மட்டுமல்லாமல், பெரிய உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் இனிமையானது ஆகும்.

தந்தையின் செல்லங்கள் எப்போதும் பெண் குழந்தைகளே. ஆண் ஒருவன் தான் பெற்றெடுத்த தாய், சகோதரியை அடுத்து தன்னுடைய மகளை, தாயாகக் கருதுகிறான். தாய், சகோதரியைவிட மகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கக் காரணம், அவள் பிறந்தது முதல் தன் வாழ்நாள் இறுதிவரை அவளைத் தாங்குவதாலேயாகும்.

மனைவியின் வயிற்றில் இருக்கும் போதிலிருந்து குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும், என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று திட்டமிடும் ஆண், தனக்குப் பிறக்கப்போவது பெண் குழந்தையாக இருந்தால் கூடுதலாகத் திட்டமிட்டுக் கொள்கிறான்.

ஒரு பெண்ணின்(மகளின்) அனைத்து உத்தரவுகளுக்கும் அடிபணியும் ஆண்மகன் அப்பாவாகத் தான் இருக்க முடியும்.

அதுபோல மகளும் தன்னுடைய எந்தவொரு சூழ்நிலையிலும் தனக்குத் துணையாக தந்தை இருக்கிறார் என்ற நம்பிக்கையில் வாழ்க்கையை வாழ கற்றுக் கொள்கிறாள்.

திருமணமான பின்னும் தந்தை மகளின் பிணைப்பு தொடர்கிறது.

ஆண் மகன் ஒருவன் இப்படித்தான் இருக்க வேண்டும், தன்னிடம் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும்' என்பதை முதலில் பார்த்து உணரும் ஆணாக பெண் குழந்தைக்கு அப்பா உதாரணமாக இருக்கிறார், இருப்பார். பிறந்தது முதல் அன்பைப் பொழியும் முதல் ஆண் தந்தையாகவே இருக்கிறார்.

எந்த ஒரு சூழ்நிலையிலும் தன்னை மீட்டெடுக்கும் ஹீரோவாக அப்பா இருக்கிறார் என்று உணரும் பெண் குழந்தைகள் இந்த சமூகத்தில் எதையும் சாதிக்கும் சாதனைப் பெண்ணாக திகழ்கிறார்கள் என்பதே உண்மை.

வளர்ந்தாலும் அப்பாக்களுக்கு மகள்கள் செல்லங்களே தான், வயதானாலும் அப்பாக்கள் மகள்களுக்கு 'காதாநாயகனே.

ஓர் ஆண் மகன் மனைவியிடம் காட்டும் கோபத்தை தன் மகளிடம் காட்டுவதில்லை.

பெண் குழந்தைகளுக்கு நல்லதொரு தந்தை கிடைத்து விட்டால் அவர்கள் தந்தையை தன் உலகின் மிகச் சிறந்த மனிதனாக நினைக்கத் தொடங்கி விடுவார்கள்.

அதற்கு பின் எத்தனை ஆண்மகனை சந்தித்தாலும் தன் தந்தைக்கு ஈடாக பார்ப்பது மிக மிகக் குறைவு.

மிகவும் பொறுப்புள்ள தந்தையே தன் மகளின் நேர்மையான நண்பனாக தங்களது வாழ்நாளில் நீண்ட நாட்களாக கண்ட நேர்மையான தோழனாக தந்தை மாறுகிறார். தந்தையின் வழிநடத்தலில் சிறந்த வெற்றிகளை தொடுகின்றனர்.

பெண்கள் தங்களது வாழ்நாளில் அதிக நேரம் செலவழிப்பதும் அவர்களது தந்தையுடன் தான். பெண் குழந்தைகள் தங்களது எந்த நிலையிலும் பாதுகாக்கும் ஒரே நபர் தந்தை தான் என்பதை நம்புவது மட்டுமல்ல உணர்கிறார்கள்.

★உலகை அறிமுகம் செய்பவர்
மாதா, பிதா, குரு, தெய்வம்.

தாய் பாலூட்டி வளர்க்க தந்தையின் தோள்களின் மீதேறி உலகை பார்க்கும் வரம் பெண் குழந்தைகளுக்கு அதிகமே.

பிறந்த முதல் நாளில் இருந்து வளரும் ஒவ்வொரு நாளும், உலகை கற்றுத்தரும் ஆசான் தந்தை தான். இது மகன்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பு தான். ஆனால், பெண்களுக்கு வாழ்நாள் முழுதும் கிடைக்கும் பரிசு இது.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# பன்முக ஆளுமை கொண்டவர் கலாபூஷணம் பரீட் இக்பால்



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் கல்வி கற்ற இவர் பல வருடங்களாக எழுத்துத்துறையில் தடம் பதித்து வருகிறார். இவர் எழுத்துத்துறைக்காக கலாபூஷணம் விருது பெற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த மர்ஹூம்களான பரீட்றஸீனா தம்பதியினருக்கு 26041959 இல் மூத்த மகனாக பிறந்தார். (எந்த இடத்தில் பிறந்தார் என்பது சுவாரஷ்யமானது ) இவர் ஒஸ்மானியா கல்லூரி வளாகத்திற்குள்ளேயே பிறந்தார். அதாவது இன்றைய ஒஸ்மானியா கல்லூரி அன்றைய இவரது பூர்வீக வீடு என்பது குறிப்பிடத்தக்க விடயம். ஒஸ்மானியா கல்லூரியின் இடது புறத்து சந்தியிலிருந்து ஜின்னா மைதானம் வரையுள்ள காணி இவரது தாயார் தம்பிக்கண்டுறஸீனாவிற்கு சொந்தமானது. அங்குதான் இவர் பிறந்தார். மர்ஹூம் குத்தூஸ் அதிபர் அவர்களது காலத்தில் ஒஸ்மானியா கல்லூரி விஸ்தரிக்கப்பட்ட போது இவரது பூர்வீக வீடும் இணைத்துக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் பத்திரிகைகளில் சர்வதேச தினங்கள், உலக நாட்டு தலைவர்களின் வரலாறுகள், விஞ்ஞானிகளின் வரலாறுகள், இஸ்லாமிய கட்டுரைகள், சிறுகதைகள், உலக புதினக் கட்டுரைகள், சமூக விழிப்புணர்வு கட்டுரைகள் போன்ற பல ஆக்கங்களை திறம்பட படைத்துள்ளார்.

இவரது ஆக்கங்கள் தினகரன் வாரமஞ்சரி, ஞாயிறு வீரகேசரி, விடிவெள்ளி, நவமணி, தமிழ்த் தந்தி, வலம்புரி, யாழ். தினக்குரல் போன்ற பல பத்திரிகைகளில் இன்றும் வெளிவருகின்றன. இவர் தினகரன், தினகரன் வார மஞ்சரி பத்திரிகைக்கு செய்தியாளராகவும் செயற்படுகிறார். மேலும் பட்டயக் கணக்காளர் எம்.எஸ். எம்.ஜான்ஸின் அவர்கள் எழுதிய "மணிபல்லவத்தார் சுவடுகள்" எனும் வரலாற்று நூலுக்கு உதவியாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர் பல வரலாற்றுத் தொடர்களையும் எழுதி மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். ஞாயிறு வீரகேசரியில் அறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர். தமிழ்த்தந்தியில் நெல்சன் மண்டேலா, பிடல் காஸ்ட்ரோ போன்றவர்களின் வரலாற்று தொடர்கள் இவரது சிறந்த படைப்பாகும். இன்றும் தினகரன் வாரமஞ்சரியில் இவர் நெல்சன் மண்டேலாவின் வரலாறை "கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா" எனும் தலைப்பில் வரலாற்றுத் தொடரை எழுதி வருகிறார். 1990 இல் புலிகளால் யாழ் முஸ்லிம்கள் எவ்வாறு விரட்டியடிக்கப்பட்டார்கள் என்பதை தத்ரூபமாக கட்டுரையாக பல பத்திரிகைகளிலும் எழுதினார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.பன்முக ஆளுமை கொண்ட இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், முஸ்லிம் சேவையில் "இஸ்லாமிய புத்தாண்டு முஹர்ரம்", "கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்களின் இனிய நினைவுகள்" எனும் தலைப்புகளில் ஆக்கங்களை தயாரித்து குரல் பதிவும் கொடுத்துள்ளார். இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் இருந்து சேவையாற்றி யாழ் முஸ்லிம்களுக்கு பெருமை சேர்க்கின்றார்.பன்முக ஆளுமை கொண்ட இவர் சமுதாயத்தில் இன. மத பேதமின்றி முக்கியஸ்தர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிப்பது இவரது விஷேடமான சிறப்பம்சமாகும்.

யாழ்.பரீட் இக்பால் அவர்கள் விருதுகளாக கலாபூஷணம் விருது மட்டுமின்றி "யாழ்.முஸ்லிம் இலக்கிய ஜோதி", "ரத்ன தீபம்", "தேசோதய தீபம்", "கலைமாமணி", "தேசாபிமானி இலக்கிய செம்மல்" ஆகிய பல விருதுகளையும் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் யாழ்ப்பாணம் மஸ்றஉத்தீன் பாடசாலை, யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் பழைய மாணவராவார். படிக்கும் காலத்திலேயே பத்திரிகையில் ஆக்கங்களை எழுதி வருவது இவரது திறமையாகும். இவரது கன்னி ஆக்கம் தினகரனில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அல்ஹாஜ் என். எம்.அமீன் அவர்கள் அன்றைய பொறுப்பாளராக செயற்பட்ட "ஆலமுல் இஸ்லாம்" பகுதியில் "சுவர்க்கத்தின் திறவுகோல் தொழுகை" எனும் தலைப்பில் எழுதிய சிறிய ஆக்கமாகும். பாடசாலை காலத்திலேயே திறமையான மாணவராக திகழ்ந்து மாணவர் தலைவராகவும் க.பொ.த. உயர்தரம் கணிதப் பிரிவில் படிக்கும் காலத்தில் G.C.E.(A/L) Union இல் தலைவராகவும் இருந்து பல சேவைகளை ஆற்றியுள்ளார்.

இவர் 1985 இல் யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த அபூஸாலி தாஹிரா தம்பதியினரின் மூத்த புதல்வி நிஷாயா (நிமலா) என்பவரை மணமுடித்து பஸ்னா, இனாமுல் ஹஸன் எனும் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

இவருக்கு 5 பேரப்பிள்ளைகளும் உண்டு யாழ் மண்ணில் பிறந்த இவர், இன்று பல ஊர்களிலும் சிதறி வாழ்ந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் JaffnaMuslim SocietyMedia எனும் Whatsapp குழுவை உருவாக்கி ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுடன் பல வருடங்களாக பயணித்து சேவையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் எனும் வட்ஸப் மூலம் தெரிவு செய்யப்படும் யாழ் முஸ்லிம்களுக்கு ஒவ்வொரு வருடமும் "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" எனும் விருது வழங்கி கௌரவிப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இம்முறை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நிர்வாக சபை உறுப்பினராக வாக்களிப்பின் மூலம் கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தில் யாழ் முஸ்லிம் சமூகத்திலிருந்து தெரிவான முதலாவது நிர்வாகசபை அங்கத்தவர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

யாழ் பரீட் இக்பால் அவர்கள் ஊடகத்துறையிலும் கலைத்துறையிலும் மென்மேலும் வளர்ந்து பிறந்த யாழ் மண்ணுக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

65 வயது கடந்த நிலையில் தற்போது பாணந்துறை சரிக்கமுல்லையில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வரும் கலாபூஷணம் பரீட் இக்பால் எழுத்துத்துறைக்காகவும் சமூக சேவைக்காகவும் பாரிய சேவையாற்றி வருகிறார்.

**பஸ்னா இக்பால்**

## இலங்கைத் தமிழ் கலைஞர்களின் ஒன்றுகூடல்



இலங்கை தமிழ் கலைஞர்களின் ஒன்றுகூடல் வாதுவ Ocean Ripples Resort ல் நடைபெற்றது.

புதிய அலைகலை வட்டத்தின் தலைவரும் கலைஞர்கள் ஒன்றுகூடலின் இணைப்பாளருமான Shanmu Sanmu இதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தார்.

இந்த கலைஞர்கள் ஒன்றுகூடலில் மீன்வால் குறுந்திரைப்படம் ஊடாக கதாநாயகனாக அறிமுகமான எம்.மணிராஜும் கலந்து கொண்டார்.

படங்கள்:
Mohamed Nazar .

## துபாயில் பஹ்ரைன் சமூக சேவகருக்கு விருது

துபாய் எம்.டி.எஸ். மேலாண்மை நிறுவனம் மற்றும் கல்லிடைக்குறிச்சி தேசிய அறக்கட்டளையின் சார்பில் 78வது இந்திய சுதந்திர தினத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் பஹ்ரைன் நாட்டின் லைட்ஸ் ஆஃப் கைண்ட்னஸ் அமைப்பின் நிறுவனர் சையத் ஹனீஃப்பிற்கு முனைவர் ஆ.முகமது முகைதீன் சமூகப்பணிகளுக்காக அப்துல் கலாம் விருது வழங்கி கௌரவித்தார். அப்போது பேசிய முனைவர் ஆ. முகம்மது முகைதீன் , பஹ்ரைனில் லைட்ஸ் ஒஃப் கைண்ட்னஸ் அமைப்பின் நிறுவனர் சையத் ஹனீஃப், வருடத்தின் 365 நாட்களும் தொழிலாளர்களுக்கு தண்ணீர், ஜூஸ் உள்ளிட்ட பல்வேறு



உணவுப் பொருட்களை வழங்கி சேவையில் ஈடுபட்டுள்ளார். அவரை கௌரவிக்கும் வகையில் அப்துல் கலாம் விருது வழங்கப்படுகிறது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் முதுகுளத்தூர்.காம் ஆசிரியர் முதுவை ஹிதாயத், எம். ஏ.கே. கர்டைன்ஸ் நிறுவனத்தின் நெல்லை ஏர்வாடி முஹைதீன் அப்துல் காதர், துபாய் தர்பார் யூடியூப் சேனலின் நிறுவனர் சொக்கம்பட்டி முஹம்மது கபீர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# டில்லி கலை இலக்கியப் பேரவை சுதந்திர தின பட்டிமன்றம்

டில்லி கலை இலக்கியப் பேரவை சுதந்திர தின விழா வையும் சிறப்பானதொரு பட்டிமன்றத்தையும் அண்மையில் நடத்தியது. இவ்விழாவில் டில்லி தமிழ் சங்கத்தின் பொதுச்செயலாளர் தொடக்கவுரை ஆற்றினார். அவர் பேசுகையில், இப்பேரவை தொடக்க நாள் முதல் பொதிகை டிவி பட்டிமன்றத்தில் தொடங்கி பல மாநிலங்களிலும் குறிப்பாக, கொரானா காலகட்டத்தில் பல உலக நாடுகளை இணைத்து பல உலக சாதனை நிகழ்ச்சிகளையும் நடத்தி உள்ளதை நினைக்கும் போது பெருமையாக உள்ளது என்றார்.

நிகழ்வுக்கு இராகவன் நாயுடு தலைமை தாங்கினார்.இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக S.நந்தக்குமார் (மூத்த வழக்கறிஞர்) சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில், தமிழ் பண்பாடு மற்றும் தமிழ் கலாசார நடைமுறைகளையும் இப்பேரவை மலேசியாவில் சமீபத்தில் உலக சாதனை நிகழ்ச்சிகளில் பங்கேற்றதை பாராட்டியும் மகிழ்ந்தார். இந்நிகழ்வில் டில்லி கலை இலக்கியப் பேரவையின் தலைவர் ப.அறிவழகன், பேரவை புரவலர் கே.வி.கே.பெருமாள், டில்லி சமூக நல சரணாலய நிறுவனர் பாலுச்சாமி, அருணாச்சலம் (பொருளாளர் டில்லி தமிழ்ச் சங்கம்), டாக்டர் நாகராஜன், இந்தர்புரி, கோவை அரசு பேருந்து போக்குவரத்து ஊழியர் யோகநாதன் , கிருஷ்ணன் ஜனக்புரி, இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இண்டிகிரேட்டடு என்டர்பிரைசஸின் பொது மேலாளர் பாலமுருகன், கணேசன் மற்றும் ஸ்ரீநாத் எலிவேட்டர்ஸ் நிறுவனர் கண்ணன் குஜராத்தும் நிகழ்ச்சிக்கு ஆதரவு தந்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் அருமையான தலைப்பில் சிறப்புப்பட்டிமன்றம் நடந்தேறியது. இந்நிகழ்ச்சியில் தேன்மதுர கீதம் நிறுவனர் பாடகர் நிரோஜன் அருமையான பாடலுடன் நிகழ்ச்சியை தொடங்கினார். இந்நிகழ்வில் நன்மணி சான்றோர்கள் வளர் கலைஞர்களை போற்றும் வகையில் பாராட்டு விழாவும் அவர்களது சேவையை பாராட்டி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பாடகர் நிரோஜன் "தேனிசைசெல்வர்" விருதும், கணேசன் ஜனக்புரிக்கு ஆசிரியர் சேவையை பாராட்டி அகிலம் புகழ் ஆசான் விருதும், கரோல் பாக் பாண்டியன் சேவையைப் பாராட்டி அவருக்கு மனித நேய மாண்பாளர் விருதும், மகிபால்பூர் அன்னபூர்னா உணவகத்தின் நிறுவனர். சரவணனின் சேவையை பாராட்டி நலபாகம் விருச்சம் விருதும் வளர் கலைஞர்களான செல்வி ஹறிணி ரமேஷ், செல்வி ஹஸ்ணி ரமேஷ் மற்றும் மலேசிய நாட்டின் ஆசிரியர் மற்றும் நிறுவனருமான தனலெட்சுமியின் ஸ்ரீ ருத்ரன் நடனக் குழு அமைப்பிற்கு "முத்தமிழ் வளர் முகில்" விருதும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.







சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. தலைப்பு. திரைஇசைப் பாடல்களின் பொற்காலம் கவியரசு கண்ணதாசன் காலமா? கவிஞர் வாலி காலமா? திரைப்பட நடிகர் மற்றும் நடுவர் திருப்பூர் கவிநிலவான் பொறுப்பேற்று நடத்தினார்.

இந்நிகழ்வில் அவருக்கு இலக்கிய மேகம் விருது வழங்கி மகிழ்விக்கப்பட்டது.கவிஞர் கண்ணதாசன் காலமே! என்ற அணியில் முனிர்கா டாக்டர் சுந்தரராஜன் இணைச்செயலாளர் தில்லி தமிழ் சங்கம் அவர்களும், தில்லி தமிழ் கல்வி கழகத்தின் ஆசிரியர் திருமதி மங்கையர்க்கரசி,மற்றும் தில்லி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் உமாதேவி அவர்களும் வாதிட்டனர். எதிர் அணியின் வாலி காலமே! என்ற தலைப்பில் தில்லி தமிழ் கல்வி கழகத்தின் ஆசிரியர் ஜோதி பெருமாள் திரு.மனோஞ் மற்றும் தில்லி அயகிரிவா நிறுவன தலைவர் பட்டிமன்ற பேச்சாளர் திரு.குருச்சரண் ஆகியோர் வாதிட்டனர். நடுவர் இரண்டு வாதங்களையும் கேட்டறிந்து வாலியின் பாடல்களையும் பாடி மகிழ்வித்து இறுதியில் கவிஞர் கண்ணதாசன் காலமே! என்று தீர்ப்பளித்தார்.

இந்நிகழ்ச்சியில் தொகுப்புரையை உஷாகண்ணனும், வரவேற்புரையை குமாரும் (பொதுச்செயலாளர்) நன்றியுரையை இராமமூர்த்தியும் வழங்கினர். சுதந்திர தின விழா நிகழ்வில் இரா.முகுந்தன், பா.குமாரின் பிறந்த நாள் நிகழ்வும் நடைபெற்றது.



# சுபாஷினி பிரணவன் தலைமையில் 103 ஆவது கவி கவியரங்கு

## வலம்புரி கவிதா வட்டத்தின் பௌர்ணமி கவியரங்கு











வலம்புரி கவிதா வட்டம் தனது103 ஆவது கவியரங்கினை பௌர்ணமி தினத்தன்று கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடாத்தியது.

கலைஞானச் சுடர் சுபாஷினி பிரணவன் கவியரங்கின் தலைமையையேற்று சபையோரின் ஒட்டுமொத்த பாராட்டையும் பெற்றுக்கொண்டார். வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்த செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரையும் வழங்கினர்.

கலைஞானச் சுடர் சுபாஷினி பிரணவன் தலைமையில் கண்ணீர் கவிதைகளும், நகைச்சுவை கவிதைகளும் சிந்தை அள்ளின.

கவிஞர்கள் கிண்ணியா அமீர் அலி, தி. ஸ்ரீதரன், கலாபூஷணம் மஸீதா அன்சார், இ. கலைநிலா, எம்.ஏ.ரஹீமா, அருந்தவம் அருணா, புத்தளம் என்.பி.எம். தஸ்லீம், காகிதம் அநாமிகா ஷினாஸ், தமிழ்த் தென்றல் அலி அக்பர், எம். எஸ். அப்துல் லதீப், தாமரைச் செல்வி, கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், இறைஞானக்கவி ரமீஸ், சிந்தனைப் பிரியன் முஸம்மில், மலாய்கவி டிவாங்ஸோ, ராஜா நித்திலன், இரா. சிவராஜா, ஆர். தங்கமணி, வாழைத்தோட்டம் எம். வஸீர், வெளிமட ஜஹாங்கீர், எம்.பீ.எஸ். பாலா, கம்மல்துறை இக்பால், மினுவன்கொட ஏ. சிவகுமார், ஆர். எஸ். ரஸ்மியா, ஏ.கே.இளங்கோ, இளநெஞ்சன் முர்ஷிதீன் ஆகியோர் கவிதை பாடினர்.

கவிஞர் ரவூப் ஹஸீர், சு. ஜெகதீஸ்வரன், எம்.எஸ்.எம். ஜின்னா, நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், ஏ.ஆர்.எம். முஸம்மில் ஜே.பி., ஏ.ஆர். நிசார் ரஹீம், கவிதா இளங்கோ, எம்.எஸ்.எம்.ராஸிக், எம்.எச்.எம்.நஸீர், பதுறுன் நிஷா இக்பால், முப்லிஹா முஸம்மில் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.


**படங்கள் : முஹம்மத் நசார்**



















# நாடறிந்த எழுத்தாளரும் கலைஞருமான திக்குவல்லை ஸும்ரியின் 'நட்பு' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று

**நாடறிந்த எழுத்தாளரும் நாடக ஆசிரியரும் கலைஞருமான திக்குவல்லை ஸும்ரியின் 'நட்பு' சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. அதன் வெளியீட்டு விழா இனிமை கலா மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை மருதானை தபால் நிலைய கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. அதனையொட்டி திக்குவல்லை ஸும்ரியுடன் நடத்தப்பட்ட நேர்காணல்:**

**கேள்வி : 'நட்பு' சிறுகதைத் தொகுதி பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

என்னுடைய நெடுநாளைய கனவு இன்று நிறைவேறுவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். நான் எழுதிய நூற்றுக் கணக்கான சிறுகதைகளில் 30 சிறுகதைகளை தொகுப்பாக தந்துள்ளேன். எதைத் தெரிவது எதை விடுவது என்ற சிரமத்துக்கு மத்தியில் கதைகளைப் பொறுக்கியுள்ளேன். கதைகள் வெளிவந்த போது அதிகமாகப் பேசப்பட்ட கதைகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளேன். இதன் வெளியீட்டு விழாவை சொந்த மண்ணில் நடத்த முனைந்த போதும் கொழும்பைச் சேர்ந்த ஏராளமான எழுத்தாளர்கள், அபிமானிகளின் உந்துதலால் கொழும்பில் வெளியீட்டு விழாவை நடத்த தீர்மானித்தேன். விழாவுக்கான ஏற்பாடுகளை தொடங்கிய நாளிலிருந்து அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பு நெஞ்சி விஞ்சி நிற்கிறது. இந்த சிறுகதைத் தொகுதியின் கனதி,தகுதி, பற்றி வாசகர்கள் தீர்மானிக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் தான் உண்மையான துலாக் கோல்கள்; தராசு முட்கள்:

**கேள்வி: உங்கள் சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகள் எதைப் பற்றிப் பேசுகின்றன என்று கூற முடியுமா?**

என்னைச் சுற்றி நடமாடும் நிகழ்வுகளை வைத்தே அதிகமான கதைகளை வலம்வர வைத்துள்ளேன். அதிகமானோர் பொருட்படுத்தாத பல விடயங்களை கதைகளாகத் தந்து 'அட' இப்படியும் பிரச்சினைகளா? எனப் பேச வைத்துள்ளேன். எனது சொத்தக் கிராமத்தில் பெற்ற அனுபவங்களோடு, கொழும்பு வாழ்க்கை தந்த அனுபவங்களையும் கோர்த்து கை குலுக்க வைத்துள்ளேன். கொழும்பில் குப்பைகளே பெரும் பிரச்சினை. அதனை அதிகமானோர் தொட்டுப் பார்ப்பதில்லை. அந்தப் பிரச்சினையின் ஆழத்தை அளக்க வைத்துள்ளேன். அத்தோடு சமூகத்தில் புரையோடிக்கிடக்கும் ஏக்கங்களின் தாக்கங்களுக்கு களம் தந்துள்ளேன். இப்படியாக நான் பெற்ற அனுபவங்களை, பலரிடம் பெற்ற தகவல்களை இயன்றளவு யதார்த்தமாக தர முயற்சித்துள்ளேன். எனது கதைகளை வாசிக்கும் போது, அது நிச்சயமாக மனுதத்துவத்தைப் பற்றியே பேசுகின்றன என வாசகர்கள் உணர்ந்தால் அதுவே எனது எழுத்துக்களுக்குக் கிடைக்கும் வெற்றி. எனது கதைகளில் உலாவரும் மாந்தர்களை நிச்சயமாக வாசகர்களும் கண்டு உணர வேண்டும் என்ற எண்ணத்துடன் கதைகளை நகர்த்தியுள்ளேன். கதை மாந்தர்களை கட்டம் போட்டுக் காட்டுவது எனது நோக்கமல்ல. இவர்களைப் போன்ற மாந்தர்களின் மனக்காயங்களுக்கு ஒத்தடம் தேவை என்ற நோக்கிலேயே கதைகளை நெய்துள்ளேன்.



**கேள்வி: உங்கள் சிறுகதைப் பிரவேசம் பற்றி கூற முடியுமா?**

நான் எடுத்த எடுப்பிலேயே சிறுகதை எழுத முயலவில்லை. எமது மண்ணில் சிறந்த எழுத்தாளர்களின் கதைகளை ,தமிழக எழுத்தாளர்களின் கதைகளை நிறைய வாசித்து சிறுகதையின் அமைப்பை மனதில் கோடிட்டுக் கொண்டேன். அவர்களது எழுத்தின் உத்தியை ஊகித்துக் கொண்டேன். வெறும் வசனங்களின் வார்ப்பல்ல சிறுகதை என்பதை சிந்தையில் சேர்த்துக் கொண்டேன். மூத்த எழுத்தாளர்களான எம்.எச்.எம். ஷம்ஸ், திக்குவல்லை கமால், திக்குவல்லை ஸப்வான், நீள்கரை நம்பி, திக்குவல்லை இனாயாஹ் போன்றோரின் கதைகளை பிரித்து ஆய்ந்தேன். திக்குவல்லை பேச்சு வழக்கை இலக்கியமாக்கியவர் திக்குவல்லை கமால். மூட நம்பிக்கை, பிற்போக்குவாதத்திற்கு சவுக்கடி கொடுத்தவர் எம்.எச்.எம்ஷம்ஸ், சமூக நிகழ்வுகளை சுவைகொட்ட தந்தவர் திக்குவல்லை ஸப்வான், இந்த சிறுகதை வேந்தர்களின் கற்பனை திறத்தை நெஞ்சில் ஏந்தி எனக்கென்று ஒரு தனிப் பாணியை,உத்தியை,மொழிநடையை ஏற்று சிறுகதை எழுதத் தொடங்கினேன்.



1980 களில் எனது கதைகள் வெளிவரத் தொடங்கின. அகில இலங்கை ரீதியாக நடந்த மீலாத் விழா சிறுகதைப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற போது நான் வயதில் மிகச் சிறியவன். என்னோடு மூத்த எழுத்தாளர்களான கலைவாதிக் கலீல்,திக்குவல்லை ஸப்வான், சுலைமா சமி இக்பால், இளநெஞ்சன் முர்ஷிதீன் ஆகியோர் போட்டியிட்டனர். அன்று தொட்டு எழுதி வரும் எனக்கு வாசகர்கள் தந்த உந்து சக்தியே மேலும் மேலும் எழுதத் தூண்டியது.

**கேள்வி: வானொலி முஸ்லிம் சேவையிலும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளீர்கள். அதைப் பற்றி கூற முடியுமா?**

திக்குவல்லையின் மூத்த முதன்மை எழுத்தாளர் புஹாரி மாஸ்டர் என்று அழைக்கப்படும் எம். ஏ. முஹம்மட். அன்னார் எனது பெரிய தந்தை. முஸ்லிம் சேவையில் பல்வேறு நிகழ்ச்சித் தயாரிப்புகளில் ஒன்றான நாடகத்தையும் வழங்கிக் கொண்டிருந்தார்.அவரது தூண்டுதலினால் நிறைய நாடகங்கள் எழுதினேன். எம். அஷ்ரப்கானின் தயாரிப்பிலும் எனது ஏராளமான நாடகங்கள் வெளிவந்தன. பிற்காலத்தில் எனது பல நாடகங்கள் பல தடவை மறு ஒலிபரப்பு செய்யப்பட்டன. அந்தளவுக்கு எனது நாடகங்களுக்கு வரவேற்பு இருந்தது. அல்ஹாஜ் எம்.எச்.எம்.ஹாரிஸ் தயாரித்து வழங்கிய ஊடுருவல் சமூகத் சித்திரத்திற்கு 250 ற்கும் மேற்பட்ட பிரதிகள் எழுதியுள்ளேன். தற்போது திக்குவல்லை ஸப்வான் வழங்கும் சஞ்சாரம் நிகழ்ச்சிக்கும் எழுதுகின்றேன்.

ஸனூஸ் முஹம்மட் பெரோஸ் வழங்கிய சிறுகதை நிகழ்ச்சிக்கும் பிரதிகள் எழுதினேன். வானொலிக் கலைஞராக தெரிவு செய்யப்பட்டு எனது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறேன். கலாசார அமைச்சு நடத்திய வானெலி நாடகப் பிரதியில் தேசிய விருது பெற்றேன். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் வரலாற்றில் பெற்றுக் கொண்ட ஒரே தேசிய விருது இதுவாகும்.

**கேள்வி: ஒரு சம்பிரதாயபூர்வமான கேள்வி இது. உங்கள் இலக்கியப் பயணம் பற்றி சுருக்கமாகக் கூற முடியுமா?**

எண்பதுகளில் எனது இலக்கியப் பிரவேசம் தொடங்கியது. அப்போது திக்குவல்லை ஸப்வான் அவர்களோடு இணைந்து பல ரோணியோ பத்திரிகைகளும் அச்சுப் பத்திரிகைகளும் வெளியிட்டேன்.'இனிமை' 'கவிமஞ்சரி' போன்ற பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும் தயாரிப்பாளராகவும் பணி புரிந்துள்ளேன்.

எனது இலக்கிய முயற்சிக்கு பெரும் ஒத்துழைப்பு நல்கியவர் எனது தயார் சுபைதா உம்மா. சிறந்த கலைத்துவம் மிக்கவர். எமது பிரதேசத்தில் நடைபெறும் குழந்தைகளுக்கு பெயர்சூட்டும் வைபவத்தில் தாலாட்டுப் பாடுவதில் பிரசித்தமானவர் அவர்.

எனது ஆக்கங்களுக்கு பல தடவை பரிசும் விருதுகளும் பெற்றுள்ளேன். அண்மையில் நடந்த சர்வதேச சிறுகதைப் போட்டியில் பத்துப் பேரில் ஒருவராக தெரிவானேன்.



தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

Whatsap: 0714901181

# நுஃமான் எனும் நுழைபுலம்



தமிழில் மீ எழுந்த பெயர் நுஃமான். இலங்கை இலக்கிய எழுத்து வழி உலகத் தமிழ் இலக்கியத்திலும் மேலெழுந்த நாமம் பேராசிரியர் நுஃமானுடையது.

எண்பது அகவை காணும் பேராசான் ஆறு தசாப்தங்களாக இலக்கியப் புலத்தில் காலூன்றி நிற்பவர்.

1960களில் எழுத்துக்கு வந்த 'கவிஞன் ' நுஃமான் பன்முக ஆளுமைப்புலம். கவிஞர், கதைஞர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், இலக்கணியர், மொழியியலாளர், கல்வியியலாளர், வெளியீட்டாளரென பன்முகம் காட்டி நிற்கும் வித்தகர் பேராசான் எம்.ஏ.நுஃமான். கல்முனைத் தமிழ்ச்சங்கத்தோடு இலக்கிய செயற்பாடுகளை 1960களில் தொடங்கி 'கவிஞன்' சஞ்சிகையூடாக வெளியீட்டுத்துறையில் இயங்கியவர் ஆசான் எம்.ஏ.நுஃமான்.

1906 1070களில் முனைப்புறு முன்னணியாளராகக் கவிதைக்குள் இயக்கம் தொடங்கிய பேராசான் நவீன கவிதை வளர்ச்சியின் முன்னணிக்காரர்.

மொழிபெயர்ப்புத்துறையூடாக ஈழத்தில் நவீன கவிதை தோற்றம்பெற வழி சமைத்தவர் பெருங்கவி நுஃமான்.

பலஸ்தீனக்கவிதைகளைத் தமிழ் வாசிப்புத்தளத்திற்கு அதன் வாசம் கெடாமல் தந்த பெருமைக்குரியவர் இவர். பேராசிரியர் படைப்பாளராக இருந்து பின் 1980களில் திறனாய்வுக்குள் பிரவேசித்தவர்.

இந்தப் பிரவேசம் கைலாசபதி, சிவத்தம்பி, நுஃமான் என்கிற திறனாய்வு வரிசையைத் தந்தது. மார்க்ஸிய விமர்சகராக இனங்காணப்பட்ட நுஃமான் மார்க்ஸிய அடையாளம் தவிர்த்த திறனாய்வாளராகவே திகழ விரும்பினார்.

மறுபுறம் இந்தத் தோற்றப்பாடு 'ஒரு படைப்பாளியை அழித்து ஒரு விமர்சகரின் தோற்றமாகவே பார்க்கப்பட்டது.

எனினும் பேராசான் நுஃமான் படைப்பாளர் என்ற அடையாளத்தையே விருப்பம் கொண்டார். பேராசிரியரின் படைப்புவெளி அகன்றது; ஆழமானது. அழியா நிழல்கள்(1982), மழைவரும் நாட்கள்(1983), தாத்தாமாரும் பேர்களும்(1977), ஒரு மாலைப்பொழுதும் காலையும்(20243), துப்பாக்கிக்கு மூளை இல்லை(2024) என்பன முக்கியமானவை. கவி நுஃமானின் கவிதை மொழிபெயர்ப்புப் பணி மிகுந்த அவதானிப்புக்குரியது. பலஸ்தீனக் கவிதைகள் , மஃமூத் சர்வீஸ் கவிதைகள், மலாய் மொழிக் கவிதைகள்(காற்றில் மிதக்கும் சொற்கள்), இந்தோனேசியக் கவிதைகள் (இரவின் குரல்) போன்றன அவதானம் பெற்றவை.

மொழியிலளாளர் நுஃமான் என்கிற. அடையாளம் ஈழத்தில் மொழியியல் நவீனத்துவத்தின் பயன்பாட்டு ஆலக்கணத்தின் அடையாளம் எனலாம்.அவரது அடிப்படைத் தமிழ் இலக்கணம் இதன் அரிச்சுவடியாகும்.

பேராசான் நூற்றுக்கணக்கான கட்டுரையியல்களையும். ஆயிரக்கணக்கான பதிவுகளையும் மேலெழுப்பியவர்.

ஆசிரியராக பணி தொடங்கிய எம்.ஏ.நுஃமான், தமிழ்த்துறை விரிவுரையாளராகவும், மொழியியல் விரிவுரையாளராகவும் யாழ் பல்கலையில் பணியாற்றியவர். 1990 களில் முதுநிலை விரிவுரையாளராக பேராதனைப் பல்கலையில் உயர் பணி தொடர்ந்தவர். 2020களில் பேராசிரியராக உச்சம் தொட்டவர்.

வெளிநாட்டுப்பல்கலைகள் பலவற்றில் வருகை தரு விரிவுரைப்பணியாற்றியவர்.

தமிழின் தவிர்க்க முடியாத ஆளுமைப் புலம் பேராசான். நம் மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கும் அரைநூற்றாண்டு கடந்த இலக்கிய மனிதர் விருது வட்டத்துக்குள் அடங்காதவர்.

விருது குறித்து 2011இல் அவராற்றிய விளக்கு விருது உரை மிகுந்த அவதானிப்புக்குரியது. மானுட நேயம் மிக்க நுஃமான் எனும் நுழைபுலத்துக்கு மறுசொல்லின் வாழ்த்துக்கள்.




# சுமதி சிவமோகன்: திரை எழுத்து




ஈழத்தில் காட்சி மொழியின் திரை எழுத்துக்களுக்கு நீட்சியாக வரலாறுண்டு.

இந்த வரலாற்றுத் தொடர்ச்சியை சுமதி சிவமோகன் தன் திரையெழுத்து வழி முன்வைக்கிறார்.


சுமதி என்கிற ஆளுமை சமூக செயற்பாட்டுத்துறையில் பல காலமாக இயங்குபவர்.சமூக அக்கறையாளரான இவர் விளிம்புநிலை மற்றும் சிறுபான்மைச் சமூகங்கள் மீது அக்கறை குவிப்பவர்.

ஆவணவாக்கங்கள், கள ஆய்வுகள்,அறிக்கையிடல்களென அதிகம் இயங்குபவர்.

இவரது ஆவணவாக்கல் அனுபவத்தின் வளர்ச்சியாக காட்சிமொழிப் படைப்பாக்கத்தை அணுகலாம். கடந்த வாரம் சுமதி சிவமோகன் இயக்கத்தில் Colombo Galle face mall PVR cinema வில் SONS AND FATHERS தனயரும் தந்தையரும் திரையிடப்பட்டது.

ஆவணக்கதைப்பட வகைமையானம் உள்ளடக்கத்திலும், உருவ வெளிப்பாட்டிலும் காத்திரமாயுள்ளது. இசைக் கலைஞனொருவனின் கலை வாழ்க்கைப் பயணத்தையும் சமகால புதிய தலைமுறைக்கலைஞரது வாழ்வியலையும் திரையெழுத்தில் சுமதி முன்வைக்கும் பாங்கு மெச்சத்தக்கது. சுமதி ஏற்கனவே 'இங்கிருந்து'என்கிற முதல் காட்சிமொழியை எழுதியவர். திரைப் பயணத்தின் தொடர்ச்சியாக 'ஒற்றைத் தம்ளர்' வரவிருக்கிறது. ஆங்கிலப் பேராசிரியரான சுமதி சிவமோகன் கல்வி, ஆய்வு, களப் பயணம், அறிக்கையிடல் மற்றும் கதைப்படைப்பாக்கமென ஆர்வத்துடன் இயங்குமொரு ஆளுமை. கலைஞர் சுமதி சிவமோகன் காட்சி மொழி வழி பிரகாசிக்க வாழ்த்துக்கள்

# நவீன வாசிப்பும் தொழில் நுட்பமும்




நவீன வாசிப்பும் தொழில் நுட்பமும்

நவீன தகவல் தொழிநுட்ப உலகு இலக்கிய உலகின் செயல்நிலை வடிவத்தையும் செல்வாக்குக்குஉட்படுத்திய யுகம் இது.

இணையத்தின் 'செயலி' உருவாக்கமும் இந்த மாறுநிலையின் வடிவமாகி விட்டது.

இத்தகைய செயலியாளர்கள் (செயலிகளை உருவாக்கி வல்ல இணைய வல்லுநர்கள்) தமிழிலே சிறுபத்திரிகைத்துறைக்கும் பங்காற்றலாம்.


தமிழில் சிறு பத்திரிகை நீட்சியான வரலாறு கொண்டது.இந்த வரலாற்றில் வந்து வந்து நின்றுபோன சிறு பத்திரிகைகள் அதிகம்.அவை சேமிப்பற்றும்,மீள் தேடலற்றும் போனசூழலில் புதிய தலைமுறைக்கான தமிழ் சிறு சஞ்சிகைச் சூழலுக்கு புத்துயிரளிக்கும் வாய்ப்பு செயலி வடிவத்துக்குண்டு.

இன்றைய சூழலில் நூலக நாட்டம், நூலக வாசிப்பு குறைந்து விட்டது.நூல் வழி வாசிப்பும் தேய்வுற்று புதிய தலைமுறையிடத்தில் மின் எழுத்து வாசிப்பு தோற்றம் கண்டிருக்கிறது.

எனவே தமிழின் நூல் வழிப் பொக்கிஷங்களைமணிக்கொடி, எழுத்து முதலாக மல்லிகை வரையாக சிறு சஞ்சிகைகளை சிறுசஞ்சிகைச் செயலியாக்கத்திற்குட்படுத்தினால் புதிய வாசிப்பின் கிளர்ச்சிக்கு வாய்ப்பாக அமையும்.

# நித்திய ஒளி

இப்படியும் இருக்கக் கூடும்
இனியவனே!
கிளைகளில் தேடிக் கொண்டிருக்கிறாய்
வேர்களில் மட்டும் வெளிப்படும் ஒன்றை
காதலின் வெள்ளம் ஒன்று
உன்னை நோக்கிப் பாய்கிறது
ஒவ்வொரு.கணமும்நெருங்கியபடி
நிம்மதி பெற
அதுவே நம் முடிவு தெரியுமா?
மகிழ்ச்சியில் மரணம்
மதம் கொண்ட இணைவு
மரித்திருந்தேன்
பின்பு உயிர்த்தெழுந்தேன்
அழுகை
பிறகு சிரிப்பு
காதலின் சக்தி என்னுள் வந்தது
அரிமா அன்ன வீரம் தந்தது
பின்பு
மென்மை ஆனேன்
மாலை வானில்
விண்மீன் போல
இந்தக்காதல்தான்
இணைத்துள்ளது ஒன்றாய்
அனைத்தையும்
அதுவேதான்
அனைத்தும் கூட
சுவர் மீது விழுந்தது
சூரிய ஒளி
சுவர் அடைந்தது
இரவல் பிரகாசம்
அப்பாவியே!
மண்ணாங்கட்டியிடம் ஏன்
மனதைப் பறிகொடுக்கிறாய்?
நித்தியமாய் ஒளி வீசும்
மூலத்தைக் தேடு
கற்பனையில் எட்டாது
கற்பனைக்கு ஒருபோதும்
என்ன தருகிறாய்
எனக்கு நீ என்பது
சிறு பிள்ளை போல்
அணுங்குவதை நிறுத்து
(வைரங்கள் சுடரும்)



# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் மண்டேலா தன் உயிர்த் தோழர்களான சிசுலுவையும் கோரையும் அழைத்து "நண்பர்களே உங்களுக்கு நான் ஒரு விஷயம் சொல்லப் போகின்றேன். விஷயத்தை கேட்டால் நீங்கள் சந்தோஷப்படுவீர்கள்" என்று பீடிகை போட்டான். அதற்கு சிசுலுவோ "நெல்சன் எங்களுக்கு பொறுமையில்லை. நீ சொல்ல வந்ததை அவசரமாகச் சொல்லுடா. ஆவலாக இருக்கின்றது" என்றதும் கோரோ "நீ யாரையாவது காதலிக்கின்றாயா? அவளை எங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் போகின்றாயா" என்று கேலி பேசினான்.

மண்டேலாவோ இருவரையும் தோளோடு தோளாக அணைத்துக் கொண்டு "காதல், கல்யாணம் அதற்கெல்லாம் இப்போது நேரமில்லை. எம் இன மக்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கும் உன்னத நோக்கத்தோடு நானும் உங்களோடு அரசியலில் இறங்கலாம் என்று முடிவு செய்திருக்கின்றேன்" என்று கண்கள் பளிச்சிடக் கூறினான். சிசுலுவும் கோரும் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார்கள்.

சிசுலு மண்டேலாவை கட்டியணைத்துக் கொண்டு "சபாஷ் நண்பா.. இப்போதுதான் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி" என்றதும் கோரும் தன் பங்கிற்கு மண்டேலாவின் கையில் முத்தமிட்டபடி "நெல்சன் நீ இப்போது எடுத்திருக்கும் முடிவுதான் சரியான பாதை. நீ சிடெல்ஸ்கியின் பேச்சைக் கேட்டு எம் வழியில் வர மாட்டாய் என்று நான் பலமுறை கவலைப்பட்டிருக்கின்றேன். அந்த விடயம் சிசுலுவுக்கும் தெரியும். இப்போதுதான் அந்தக் கவலை தீர்ந்தது. நாம் மூவரும் கைகோர்த்தபடி அரசியலில் இறங்கி அரசியல் மூலம் எம் இன மக்களுக்காக குரல் கொடுப்போம் " என்று நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கண்களில் பளிச்சிட கூறினான்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியில் மண்டேலா இணைந்து கொண்டான். சிசுலு, கோர் உட்பட கறுப்பர்கள், பட்டம் பெற்றவர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள், புரட்சியாளர்கள் இப்படி பல்தரப் பட்டோரையும் உள்ளடக்கிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி மண்டேலாவையும் வரவேற்றுக் கொண்டது. அந்தக் கட்சியில் மண்டேலாவிற்கு பல புதிய நண்பர்களின் பரிச்சயம் ஏற்பட்டது.

அன்டன் லெம்பெடே எனும் புகழ்பெற்ற வழக்கறிஞரின் அறிமுகமும் மண்டேலாவுக்கு கிடைத்தது. லெம்பெடே உட்பட பீட்டர் ம்டா, லயோனில் மஜோம்போஸி, விக்டர் போபோ, வில்லியம் கோமோ, ஜோர்டன் குபானே, டேவிட் பொபாபே ஆகியவர்களின் நட்பு மண்டேலாவை கட்சியின் பால் கவர்ந்திழுத்தது.


ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியில் முக்கிய உறுப்பினராக இருந்த லெம்பெடே மண்டேலாவிற்கு மார்க்ஸ்கார்வி, துபோய், ஹேலி செலேஸி ஆகியோரின் சிந்தனைகளை அறிமுகப்படுத்தி கறுப்பர்களின் அடிமை வாழ்க்கை பற்றிய பல்வேறு விடயங்களையும் எடுத்துரைத்து மண்டேலாவை உற்சாகப்படுத்தினார்.



ஆபிரிக்கா கறுப்பர்களின் கண்டம் என்று தெளிவான சான்றுகள் பலவற்றுடன் நிரூபித்த லெம்பெடே மண்டேலாவை பார்த்து "நெல்சன் நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்தால்தான் நம் இன மக்களுக்கு விடிவு காலம் வரும். அதுவரைக்கும் நாம் சோர்வுறாது போராட வேண்டும். நம் நாட்டை வெள்ளையினக் கயவர்களிடமிருந்து மீட்டெடுக்க வேண்டும். வெள்ளையர்களை துணிவோடு எதிர்ப்பதற்கு முன்னால் நாம் நம் மத்தியில் இருக்கும் சில நச்சு எண்ணங்களை அடியோடு விரட்டியடிக்க வேண்டும். இன்னும் தெளிவாக சொல்வதானால் நாம் வெள்ளையர்களை விட தாழ்ந்தவர்கள் என்ற குற்ற உணர்வை முதலில் வேரோடு களைந்தெறிய வேண்டும்.

நாம் வெள்ளையர்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்று நிமிர்ந்து நிற்கப் பழக வேண்டும். கறுப்பு என்பது ஆபிரிக்காவின் நிறம். எம் தாய் மண்ணின் நிறம். இதை நாம் பெருமையாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆங்கிலேயர்கள் போதிக்கும் பாடங்களை துறக்க வேண்டும். ஆங்கிலேயர்களை பயத்துடன் கடவுளாகப் பார்க்கும் வழக்கத்தை இல்லாதொழிக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் நம் போராட்டம் முழுமையான வெற்றி பெறும். கறுப்பர்கள் நாம் அனைவரும் ஒன்றுபட்டால்தான் விடியல் பிறக்கும்" என்று மண்டேலாவிற்கு ஒரு குட்டிப் பிரசங்கத்தையே நடாத்தி முடித்தார் லெம்பெடே.

தான் பணியாற்றும் சட்ட நிறுவனமும் கல்வி கற்கும் பல்கலைக்கழகமும் தன்னை ஒரு ஆபிரிக்க வெள்ளைக்காரனாக மாற்றிக் கொண்டிருப்பதை மண்டேலாவால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது. "லெம்பெடே சொல்வது முற்றிலும் சரி. நாம் ஏன் அவர்களுக்காக மாற வேண்டும்? வெள்ளையர்கள் விரும்புவது போல் நாம் வாழ வேண்டிய அவசியமில்லை.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

---

வறுமையின் காரணமாக நான்காம் வகுப்புடன் கலைவாணரின் பள்ளிக்கூடப் படிப்பு நிறுத்தப்பட்டது. பிறகு நாடகக் கொட்டகையில் சோடா, குளிர் பானம் விற்கத் தொடங்கினார். அப்படித்தான் நாடக ஆர்வம் ஆரம்பம்!

ஆனந்த விகடனில் தான் எழுதிய 'சதிலீலாவதி' தொடரை அதே பெயரில் படமாக்கினார் என்.எஸ். வாசன். அதுதான் கலைவாணரின் முதல் படம் ஆனால், 'சதி லீலாவதி'யை முந்திக்கொண்டு என்.எஸ்.கே. அடுத்து நடித்த 'மேனகா' படமே முதலில் திரைக்கு வந்தது. மொத்தம் 122 படங்களில் நடித்திருக்கிறார்!



# பத்மினி 'நாட்டியப் பேரொளி' பட்டம் பெறக் காரணமாக இருந்தவர் NSK

## பாலையாவின் நடிப்பைப் பாராட்டி, தனது விலை உயர்ந்த காரை பரிசாக வழங்கியவர் கலைவாணர்

'வசந்தசேனா' படப்பிடிப்புக்காக கலைவாணர் அடங்கிய குழு ரயிலில் புனே சென்றது. அப்போது படத்தின் தயாரிப்பாளர் ரயிலைத் தவறிவிடவே. வழிச்செலவுக்கு மதுரத்தின் நகைகளை விற்றே குழுவினரின் பசி போக்கினார் என்.எஸ்.கே. அந்தச் சமயம்தான் இருவருக்கும் காதல் பூத்தது. தனக்கு ஏற்கெனவே திருமணம் நடந்ததை மறைத்தே டி.ஏ.மதுரத்தை மணந்தார் என்.எஸ்.கே. கலைவாணருக்கு ஏற்கெனவே திருணமான விஷயத்தை அவரது குழுவில் இருந்த புளிமூட்டை ராமசாமி என்பவர் மதுரத்திடம் போட்டு உடைக்க, இதனால் சில நாட்கள் கலைவாணரிடம் மதுரம் பேசாமல் இருந்திருக்கிறார். பிறகு இருவரும் சமரசம் ஆனார்கள்!

என்.எஸ்.கேயின் கிந்தனார் கதா காலட்சேபம் பிரபலம். நந்தனாரை கிந்தனார் ஆக்கியதற்கு மதுரம் கோபிக்கவே, 'பாரதியார் சாப்பிட வராமல் நந்தனாரை எழுதிக் கொண்டு இருந்தபோது, 'நந்தனாரும் வேண்டாம் கிந்தனாரும் வேண்டாம். சாப்பிட வாங்க!' என்று சலித்துக் கொண்டாராம் அவர் மனைவி செல்லம்மா. அதில் இருந்து உருவியதுதான் இந்த கிந்தனார்!' என்று மதுரத்தைச் சமாளித்திருக்கிறார்.

என்.எஸ்.கேமதுரம் தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை (கலைச்செல்வி) பிறந்து நான்கே மாதங்களில் இறந்துவிட்டது. அதன் பிறகு, அவர்களுக்குக் குழந்தை இல்லை. அதனால், மதுரம் தன் தங்கை டி.ஏ.வேம்பு அம்மாளை கலைவாணருக்கு மூன்றாவது தாரமாகத் திருமணம் செய்துவைத்தார். அவர்களுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தனர்!

'மணமகள்' படத்தில் பத்மினியை அறிமுகப்படுத்தி அவர் 'நாட்டியப் பேரொளி' பட்டம் பெறக் காரணமாக இருந்தார். அந்தப் படத்தில் பாலையாவின் நடிப்பை பாராட்டி, தனது விலை உயர்ந்த காரை அவருக்குப் பரிசளித்தார். உடுமலை நாராயணகவியைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தியவர். 'உடுமலைக்கவியை' கலைவாணர் வாத்தியாரே என்று தான் அழைப்பார்.

1957 – ம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தல் காஞ்சிபுரத்தில் அண்ணாவை எதிர்த்து நின்றவர். ஒரு டாக்டர். அண்ணாவுக்குப் பிரசாரத்துக்கு வந்த கலைவாணர், ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை அந்த டாக்டரை புகழ்ந்து பேசினார். 'இவ்வளவு நல்ல நீங்கள் சட்டசபைக்கு அனுப்பினால் உங்களுக்கு இங்கு வைத்தியம் பார்ப்பது யார்? இவரை உங்கள் ஊரிலேயே வைத்துக் கொள்ள வேண்டும். அதனால், டாக்டருக்கு யாரும் ஓட்டுப் போடாதீர்கள். அண்ணாவையே தேர்ந்தெடுங்கள்' என்றார். அண்ணா உட்பட அனைவரும் கைதட்டி ரசித்தனர்!

'இந்து நேசன்' பத்திரிகை ஆசிரியர் லட்சுமி காந்தன் கொலை வழக்கில், கலைவாணருக்கும் தியாகராஜ பாகவதருக்கும் மறைமுகத் தொடர்பு இருப்பதாகச் சந்தேகத்தின் பேரில் இருவரும் கைதானார்கள் லண்டன் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததில் கலைவாணர் விடுவிக்கப்பட்டார். '



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# திறந்த கவியரங்காக காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் 15 வது பௌர்ணமி கவியரங்கு





**(ரீ.எல்.ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறூப் நிருபர் )**

காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் 15வது பௌர்ணமி கவியரங்கு கழகத்தின் தலைவர் கவிமாமாணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கவிஞர் உஸனார் ஜாபிர் கவியரங்கிற்கு தலைமை வகித்தார். கவிஞர்களான ஏறாவூர் என்.எம்.எம். சுபைர், எச்எம்.இக்பால் கான், கலைமதி எம்ஏசி. றபாய்தீன், எம்.எச்.எம். இக்பால் மௌலவி, நூன் அப்துல் ரஹீம், காத்தான்குடி பாத்திமா, உமர் ஹனீ ஆகியோர் கவிமழை பொழிந்தனர்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி பொறுப்பதிகாரி திருமதி அலீமா றஹ்மான், காத்தான்குடி கலாசார அதிகாரி அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் எம்ஐஎம்.ஜவாஹிர் பலாஹி, காத்தான்குடி கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி எம்.ஏ.ஜவாஹிர் மதனி, இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் உப தலைவர் கவி மேகம் ஸாஹிர் ஹுசைன் ஆகியோர் உட்பட பலர் அதிதிகளாக பங்கு கொண்டனர்.

கவியரங்கத்திற்கு தலைமை வகித்த கவிஞர் உஸனார் ஜாபிர் இஸ்லாமிய இலக்கிய கழகத்தினால் "கவி முரசு" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், பங்கு பற்றிய கவிஞர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

காத்தான்குடி முன்னாள் நகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி கவிஞர் முகைதீன் சாலி, கவி மேகம் இல்மி அஹ்மத் லெப்பை ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கட்டாரின் பிரபல புகைப்பட போட்டியில் இடம்பிடித்த இலங்கை ஊடகவியலாளர்



கட்டாரின் பிரபல புகைப்பட போட்டியான “FRAMES SEASON 7” இல் இயற்கை எனும் தலைப்பின் கீழ் போட்டி நடத்தப்பட்டது. இதில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த பாரிஸ் அமானுல்லாஹ்யினது புகைப்படமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவர் சிறு வயதிலிருந்தே புகைப்படத் துறையில் அதிக ஆர்வம் கொண்டவர் என்பதுடன் அண்மையில் கட்டாரில் நடைபெற்ற ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்கை தமிழ் ஊடகத்தின் ஊடாக புகைப்படக் கலைஞராக தெரிவு செய்யப்பட்டு கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் பிரபல தனியார் ஊடக நிறுவனமொன்றின் பிராந்திய ஊடகவியலாளராகவும் பணி புரிந்த இவர், 2020 இல் அக்கரைப்பற்று புகைப்படப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தையும் பெற்றார்.

தற்போது இவர் கட்டாரில் தொழில் புரிந்து கொண்டு தனது திறமையை புகைப்படங்கள் மூலம் வெளிக்காட்டி வருகின்றார்..

இப் பிரபல புகைப்பட போட்டியில் சுமார் 500க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். அதில் பிரதானமாக 75 புகைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட புகைப்படங்கள் கட்டார் அபு ஹமூரில் உள்ள சபாரி மாலில் ஆகஸ்ட் 19 தொடக்கம் ஆகஸ்ட் 31 வரை மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இக் கண்காட்சியில் காட்சி படுத்தப்பட்டுள்ள புகைப்படங்களுக்குள் நடுவர்களால் தெரிவு செய்யப்படும் புகைப்படங்களுக்கு சுமார் 12,000 கட்டார் ரியால் வரை பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் உலக அளவில் முன்னணியில் திகழும் நிக்கான், கேனான், சோனி, பியூஜி பிலிம் ஆகிய நிறுவனங்களும் அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாரத் ஸ்ரீலங்கா மைத்ரி உத்சவ் 2024

இந்தியாவின் 78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பாரத் ஸ்ரீலங்கா மைத்ரி உத்சவ் 2024 நிகழ்வானது கொழும்பு இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த 15ம் திகதி சுதந்திர சதுக்க வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக நான்கு நாட்களாக நடைபெற்ற இந்த நிகழ்வில் 18 ஆகஸ்ட் 2024 அன்று தத் தமது திறமையை வெளிக்காட்டும் முகமாக பல்வேறு இசை நடன கலாச்சார நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்வில் குமார இராமநாதன் மற்றும் திருமதி. ஷாமினி இராமநாதன் அவர்களின் நுண்கலைக் கல்லூரியான பண்டாரவளை மலையகத்தின் இந்திய நுண்கலைப்பீடத்திலிருந்து இருந்து சுமார் 34 மாணவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய திறமையை சிறப்பாக வெளிக் கொணர்ந்திருந்தனர்.

அவர்களது நடனத்தின் கருப்பொருளாக, இலங்கை இந்திய பாரம்பரியக் கலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி இருந்தனர். அந்த வகையில் மலையகத்தின் இந்திய நுண்கலைப் பீட மாணவர்கள் கதம்பம் என்னும் நாட்டிய நிகழ்வினை சமர்ப்பித்திருந்தனர்.

இது தமிழ்நாட்டுப் பாரம்பரியக் கலைகளின் ஓர் கோர்வையாக அமைந்திருந்தது. கிராமிய நடனக்கலைகளான கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், கரகாட்டம் மற்றும் தெம்மாங்கு முதலான கலை வடிவங்களை வெகு சிறப்பாக முன் வைத்திருந்தனர். அருகிச் செல்லும் பாரம்பரியக் கலைகளை மீள் உயிர்ப்பித்தது போன்று அவர்களது நடன வடிவமைப்பு அமைந்திருந்தது.











அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றிய கலைஞர்கள் விஜய் தலைமையில்





இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.